வெளியீடு : 27-11-2003 Issued : 27-11-200

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 10, 2003 – தொகுதி 42 – எண் 1

**Thursday the 10th April, 2003– Volume 42 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

**10-4-2003**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் .. .. | iii-vii |
| | Governor and Council of Ministers .. | ix-xii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், ஆளுங்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள் .. | xiii-xvi |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) .. | xvii-xxvii |
| 1. | **வினாக்கள்-விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1,2,3,4, 6-7,9-39 |
| 2. | **தகவல் கோரல்—** | |
| | சில முக்கிய பிரச்சினைகளை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல் | 1,2-3, 4-6,7-9 |
| 3. | **விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| | (அ) இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதை எதிர்க்கும் மாணவிகளைச் சந்தித்த உறுப்பினர்கள் சிலர் கைது பற்றிய மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 40-42 |
| 4. | **அறிவிப்புகள்—** | |
| | (அ) உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், டாக்டர் க. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன் மற்றும் திரு. எஸ்.ஏ.எம். உசேன் ஆகியோர் கைது குறித்த சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்தி | 43 |
| | (ஆ) உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு தள்ளி வைப்பு | 44 |
| | (இ) உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டியும் சிலரும் கைது குறித்த செய்தி | 51 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அறிக்கைகள் அளித்தல் | |
| அரசு உறுதிமொழிக் குழு | 44 |
| 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 11 - வணிக வரித் துறை, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 44-51, 52-121, 123-127 |
| (ஆ) கோரிக்கை எண் 29 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு .. | |
| (இ) கோரிக்கை எண் 39-வருவாய்த் துறை .. | |
| (ஈ) கோரிக்கை எண் 19 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. | |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 45,48, 50-54, 54-55,62, 84-85,87, 96-121 |
| *திரு. ப. அரசன் .. | 47,49, 52-54, 55-58,59-63 |
| *திரு. பி.கே.டி. நடராஜன் .. | 63-68 |
| திரு. பி.எஸ். அருள் .. | 69-73 |
| திரு. பெ. வாசுதேவன் .. | 73-77 |
| திரு. மு. அப்பாவு .. | 78-91 |
| திருமதி எஸ். கரிதா சம்பத் .. .. | 90,91-96 |
| 7. சாலை மறியல் செய்த உறுப்பினர்கள் கைதும்—விடுதலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் தகவல். | |
| செல்வி ஜெ. ஜெயலலிதா .. | 121-123 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 127 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—மேதகு திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | .. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள். |
| 3. நிதி அமைச்சர் | .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல். |

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
184538
சென்னை - 600 008
நூலகம்

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல். விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள். அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வகுப்பு.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



10. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. [illegible]:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மாபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

**16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

**19. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**21. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



**22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

**23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**24. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR-THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue.** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments.** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health and Education** .. **The Hon. Thiru S. Semmalai:**
Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru A. Papasundaram:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**
Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

9. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevananthani:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

10. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

11. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



12. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. **Minister for Electricity and Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**
Electricity, Non-Conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**
Commercial Taxes.

15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** .. **The Hon. Thiru P. Mohan:**
Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** .. **The Hon. Thiru M.C. Sampath:**
Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodaran:**
Animal Husbandry.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vadivel:**
Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Forests & Environment and Pollution Control.

20. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

21. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**
Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**
Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர். தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. செ. இராசாராமன்

---

*28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி பானுமதி அனந்தராஜன், .. கூடுதல் செயலாளர்
பி.எஸ்.சி., பி.ஜி.எல்.

திரு. செ.ஏ. துரைபாண்டியன், .. இணைச் செயலாளர்
பி.ஏ., பி.எல். (பதிப்பாளர்)

திருமதி பவானி சுப்பையா, .. இணைச் செயலாளர்
பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. செ. சந்திரகுமார், .. இணைச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல். (பதிப்பாளர்)

திரு. வெ. இராமகிருஷ்ணன், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

திரு. சி. சடகோபி, எம்.ஏ., .. பேரவைத் தலைவரின்
எம்.பி.ஏ. சிறப்பு நேர்முக உதவியாளர்.

திரு. க. சம்பத்ராஜன், .. துணைச் செயலாளர்
பி.ஏ., பி.ஜி.எல்.,

திரு. எம். ஜோபாய், .. துணைச் செயலாளர்
பி.காம்., பி.ஜி.எல்.

திரு. இரா. முருகானந்தம், .. துணைச் செயலாளர்
பி.எஸ்.சி., பி.எல்.

திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர்
(பதிப்பாளர்)

திரு. கோ. ஞானப்பிரகாசம், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

திரு. ஜி. அனீஸ் அகமத், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. துணைச் செயலாளர்
(பதிப்பாளர்) (விடுப்பு)

திரு. பா. செல்வராஜ், .. துணைச் செயலாளர்
பி.எஸ்.சி., பி.எல்.



திரு. வெ.சி. சுப்பிரமணியன், .. குழு அலுவலர்
எம்.ஏ., பி.எல்.

திரு. சு. பாலச்சந்தர், .. குழு அலுவலர்
பி.ஏ., பி.எல்.

திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. துணைச் செயலாளர்
(பதிப்பாளர்)

திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ. .. குழு அலுவலர்

திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. டி. கோவிந்தராஜு, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், .. சார்புச் செயலாளர்
எம்.எஸ்சி., பி.எல்.

திரு. ச. பாலகிருஷ்ணன், .. சார்புச் செயலாளர்
பி.எஸ்சி., பி.எல்.

திருமதி இரா. அமிர்தவல்லி, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

திருமதி கி. இந்திரா, .. சார்புச் செயலாளர்
பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. நா. நடராஜன், .. தலைமை நிருபர்
பி.ஏ., பி.ஜி.எல்.

திருமதி ந. மீனாட்சி, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

திரு. மு. பொன்னுரங்கம், .. தலைமை நிருபர்
எம்.ஏ., பி.எல்.

திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்

திருமதி ப. சரஸ்வதி, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

| | | |
|---|---|---|
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. பொளணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். - திருவாடனை
28 ராமசாமி, திரு. பி. சி. - மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். - கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். - சாத்தூர்
32. இராமு. திரு. ந. - உளுந்தூர்பேட்டை(செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி. கே. - திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே. பி. - பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி. ஜி. - ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே. என். - மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. - அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
43. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
49. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி. சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2.

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு.வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஓட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
122. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. - காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு



134. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
137. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி - போளூர்
141. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
143. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
144. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
145. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
146. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
147. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
148. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
149. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. கே.எல். - பெருந்துறை
151. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செவ)
152. பழனிப்பன், திரு. பெ. - மொரப்பூர்
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

155. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
156. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
157. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
158. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
159. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
160. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
161. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
162. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
163. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
164. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
165. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
166. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
167. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
168. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
169. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
170. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
171. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
172. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
173. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
174. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
175. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
176. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு



177. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
178. மணி, திரு. டி. - விளவங்கோடு
179. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
180. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
181. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
182. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
183. மில்லர், திரு. அ. - கூடலூர்
184. முரளிதரன், திரு. கே.வி. - தளி
185. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
186. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
187. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
189. மோகன், திரு. ப. - சின்னசேலம்
190. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
191. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
192. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
193. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
194. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
195. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி

199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I



220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 27, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

'அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு'

அன்பு என்னும் தாய் பெற்றெடுத்த அருள் என்னும் அற்புதக் குழந்தை, செல்வம் என்னும் செவிலித் தாயால் நன்கு வளரும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். (குறுக்கீடு)

### 2. தகவல் கோரல்

#### சில முக்கிய பிரச்சினைகளை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் எதுவும் கிடையாது. (குறுக்கீடு) வினாக்கள்-விடைகள், திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

## 1. வினாக்கள்-விடைகள் — தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள் — தொடர்ச்சி

**221—**

### கோயில் கொடி மரம்

***18430—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், வரதராஜப் பெருமாள் கோயில் கொடி மரம் முறிந்து விழுந்ததால், நடைபெறவுள்ள பிரம்மோற்சவம் தடைபட்டுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், புதிய கொடி மரம் அமைத்து பிரம்மோற்சவம் நடத்திட ஏற்பாடு செய்யப்படுமா?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல் - தொடர்ச்சி

### சில முக்கிய பிரச்சினைகளை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் பிரச்சினையே கிடையாது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஜீவாதாரப் பிரச்சினை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன உயிர்ப் பிரச்சினையாக இருந்தாலும், கேள்வி நேரத்திலே கிடையாது. (குறுக்கீடுகள்) புதிய மரபுகளை எல்லாம் உண்டாக்காதீர்கள்; புதிய விதிகளை உண்டாக்காதீர்கள். (குறுக்கீடுகள்) முடியாது, முடியாது. மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்)





**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கிய பிரச்சினையை எழுப்புவதற்கு அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

## 1. வினாக்கள்-விடைகள் — தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள் — தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாவது வாரம் கொடிமரம் பீடத்திலிருந்து பழுதடைந்த நிலையில் வயது முதிர்வால் தானாகவே சாய்ந்து விழுந்துவிட்டதால், இந்த ஆண்டில் மே மாதத்தில் தேர்த் திருவிழாவை நடத்த இயலவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தின், வனப் பகுதியிலிருந்து புதிய கொடி மரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. புதிய கொடி மரம் எடுத்து வந்த பிறகு, 2003 ஆம் ஆண்டு மே மாதம் பிரம்மோற்சவத்தில் தேர்த் திருவிழா நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடுகள்)

*(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷம் போட்டுக் கொண்டே இருந்தனர்.)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட வனப் பகுதியிலிருந்து கொடிமரம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், அதை எடுத்துவந்து இந்த ஆண்டு மே மாதம் பிரம்மோற்சவ உற்சவத்திற்குப் பயன்படுத்த இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல் - தொடர்ச்சி

### சில முக்கிய பிரச்சினைகளை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. போன்ற மூத்த உறுப்பினர்கள் அவை மரபுகளுக்கு, விதிகளுக்கு மாறாக நடக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது என்பது, உங்களுடைய விருப்பம்போல் நடப்பதல்ல. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தை ஒத்தி வைப்பது என்பது உங்களுடைய விருப்பம்போல் நடக்கக்கூடியதல்ல. (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவை முன்னவர் முதல் நாளே தீர்மானம் கொண்டுவந்தால்தான் ஒத்திவைக்க முடியும். (குறுக்கீடுகள்) அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள்; தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். மூத்த உறுப்பினர்கள் அவையை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; கண்ணியத்தோடு நடந்துகொள்ளுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடுகள்)

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட வனப் பகுதியிலிருந்து கொடிமரம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், அதை எடுத்துவந்து இந்த ஆண்டு மே மாதம் பிரம்மோற்சவத்தில் தேர்த் திருவிழா நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### சில முக்கிய பிரச்சினைகளை வினாக்கள் - விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டே இருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து அமருங்கள்; தயவுசெய்து அமருங்கள். கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது என்பது, முதல் நாளே



அவை முன்னவர் தீர்மானம் கொண்டுவந்து ஒத்திவைத்தால்தான் முடியும். உடனடியாக நீங்கள் விரும்புவதுபோல் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க முடியாது. இன்றைக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. கேள்விகள் எல்லாம் கொடுக்கப்பட்டுவிட்டன. கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு நீங்கள் ஏதாவது கேளுங்கள். அரசுத் தரப்பிலே ஏதாவது பதில் இருந்தால் அவர்கள் பதில் சொல்வார்கள். தயவுசெய்து உட்காருங்கள்; தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். கேள்வி நேரத்தை ஒத்திவைக்க முடியாது. கேள்வி நேரம் முடிந்தவுடனே ஏதாவது பிரச்சினையை அரசுத் தரப்பினரிடம் கேட்பதற்கு வாய்ப்பு இருந்தால், நீங்கள் கேளுங்கள். அரசுத் தரப்பிலே பதில் சொல்வதாக இருந்தால் சொல்லட்டும். அதற்கு நான் இடம் அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) என்ன உயிர்ப் பிரச்சினையாக இருந்தாலும், என்ன ஜீவாதாரப் பிரச்சினையாக இருந்தாலும்—இந்த அவை என்பது பாரம்பரியமிக்க அவை. மாண்புமிகு மூத்த உறுப்பினர், மத்திய அமைச்சராக இருந்தவர். தாங்களே இந்த அவையை மதிக்காவிட்டால் வேறு யார் மதிப்பார்கள்? உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தை ஒத்திவைக்க இடமிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தை ஒத்தி வைப்பதாக இருந்தால், ஏகமனதாக முடிவு செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்) திடீரென அப்படி ஒத்திவைக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துக்கொள்வதாக இருந்தால், அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமே? (குறுக்கீடுகள்) எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டுமே? எல்லோரும் ஒத்துக்கொள்வதாக இருந்தால்தான் ஒத்திவைக்க முடியும். (குறுக்கீடுகள்) முடியாது; தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேசுவதற்கு அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு விதியை நான் படிக்கிறேன். விதி *32*— "பேரவை வேறுவிதமாக, ஒருமனதாக, முடிவு செய்தாலன்றி, ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும். மேலும் பேரவைத் தலைவர் தம் உசிதத்தின்படி வினா

நேரத்தை நீட்டிக்கலாம்." அதுதான் விதி. ஆகவே, ஏகமனதாகத் தீர்மானம் கொண்டு வந்தால்தான் முடியும்; (குறுக்கீடுகள்) நீங்கள் ஏகமனதாக இல்லையே. (குறுக்கீடுகள்) நீங்கள் ஏகமனதாக இல்லை. (குறுக்கீடுகள்) ஆகவே, விதிகளுக்குப் புறம்பாகத் தயவுசெய்து நடக்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் ஆளுங்கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நடைமுறைக்கு ஆகாது. (குறுக்கீடுகள்) திரு. பி.கே. சேகர்பாபு.

## 1. வினாக்கள் - விடைகள் - தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள் - தொடர்ச்சி

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், வனப் பகுதியிலிருந்து கொடிமரம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த மரத்தை எடுத்துவந்து இந்த ஆண்டு மே மாதம் பிரமோற்சவத்தில் தேர்த் திருவிழா நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மே மாதத்திற்கு இன்னும் 20 நாட்கள்தான் உள்ளன. அதற்குள் கொடிமரம் நிர்மாணிக்கப்படுமா? அதில் அரசின் பங்கு என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் தேரோடும் நாளிலே, மீஞ்சூர், அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயிலிலும் தேர்த் திருவிழா நடைபெறும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 29-5-2002 ஆம் நாளிலே தேர்த் திருவிழா மீஞ்சூரில் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் 2002-ல்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் கேளுங்கள். நான் அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் வாரம்... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, பழனிசாமி அவர்களே, கணேசன் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் நீங்கள் பிரச்சினையைக் கிளப்புங்கள். உங்களுடைய பிரச்சினையைக் கிளப்புவதற்கு நான் அனுமதிக்கிறேன். விதிக்கு மாறாக நாமே அவையை நடத்த முடியாது. நாமே போட்ட விதியை நாமே மீற முடியாது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயிலில் தேரோடும் நாளிலே, மீஞ்சூர் அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயிலிலும் தேர்த் திருவிழா நடைபெறும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 29-5-2002 ஆம் நாளில் தேர்த் திருவிழா மீஞ்சூரில் நடைபெற்று இருக்க வேண்டும். ஆனால் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் வாரம் கொடிமரம் பீடத்திலிருந்து வயது முதிர்ச்சியின் காரணமாக தானாகவே சாய்ந்து விழுந்து விட்டதால் இந்த ஆண்டு தேர்த் திருவிழா நடத்த இயலவில்லை. கன்னியாகுமரி மாவட்டம், வனப் பகுதியில் புதிய கொடிமரத்திற்கு உரிய தேக்கு மரம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய தொகை ரூ.13,728-ஐ உபயதாரர்கள் மூலம் 9-9-2002 அன்று வனத் துறைக்குச் செலுத்தப்பட்டு உள்ளது. 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் வாரத்தில் நாகர்கோவிலுக்குச் சென்று தேர்வு செய்யப்பட்டது. கொடிமரத்தை வாங்கி வந்தபின் 2003 ஆம் ஆண்டு மே மாதத்தில் மேற்படி திருக்கோயிலில் தேர்த் திருவிழா நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல் - தொடர்ச்சி

### சில முக்கிய பிரச்சினைகளை வினாக்கள் - விடைகள் நேரத்திற்கு முன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ். ஆர்.பி. அவர்களே, தயவுசெய்து அமருங்கள். நீங்கள் இப்படி கோஷம் போட்டுக் கொண்டிருந்தால், தெருவிலே நடப்பதைப்போல சட்டசபையிலே நடந்து கொண்டிருந்தால், உங்கள் அனைவரையும் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும்.

[2003 ஏப்ரல் 10

தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து அமருங்கள். இப்படியே கோஷம் போட்டுக் கொண்டிருந்தால் உங்களை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. (குறுக்கீடுகள்) தயவு செய்து அமருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய... (குறுக்கீடுகள்) பழனிசாமி, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையினுடைய விதிகளை மீறி, அவையினுடைய கண்ணியத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், அரசியல் மேடைகளில் பேசக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் அவையில் எழுப்ப வேண்டும் என்ற ஒரு திட்டத்தினைத் தீட்டி, வேண்டுமென்றே... (குறுக்கீடுகள்) உள்நோக்கத்தோடு வந்து அவையில் அமைதியைக் கெடுப்பதே நாள்தோறும் கொள்கை என்ற ஒரு முடிவிலே, எதிர்க் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்பட்டு வருகிறார்கள். உள்நோக்கத்தோடு செய்யப்படுகின்ற கலாட்டா இது. அவை விதிகளை மீறி, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு அவையிலே அமைதியைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கோடு நடைபெறுகிற சூழ்ச்சி என்ற காரணத்தால், அவையினுடைய கண்ணியத்தை மீறுகிற, அவையினுடைய விதிகளைத் தாக்கி வீசுகின்ற, (குறுக்கீடு) அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படுகிற, அரசியல் மேடையாக இந்த அவையை மாற்ற முயற்சிக்கிற மாண்புமிகு உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேற்ற வேண்டும்" (மேசையைத் தட்டும் ஒலி)

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களை அவைக் காவலர்கள் அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.



2003 ஏப்ரல் 10]

*(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷம் போட்டுக் கொண்டிருந்தனர்)*

அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற மாண்புமிகு உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*(இந்திய தேசியக் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, (திருமதி வி. சிவகாமி தவிர) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்)*

*முற்பகல் 10-10*

*(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுக் கொண்டு இருந்தனர்)*

திரு. சேகர்பாபு, அடுத்த கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உள்ளே இருந்துகொண்டு கோஷம் போடக்கூடாது. சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயும் கோஷம் போடக்கூடாது. அப்படி கோஷம் போடக்கூடிய உறுப்பினர்களைத் தயவுசெய்து வெளியேற்ற வேண்டும் என்று அவைக் காவலர்களுக்கு நான் ஆணையிடுகிறேன். சேகர்பாபு, கேளுங்கள்.

## 1. வினாக்கள்—விடைகள் — தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள் — தொடர்ச்சி

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் வனப் பகுதியில் இருந்து கொடிமரம் தேர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும், அதை எடுத்து வந்து இந்த ஆண்டு பிரம்மோற்சவம் மற்றும் தேர்த் திருவிழா நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். மே மாதத்திற்கு இன்னும் 20 நாட்களே உள்ள நிலையில், அதற்குள் கொடி மரம் நிர்மாணிக்கப்படுமா? அதில் அரசினுடைய பங்கு என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிமரம் பழுதுபட்ட காரணத்தாலே, அதற்குரிய மரம் எங்கே இருக்கிறது என்று தேர்வு செய்து, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்து அந்த மரம் கொண்டு வந்த காரணத்தினாலே காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. கூடிய்விரைவில் இந்த மாதம் அந்தத் தேர்த் திருவிழாவை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது முதிர்வு காரணமாக இந்தக் கொடி மரம் தானாகச் சாய்ந்து விழுந்து விட்டதாக அமைச்சர் அவர்கள் கூறி உள்ளார்கள். பொதுவாக, இதுபோன்ற கொடிமரம் சாய்ந்துவிடுவது அபசகுனமாகவும், அந்தக் கோயில் பகுதியில் வாழ்கின்ற ஊருக்கு ஆகாது என்ற நம்பிக்கையும் மக்களிடத்திலே பரவலாக இருக்கிறது. இதனால் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆலயங்களின் கொடி மரங்கள் வலுவாக உள்ளனவா, வெயில், மழை இவற்றின் காரணமாக அவை பாதிக்கப்பட்டுள்ளனவா என்று அரசின் சார்பில் ஓர் ஆய்வை மேற்கொண்டு அந்தப் பணிகளைத் தொடர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை; அந்த ஆலயத்தினுடைய பரம்பரை அறங்காவலராக இருந்துகொண்டு இருக்கின்றவர் அதை முன்கூட்டியே கவனித்து இருக்க வேண்டும். இருந்தாலும், அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இனித் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஆலயங்களின் கொடி மரங்களும் சாய்வதற்கு முன்பு உடனடியாக நடவடிக்கை எடுத்து திருவிழாக்கள் நடைபெற ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 222, திரு. ஏ.கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

(பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்).



2003 ஏப்ரல் 10]

அவைக் காவலர்கள், சட்டமன்ற வளாகத்தை விட்டு, கோஷம் போடக்கூடியவர்களை வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**222—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**•23256—திரு. ஏ.கே. செல்வராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரமடை ஒன்றியம், வெள்ளியங்காட்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம் வெள்ளியங்காடு கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மருத்துவத் துறையிலே பல்வேறு சாதனைகளை எல்லாம் இன்றைக்குச் செய்து வந்து கொண்டு இருக்கிறார்கள். நான் கேட்டு இருக்கிற அந்த வெள்ளியங்காடு கிராமம் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிற கிராமம். மொத்தம் அந்தக் கிராமத்தைச் சுற்றி 9 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 68 சிறிய குக்கிராமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 68 கிராமங்களிலே மொத்தம் 51 கிராமங்கள்.....

முற்பகல் 10-15

(பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் வெளியிலிருந்து கொண்டு

கோஷம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கோஷம் போடக்கூடியவர்களைச் சட்டமன்ற வளாகத்தைவிட்டே வெளியேற்ற வேண்டும்; அவைக் காவலர்கள் அந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மொத்தம் இருக்கிற 68 கிராமங்களிலே 51 கிராமங்களில் மலைவாழ் மக்கள் அதிகமான அளவிலே வசித்து வருகிறார்கள். ஆகவே மலைவாழ் மக்கள் தங்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்படுகிறபோது, கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரம் வனப் பகுதியிலே நடந்து வந்து, பேருந்துகளைப் பிடித்து, காரமடை, சீழியூர் போன்ற கிராமங்களிலே இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே மருத்துவ உதவிகளை நாடவேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இதைச் சிறப்பு இனமாகக் கருதி, மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கிற காரணத்தாலே, அவர்களுக்கு இந்த ஆண்டு புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. செல்வராஜ் அவர்கள் சொன்னதைப்போல உடனடியாக அந்தப் பகுதியிலே ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வெள்ளியங்காடு கிராமத்தை மையமாக வைத்து, அங்கே ஒரு நடமாடும் மருத்துவக் குழுவை தினந்தோறும் அனுப்பி, அந்தப் பகுதி மலைவாழ் மக்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதியிலே மொத்தமாக 44 துணைச் சுகாதார நிலையங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 44-லே, 32 துணைச் சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற





நிதியிலேயிருந்து அதிகமான அளவிலே ஒதுக்கி, என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே இருக்கிற அந்தத் துணைச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித்தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். மேட்டுப்பாளையத்திலே இருக்கிற அந்தத் தாலுகா மருத்துவமனையிலே நாளதுவரையில் நிரந்தரமாக ஒரு மகப்பேறு மருத்துவர் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இதைச் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மேட்டுப்பாளையம் மருத்துவமனைக்கு வருகை தந்து, பார்வையிட்டும் வந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களும், பெண் மருத்துவர் இல்லாத நிலையை அமைச்சர் அவர்களிடத்திலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆகவே, கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மக்கள் வசிக்கிற அந்தப் பகுதியிலே, மேட்டுப்பாளையம் மற்றும் அதைச் சுற்றியிருக்கிற கிராமங்களிலே இருந்து வருகிற தாய்மார்கள் மகப்பேறு மருத்துவர் இல்லாத காரணத்தாலே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், மேட்டுப்பாளையம் மருத்துவமனைக்குக் கூடிய விரைவிலே நிரந்தரமாக ஒரு மகப்பேறு மருத்துவரை நியமிக்க முன்வருவாரா என்ற விவரத்தைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல அங்கே சொந்தக் கட்டடம் இல்லாத கிராமச் சுகாதார நிலையங்களுக்கு R.C.H. திட்டத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டே அனைத்துத் துணைச் சுகாதார நிலையங்களுக்கும் உடனடியாகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அங்கே பெண் மருத்துவர் இல்லை என்பதை நானும் அறிந்திருக்கிறேன். எனவே, அதற்காகத்தான் வேறு ஒரு மருத்துவமனையிலே இருந்து - deputation basis-லே ஒரு பெண் மருத்துவரை நியமிப்பதற்கு உத்தரவிட்டு, அந்தப் பெண் மருத்துவரை அதே மருத்துவமனைக்கு நிரந்தரமாகப் போடுவதற்கும் உத்தரவிட்டிருக்கிறேன். விரைவில் அந்த இடம் நிச்சயமாக நிரப்பப்பட்டுவிடும்.

[2003 ஏப்ரல் 10

முற்பகல் 10-20

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதிலிலே deputation-லே பெண் மருத்துவரை நியமிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்த முறையில்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நன்றியைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** அந்த மருத்துவர் தன்னுடைய பணி நேரம் முடிந்தவுடன், அவர் தங்கியிருக்கிற ஊருக்குச் செல்கிற காரணத்தாலே, அவசரமாக வருகிற தாய்மார்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் செய்கிறேன் என்று சொல்லிவிட்டார். நன்றி சொல்லுங்கள்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** ஆகவே கூடிய விரைவிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் நிரந்தரமாக ஒரு பெண் மருத்துவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பெரியநாயக்கன்பாளையத்திலே இருக்கிற மருத்துவமனை Non-Taluk Hospital ஆக கடந்த ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்டது. ஆனால், அந்த மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் நாளதுவரையில் நியமிக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களும் நேரடியாக வருகை தந்து பார்வையிட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த மருத்துவமனைக்கும் உடனடியாக மருத்துவரை நியமித்து, அந்த மருத்துவமனைக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் அனைத்து கருவிகளையும் இந்த ஆண்டே ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் மருத்துவமனைக்கு எந்தப் பெண் மருத்துவரை deputation-லே போட்டோமோ, அதே



2003 ஏப்ரல் 10]

மருத்துவரைத்தான் அங்கே நிரந்தரமாக இருக்கச் சொல்லி அவரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அவரும் அன்னமனதோடு உறுப்பினர் முன்னிலையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார். எனவே, அதே பெண் மருத்துவர் அங்கே நிரந்தரமாக்கப்படுவார் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியநாயக்கன்பாளையத்தைப் பொறுத்தவரையில், அது இன்னும் ஒரு தரம்உயர்த்தப்படாத மருத்துவமனையாகத்தான் இருந்து வருகிறது. அந்த மருத்துவமனை நிச்சயமாக ஒரு தாலுகா மருத்துவமனை அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளும் அங்கே நிச்சயமாக நான் உங்களுக்கு உறுதி அளித்ததைப்போல விரைவிலே செய்து கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *223.* திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**223—**

### கடன் தள்ளுபடி

***23081—திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தக்காவிக் கடன் வழங்கப்பட்டுள்ளதைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தக்காவிக் கடன் தள்ளுபடி செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 10

**திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மலைத்தோட்ட விவசாயிகள் கணிசமாக உள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால், வறட்சி ஏற்பட்டு, மண்வளம் எல்லாம் குன்றிப் போயும், காப்பி, மிளகு, எலுமிச்சை போன்ற பயிர்களெல்லாம் நோயினால் பாதிக்கப்பட்டும், சரியான விளைச்சல் இல்லாமலும், விளைந்த பயிர்களுக்கு சரியான விலை இல்லாமல் விலைவீழ்ச்சி ஏற்பட்டும், மலைத்தோட்ட விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இதற்கு முன்னாலே இதே நிலை 1979 ஆம் வருடத்தில் ஏற்பட்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அந்தத் தக்காவிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற மாண்புமிகு இதயதெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அனைத்து விவசாயிகளுக்கும், கூட்டுறவு கடனில் வட்டி, அபராத வட்டி, நில வரி, தல வரி, தலமேல் வரி என்று தள்ளுபடி செய்ததைப்போல எனது பகுதியிலுள்ள மலைத்தோட்ட விவசாயிகளின் துயர்துடைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு மறுபரிசீலனை செய்து, தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்யுமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாகக் கிட்டத்தட்ட 9.20 இலட்சம் ரூபாய் கடனாக நிலுவையில் உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 1.95 கோடி ரூபாய் கடனாக நிலுவையில் உள்ளது. தமிழ்நாட்டில் 31-3-2001 வரை 83.7 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. தமிழக அரசுக்கு இருக்கிற நிதி நெருக்கடியில் அந்தக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்வது என்பது இயலாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.



2003 ஏப்ரல் 10]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மண்வளப் பாதுகாப்பின் மூலமாக அந்தந்த நிலங்களிலே நீரைத் தேக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கரைகள் அமைக்கப்பட்டன. ஆனால் அந்த விவசாயிகளுடைய அனுமதியின்றி செய்யப்பட்டது. அவர்களிடத்தில் கேட்டு அதைச் செய்யலாமா என்கின்ற முறையில் அவர்களின் ஒப்புதலைப் பெற்று இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. சாதாரணமாக ஒரு விவசாயி 50 ரூபாயில் அந்தக் கரையை அமைத்துக்கொள்ள முடியும் என்று சொன்னால் ஏறக்குறைய 200 ரூபாய்க்குமேல் அந்தத் திட்டத்தின் மூலமாக அவர்கள்மேல் கடன் சுமை ஏற்றப்பட்டுள்ளது என்கின்ற நிலை இருக்கிறது. எனவே, இதை அரசு பரிசீலித்து—அந்த விவசாயிகள் எல்லாம் வறட்சியின் காரணமாக கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாகவே மிகவும் சிரமத்தில் இருக்கிறார்கள்—அவர்களுக்கு ஏதாவது மானியமாகவாவது, பாதித் தொகையாவது கழித்து வசூல் பண்ணுவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள், 50 ரூபாய் செலவாகும் என்று சொன்னால், 200 ரூபாய் வரை செலவாகிறது என்று. இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் அரசினுடைய கவனத்திற்கு வந்து, தற்போது இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது அந்தந்தப் பகுதியிலே இருக்கிற, அந்த மக்களினுடைய பங்கேற்போடுதான் நடத்துவது என்று இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்தக் கடன் என்பது அவர்களுடைய நிலங்களை அவர்கள் வளப்படுத்துவதற்காகத் தருவது. அரசுக்கு இருக்கிற இந்தச் சிரமமான சூழ்நிலையில் இதுபோன்ற கடன்களைத் தள்ளுபடி செய்வது இயலாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 224, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 10

**224—**

**மாணவர் விடுதி**

***3744—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் விடுதிகளில் வேலை செய்யும் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், விடுதிகளைத் தனியாரிடமிருந்து அரசு ஏற்று நடத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வந்த கல்லூரி மாணவ மாணவியருக்கான 25 விடுதிகளுக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் உணவு வழங்கும் ஒரு திட்டத்தை கடந்த அரசு 1-6-1998 முதல் செயல்படுத்த ஆணையிட்டது. இதில் 6 விடுதிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் உணவு வழங்க தனியார் எவரும் முன்வரவில்லை. 17 விடுதிகளில் இத்திட்டம் சரிவர செயல்படுத்தப் படாமல் கைவிடப்பட்டது. தற்போது இத்திட்டம் இரண்டு விடுதிகளில் மட்டுமே செயல்பட்டு வருகிறது. ஏனைய விடுதிகளை அரசே நடத்தி வருகிறது. எனவே, ஊழியர் எவரும் பாதிப்பு அடையவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன், இருக்கையில் இல்லை.

வினா எண் 225, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 10]

**225—**

**பள்ளிக்கூடம் கட்டுதல்**

***7306—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடம்பாறையிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான மின்சார வாரிய நிருவாகத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வரும் காலியிடத்தில் பழங்குடியினருக்கு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்தும் பள்ளிக்கூடம் கட்டவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பள்ளிக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காடம்பாறைக்குப் பதிலாக பூலுவபபட்டியில் விடுதியுடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்ட ஆணையிடபபட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ் அவர்கள்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலே வசிக்கிற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை எல்லாம் செய்ய வேண்டுமானால், வனத் துறையினுடைய ஒப்புதலைப் பெற வேண்டிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. வனத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் Forest Conservation Act-ன்படி அனுமதி வழங்கமுடியாது என்று கூறி வருகிறார்கள். இதனாலே நம்முடைய ஆதிவாசி மக்களுக்குத் தேவையான கட்டடங்களை எல்லாம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது. இன்றைக்கு காடம்பாறைப் பகுதியிலே இருந்துகொண்டு இருக்கிறார்கள்; அதற்குப் பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்; அதற்குப் பதிலாக பூலுவப்பட்டியிலே கட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே பள்ளி இருக்கிற

[2003 ஏப்ரல் 10

இடத்திலேயே பள்ளிக்கூடம் கட்டினால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பயன்பெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதே பகுதியிலே பள்ளிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட வனத் துறையினிடத்திலே அனுமதியைப் பெற்று கட்டித் தர முன்வருவாரா? ஏற்கெனவே வனத் துறையைச் சார்ந்தவர்கள் அரசினுடைய நலப் பணிகளைச் செய்வதற்குத் தடையாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி இப்படி ஆதிவாசிகள் அதிகமாக வசிக்கிற பகுதிகளிலே, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், காடம்பாறை பழங்குடியினர் மாணவிகள் நலனுக்காக ரூபாய் 34 இலட்சத்தில் பள்ளியுடன் இணைந்த விடுதி கட்டுவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக கடந்த அரசு ஒரு ஆணை வெளியிட்டது. கடந்த அரசால் நிதியும் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இருந்தாலும், விடுதி கட்டுவுதற்கு கட்டுமானப் பொருள்கள் கொண்டு செல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின்படி வனத் துறையினால் அனுமதியளிக்கப்படாத நிலையில், மேற்படி விடுதிக்குப் பதிலாக உடனடியாக அந்தப் பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில்தான். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு அமைந்த உடனே, விரைவாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உத்தரவிட்டு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், மேற்படி மாவட்டத்தில் பூலுவப்பட்டி என்ற கிராமத்தில் பள்ளியுடன் இணைந்த விடுதி கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது அந்தக் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. காரணம் பள்ளி மாணவர்களுடைய நலனுக்காக விரைவாக கட்டி முடிக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இப்போது அதன் அருகிலேயே கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 10]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடம்பாறை என்பது வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலே இருப்பது. பூலுவப்பட்டி என்பது தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே இருப்பது. தொண்டாமுத்தூருக்கும் வால்பாறைக்கும் இடைப்பட்ட பகுதியிலே 50 கிலோ மீட்டருக்கு மேலாக தூரம் உள்ளது. வால்பாறைக்கு அடுத்தபடியாக இருப்பது பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி. பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் ஏராளமான ஆதிவாசிகள் ஆனைமலைக் குன்றினுடைய அடிவாரத்திலே குடியிருந்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, காடம்பாறையிலே ஒதுக்கப்பட்ட நிதியை பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உடையகுளம் பேரூராட்சிப் பகுதியிலே வசிக்கிற ஆதிவாசிகளுக்கு பயன்படத்தக்க வகையிலே பள்ளியும், அந்த மாணவர்கள் தங்குவதற்கான விடுதியும் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடம்பாறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி கடந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நிதியும் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஆனால் நிலுவையில் இருந்தபடியால், பூலுவப்பட்டியிலும் கட்ட வேண்டும் என்கிற கோரிக்கை வரப்பெற்றதன் காரணமாக, விரைவாக எங்காவது ஒரு இடத்தில் அந்த நிதியை செலவு செய்ய வேண்டும் என்பதாலும், மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்கிற அடிப்படையில்தான் தற்போது அந்தக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, கருத்தை அரசு ஆயவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 226, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**226—**

## நிதி திரட்டுதல்

**•2135—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாணபுமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் முன்வைப்புத் தொகை மூலம் நிதி திரட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும், முன்வைப்புத் தொகை மூலம், நிதி திரட்டும் கருத்துருக்கள் எதுவும், தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு கடும் நிதி நெருக்கடியில் தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் புதிய பேருந்துகளை முழுமையாக வாங்க இயலாத சூழ்நிலை தற்போது உள்ளது. தற்போது பொதுமக்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கொடுக்கப்படுகிற வட்டியின் விகிதம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் அவற்றில் பணத்தை எல்லாம் டெபாசிட் செய்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, போக்குவாத்துக் கழகங்களைத் திறம்பட நடத்துவதற்கு தனியாரிடமிருந்து டெபாசிட்டைப் பெற்று அந்தப் பணத்தின் மூலமாக புதிய வழித்தடங்களில் இயக்க புதிதாக பஸ்கள் எல்லாம் வாங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவியை ஏற்பாடு செய்வதற்காக, நிதி உதவி பெறுவதற்காக, ஏற்கெனவே 1975 முதல் T.D.F.C.- Tamil Nadu Transport Development Finance Corporation என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்த நிதி நிறுவனம் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.



இன்றைக்குப் பொதுமக்களும் T.N.P.L., Power Finance, TIDCO போன்ற அரசு நிறுவனங்களிலும், பெருமளவில் T.D.F.C. தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திலும் முதலீடு செய்திருக்கிறார்கள். அதன்மூலமாக இன்றைய நிலவரப்படி இந்தத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் மக்கள் இதுவரை 912.36 கோடி ரூபாயை நிதியாகக் கொடுத்திருக்கிறார்கள், டெபாசிட்டாக கொடுத்திருக்கிறார்கள். அந்த நிதியிலிருந்துதான் இப்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நிதி வசதியை கடனாகப் பெற்று, இன்றைக்குப் புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே இந்த நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை மொத்தம் இந்த நிறுவனத்தின் நிதி உதவியின் மூலமாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 32,725 புதிய பேருந்துகளை வாங்கி இருக்கின்றன. இந்தப் பேருந்துகள் வாங்குவதற்கு நிதி உதவி செய்த நிறுவனம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்தான். இப்படி நல்ல நிதி நிறுவனத்தை நாம் பெற்றிருப்பதால், அந்த நிதி நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு, அதை வலுப்படுத்துவதற்கு, அதனுடைய நிதியைக் கூட்டுவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் மூலமாக இப்போது அந்த நிதி நிறுவனத்திலிருந்து இந்த ஆண்டுகூட கடனாகப் பெற்று, புதிய பேருந்துகள் வாங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

மற்றொன்றையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வட்டி வீதத்தைப் பொறுத்தளவிலே இன்றைக்கு வங்கியினுடைய வட்டி வீதத்தைக் காட்டிலும் தனியார் வட்டி வீதம் கூடுதலாக இருப்பதால், அதனை நம்பி பலர் ஏமாந்துவிடுகிறார்கள். ஆகவே, மக்களுடைய பாதுகாப்பான முயற்சிக்கு போக்குவரத்துக் கழகங்கள் இப்படிப்பட்ட நிதி நிறுவனங்களை உருவாக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திலே வழங்கப்படுகின்ற வட்டி ஏற்கெனவே வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அளித்து வருகின்ற வட்டி வீதத்தைவிட 1 முதல் 1½ சதவீதம் வட்டி கூடுதலாக வழங்கிக்

கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், இந்த நிறுவனத்தில் தாங்களும் மற்றும் தங்களுக்கு தெரிந்தவர்களையும் ஈடுபடுத்தி, அங்கே அவர்களுக்கு விளம்பரம் செய்து, இந்த நிதி நிறுவனத்திலே டெபாசிட் செய்யும்படி அவர்களை நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருடைய நீண்ட நெடிய பதிலுரைக்கும், அவர்களுடைய அறிவுரைகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 227, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**227—**

**நியாய விலைக் கடை**

***27794—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. வாகைக்குளம் பகுதியில் நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அருப்புக்கோட்டை தொகுதி, கே. வாகைக்குளம் பகுதியில் முழு நேர நியாயவிலைக் கடை திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. வாகைக்குளம், சோலாண்டி மற்றும் பாசிக்குளம் ஆகிய கிராமங்களில் சுமார் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ளன. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால



ஆட்சியில் இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் இந்தப் பகுதி நேர நியாயவிலைக் கடையை முழு நேர நியாயவிலைக் கடையாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அமைத்துத் தர முடியுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. வாகைக்குளம் பகுதியில் கள்ளக்காரி முழு நேர நியாயவிலைக் கடையின் கட்டுப்பாட்டில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை இயங்கி வருகிறது. கே. வாகைக்குளம் பகுதியிலே 283 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, கள்ளக்காரி முழு நேர நியாயவிலைக் கடையில் மொத்தம் 528 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் நியாயவிலைக் கடையைத் திறக்க வேண்டுமென்றால் குறைந்தது 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்திடுதல் வேண்டும். எனவே, இப்பகுதியில் 283 அட்டைகளே உள்ளதால் முழு நேர நியாயவிலைக் கடையை திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளிலே பல கடைகள் மகளிர் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடைபெற்று வருகின்றன. என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே அப்படிப்பட்ட மகளிர் கூட்டுறவு நியாயவிலைக் கடையிலே அட்டை வைத்திருக்கின்ற மகளிர் ரேஷன் பொருட்களைப் பெறுவதற்காக போனால், அட்டையிலே இருக்கின்ற ஆட்கள்தான் வர வேண்டும், அவர்களுக்குத்தான் விநியோகம் செய்வோம் என்று மறுத்துவிடுகிறார்கள். அங்கே நான் சுமார் 50 மகளிரை அழைத்துக்கொண்டு நியாயவிலைக் கடைக்குச் சென்றால் அப்படி கொடுக்கமுடியாது என்று சொன்னார்கள். அது தவிர அங்கேயிருக்கின்ற மகளிர் பாதி உணவுப் பொருட்களைக் கொடுத்துவிட்டு, பாதிக்கு அடுத்த வாரம் வா என்று சொல்கிறார்கள். அடுத்த வாரம் போகும்போது ஸ்டாக் தீர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, பொதுவாக நியாயவிலைக் கடைகளில் வாங்குவதற்கு கூப்பன் இருக்கின்ற அந்த அடையாள அட்டையிலே இருப்பவர்கள் வர வேண்டும். அப்படி வர தவறுவார்களேயானால் அந்தக் குடும்ப அட்டையிலே பெயர் உள்ள ஒருவரை அவர்கள் பரிந்துரை செய்து, முன்பாக அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இந்த நடைமுறைகள் அனைத்துப் பகுதிகளிலும் இன்றையதினம் மிகச் சிறப்பாக நடந்துக்கொண்டு வருகின்றன என்றாலும், உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, அந்தப் பகுதியிலே செல்கின்ற மகளிர்க்கு நியாயவிலைக் கடையிலே பொருட்கள் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து உடனடியாக விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*(முற்பகல் 10-40)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நியாயவிலைக் கடைகள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தளர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலே செய்வதற்கு விதி தளர்த்தப்பட்டு இருக்கிறது என்பதை மாமன்றத்திற்குப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள நியாயவிலைக் கடைகளில் பெரும்பாலான கடைகளில் கார்டுகளின் எண்ணிக்கை அதிகமாகவும், பல்வேறு பகுதிகளில் கடைகளுக்குப் பொருட்களை வாங்குவதற்கு செல்கின்ற





தூரம் அதிகப்படியாகவும் இருக்கிற காரணத்தால், ஒட்டுமொத்தமாக ஒரு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் இந்தக் கடைகளை மாற்றியமைப்பது சம்பந்தமாக ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவித்து அதன்மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களுக்கிணங்க, மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 அட்டைகளுக்குக் குறையாமலும், இருக்கக் கூடிய ஒவ்வொரு வார்டிலேயும் ஒரு நியாயவிலைக் கடை கிடைக்கக்கூடிய அளவுக்கு இன்றையதினம் நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. ஊரகப் பகுதிகளிலே 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்ட நியாயவிலைக் கடைகள், அவற்றிலும் 500-க்கு குறையாமலும், இன்றையதினம் அப்படிப்பட்ட கடைகள் நடந்து கொண்டு வருகிறது. 2 கி.மீ. தூரத்திற்கு மேல் செல்லாத வகையிலே நியாயவிலைக் கடைகள் எல்லாம் இன்றைக்கு பிரித்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு பகுதிகளில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே அந்தந்தப் பகுதிகளில் இப்படிப்பட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நியாயவிலைக் கடைகள் நியாயமாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய முழுநேரக் கடையைப் பிரிக்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விதிமுறைகளை எடுத்துச் சொன்னார்கள். 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும்; குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று இங்கே சில விதிமுறைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், ஒரு சில கிராமங்களில் பொருட்களை கடைகளில் வாங்கவேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 3 கி.மீ. கூட நடந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால், குடும்ப அட்டைகளை வைத்துப் பார்க்கிறபோது அது சரியாக, விதிமுறைகளுக்கு ஒப்பாக வரவில்லை. சில கடைகளில் 150 கார்டுகள் இருக்கின்றன. ஆக, 10, 20 கார்டுகள் குறைந்தால்கூட 200 கார்டுகளுக்கு குறைவாக இருக்கிறது என்று

சொல்லி அங்கே காரணத்தைக் காட்டி தவிர்த்து விடுகிறார்கள். அதனால், கிராமப் பகுதியிலே இருக்கிற மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்த கி.மீ. அடிப்படையாக வைத்து சரியாக இருந்தால்கூட கார்டுகள் 10, 20 குறைந்தாலும்கூட, அந்த 200 கார்டுகள் என்பதைத் தவிர்த்து, ஒரு 150 கார்டுகள் இருந்தால் போதும் என்ற நிலையை வைத்து; பகுதிநேரக் கடைகள் திறப்பதற்கு, அந்த கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு இந்தப் பொருட்கள், அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கு நம்முடைய அரசு வழிவகை செய்ய முன்வருமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிற பகுதியில் அல்லது குறைவாக அட்டைகள் இருக்கிற பகுதியில், பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது. மேலும், இந்த வழியிலேகூட அவர்கள் மேற்கூறிய நடைமுறைகளை எல்லாம் நிறைவு செய்ய முடியாமல் போனாலும், நியாயவிலைக் கடைகள் திறப்பது அவசியம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருதும்பட்சத்தில் அப்படிப்பட்ட பகுதிகளில் கடைகள் திறக்கப்படும் என்பதை இங்கே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கடைகளைப் பொறுத்த அளவிலே குறிப்பாக கிராமப்புறங்களில் பகுதி நேரக் கடைகளுக்கும், நிரந்தரக் கடைகளுக்கும் விதிக்கப்பட்டுள்ள அளவுகோலைக் குறைத்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிலைகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை எளியவர்களுக்கு பல்வேறு பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த





வகையிலேதான் 1997-ல் பல்வேறு இடர்பாடுகளை எல்லாம் கடந்து, நம்முடைய இந்த அரசு வந்ததற்குப் பின்னால், நான் இப்போது சொல்லிய ஒரு திருத்தத்தை அதிலே தந்திருக்கிறார்கள். மிக அவசியம் என்று கருதும்பட்சத்தில் அல்லது அந்தப் பகுதியிலே சாதிக் கலவரங்கள் போன்ற நிகழ்வுகள் நடக்குமேயானால், அப்படிப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியாயமாகப் பரிசீலனை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கருத்துரு வழங்கப்பெற்று, அதனை ஆய்வு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராம மக்களிடையே பகுதிநேர நியாயவிலைக் கடைகள் என்பது மிக அத்தியாவசியமான தேவையாக இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. ஏனென்றால் கிராம மக்கள் மிக நீண்ட தொலைவிலிருந்து வருவதால் அந்த ரேஷன் பொருட்களை வாங்குவதிலே மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஆக, விதிமுறைகளுக்கு உட்பட்டு பிரிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தாலும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, மண்டல இணைப் பதிவாளர் மூலமாகக் கருத்துருக்களைப் பெறுகின்றபோது சில நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக, குறைந்தது ஒரு வருடத்திற்கு மேலாக அந்த உத்தரவைப் பெறுவதிலே தாமதம் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு உத்தரவை வழங்க அரசு ஆணையிட முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விதிகளை அப்படித் தளர்த்த இயலாது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருத்துருவை இங்கே அனுப்பி, அது உணவுத் துறையினுடைய கட்டுப்பாட்டிலேதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

[2003 ஏப்ரல் 10

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள், இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். குறிப்பாக எடுத்துக்கொண்டால், என் தொகுதியிலே மேற்கு தொடர்ச்சி மலை அருகில் இருக்கிறது திருவொற்றிபுரம் என்ற ஒரு கிராமம். அங்கே 185 கார்டுகள் இருக்கிறது. ஆனால், அவர்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு எலத்தூருக்கு 5 கிலோ மீட்டர் வரவேண்டும். ஆனால், அங்கு பேருந்து வசதிகளும் கிடையாது. அவர்கள் அன்றாடம் கூலி வேலை பார்த்துத்தான் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 200 கார்டுகள் என்று இருக்கும் விதியைத் தளர்த்தி, அரசு இந்த ஏழை எளியவர்களுக்குப் பகுதி நேரக் கடையைத் திறப்பதற்கு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போன்று, பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பகுதிநேர நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்குத் தனிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மலைவாழ் மக்களுக்காக அங்கே நடமாடும் நிலையங்கள் மூலம் எல்லாம், பொருட்களை வழங்குகிற முறையில் அந்த வண்டிகளில், ஊர்திகளில் அவை அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கிறன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையிலே ஒரு நியாயவிலைக் கடையிலே குடும்ப அட்டைகள் 800-க்குக் குறையாமலும், 1,000 குடும்ப அட்டைகளுக்கு அதிகமாகாமலும் இருப்பதாக அறிவித்திருந்தார்கள். சென்னை மாநகரத்திலே 1,400, 1,600, 1,800 என்று பல நியாயவிலைக் கடைகளிலே குடும்ப அட்டைகள் இருக்கின்ற நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஒட்டுமொத்தமாக, சென்னை அளவிலே ஒரு ஆய்வினை நடத்த, இப்படி 1,000 அட்டைகளுக்கு மேலாக நியாயவிலைக் கடைகளில் இருக்கின்ற



2003 ஏப்ரல் 10]

அட்டைகளைப் பிரித்து, புதிய கடைகளை உருவாக்குவதன் மூலம் நியாயவிலைக் கடைகளிலே பொருட்கள், நேரம் தவறாமல் கிடைக்கின்ற வாய்ப்பும் உருவாகும், அப்படி உருவாக்குகின்ற நேரத்திலே அரசுக்கு நிதி நெருக்கடி இருக்குமானால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியை அந்த நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்குப் பயன்படுத்திட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்து ஏற்புடைய கருத்து. அவர்கள் சுட்டிக்காட்டியபடி அந்தக் கருத்து முறையாக அனுமதிக்கப்பட்டு, இப்படிப்பட்ட இடங்களிலே அட்டைகள் பிரித்து வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அவசியமும், முக்கியத்துவமும் இருக்கின்றபட்சத்தில் அந்த இடங்களில் கடைகள் திறக்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், என்னுடைய தொகுதியில் ஒரு இடத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அட்டைதாரர்கள் இருக்கின்றனர். ஆனால், அதற்குப் புதிய கடை திறக்க நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில், கணக்கு எடுக்கும்பொழுது—முதலில் பக்கத்தில் இருக்கின்றவர்கள், அந்த 2 கிலோ மீட்டருக்குள்ளாக அந்த வீடுகள் வருகின்றன. பிறகு, தூரத்தில் இருக்கின்ற வீடுகள் வருகின்றன. இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கும் மேலே வருகின்றன. இன்னும்கூட சொல்லப்போனால் மூன்று கிலோ மீட்டருக்குமேல் எல்லாம் தூரம் வருகின்றது. ஆனால், ஓரே ஒரு பக்கத்தில் 4, 5 வீடுகள் அந்த இரண்டு கிலோ மீட்டருக்குள். அந்த எல்லைக்குள் வருகின்ற காரணத்தைக் காட்டி, அந்த தூரம் இரண்டு கிலோ மீட்டருக்குள்ளே இருப்பதால், புதிதாக கடை வழங்க இயலாது என்று கடைசி நேரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் சிவந்திபுரம் பகுதியில் புதிதாக கடை திறப்பதற்கு, எண்ணிக்கை எல்லாம் தகுதியாக இருக்கின்றது. தூரமும் தகுதியாக இருக்கின்றது. ஆனால், குறிப்பிட்ட

[2003 ஏப்ரல் 10

சில வீடுகள் மட்டும் அந்த இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே வருவதால் புதிய கடைகள் திறக்கமுடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் புதிய கடை திறப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளியவர்களுக்குப் பயன்படுகின்ற பணிகள் நடைபெறவேண்டும், சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று பணித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 228, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**228—**

**குடிநீர் விநியோகம்**

**•8397—திரு. வெ. ஏழுமலை:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியிலுள்ள அனந்தபுரம்-செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட பி.வி.சி. பைப்புகள் அடிக்கடி வெடிப்பதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதைத் தடுக்க அவற்றினை மாற்றி சீரான குடிநீர் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியிலுள்ள பொது மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்வதில் அனந்தபுரம்-செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மெயின் பைப்புகள் அனைத்துக்கும் கல்நார் பைப்புகள்



2003 ஏப்ரல் 10]

பொருத்தப்பட்டு குடிநீர் ஏற்றப்படுகிறது. மெயின் பைப் லைனில் பிளாஸ்டிக் குழாய் பயன்படுத்தப்படவில்லை. எனினும், தற்போது நீர் கொண்டு வரும் மெயின் பைப்புகள் வெடிப்பு ஏதும் இல்லாமல் குடிநீர் விநியோகம் செய்ய நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அனந்தபுரம்-செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டதிற்குப் பயன்படுத்துகின்ற கல்நார் பைப்புகள், இந்தத் திட்டத்திற்காக வாங்கப்பட்ட பைப்புகள் அல்ல. இதில் பயன்படுத்தியிருக்கின்ற பைப்புகள் வேதாரண்யம் பகுதியில் ஒரு குடிநீர்த் திட்டத்திற்கு வாங்கப்பட்ட பைப்புகள். அங்கு பயன்படுத்த முடியாது என்று நிராகரிக்கப்பட்ட காரணத்தால் 1989-90 ஆம் ஆண்டில் அவசரம் அவசரமாக அந்த பைப்புகளை இங்கு பயன்படுத்தி குடிநீர் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த பைப்புகளின் தரம், கிளாஸ் 10 வகையைச் சார்ந்தது. அந்தத் திட்டத்தின் ஆரம்பப் பகுதியில் நீர் அழுத்தம் அதிகமாக உள்ள காரணத்தால் அந்த பைப்புகளில் அடிக்கடி வெடிப்பு ஏற்படுகின்றது. அதனால் கடைக்கோடியில் இருக்கின்ற, செஞ்சி பகுதிக்குத் தண்ணீர் வரவில்லை. நான் இதை அங்கு நேரடியாகச் சென்று பார்த்து இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதில் அதிகாரிகளால் எப்போது வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை. கடந்த இரண்டு மாத காலமாக பைப்பு வெடிப்பால் செஞ்சி பகுதியில் தண்ணீர் வரவில்லை. எனவே, மேற்குன்றத்திற்கும், இருதயபுரத்திற்கும் இடையில் சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்திற்கு கிளாஸ் 15 வகை பைப்புகளைப் பயன்படுத்தித் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு செஞ்சி பேரூராட்சி, மிகப் பெரிய பேரூராட்சி. மக்கள் தொகை சுமார் 28,000 பேர் உள்ளார்கள். 160 தெருக்கள் உள்ளன. 18 வார்டுகள் உள்ளன. இந்தத் திட்டத்தின் கடைக்கோடி பகுதியாக செஞ்சி இருக்கிற காரணத்தால், குடிக்கத் தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடந்த இரண்டு, மூன்று மாதங்களாகக் கடும் வறட்சியின் காரணமாக வாரத்திற்கு ஒரு நாள்கூட அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வருவதில்லை. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள், மாநகரப் பகுதிகளுக்கு லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குவதைப் போல, செஞ்சி பேரூராட்சிப் பகுதிக்கு லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்க நிதி ஒதுக்கி ஆவன செய்யப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 10

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தென்பெண்ணையாற்றில் நெற்குளம் என்ற பகுதியில் தலைமையிடம் அமைக்கப்பட்டுள்ளது. தலைமையிடத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருதயபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இந்த இடம் மிகவும் உயர்ந்த இடம். உயர்வான பகுதி சேர்ந்த இடம். நீர் அந்தப் பகுதியில் வரும்போது தற்போது 350 எம்.எம். கல்நார் குழாய்கள் மூலமாக நீர் உந்தப்படுகிறது. அந்த நேரத்தில் உயரமான பகுதி என்ற காரணத்தால், நீர் அழுத்தம் அதிகம் உள்ளதால், அந்த கல்நார் குழாய் பைப்புகளில் உடைப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு இருதயபுரத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்து, அதில் 40 குதிரை சக்தி திறன் கொண்ட நீர் உந்து நிலையம் அமைக்க 20 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு வறட்சி நிவாரணப் பணியின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் உடனடியாக அந்தத் திட்டப் பணிகள் வெகு விரைவாக முடிக்கப்பட்டு, செஞ்சி பேரூராட்சி பகுதிவாழ் மக்களுக்கு நிறைவாக குடிநீர் வழங்கப்படும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1990-91 ஆம் ஆண்டு கல்நார் பைப்புகளை மாற்றி அமைத்ததாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை தரம் வாய்ந்த கல்நார் பைப்புகளா இல்லையா என்பதுபற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வறட்சி நிவாரணப் பணிக்காக பேரூராட்சிப் பகுதிகளுக்கு 21 கோடியே 76 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து வறட்சியில் முழுமையாக அந்தப் பகுதிவாழ் பொதுமக்களுக்கு நிறைவாக நிரந்தரமாக குடிநீர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே செஞ்சி பேரூராட்சி பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 229, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 230, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 10]

**230—**

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**

***20647—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதி கிராமங்களில் மகளிருக்கென பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதி கிராமங்களில் மகளிர் சங்கங்கள் அமைக்கக் கேட்டுச் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் சராசரியாக நாளொன்றுக்கு 55 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியாகி வருகிறது. விழிகளைக் காக்க இமைகள் துணையாகும். விடியல் வந்திட இரவுகள் மறைந்தோடும். வள்ளல்கள் பெருகிட வறுமை வழிந்தோடும். வான்மழை நிறைந்துவா பசுமைகள் செழித்தோங்கும். உண்மைகள் பேசிட உயர்வுகள் வந்திடும். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், பெண்கள் வாழ்வில் வளம் பெற சுய உதவிக் குழு அமைத்து சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் பகுதி கிராமங்களில் சுய உதவிக் குழுக்கள் மூலமாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அதிகமாக தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கென பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரிக்கை பெறப்பட்டால் தகுதி அடிப்படையில் சங்கம் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 231, திரு. ராதாரவி. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**231—**

**மானியத் தொகை**

***32796—திரு. ராதாரவி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறிய பட்ஜெட் படத் தயாரிப்பாளர்களுக்கு அரசு அளிக்கும் மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அதை அதிகரித்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் அளிக்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்யப்படும் படங்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

*முற்பகல் 11-00*

**திரு. ராதாரவி:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிக் கேள்வி. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் நீங்கள் கேள்வியைக் கேட்டு, அமைச்சர் விடை சொல்கின்ற வரைக்கும் பேரவையின் முன்னனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ராதாரவி:** என்னுடைய தொழிலைச் சேர்ந்த கேள்வி அனுமதிக்கப்பட்டதற்கு நன்றியைச் சொல்லி, மாண்புமிகு இதய



2003 ஏப்ரல் 10]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னான பாதங்களைத் தொட்டு வணங்கி வினாவைக் கேட்கிறேன். ஏற்கெனவே சினிமா எல்லாம் செத்துக்கொண்டிருக்கின்ற நேரம் இது. அதனாலே, சிறிய படங்களுக்கு தயவுசெய்து இப்பொழுது 35 பிரிண்டுகளாக மாற்றி, அதைப் பதினைந்து இலட்சமாக தருவதற்காக அவர்கள் ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதேபோல, பெரிய படத்திற்கும், சிறிய படத்திற்கும் ஒரே வரியை விதிக்கிறார்கள். சிறிய படத்திற்கு 5 சதவீதம் என்றால், சிறிய படங்களை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோல Single Window System அதாவது தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம்மூலம் கிடைக்கும் அந்த permission அதை வெளியே எடுத்துச் செல்லும்போது வனத் துறை, மின் துறை, பொதுப் பணித் துறை, அறநிலையத் துறை போன்ற துறைகளிடம் மீண்டும் ஒப்புதல் பெறவேண்டியிருக்கிறது. அதை மாற்றியமைத்துக் கொடுக்கவேண்டும். அதேபோல, இப்பொழுது ஊட்டியில் இரண்டு மாதத்திற்கு சூட்டிங்கே எடுக்கக்கூடாது என்று ஒரு ஆர்டர் போட்டிருப்பதாகக் கேள்வி. இரண்டு மாதங்கள் சூட்டிங் ஊட்டியிலே எடுக்கவில்லையென்றால் பெரிய படங்கள் எல்லாம் ரொம்ப பாதிக்கப்படும். ஏனென்றால் ஏற்கெனவே எல்லோருடைய தேதிகள் எல்லாம் வாங்கி வைத்திருப்பார்கள். அதனாலே, பாதிப் படம் எடுத்த நிலையில், வேண்டாம் வெளியே போய் எடுங்கள் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் மாற்றி அமைக்கவேண்டும்.

அதேபோல, இந்தத் திருட்டு வி.சி.டி. அதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். அதற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதைப்போல நல்ல பல திட்டங்களை, ஏனென்றால், இன்று முதலமைச்சராக இருக்கும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய தொழிலைச் சார்ந்த இடம் இது, சினிமா என்பது. அதனால், நான் கேட்ட கேள்விகளுக்கு நல்ல ஒரு பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்திற்கு விண்ணப்பிக்கும் திரைப்படங்கள் கீழ்க்கண்ட முக்கிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று அரசின் விதிமுறைகள் இருக்கின்றன. ஒன்று, மைய அரசின் திரைப்படக் குழுவின் தணிக்கைப் பிரிவினால் சான்று அளிக்கபபட்டிருக்கவேண்டும். 3,000 மீட்டர் நீளத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். திரைப்படத்தின் பிரதிகள் எட்டிலிருந்து இருபத்தைந்திற்குள் மட்டுமே இருக்கவேண்டும். மானியத்திற்கான ஆண்டு, ஜனவரி 1-ஆம் நாளிலிருந்து, டிசம்பர் 31-ஆம் நாளுக்குள் திரைப்படம் வெளியிடப்பட்டிருக்கவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள ஆய்வகத்தில் negative develop செய்யப்பட்டு, பிரதிகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் குறைந்தபட்சம் 5 முழு கால்ஷீட்டுகள் படம் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். நேரடி தமிழ்த் திரைப்படமாக இருக்கவேண்டும் என்ற 7 நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தக் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் அளிக்கும் திட்டம் இதன்கீழ் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை 1992-ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 75 திரைப்படங்கள் வரை மானியம் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைகளை நிச்சயமாகப் பரிசீலித்து, சிறப்பாக அவை செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை. இரண்டு மாத காலத்திற்கு ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலாத் தலங்களில் படப்பிடிப்புகள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த முடிவை மறுபரிசீலனை



2003 ஏப்ரல் 10]

செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி கேட்டுக்கொண்டார். அந்தத் தடை உத்தரவை மறுபரிசீலனை செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரைப்படங்கள் என்பவை பொதுமக்களின் மனமகிழ்விற்காக எடுக்கப்படுகின்ற படங்கள் ஆகும். ஆகவே, சிறிய படமோ, பெரிய படமோ, படப்பிடிப்பு நடக்கும்போது, பொதுமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படக்கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கை. ஏப்ரல், மே மாதங்களில்தான் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் விடுமுறைகள் விடப்படுகின்றன. பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு வருகிறார்கள். பலபேர் குடும்பத்தோடு இந்த விடுமுறை நாட்களை அங்கே கழிக்க வருகிறார்கள். அந்தச் சுற்றுலாப் பயணிகள் செல்லும் இடங்களில் எல்லாம்கூட அப்போது படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தால் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும். மேலும், இந்தத் திரைப்பட யூனிட்டுகள், பொட்டானிக்கல் கார்டன்ஸ் மற்றும் இயற்கை எழில் மிக்க இடங்களில் படப்பிடிப்பை நடத்திவிட்டுச் செல்லும்போது, அந்த இடத்தையே துவம்சம் செய்துவிடுகிறார்கள்; நாசம் செய்துவிடுகிறார்கள். ஆகவேதான், அரசு இந்த முடிவை எடுத்து, இந்த Holiday season, விடுமுறைக் காலம் முடிகின்றவரை படப்பிடிப்புகளை அனுமதிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறது. இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

[2003 ஏப்ரல் 10

# 3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

## (அ) இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதை எதிர்க்கும் மாணவிகளைச் சந்தித்த உறுப்பினர்கள் சிலர் கைது பற்றிய மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-4-2003 அன்று சட்டமன்றப் பேரவையில், புதிய தலைமைச் செயலக வளாகத்தை இராணி மேரி கல்லூரி வளாகத்தில் கட்டுவதற்கான அறிவிப்பை நான் வெளியிட்டேன். தலைமைச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை என்று அழைக்கப்படும் 10 மாடிக் கட்டடம் போதிய வசதி இன்றி மிகவும் பழுதான நிலையில் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் என்ற கேள்விக் குறியுடன் உள்ளதைக் குறிப்பிட்டு, விரிவான ஆலோசனைக்குப் பின்னர் புனித ஜார்ஜ் கோட்டைக்கு எதிராக உள்ள இடம், வெலிங்டன் சீமாட்டி கல்லூரி வளாகம் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டு, அவை ஒவ்வொரு வகையிலும் தகுதியற்றவை என்று கண்டறியப்பட்ட காரணத்தால் இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிய தலைமைச் செயலக வளாகத்தை அமைக்க முடிவெடுக்கப்பட்டது என்பதை அறிவித்தேன். மேலும், இடிந்து விழும் நிலையிலும், இன்னும் பழுது பார்க்க முடியாத நிலையிலும் உள்ள கட்டடங்களே இராணி மேரி கல்லூரி வளாகத்தில் உள்ளன என்பதால், அந்தப் பழைய கட்டடங்களை இடித்துவிட்டு, இராணி மேரி கல்லூரி வளாகத்திலேயே புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை அமைக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது என்பதையும் தெரிவித்தேன்.

இதனால், இராணி மேரி கல்லூரி மாணவிகளுக்கு எந்தவிதத்திலும் சிரமம் ஏற்படாதபடி, இந்தக் கல்லூரிக்கு மிக அருகில் இருக்கும் வெலிங்டன் சீமாட்டி கல்லூரி வளாகத்திலேயே எல்லா வசதியும் கூடிய ஒரு நவீன கட்டடத் தொகுப்பை ஒரே ஆண்டுக்குள் கட்டி முடிக்கவும் அரசு முடிவு செய்தது. கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரையிலான இடைப்பட்ட காலத்தில் மாணவியர்கள் தங்கள்



2003 ஏப்ரல் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கல்வியைத் தொடர எந்தவித இடையூறும் ஏற்படாதபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்தேன்.

இவ்வாறு எந்த வகையிலும் இராணி மேரி கல்லூரி மாணவியருக்கு இடையூறு ஏற்படாதபடி, திட்டமிட்டு முடிவெடுத்து அரசு, அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் ஒரு சில எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக, தவறான தகவல்களைத் தந்து, மாணவியரில் ஒரு சாராரை வேலை நிறுத்தம் செய்யவும், போராடவும் தூண்டிவிட்டுள்ளன.

அரசு தன்னால் இயன்றவரை இந்த முடிவு எடுக்கப்பட்டதன் காரணங்களைப் பற்றியும், மாணவியர் நலன் குறித்தும், அவர்களுடைய கல்விக்குத் தடங்கல் ஏற்படாத வகையில் செய்யப்பட்டுள்ள மாற்று ஏற்பாடுகளைப் பற்றியும் விளக்கிக் கூற முற்பட்டது. அதன் அடிப்படையில், அரசு உயர் கல்வித் துறைச் செயலாளரும், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் இராணி மேரி கல்லூரிக்குச் சென்று அரசு அவர்களுக்குச் செய்யவுள்ள மாற்று ஏற்பாடுகளையும், இன்னும் வசதியோடு கூடிய கல்லூரிக் கட்டடத்தை அவர்களுக்காக அமைக்க இருப்பதையும் எடுத்துச் சொல்லி, அவர்களது போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர். இருப்பினும் சில அரசியல் கட்சிகளின் தூண்டுதலாலும், தவறான தகவல்களாலும், மாணவியரில் ஒரு பிரிவினர் எடுத்துள்ள போராட்ட முடிவு சட்டம்—ஒழுங்கைப் பாதிக்கும் வகையில் அமைந்து வருகிறது. தங்கள் கல்வியை ஆர்வத்தோடு தொடர்ந்து வரும் மற்ற மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டும், தேர்வுகள் விரைவில் நடைபெற இருப்பதாலும், இராணி மேரி கல்லூரி மாணவியர் எந்தவிதத் தடையும் இல்லாமல் தங்களைத் தேர்வுக்கு ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காக, உயர் கல்வித் துறை, கல்லூரி மாணவியருக்கு விடுமுறை அளிப்பதே பொருத்தம் என்று முடிவெடுத்து அறிவித்தது.

இருப்பினும், விடுமுறை அறிவிக்கப்பட்ட பின்னாலும், மாணவியரில் ஒரு பிரிவினர், தங்களது போராட்டத்தைத் தொடர்வதாகக் கூறி, கல்லூரி வளாகத்துக்குள்ளேயே இருந்து வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், முற்றிலும் மகளிரே இருக்கின்ற இந்தக் கல்லூரி வளாகத்திற்கு, உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-10*

இந்நிலையில் 8-4-2003 அன்று மதியம் இராணி மேரி கல்லூரி பிரதான நுழைவு வாயிலில் இருந்த கல்லூரிக் காவலாளியைத் தள்ளிவிட்டு, அவரை ஒழித்துக் கட்டிவிடுவேன் என மிரட்டி, அத்துமீறி உள்ளே நுழைந்த திரு. மு.க. ஸ்டாலின், திரு. க. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன், திரு. எஸ்.ஏ.எம். உசேன், திரு. தண்டராம்பட்டு வேலு ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தி.மு.கழகத்தைச் சேர்ந்த சிலர், விடுதி மாணவிகள் வளாகத்திற்குள் அமைதியாகப் படித்துக்கொண்டிருந்தவர்களை அழைத்து ஒன்று திரட்டிப் பேச ஆரம்பித்தனர். மாணவிகளுக்குத் தாங்கள் அனைத்து உதவிகளையும் செய்வதாகவும், போராட்டத்தை யாருக்கும் அஞ்சாமல் உறுதியோடு தொடருமாறும் கூறி, அமைதியாகப் படித்துக் கொண்டிருந்த மாணவிகளின் கவனத்தைத் திசை திருப்பி, அவர்கள் தேர்வுக்குத் தயார் செய்வதில் பங்கம் விளைவித்து, போராட்டத்தைத் தூண்டி அமைதியைக் குலைத்துவிட்டனர்.

இதன்பேரில், இராணி மேரி கல்லூரி முதல்வர் இவர்கள்மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்குக் கொடுத்த புகாரின் அடிப்படையில், டி-5 மெரினா காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. இந்தப் புகாரின்கீழ் விசாரணை மேற்கொண்டு, காவல் துறையினர் திரு. மு.க. ஸ்டாலின், திரு. எஸ்.ஏ.எம். உசேன், திரு. க. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன் ஆகியோரை 9-4-2003 அன்று இரவு கைது செய்தனர். இவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ள காரணத்தால், விதிமுறைகளின்படி இவர்களது கைது விவரம் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்குக் காவல் துறையால் தெரிவிக்கப்பட்டது.

இராணி மேரி கல்லூரியின் காவலாளியைத் தள்ளிவிட்டு, ஒழித்துக் கட்டிவிடுவேன் என மிரட்டி, சட்ட விரோதமாக அத்துமீறி பெண்கள் கல்லூரிக்குள் நுழைந்து, மாணவிகள் மத்தியில் போராட்டத்தைத் தூண்டி, அமைதியைக் குலைத்துவிட்ட இந்த 4 சட்டமன்ற உறுப்பினர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 4. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், டாக்டர் க. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன் மற்றும் திரு. எஸ்.ஏ.எம். உசேன் ஆகியோர் கைது குறித்த சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து 10-4-2003 ஆம் நாளிட்ட நிகரியில் கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

" I have the honour to inform that on 8-4-2003 at about 12-20 hrs., Thiru M.K. Stalin, M.L.A., Thousand Lights Assembly Constituency, Thiru K. Ponmudi, M.L.A., Villupuram Assembly Constituency, Thiru J. Anbazhagan, M.L.A., T. Nagar Assembly Constituency, Thiru S.A.M. Hussain, M.L.A., Triplicane Assembly Constituency and others had been to Queen Mary's College, Marina, pushed aside the College Watchman, threatened him with dire consequences, trespassed into the College premises, induced the College students who were studying inside the College premises to continue their strike and agitation against the Government and assured them of all their supports. In this connection, on the complaint of the College Principal, a Case was registered in D-5 Marina Police Station, Crime No. 87/2003, under Section 143, 448, 353, 506(ii) IPC read with 109 IPC on 8-4-2003 at 13.45 hrs. and investigation taken up.

In the course of investigation, Thiru M.K. Stalin, M.L.A., Thousand Lights Assembly Constituency, Thiru K. Ponmudi, M.L.A., Villupuram Assembly Constituency, Thiru J. Anbazhagan, M.L.A., T. Nagar Assembly Constituency and Thiru S.A.M. Hussain, M.L.A., Triplicane Assembly Constituency were all arrested on the night of 9-4-2003. They were all produced before the 13th Metropolitan Magistrate at his residence at Saidapet and remanded to Judicial custody till 23-4-2003."

**(ஆ) உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு தள்ளிவைப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை, கவன ஈர்ப்பு தள்ளிவைக்கப்படுகிறது.

## 5. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது மற்றும் பதினைந்தாவது அறிக்கைகளை குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**(ஆ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுது பொருள் மற்றும் அச்சு**

**(இ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 11, வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு மானியக் கோரிக்கை எண் 11-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.81,20,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 19, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 810, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1314, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1519, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2039, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2266, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2414, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2803, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3021, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3384, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3556, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3939, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 595, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 957, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1630, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6939, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 650, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3040, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3849, திரு. ஏ.எஸ். கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1123, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3825, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1175, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,20,84,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2202, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 2563, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2692, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4131, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1353, திரு. கே.வி. முரளிதரன்.

***Thiru K.V. MURALIDHARAN:** Hon. Speaker. Sir, to discuss the need to start a Sub-Registrar Office at Beri Rai in Hosur Taluk, Dharmapuri Taluk, I move--

''That the sum of Rs.81,20,84,000 allocated under 'Revenue' account under Demand No. 11-Commercial Taxes Department - Stamps and Registration be reduced by Rs.100''.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2945, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முத்திரைத்தாள் கட்டணங்களைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,20,84,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை — எழுதுபொருள் மற்றும் அச்சு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு மானியக் கோரிக்கை எண் 29-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.59,74,73,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1172, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.59,74,73,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39, வருவாய்த் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.883,62,79,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.57,30,57,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1171, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.883,62,79,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,30,57,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1116, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேன்கனிக்கோட்டை வட்டம், ஓசூர் வட்டங்களின் ஐந்து ஊராட்சிகள் மட்டும் மலைப் பிரதேசமாக உள்ளதாலும், மீதமுள்ள நிலங்கள் அனைத்தும் சமநிலமாக உள்ளதாலும், அரசு ஆணையால் தடை செய்யப்பட்ட பட்டாக்களை மீண்டும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.883,62,79,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,30,57,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2944, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மணமேல்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.883,62,79,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,30,57,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மானியக் கோரிக்கை எண் 49-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.491,81,00,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1169, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.491,81,00,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள



கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்குப் பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

## 4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (இ) உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டியும் சிலரும் கைது குறித்த செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் பேசுவதற்கு முன் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திருவண்ணாமலை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"I have the honour to inform that I have found it my duty in the exercise of my power u/s 147, 148, 294, 188, 336 and 506 IPC to direct that Thiru K. Pitchandi, M.L.A., Tiruvannamalai Assembly Constituency and 61others formed themselves into an unlawful assembly with deadly weapons, pelted stones on six Government Transport buses in between Krishna Lodge and Gandhi Statue on Big Street, Tiruvannamalai Town on 10-4-2003 between 00.30 hrs. and 1-30. hrs. and damaged the wind screen glasses to the tune of Rs.15,000 protesting against the arrest of Thiru M.K. Stalin, M.L.A., and others on 9-4-2003 night at Chennai. They were taken into custody today (10-4-2003) at 3-30 hrs. vide Tiruvannamalai Town Police Crime No.475/2003 and are being sent for remand. This is for favour of kind information".

---

@ 129 முதல் 254 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

முற்பகல் 11-20

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 11—வணிகவரித் துறை, முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**

**(ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு**

**(இ) கோரிக்கை எண் 39 - வருவாய்த் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 49 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, முத்திரைத் தாள்கள், எழுதுபொருள் அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குக் காலையிலே 'தினமணி' பத்திரிகையிலே என்னுடைய இராசி பலனைப் படித்தேன். ரொம்ப சௌகரியமான நாள் என்று இருந்தது. என்ன சௌகரியம் கிடைக்கப் போகிறது என்று நினைத்தேன். இன்றைக்கு நீண்ட நேரம் பேசுவதற்கு அனுமதி கிடைக்கும் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராசி பலன் தப்பு. 10 மணித் துளிகள்தான். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ப. அரசன்:** 15 நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் என்கிற தலைப்பிலே உள்ள இந்த மானியக் கோரிக்கையிலே ஒரு சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன். என்னுடைய அறந்தாங்கி தொகுதியில், அறந்தாங்கி நகரிலே இருக்கிற சார்பதிவாளர் அலுவலகம், அந்தக் கட்டடம் கட்டப்பட்டு 80 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்திலே அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல என்னுடைய சொந்த ஊர் சுப்பிரமணியபுரம். அங்கே ஒரு சார்பதிவாளர் அலுவலகம் வாடகை கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதற்கும் கட்டடம் கட்டித்தர வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையிலே ஆரம்பத்திலேயே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக சொல்லுகிறபொழுது, இந்தத் துறை இந்தியாவில் காலனி ஆதிக்கம் இருந்த காலம் தொட்டே, இருந்து வருகிற ஒரு தொன்மையான துறை என்று சொல்லி இருக்கிறார். பொதுவாக அரசினுடைய அனைத்துப் பணிகளுக்கும் அடிப்படையான ஒரு துறை வருவாய்த் துறை. வருவாய்த் துறை இல்லாமல் அரசு இயங்குவது என்பது மற்ற அரசுப் பணிகளுக்கெல்லாம் இடையூறாக இருக்கும். ஆகவே, இந்தத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிற நேரத்தில், வருவாய்த் துறையிலே இருக்கிற ஒரு சில இடையூறுகளை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

வருவாய்த் துறையிலே இருக்கிற நிலங்களை நம்முடைய அரசுத் துறைக்குப் பயன்படுத்துவதற்குகூட, இங்கே நம்முடைய சென்னை வரைக்கும் அந்தப் பொருள் அனுப்பப்பட்டு, சென்னையிலே இருக்கிற நில நிர்வாக ஆணையர் உத்தரவு போட வேண்டும் என்று இப்பொழுது இருக்கிறது. அது மிகுந்த காலதாமதத்தை ஏற்படுத்துகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக என்னுடைய தொகுதியிலே ஒரு விடுதி கட்ட வேண்டும் என்று சொல்லி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 7 மாத காலத்திற்கு முன்பாகவே ஒரு உத்தரவு போட்டார்கள். அது வருவாய்த் துறையினுடைய இடம். அவர்களிடத்திலேயிருந்து ஆதிதிராவிடர் நலத் துறைக்கு மாற்றுவதற்கு சற்றொப்ப 7 மாத காலம் ஆகி, 15 நாட்களுக்கு முன்னாலேதான் அந்தக் கட்டடம் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன் - இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கே கொடுக்கலாம். அரசு நிலம் அரசுப் பணிக்குத்தான். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது சிந்தனையைச் செலுத்தி அப்படி ஒரு உத்தரவு போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதி, ஆவுடையாள் நகரிலே ஒரு துணை மின் நிலையம் இருக்கிறது. அதை விரிவுபடுத்துவதற்கு இடம் வேண்டுமென்று கேட்டு 2 ஆண்டுகளுக்குப் பிறகு, சில நாட்களுக்கு முன்புதான் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. 2 ஆண்டுகளாக நானும், எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு முறை நில நிர்வாக ஆணையரிடத்திலே பேசி, இப்பொழுதுதான் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு, அரசு நிலத்தை அரசுத் துறைக்கே கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அதிகாரம் அளிக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

வருவாய்த் துறையில் மனு நீதித் திட்டம் என்று ஒரு திட்டத்தை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர் போன்ற பதவிகளிலே உள்ளவர்கள் மற்றவர்கள் எல்லாம் அந்த மனு நீதித் திட்டத்தை நடத்துகிறார்கள். அப்படி நடத்துகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்துகிற மனு நீதித் திட்டத்திற்கே மற்ற துறையினுடைய அதிகாரிகள் எல்லாம், பெரிய அதிகாரிகளே வருவதில்லை. உதாரணத்திற்கு, மின் துறை என்று சொன்னால், அவர்கள் A.E. ஐ அனுப்பி வைத்துவிடுகிறார்கள்; ஓர் உதவிச் செயற் பொறியாளரை அனுப்பி வைத்து விடுகிறார்கள். அதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டே ஓர் உத்தரவு போட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் மனு நீதி நாள் நடத்துகிறார் என்று சொன்னால், மின்சாரத் துறையினுடைய செயற் பொறியாளர் போக வேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய செயற் பொறியாளர் போக வேண்டும் என்று இப்படி குறிப்பிட்டே ஓர் உத்தரவு போட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால்....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனு நீதித் திட்டத்தின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாக அந்தக் கிராமங்களுக்குச் சென்று மனுக்களை வாங்கி, உடனே வாங்கிய மனுக்களுக்கு ஒப்புகைச் சீட்டு கொடுக்கப்பட்டு, அத்தனை மனுக்களுக்கும் 15 தினங்களுக்குள்



முடிவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது. சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் அந்தந்தத் துறைகளிலே இருக்கின்ற உயரதிகாரிகள் கூட்டத்திற்கு வர முடியாமல் இருக்கலாம். மாவட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருகின்றபோது, மற்ற அதிகாரிகள் வராமல் இருப்பதை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கின்ற மனுக்களுக்கு உடனடியாக 15 தினங்களுக்குள் அந்த மனுக்களுடைய விவரங்களுக்கு பதில்கள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாட்கள் அல்ல. பட்டா மாறுதல், ஊனமுற்றோருக்கான நிதி, முதியோர் உதவித் தொகை போன்றவற்றிற்கு எல்லாம் அப்போதேகூட கொடுக்கிறார்கள். ஆனால், மிக முக்கியமான மின் துறை, குடிநீர் வடிகால் வாரியத்திலே உள்ள பெரிய அதிகாரிகளுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே தகவல் அனுப்புகிறார் மாவட்ட ஆட்சித் தலைவர்; தொலைபேசியிலே எங்களுக்கெல்லாம் சொல்கிறார்; தபால் அனுப்புகிறார்; 10 நாட்களுக்கு முன்னதாகவேகூட சொல்கிறார். தன்னுடைய வேலை காரணமாக C.E. போய்விட்டார் என்றால் பரவாயில்லை. C.E. அதாவது மாவட்டத்தினுடைய பெரிய அதிகாரி போய்விட்டால் பரவாயில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்துகிற அந்த மனு நீதி நாளுக்கு D.E. இருக்கிறார் என்று சொன்னால் அவர்கள் வந்தால் பொது மக்களுக்கு கொஞ்சம் பலன் அதிகமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மனுக்களுக்கு 90 நாட்களுக்குள் முடிவு அறிவிக்கப்படும் என்று இதிலே சொல்லியிருக்கிறீர்கள். 90 நாட்கள் என்பது மிகவும் அதிகம். மாவட்ட அளவிலே, மனுக்களை 30 நாட்களுக்குள் பரிசீலித்து, மனுதாரர்களுக்கு பதிலளிக்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சான்றிதழ்களை அளிக்கின்றபோது, சில சான்றிதழ்கள் பெறுவதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. வாரிசுதாரர் சான்றிதழ், ஆதரவற்ற குழந்தைச் சான்று, ஆதரவற்ற விதவைச் சான்று, கலப்புத் திருமணச் சான்று, கணவனால் கைவிடப்பட்டவர் சான்று போன்ற சான்றிதழ்களைப் பெறுவதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகவே,

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, அதற்கும்கூட ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக அவற்றையெல்லாம் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று துறைக்கு அவர் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் 3, 4 வருடங்களுக்கு முன்னாலே திறக்கப்பட்டன. ஒன்று, புதுக்கோட்டைத் தொகுதியிலே இலுப்பூர்; இன்னொன்று, என்னுடைய தொகுதியிலே மணமேல்குடி. இரண்டிற்கும் கட்டட வசதி இல்லை. மணமேல்குடி என்பது கடலோரத்திலே இருக்கிற நகரம்; புயல் பாதுகாப்பு இல்லத்திலே தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. இடவசதியின்மையினால் அதிகாரிகள் அங்கே பணியாற்றுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மணமேல்குடியிலேயும், இலுப்பூரிலேயும் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றங்களைப் பொறுத்தவரைக்கும், மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலே 1,000 குடிசைகள் எரிந்துபோனபோது, இரவு 8-00 மணிக்கு எரிந்தது என்று சொன்னால், காலையிலே ஒரு 11-00 மணிக்கெல்லாம் உதவிப் பொருட்கள் எல்லாம் வழங்கினார்கள். அப்படி வழங்குகின்றபோது, முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால் 2,000 ரூபாய்; பாதி அளவில் பாதிக்கப்பட்டிருந்தால் 1,000 ரூபாய் என்று நாம் நிதி வழங்குகின்றோம். நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்ன என்று சொன்னால், தீ விபத்துகளிலே பொருள்கள்கூட சேர்ந்து எரிந்து போய்விடுகின்றன. என்னுடைய தொகுதியில் ஜெகதாபட்டணத்தில் வலைகள் எல்லாம் எரிந்து போய்விட்டன. அது ஒரு கடற்கரையோர கிராமம்; மீனவர்கள் கிராமம். சுமார் 5,000 அல்லது 10,000 ரூபாய் மதிப்புள்ள வலைகள் எல்லாம் எரிந்து போய்விட்டன. ஆனால் அந்தக் குடும்பங்களுக்கு நம்முடைய வருவாய்த் துறையினால் கொடுக்கப்பட்டது 2,000 ரூபாய் என்கிற கணக்கிலேயும், அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி சேலை எல்லாம் கொடுத்தார்கள். ஆகவே, பொருள்கள் எரிந்து போயிருந்தால் பொருள்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை அரசு உத்தரவிட வேண்டுமென நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-30

வறட்சி நிவாரண திட்டத்தைப் பற்றியெல்லாம் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து இவ்வளவுதான் வந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கேட்டுப் பெற வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி.ஜே.பி. கட்சியைச் சேர்ந்தவர். பி.ஜே.பி.தான் மத்திய அரசுக்குத் தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கிறது. நாங்கள் எவ்வளவோ கேட்டுப் பார்த்துவிட்டோம். ஆனால், மத்திய அரசு கொடுத்ததோ 258 கோடி ரூபாய்தான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கின்ற பி.ஜே.பி.யிலேயே உறுப்பினராக இருப்பதால் அவர் மத்திய அரசை வற்புறுத்தி மாநில அரசுக்கு கூடுதலான நிதியைப் பெற்றுத் தந்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம், நன்றியுடன் இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத்தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை என்னவென்றால், அவருக்குப் பலநேரத்தில், பி.ஜே.பி.யோடு சேர்ந்ததே மறந்து போய்விடுகிறது. *(சிரிப்பு)*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் எனக்கு மறதியில்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எனக்கு அந்த இயக்கத்திலே அவ்வளவு பெரிய செல்வாக்கு இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன். எனக்குத் தெரிந்தவர்களிடத்திலே எல்லாம் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே நம்முடைய மரியாதைக்குரிய சட்டத் துறை அமைச்சர் ஒன்றைச் சொன்னார்கள். அதைக்கூட நான் எனக்குத் தெரிந்த டில்லி அமைச்சரிடத்திலே சொல்லி, ஒரு 140 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் இருக்கிறதாம், நம்முடைய மரியாதைக்குரிய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இங்கே டில்லியிலே நீங்கள் அதைக் கொஞ்சம் பார்த்து அனுப்ப வேண்டுமென்று சொல்லி, மத்திய

அமைச்சர் மாண்புமிகு திருநாவுக்கரசர் அவர்களிடத்திலேகூட சொல்லியிருக்கிறேன். நான் இதையும் அவர்களிடத்தில் சொல்கிறேன். எனக்குத் தெரிந்தவர் அவர் ஒருவர்தான். *(சிரிப்பு)* ஆகவே, நான் அவர்களிடத்திலே சொல்லி, மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்க வேண்டியவை எல்லாம் கிடைப்பதற்கு என்னால் முடிந்தவற்றை செய்வேன் என்பதை வணக்கத்துக்குரிய முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது ஒரு தேசியக் கட்சியில் சேர்ந்து விட்டார். ஆகவே தன்னுடைய public relations-ஐ இன்னும் கொஞ்சம் அவர் improve செய்து கொள்ளவேண்டும், மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறேன். பி.ஜே.பி-யைச் சேர்ந்த இன்னும் சிலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே மத்திய அமைச்சர்களாக இருக்கிறார்கள். அவர்களோடாவது நீங்கள் ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன், *(குறுக்கீடு)* உங்கள் தலைவர் ஏதோ சொல்ல வேண்டும் என்கிறார்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக்கு மிக அதிகமாக, கேட்கின்ற அளவுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்பது தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியினுடைய இலட்சியம். அதற்குக் கண்டிப்பாக நாங்கள் போராடத் தயாராக இருக்கிறோம். அண்மையிலே Planning Commission Member டாக்டர் வேங்கடசுப்பிரமணியம் அவர்களை நான் சந்தித்தேன். தமிழ்நாட்டுக்கு Planning Commission-லே இருக்கிறவர்கள் மிக அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும். மக்கள் நலத் திட்டத்திற்கு தமிழ்நாடு முழுமையாகப் பயன்படுத்துகிற காரணத்தாலே அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று வாதாடினேன். உங்களுடைய கருத்தை Planning Commission-லே கண்டிப்பாக வைத்து, அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், தமிழ்நாட்டின்மீது அக்கறை கொண்டவர், ஆகையினாலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு வறட்சிக்காக நிதியை ஒதுக்குவது திட்டக் கமிஷன் அல்ல, பிரதமர் இதற்காக ஒரு சிறப்புக் குழுவை



அமைத்திருக்கிறார். அந்தக் குழுவிற்குத் தலைமையேற்று இருப்பவர் மாண்புமிகு துணைப் பிரதமர் திரு. எல்.கே. அத்வானி அவர்கள். ஆகவே, அவரிடம் சென்று வற்புறுத்தினால்தான் தமிழகத்திற்குக் கூடுதலாக நிதி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

*முற்பகல் 11-35*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கூறிய பிரகாரம், துணைப் பிரதமர் அவர்களிடம்கூட கண்டிப்பாக நாங்கள் சொல்வோம். ஏற்கெனவே, நான் இரண்டு நாட்களுக்கு முன்பு, துணைப் பிரதமரிடம், பவர்லூமிற்கு 10 சதவீதம் எக்ஸைஸ் டியூட்டி போட்டிருப்பதால், இந்தத் தொழிலே நசிந்துவிடும்; தமிழகத்திலே மக்கள் அதில் மிகவும் நசிந்து விடுவார்கள்; அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றுகூட நான் கேட்டுக்கொண்டேன். அதற்கு, நான் சிந்தித்து ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். அவரிடமும், தாங்கள் கூறிய பிரகாரம், தமிழகத்திற்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கண்டிப்பாக நான் கேட்டுக்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னுடைய அரசியல் வளர்ச்சிக்கு வழி காண்பித்ததற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

அதேபோல, வேலைக்கு உணவு திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே, என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே, காவிரி டெல்டா பகுதி, சென்ற முறை ஏமாற்றப்பட்டது என்று சொன்னாலும் நன்றாக இருக்காது. வஞ்சிக்கப்பட்டது என்று சொன்னாலும் நன்றாக இருக்காது. கொஞ்சம் கவனிக்காமல் விட்டுவிட்டீர்கள். போன தடவை, மாண்புமிகு ...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏமாற்றப்பட்டதாகவோ, வஞ்சிக்கப்பட்டதாகவோ அல்ல. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மாவட்டங்களையும், தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மக்களையும் ஒரே மாதிரியாகத்தான் பாவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தஞ்சையில், குறுவை பாதிக்கப்பட்டதனால் அந்த மூன்று மாவட்டங்களை அப்போது எடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதற்குப் பின்னால் தொடர்ந்து சம்பாவும் அங்கே பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதனால், காவிரி நீர்ப்பாசனம் பெறுகின்ற 10 மாவட்டங்களையும் எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. யாரையும் வஞ்சிக்க வேண்டிய நோக்கம் நம்முடைய அரசுக்கு இல்லை என்பதை இங்கே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிவாரணத்திலே என்னுடைய காவிரி டெல்டா பகுதியிலே பணம் கொடுத்திருக்கிறீர்கள்; நிதி அளித்து இருக்கிறீர்கள். மிக்க நன்றி.

காவிரி டெல்டா பகுதியிலே 111 பாலங்கள் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்ல வந்தேன். நாங்கள் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே இருந்தவர்கள். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எங்களைத் தள்ளி விட்டுவிட்டார்கள். இப்போது புதுக்கோட்டை மாவட்டத்திலே காவிரி டெல்டா பகுதி என்பது, என்னுடைய தொகுதியிலே மட்டும்தான் இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலே பாலங்கள் கட்டுகிறபோது 4, 5 மீட்டருக்கு மேல் அகலம் வைத்துக் கட்டமாட்டார்கள். ஏனோ அந்தக் காலத்தில் அப்படி கட்டிவிட்டுப் போய்விட்டார்கள். அதை இப்போது நீங்கள் சீர் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதைப்போல, என்னுடைய தொகுதியிலேயும் சில பாலங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் செய்துதர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வறட்சி நிவாரணத்திற்கு நிதி கொடுத்திருப்பதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நலிந்தோர் நலத் திட்டங்களைப் பொறுத்தவரைக்கும் இன்னும் நிறைய கொடுக்க



வேண்டியிருக்கிறது. நலிந்தவர்களுக்குப் போகிறபோது பார்த்தால், முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை இவற்றையெல்லாம் நிறைய கேட்கிறார்கள். ஆகவே. கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னும் கொஞ்சம் அதை அதிகமாகக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

விபத்துகளைப் பொறுத்தவரைக்கும், நீங்கள் சொல்லி இருக்கிற தொகை போதாது. சில குடும்பங்களிலே இளைஞர்கள்கூட விபத்திலே இறந்துபோய் விடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கிற 15 ஆயிரம் ரூபாய் என்பது போதாத தொகை. ஆகவே, அந்தத் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டதற்கு நம்முடைய நீர் நிலைகளெல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டதுதான் ஒரு முக்கிய காரணம். ஏறத்தாழ பாதி அளவுக்கு மேல், நம்முடைய நீர் நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. வீராணம் திட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோது, 25 ஆண்டு காலத்திற்கு முன்னால் இருந்த அந்த ஏரியின் கொள்ளளவு இன்றைக்குப் பாதி அளவாகக் குறைந்து போய் இருக்கிறது. அதேபோல, தமிழகத்திலே எல்லா இடங்களிலேயும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு சிறந்த முறையிலே வருவாய்த் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளிக்குள் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையிலே கீழே இருக்கிற சில அலுவலர்கள் அதைச் சரியாகச் செய்வதில்லை. மாதா மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே கூடி, ஒரு மாதத்திலே இரண்டு மூன்று ஏரிகளிலே இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றுகிறார்கள். ஆனால், திரும்பவும் பார்த்தால், அடுத்த ஆண்டு அதை ஆக்கிரமித்துவிடுகிறார்கள். அதற்குக் காரணம், கீழே இருக்கிற அதிகாரிகள். ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர்நிலைகளை முழுவதுமாகப் பாதுகாத்து வந்தால், நமக்கு இப்போது இருக்கிற சிரமங்கள் எல்லாம் மிகவும் குறையும்.

என்னுடைய தொகுதியிலே இந்த ஆண்டு ஓரளவுக்கு மழை பெய்தது. ஆனால், காவிரி டெல்டா பகுதியிலே இருக்கிற விளை நிலங்கள் பட்டுப் போய் விட்டன. இதற்கு என்ன காரணம் என்றால், நீரை வைத்துக்கொள்ள முடியவில்லை. நீரினுடைய கொள்ளளவு குறைவாகப் போய் விட்டது. ஏரியினுடைய பரப்பளவு குறைந்து போய் விட்டது. ஆகவே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே வருவாய்த் துறை தீவிர கவனம் செலுத்த வேண்டும். கீழேயுள்ள அதிகாரிகள் அதிலே தவறு செய்கிறார்கள். வட்டாட்சியர் அளவில் தவறு செய்யவில்லை. அதற்குக் கீழேயிருக்கிற அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அவர்களாலேதான் நமக்கு சிரமம் வருகிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தளி மற்றும் ஓசூர் தொகுதிகளினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு கோரிக்கையினைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய தொகுதிகளிலேயெல்லாம் நிறைய புறம்போக்கு விளைநிலங்கள் இருக்கின்றன. அதை விவசாயிகளுக்குப் பட்டா போட்டுத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், இப்போது அங்கே அதற்கு ban இருக்கிறதாம். கொடுக்கக்கூடாது என்று சொல்லி ban இருக்கிறதாம். மலைப் பகுதியிலே புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா கொடுக்கக்கூடாது என்று ஒரு ban இருக்கிறதாம். தளி தொகுதியிலே ஆறு ஊராட்சிப் பகுதியிலே அப்படி இருக்கிறது. மீதிப் பகுதிகள் சமவெளிப் பகுதிகளாகத்தான் இருக்கின்றன. பல இடங்களிலேகூட விவசாயம் கூட செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கு பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று தளி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். அவற்றை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுகொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலும், சமூகக் காடுகள் பாதுகாப்பிலுள்ள இடத்திலும் பட்டா வழங்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகைப்பாட்டில் அவை வருகின்ற காரணத்தினால் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**திரு. ப. அரசன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு பணிவான கோரிக்கை. சென்ற ஆண்டு கோவை மாவட்டம், குனியமுத்தூர் பேரூராட்சியில் முருகேசன் என்ற இளைஞன் கொடூரமாகக் கொல்லப்பட்டான். சென்ற ஆண்டுகூட, இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வைத்தேன். இப்போதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அந்த இளைஞனால்தான், அந்தக் குடும்பம் வாழ்ந்துக் கொண்டிருந்தது. அந்த இளைஞனுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே.டி. நடராஜன்.

***திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கோடானுகோடி தமிழ் நெஞ்சங்களில் கொலுவீற்றிருக்கும் எங்களின் இதயதெய்வமே, ஆய்ந்தறியும் அறிஞர்களின் அறிவுப் பெட்டகமே, திருக்கோவில் நிருவாகத்தின் திருவாசகமே, அன்னதானத் திட்டத்தின் அகல் விளக்கே, மாதர்கள் எல்லாம் போற்றும் மாசற்ற மணிவிளக்கே, எங்கள் குல விளக்கே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் பொற்பாதம் தொட்டு பணிந்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற குறளுக்கு ஏற்ப, சரியான திட்டங்கள் மூலம் வருவாய் வரும் வழியறிந்து, வந்த வருவாயை நன்முறையில் பாதுகாத்து, வருவாய்க்குத் தகுந்த திட்டங்கள் தீட்டி, மக்களை மேன்மையடையச் செய்யும் அரசு, சிறந்த அரசாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு, வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள், பத்திரப்பதிவு மற்றும் தமிழகத்தின் மூத்த துறையும், தாய்த் துறையுமான வருவாய்த் துறையின் மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் கோடானுகோடி நன்றி.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார்கள். அண்ணாவின் ஆசியோடு

நடைபெறும் மாண்புமிகு அம்மாவின் அரசில் தமிழகத்தின் ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் நலன் பெறும் வகையில் மாநில நிருவாகம் சீராகவும், செம்மையாகவும் நடைபெறுவதற்கும், பொது மக்களின் குறைகளையும் இன்னல்களையும் களைவதற்கும், சமுதாய மாற்றத்திற்கும், சமூகநீதி காப்பதற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் வருவாய்த் துறை பெரிதும் மிக முக்கிய பங்காற்றுகிறது.

*முற்பகல் 11-45*

வருவாய்த் துறை, மக்களோடு மக்களாக, பின்னிப் பிணைந்து, பிறப்பு முதல் இறப்பு வரை, ஏன், இறந்த பிறகும்கூட ஒவ்வொரு நிலையிலும், மக்களோடு நீக்கமற நிறைந்துள்ளது. வருவாய்த் துறையின் மூலம் வழங்கப்படுகிற நலத் திட்ட உதவிகளைப் பொறுத்தவரையில், இந்த மாமன்றத்திலே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், ஐஸ் கட்டிக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அதாவது மக்களுக்குப் போய்ச் சேர்கின்ற நேரத்தில், கரைந்து போகும் என்று வருத்தப்பட்டுக் கூறியுள்ளார்கள். அதற்கு மாறாக, அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றிவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்டங்கள்தோறும் நேரில் சென்று, நலத் திட்ட உதவிகளை பயனடையக்கூடிய, உண்மையான பயனாளிகளுக்கு வழங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிமீது, காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ள பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள்—

"காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு"

என்ற குறளுக்கேற்ப, தாங்கள் கண்டதே காட்சி, தாங்கள் கொண்டதே மாட்சி, தாங்கள் விண்டதே சாட்சி என்று எதிர்க்கட்சியினர் மட்டுமல்லாமல், எதிரிக் கட்சியினராக விளங்கும் எதிர்த்தரப்பில் உள்ளவர்கள், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்டந்தோறும் நேரில் சென்று, நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கடல் அலையா, மக்கள் தலையா என்கிற அளவில் இலட்சக் கணக்கில் கூடுகின்ற கூட்டத்தைப் பார்த்து, எதிர்த்தரப்பினர் பொறாமை உணர்ச்சியோடு, கபடமான எண்ணத்தோடும் முன்னுக்குப் பின் முரணான பல்வேறு



வினாக்களைத் தொடுத்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்கள், சிங்கநிகர் நடையில் உடனுக்குடன், மின்னல் வேகத்தில் பதில் கூறுகின்ற பாங்கை, தொலைக்காட்சியில் மக்கள் பார்க்கும்போது பேருவகை அடைகிறார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியாளர்களால், தேவையற்ற வரிச் சலுகைகள், மக்களுக்குத் தேவையில்லாத திட்டங்கள், போக்குவரத்துத் துறையில் விஞ்ஞான ரீதியான ஊழல், பொதுப் பணித் துறையில் அளவுக்கு அதிகமான மதிப்பீடுகள், கூட்டுறவுத் துறையில் கொப்பரைத் தேங்காய் ஊழல், கால்நடைகளுக்கு மருந்து வாங்கியதில் ஊழல், சென்னை மாநகரத்தில் மேம்பாலம் கட்டியதில் ஊழல், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்புகள் கட்டியதில் ஊழல் மற்றும் அத்தனைத் துறைகளிலும் செய்த நிதி நிர்வாகச் சீர்கேட்டினால் தமிழகம் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு, தமிழக மக்களால், தி.மு.க. ஆட்சி ஓரங்கட்டப்பட்டு, மீண்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி மலர்ந்தது; தங்கத் தலைவியின் மங்காப் புகழுக்கு மகுடம் சேர்த்தாற்போல், மேலும் புகழ் சேர்க்கின்ற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று,

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா"

என்ற வைர வரிகளுக்கேற்ப, துரியோதனன், துச்சாதனனுடைய துரைத்தனத்தையெல்லாம் தவிடுபொடியாக்கி, இந்தக் கொலு மண்டபத்தை, தர்ம தேவதையின் கொலு மண்டபமாக மாற்றி, எங்கும், எதிலும் தன்னுடைய தனி முத்திரையைப் பதிக்க, மிகத் துணிவான, தொலைநோக்குடைய நிதி நிர்வாகச் சீர்திருத்தத்தால், தமிழகம் மீண்டும் புதுப் பொலிவுடனும், புத்துணர்ச்சியுடனும் செயல்பட்டு வருகிறது.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப, பாதிக்கப்பட்ட ஏழையெளியவர்களின் நலன் கருதி, நலத் திட்ட உதவிகளை வாரி வாரி வழங்கி, முறைதவறா செங்கோல் ஆட்சி நடத்தி, தளர்ந்து காணப்படும் தமிழக மக்களைப் பாதுகாத்து, ஆள்பவர்களுக்கெல்லாம்

எடுத்துக்காட்டாக மாண்புமிகு அம்மா அவர்கள் சுடரொளியாகத் திகழ்ந்து, மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்து, தமிழகத்தை இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு அயராது பணியாற்றி வருகிறார்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று கூறிய வள்ளலார் வாழ்ந்த பூமியில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், வேலைக்கு உணவளிக்கும் திட்டத்திற்கு ரூ.217.09 கோடி, சென்னை நீங்கலாக வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களுக்கு, ரூ.341.92 கோடியில் வேலைவாய்ப்பு உருவாக்கும் பெருந்திட்டம், குறுகிய காலக் கடன்களுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி, வறட்சியால் வாடிய குறுவை, சம்பா பயிர்களுக்கு மானியம், பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு இலவச அரிசித் திட்டம், காய்ந்துபோன தென்னை மரங்களுக்கு நிவாரண உதவி, வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களுக்கும் நில வரி, தல வரி மற்றும் தல மேல்வரி தள்ளுபடி, காவிரி டெல்டா விவசாயத் தொழிலாளர்களுக்கு 164.16 கோடி ரூபாயில் சிறப்பு நிவாரண வேலைவாய்ப்புத் திட்டம், கடலோர மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கு மற்றும் இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற ரூ.94.25 இலட்சம் செலவில் தொலைத் தொடர்பு வசதி, நில ஆவணங்களை கணினிமயமாக்குதல், தொடு திரை தகவல் மேடை, நிலப் படங்களை கணினிமயமாக்குதல், கிராமப் பணியாளர், கிராம உதவியாளருக்கு ஓய்வூதியம் வழங்குதல், வறட்சியால் பாதிக்கப்பட்டு, குடிநீருக்காக ஏங்கும் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பெரும் நிவாரண நிதி, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு மற்றும் வறட்சி, இயற்கை இடர்ப்பாடு, புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தால் பெருமளவு இன்னல்களால் மக்கள் பாதிக்கப்பட்டபோதெல்லாம் இரவு பகல் கண் துஞ்சாது, விழிப்புடன் இருந்து தமிழக மக்களின் துயரைத் துடைக்கின்ற வகையில் கண்ணின் இமையாய் காத்து வருவது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிக்கு எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 11-50

கங்கை நதி போல் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். எனது ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில், காபி, மிளகு, ஏலக்காய், பாக்கு, கிராம்பு பயிரிடும் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டும், விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டும் வறுமைக்கோட்டுக்குக் கீழே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். தமிழக விவசாயிகளின் அத்துணை வரிகளையும் இரத்துச் செய்த அம்மாவின் அரசு பாதிக்கப்பட்ட மலைத் தோட்ட விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட இணக்கமுறை வரிவிதிப்பை இரத்துச் செய்தும், வனம் மண்வளப் பாதுகாப்புத் திட்ட தக்காவிக் கடனைத் தள்ளுபடி செய்தும் மலைத் தோட்ட விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமாய் தங்களை அன்புடன் வேண்டுகிறேன் தாயே!

எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், கதிரையன்குளம், வேட்டுவன்குளம், பாசன வாய்க்காலில் தடுப்புச் சுவர் கட்டியதில் 265 மீட்டர் தூரம் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாசன வாய்க்கால் தடுப்புச் சுவர் கட்ட அரசு 1 கோடி ரூபாய் செலவு செய்தும், மீதம் உள்ள 265 மீட்டர் கட்டப்படாததால் பாசன வாய்க்கால் எவ்விதப் பயனுமின்றி பயனற்றதாக உள்ளது. இந்தப் பகுதியின் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கருணை உள்ளம் கொண்ட தாய் அவர்கள் 265 மீட்டர் தடுப்புச் சுவரைக் கட்டித்தர வேண்டுமாய் உங்கள் பாதம் தொட்டு பணிந்து வேண்டுகின்றேன்.

எனது ஆத்தூர் தொகுதியில் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், தர்மத்துப்பட்டி ஊராட்சியில், சுரைக்காய்பட்டி கிராமத்தின் மேல் பகுதியில் உள்ள பாம்பாற்று ஓடையின் குறுக்கே பாலம் கட்டப்படாமல் உள்ளதால், மழைக்காலங்களில் கிராம மக்கள் மிகவும் அவதிக்கு உள்ளாகின்றனர். தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் பாம்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் சுரைக்காய்பட்டி, கள்ளன் பாதையில் இருந்து கோம்பைக்குச் செல்லும் சாலை சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் குண்டும் குழியுமாக உள்ளதால், சாலையை சீரமைத்து தார் சாலை அமைத்துத் தரும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆத்தூர் தொகுதியில் அடங்கிய அனைத்துப் பகுதிகளும் திண்டுக்கல் வட்டத்தில் உள்ளன. திண்டுக்கல் வட்டத்தில், திண்டுக்கல் நகராம், திண்டுக்கல் ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், சாணார்பட்டி ஒன்றியம் ஆகிய பகுதிகள் எல்லாம் அடங்கி இருப்பதால், திண்டுக்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலைப்பளு காரணமாக வேலைகள் தாமதப்படுகின்றன. ஆகவே, ஆத்தூர் தொகுதியிலுள்ள செம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஆத்தூர் தாலுகா என்று தனித் தாலுகாவாக மாற்றியமைத்து நிர்வாக சீரமைப்பு செய்ய உத்தரவிடும்படி அம்மா அவர்களைப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

எனது ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில், ஆத்தூர் ஒன்றியத்தில், சித்தரேவு ஊராட்சியில் 18 கிராமங்கள் உள்ளன. சுமார் 18 ஆயிரம் மக்கள் தொகை உள்ளது. நிர்வாகம் செய்வதில் மிகவும் சிரமமாக உள்ளது, தாயே! சித்தரேவு ஊராட்சியில் நிர்வாகச் சிரமங்களை சீர் செய்வதன் அடிப்படையில், கே. சிங்காரக்கோட்டை ஊராட்சி, நெல்லூர் ஊராட்சி, சித்தரேவு ஊராட்சி என்று மூன்றாகப் பிரித்து, நிர்வாகம் செம்மையாக நடைபெற கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களைக் கேட்டு பணிவுடன் வேண்டுகின்றேன்.

எனது ஆத்தூர் தொகுதியில், அய்யம்பாளையம் பேரூராட்சியில், மருதா நதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் கட்டி சுமார் 75 வருடங்களாகிறது. தற்சமயம் பாலம் சிதிலமடைந்து போக்குவாத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, ஒரு மாத காலத்திற்குப் போக்குவரத்து நின்று போகின்றது. அப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான இப்பாலத்தை மாற்றி, புது பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரும்படி செய்ய அம்மா அவர்களைப் பணிந்து வேண்டி, மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை முழுமனதுடன் வரவேற்று, மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றியினை காணிக்கையாக்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். அருண்.



முற்பகல் 11-55

**திரு. பி.எஸ். அருண்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு குறித்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் ஆயிரமாயிரம் நன்றிகளை அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து இந்த மானியக் கோரிக்கைகளில் ஒருசில கருத்துகளை எடுத்து வைக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அதாவது, 2000, 2001 மற்றும் 2002-ல் ஆண்டு சராசரி மழை அளவான 977 மில்லி மீட்டர் மழை அளவிற்குக் குறைவான மழை அளவே பெறப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் 848 மில்லி மீட்டரும், 2001-ல் 772.9 மில்லி மீட்டரும், 2002 ஆம் ஆண்டில் 745.7 மில்லி மீட்டர் மழை மட்டுமே பெறப்பட்டுள்ளது. இது முறையே 13 சதவிகிதம், 21 சதவிகிதம், மற்றும் 24 சதவிகிதம் சராசரி மழையை விடக் குறைவானதாகும். கடந்த மூன்று ஆண்டுகளாக இயற்கை, தமிழக மக்களை மிகவும் வாட்டி வதைக்கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. இந்நிலையை முழுவதும் உணர்ந்த இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூபாய் 350 கோடியை ஒதுக்கி, ஏழையெளிய, விவசாயக் கடன் மற்றும் நிலவரி போன்றவைகளைத் தள்ளுபடி செய்ததை தமிழகத்தில் வாழ்கின்ற ஏழையெளிய விவசாயிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழையெளிய மக்கள் அம்மா அவர்களை வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப் பாராட்டுவதற்கு மனமில்லாத எதிர்க்கட்சியினர் இந்த மாமன்றத்தில் ஏதேதோ இந்த ஆட்சி பற்றி வக்கணை பேசி வருகின்றனர். குறிப்பாக இந்த மாமன்றத்தில் இந்த ஆட்சியைக் குறை கூறி கட்சி நடத்தும் தி.மு.க.வினர் ஒருபுறம். அதைப்பற்றி இந்த அரசு எந்த நேரத்திலும் கவலைப்படப்போவதில்லை. ஏனென்றால் அதுதான் அவர்களுடைய நிலை. ஆனால் இம்மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் எஸ்.ஆர்.பி. அவர்கள் எப்போது பேசினாலும், ஏதாவது பேச வேண்டும், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலையோடு பேசி வருகின்றார்கள். கடந்த மூன்று தினங்களுக்கு

முன்பு இந்த மாமன்றத்தில், சென்னை மாநகர மக்களுக்கு வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் கொண்டு வருவது சம்பந்தமான விவாதம் நடைபெற்றது. அப்பொழுது பேசிய மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் புதிய வீராணம் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும், நீங்கள் என்னதான் செய்தாலும் வீராணத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வர முடியாது என வாதிட்டார்கள். அதற்கு அம்மா அவர்கள் ஆணித்தரமான பதில் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு பதில் அளிக்கையில், 'நிச்சயமாக சென்னைவாழ் மக்களுக்கு வீராணத்திலிருந்து குடிநீர் கொண்டு வந்து இந்த அரசு வழங்கும். மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்களே, பொறுத்திருந்து பாருங்கள். நீங்களும் அங்கேதான் இருக்கப் போகிறீர்கள். நாங்களும் இங்கேதான் இருக்கப் போகிறோம்' என்று அம்மா அவர்கள் பதில் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் எஸ்.ஆர்.பி. அவர்கள் வீராணத்திலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டுவர அங்குள்ள விவசாயிகள் விடமாட்டார்கள். எனவே, இந்தத் திட்டத்தை விட்டு விடுவது நல்லது எனக் குறிப்பிட்டார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது இந்த அவையில் இல்லாவிட்டாலும், எனது பதிலுரையை இந்த அவையிலே பதிய வைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு ஒன்றை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டம், வீராணம் ஏரியிலிருந்து பாசன வசதி பெறும் 45,000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்து வரும் விவசாயிகள் இந்தத் திட்டத்தைப் பெரிதும் வரவேற்று தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். காரணம், இத்திட்டத்தின் மூலமாவது இந்த வீராணம் ஏரி தூர் வாரி ஆழப்படுத்தி, கொள்ளளவுத் திறனை அதிகப்படுத்தி, விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாதவண்ணம் இந்த அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்ததினால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், சென்னைவாழ் மக்கள் சுமார் ஐம்பது இலட்சம் பேருக்கு குடிநீர் நமது மாவட்டத்திலிருந்து வழங்குகிறோம் என்ற பெருமையோடு அம்மக்கள் இந்தத் திட்டத்தை உளமார வரவேற்றுக் கொண்டிருக்கின்றனர் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு முதலமைச்சர் இந்த மாமன்றத்தில் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறார், 'வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவோம்' என்கிறார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. 'முடியாது' என்கிறார். அவர் என்ன நினைத்துக் கொண்டு இப்படி பேசுகிறார் என்று புரியவில்லை. ஆட்சி செய்து கொண்டு இருப்பது, யார் என்று புரியாமல் தடுமாறுகிறாரோ எனத் தோன்றுகிறது. மாண்புமிகு உறுப்பினருக்கு இந்த நேரத்திலே ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பிடி மண்ணை அள்ளிக் கொடுத்தாலும், அது பொன்னாகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மூத்த உறுப்பினர் இப்படியெல்லாம் பேசாமல், அரசு செய்கின்ற பல்வேறு திட்டங்களை பாராட்ட மனமில்லாவிட்டாலும், களங்கம் ஏற்படுத்தாமல் இருந்தாலே போதும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். ஒரு கிராமத்திற்கு, 2, 3 கிராம உதவியாளர்கள் உள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்நிலையை மாற்றி, 10,000 மக்கள்தொகை கொண்ட ஒருசில கிராமங்களை உள்ளடக்கிய கிராமங்களுக்கு ஒரு கிராம நிர்வாக அலுவலர் என்று நியமிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு கிராமத்தின் மூலம் அரசுக்கு ஆண்டு வருமானம் ரூ.50,000/- என்று வைத்துக்கொண்டால், அவர்களுடைய ஆண்டுச் சம்பளம் இந்த அரசு மூலம், அந்தக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், அந்த உதவியாளர்களுக்கும் ஆண்டுக்கு 2 இலட்சம் ரூபாய் வரை நாம் சம்பளமாகக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது உள்ள நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, அம்மா அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன். மாவட்ட வருவாய் நிர்வாகத்திற்கு கிராம நிர்வாக அமைப்பு முதன்மை ஆதாரமாகவும், முதுகெலும்பாகவும் உள்ளது. 1980 வரை கிராம நிர்வாகம் பகுதி நேர அலுவலர்களின் உதவியுடன் செயல்பட்டு வந்தது. 14-11-1980 முதல் பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் ஒழிக்கப்பட்டன. கிராம அலுவலர்கள் ஒழிப்புச் சட்டம் எண் 3/81-ல் இயற்றப்பட்டு 14-11-1980 முதல் முழு நேர அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டனர்.

நண்பகல் 12-00

அதேபோல, 1-6-1995-க்கு முன்பாக பகுதி நேர கிராமப் பணியாளர்கள் தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்து வந்தனர். அரசு ஆணை நிலை எண் 625 வருவாய்த் துறை மூலம் பகுதி நேர கிராமப்

பணியாளர்கள் 1-6-1995 முதல், அதாவது, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் முழு நேர அரசுப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டு, புதிய ஊதிய ஏற்றமுறை ரூ.750/-ல் இருந்து ஊதியம் வழங்கப்பட்டது. 6-வது ஊதியக் குழு பரிந்துரைப்படி, கிராம உதவியாளர்களின் ஊதியம் ரூ.2,240/- என திருத்தி அமைக்கப்பட்டது. மேலும் கிராம உதவியாளர்கள், பணியில் இருக்கும்பொழுது மரணம் அடைந்துவிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளம், புயல், தீ, விபத்து போன்ற இயற்கைச் சீற்றங்களால் உயிர் இழந்தவர்கள் குடும்பத்திற்கு இதுவரை நிவாரணமாக அரசு ரூ.15,000/- வழங்கி வருகிறது. இதனை அம்மாவுடைய அரசு - எவ்வளவோ பேருக்கு எத்தனையோ கோடிகளை அள்ளித் தருகின்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு—ரூ.50,000/- ஆக உயர்த்தித் தரவேண்டுகிறேன்.

மேலும், தீயினால் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.2,000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்டதற்கு ரூ.1,000/- வீதமும் வழங்கப்படுவதை முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.5,000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.2,500/- வீதமும் வழங்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும் மாண்புமிகு அம்மாவிடம் வேண்டுகிறேன்.

2002-ல் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தால் பாதிக்கப்பட்ட வறிய நிலையிலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு குறு விவசாயக் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று போர்க்கால அடிப்படையில் மதிய உணவு வழங்கும் திட்டத்தினை 28 மாவட்டங்களில் 26,074 கிராமப்புற சத்துணவு மையத்தின் மூலம் மதிய உணவு வழங்கப்பட்டது. அது தற்பொழுது குடும்பத்திற்கு 30 கிலோ வீதம் அரிசியாக வழங்கிக்கொண்டு இருக்கும் இத்திட்டத்தினை தமிழக மக்கள் பெரிதும் பாராட்டிக்கொண்டு இருக்கின்றனர்.



மேலும் சம்பா பருவங்களில் சாகுபடி செய்து 50 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு 2,500/- ரூபாய் வீதமும், நிரந்தரப் பயிராக இருந்தால் எக்டேர் ஒன்றுக்கு ரூ.4,000/- வீதமும், மானாவாரிப் பயிராக இருந்தால் எக்டேர் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதமும், மொத்தம் 250 கோடி ரூபாய் ஏழை விவசாயிகளுக்கு வழங்கிய அம்மாவின் அரசை தமிழக மக்கள் வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு மேலும் 2002-2003 ஏழை எளிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியவர்களுக்கு இலவச மனைப் பட்டாக்கள் 30 ஆயிரம் பேர்களுக்கு வழங்க வேண்டும் என்ற குறியீடு இருந்தாலும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு, அம்மாவினுடைய அரசு ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 19,557 வீட்டு மனைகளும், பழங்குடியினருக்கு 1,907 வீட்டு மனைகளும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 15,243 மனைகளும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25,288 மனைகளும், ஏனையோர்களுக்கு 1,344 மனைகளும், ஆக மொத்தம் 63,339 வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி அம்மாவின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி குறித்த ஒருசில கோரிக்கைகளை அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1992-ல் . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள், தொகுதி தொடர்பான கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்து விடுங்கள். அம்மாவுக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** இந்த வருவாய்த் துறை மானியத்தில் பேசுவதற்கு அனுமதி தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வாசுதேவன்.

**திரு. பெ. வாசுதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள். வருங்கால இந்தியாவின் வழிகாட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, இந்த மாமன்றத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழக மக்களின் காவல் தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு

தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 12-05

இன்று ஒரு கட்சியிலுள்ள ஒருவரின் இதயத்தை மட்டும் காப்பாற்றுவதற்கு பல இலட்சம் ரூபாய் மத்திய அரசில் மக்கள் வரிப்பணத்தை இன்று செலவு செய்கிறார்கள். இதற்கு உடந்தையாக தமிழகத்திலுள்ள சில எம்.பி.க்கள், மத்திய அமைச்சர்கள் உள்ளார்கள். ஆனால், தமிழகத்திற்கு நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய தொகையைக் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். இதை இவர்கள் மத்திய அரசிடம் கேட்பதற்குத் தைரியம் இல்லாமல் இருக்கிறார்கள். ஏன் இப்படி?

என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் உள்ள வேட்டைக்காரகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட ஏழை மாணவிக்கு எம்.பி.பி.எஸ்., படிக்க வசதியில்லை என்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் மனு கொடுத்தவுடன் அதை உணர்ந்து, அந்த மாணவிக்கு முழு படிப்புச் செலவுக்கும் ரூ.1,75,000/- வழங்கி உள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த மாமன்றத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் ஆதிதிராவிட நிலமற்ற ஏழை விவசாயிகள் 30 ஆண்டுகளாக மேய்க்கால் புறம்போக்கில் குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இலவச பட்டா வழங்கவும், மேலும் நிலமற்ற ஏழை விவசாயிகள் 1 ஏக்கர், 2 ஏக்கர் அனாதி நிலத்தில் பயிர் செய்து வருகிறார்கள். இந்த நிலத்தை அவர்களுக்கே பட்டா செய்து வழங்க ஆவன செய்யும்படி எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2002-2003 இல் மாநிலம் முழுவதும் 30,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும் 31-3-2003 வரை இலக்கிற்கு மேலாக, அதாவது 63,339 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளார்கள். இது அம்மா அவர்களின் ஆணையின் மூலம் செயலாக்கப்பட்டுள்ளது.

ஆவணங்களில் கட்டடச் சொத்துக்களின் உண்மை மதிப்பை மறைத்து, முத்திரைத் தீர்வை ஏய்ப்பின் மூலம் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினைத் தடுக்கும் பொருட்டு புலனாய்வுக் குழு பிரிவு



ஒன்று கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) தலைமையில் 8 மாவட்டப் பதிவாளர்களையும், 4 சார் பதிவாளர்களையும், 2 உதவி செயற் பொறியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. தேங்கியுள்ள ஏராளமான ஆவணங்களை விரைந்து முடித்து, பொது மக்களுக்குத் திரும்ப அளித்திட அனைத்துப் பதிவாளர்களும் ஆவணங்களில் கட்டடங்களின் மதிப்பு குறைத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய களப் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மூலமாக 1968 - 1969 ஆம் ஆண்டில் ரூ.40 கோடியாக இருந்த அரசின் வருவாய் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1264.20 கோடியாக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு வருவாயுடன் ஒப்பிடுகையில் 2002-2003 ஆம் ஆண்டில் அரசின் வருவாய் 30.45 சதவிகிதம் அதிகரித்துள்ளது துறையின் சீரிய செயல்பாட்டினை விளக்குவதாக உள்ளது.

அரசு மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம், சங்க உறுப்பினர்களுக்கு ரூ.1,50,000/- வரையில் கடன் தொகை வழங்கி வருகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டி மற்றும் ஒரு நாட்குறிப்பேடு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டுளில் சில அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டதன் பயனாக பணியாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 50 விழுக்காடாகக் குறைந்துவிட்ட நிலையிலும் இத்துறையின் உற்பத்தி தற்போது இரு மடங்காக அதிகாரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சின் தரம் மேம்பாடு அடைந்துள்ளது. இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் அடிப்படையில் தொழில் பழகுநர் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. தற்போது சேலம் மற்றும் புதுகை அரசு அச்சகங்களில் நிலவும் கட்டுமானப் பிரிவுகளின் பணிச் சுமையை கருத்திற்கொண்டு கூடுதலாக தொழிற் பழகுநர் பணியிடங்களை நிரப்ப சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதை மனதாரப் பாராட்டுகிறார்கள்.

*பிற்பகல் 12-10*

எனது மதுராந்தகம் தொகுதியில் கடலூர் கிராமம் முதல் முதுகரை வழியாக மதுராந்தகம் செல்லும் சாலை 28.800 மீட்டர் ரூ.2 கோடியே 88 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 2001-2002-ல் தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இந்தச் சாலையில் 10 அரசு பஸ்களும், 6 தனியார் பேருந்துகளும் அந்த வழியாகச் செல்கின்றன. இது பிரதானச் சாலை. ஆகவே, அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத்தரும்படி மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

வால்ஓடை முதல் அணைக்கட்டு வழியாக பவுஞ்சூர் செல்லும் சாலை, மேலவலம்பேட்டை—அரையப்பாக்கம்—பூதூர் வழியாகச் செல்லும் சாலை, தொன்னாடு முதல் நீர்பெயர் இரும்பேடு செல்லும் சாலை, பாளையம் முதல் ஆக்கிணம்பட்டு, வீரபோகம் வழியாக செய்யூர் செல்லும் சாலை ஆகிய இந்தச் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளன. இந்தச் சாலைகளை இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் சீர்செய்து தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பட்டினம் முதல் வீரபோகம் வழியாக செய்யூர் செல்லும் சாலையில் சுண்டிவாக்கம் கிராமத்தில் ஒரு மேம்பாலமும், கருங்குழி கே.கே. புதூர் வழியாக தச்சூர் செல்லும் சாலையில் ஒரு மேம்பாலமும் கட்டித் தரவேண்டுமென்று இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மதுராந்தகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற மிகப் பெரிய கோயில் வெங்காட்டீஸ்வரர் கோயில். அது மிகவும் பழுதடைந்துள்ளது. இந்தக் கோயிலை சீர்செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்தக் கோயிலுக்குச் சொந்தமான பெரிய சத்திரம் ஒன்று உள்ளது. அந்தச் சத்திரம் பழுதடைந்துள்ளது. அந்தச் சத்திரத்தையும் சீர்செய்து கொடுக்குமாறும் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு பொது மன்னிப்புக் கொடுத்து அவனை தங்க வைப்பதற்கு தேசிய



நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான மலைக்கோயில் பயணியர் மாளிகையை சிறைச்சாலையாக மாற்றியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களே அன்றையதினம் இதற்கு எதிர்ப்புக் குரல் தெரிவித்திருக்கிறார்கள். அதை மறுபடியும் பழைய நிலையில் பயணியர் மாளிகையாக மாற்றித் தரும்படி இதயதெய்வம் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் மதுராந்தகம் உயர்மட்டக் கால்வாய் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தை தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் கிடப்பில் போட்டுவிட்டார்கள். அதை மறுபடியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் புத்துயிர் கொடுத்து இப்போது ரூபாய் ஒரு கோடியில் அந்தப் பணிகள் நடக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா, என்னுடைய மதுராந்தகம் நகரில் கொசுத் தொல்லை அதிகமாக உள்ளது. கழிவுநீர் வெளியே செல்ல வழியில்லை. ஆதலால் மாண்புமிகு அம்மா அவர்கள் மதுராந்தகத்திற்கு பாதாளச் சாக்கடை திட்டத்தை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய திட்டங்களை ஏழை எளிய மக்களுக்காக நிறைவேற்றி வருகிறார்கள். வருவாய்த் துறை, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறை ஆகிய துறைகளில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கக்கூடியதாகும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று, இந்த அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு. எதிர்பாராமல் கிடைத்த வாய்ப்பு. 10 மணித்துளிகள் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நாட்கள் கேட்டேன், இன்று வரச் சொன்னீர்கள். பேரவைப் பட்டியலில் பெயர் இல்லை. இருந்தாலும் பெருந்தன்மையோடு என்னை அழைத்து பேசச் சொன்னதற்கு முதற்கண் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-15*

ஒரு நாட்டின் ஆளும் கட்சி, எதிர்க் கட்சிக்கு என்று சில கடமைகள், பொறுப்புகள் இருக்கின்றன. ஆளும் கட்சி எல்லா காரியங்களையும் சரியான வழியிலே செய்துவிட முடியாத நிலையில், தகுந்த ஆலோசனை கூறி, இதிலே தவறுகள் இருக்கின்றன, இதைத் திருத்திக் கொள்ளுங்கள் என்று சுட்டிக்காட்டுவதுதான் ஓர் எதிர்க் கட்சியினுடைய தலையாய கடமை. இன்று சட்டமன்றம் கூடியதும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கேள்வி நேரத்திற்கு முன்பாகவே, எழுந்து நின்று, சில பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். அந்தப் பிரச்சினைகளைக் கிளப்ப வேண்டாம், இந்தச் சட்டமன்றத்திலே விவாதிக்க வேண்டாம் என்பது என்னுடைய கருத்து அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கேள்வி நேரம் முடிந்ததும் இதை நான் எடுத்துக் கொள்கிறேன் என்று பல முறை சொன்ன பின்பும்கூட, அவர்கள் கேட்காமல் சென்றது எனக்கு மனவருத்தத்தை அளிக்கிறது. ஆகவே,'எதிர்க் கட்சியினர் தங்களுடைய கடமையிலிருந்து தவறி விட்டார்களோ என்று நான் எண்ணுகிறேன். என்னையும் நீங்கள் ஏன் வரவில்லை என்று கேட்டார்கள். எனக்கு இன்றுதான் பேச அனுமதி கிடைத்திருக்கிறது. என்னையும் உங்களோடு அழைத்துக் கூப்பிடுகிறீர்களே, நான் என்னுடைய தொகுதி மக்களுக்குச் சில கடமைகளைச் செய்ய வேண்டும், நான் இருக்க வேண்டுமே என்று சொல்லி நான் இருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த அரசைப் பொறுத்த அளவில், எதிர்க் கட்சியினர் சொல்லும்போது, பட்டினியால் சாகிறார்கள் என்று சொன்னார்கள். உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு மதிய உணவுத் திட்டத்தை வழங்கினார்கள். மதிய உணவைக் கொடுத்தவுடனே "அம்மா, விவசாயிகளை எல்லாம் போய் தட்டு ஏந்திக் கொண்டு நிற்க வைத்து விட்டீர்களே" என்றார்கள். அதற்குள்ள செலவுக்கு என்ன உண்டோ, அதற்கான அரிசியைக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னோம். உடனே, அரிசியைக் கொடுத்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் நன்றி



சொல்வதை விட்டுவிட்டார்கள், விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எதைச் சொன்னாலும் அதைச் செய்கிறது இந்த அரசு—ஏழை விவசாயிகளைத் தட்டு ஏந்த விட வேண்டாம் என்று சொன்ன மறு நிமிடமே, நல்லவர்கள், நல்ல ஆலோசனை கூறுவதை இந்த அரசு கேட்காமல் இருக்காது என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக, அரிசி வழங்கியதை நான் நெஞ்சார, மனமார இந்த நல்ல நேரத்திலே பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப் போன்றே, எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், அதற்கு எதிர்க் கருத்துக் கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு இருப்பது நல்ல ஆரோக்கியமான எதிர்க் கட்சிக்கு அழகல்ல. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆளும் கட்சியிலே இருந்தார். பிறகு எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, எதிர்க் கருத்துகளை சொல்வதோடு நின்று விடுவாரே தவிர, அதை விமர்சனம் செய்வதற்குக்கூட விட மாட்டார்கள். அந்த அளவிலே பார்க்கும்போது - ஒரு திருமண வீட்டிற்குச் செல்கிறோம். முதன் முதலாக திருமணம் முடிந்து அவர்களை வாழ்த்துகிற வாய்ப்புக் கிடைத்தால், அங்கே மங்கலமாக நீங்கள் நன்றாக இருக்க வேண்டும், எல்லா நலனும் பெறவேண்டுமென்றுதான் வாழ்த்த வேண்டுமே தவிர, அமங்கலமாக நீ எங்கப்பா குழந்தை பெற்றுக்கொள்வாய், உனக்கு எங்கே ஆண் பிள்ளை இருக்கும், உனக்கு எப்படி பிள்ளை பிறக்கும் என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய அமங்கலமான சொல்லோ, அது போலத்தான் வீராணம் திட்டம் தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று சொன்னால், அந்தத் திட்டம் வரட்டும், வரவேண்டுமென்று ஆதரிப்பதை விட்டுவிட்டு, தண்ணீரே வராது என்று அபசகுனமாகச் சொல்வதற்கு நான் மனதார எதிர்ப்புத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தில் முழுமையாக தண்ணீர் வரவில்லையென்று சொன்னாலும்கூட, இந்தத் திட்டத்தின் மூலம் அங்கே கடலூர் மாவட்டத்திற்குத் தேவை போக மீதி இருக்கின்ற தண்ணீராவது இந்தச் சென்னை மாநகருக்கு வரும். மேலும் இன்னொரு திட்டத்தைக் கண்டுபிடித்தும்கூட இந்தத் திட்டத்தோடு கொண்டுவரலாம் என்று நல்ல ஆலோசனை சொல்ல வேண்டும். ஆகவே, அந்த அடிப்படையில் இந்த வீராணம் திட்டத்தை விரைவாக நடத்தவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, புதிய தலைமைச் செயலகம் மகாபலிபுரத்திலே கட்டுவதற்காக முதலிலே அரசு பரிசீலித்தது. என்னுடைய கருத்தை இந்தச் சட்டமன்றத்திலே வைத்தேன். மகாபலிபுரத்திலே இருந்தால் அது நமக்குப் பயன் தராது. சென்னையிலேயே அது இருக்கவேண்டுமென்று சொன்னோம். இப்போது சென்னையிலே அருமையான ஓர் இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள். இந்த இடத்தைத் தருவதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கின்ற 68 கல்லூரிகளில் இராணி மேரி கல்லூரியும் ஒன்று. அந்தக் கல்லூரி அங்கீகாரத்தை இரத்து செய்யவில்லை, அந்தக் கல்லூரியின் செயல்பாடு நிறுத்திவைக்கப்படவில்லை. கல்லூரிக்கும் புதிய கட்டடங்கள் கட்டித்தரப்பட்டு. அந்தக் கல்லூரியின் மாணவிகள் தொடர்ந்து படிப்பதற்கு ஏற்பாடு செய்ததற்கு நன்றி கூறி, அந்த இடத்தில் விரைவாகத் தலைமைச் செயலகம் அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோரும் தாம் செய்வதுதான் சரியானது என்று எண்ணலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் விவசாயிகள் வாங்கிய கடனை நபார்டு வங்கி நாங்கள் கொடுத்தால் வாங்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், அதே நபார்டு வங்கிக்கு இந்த அரசு பொறுப்பேற்ற மறு நிமிடமே 314 கோடி ரூபாய் விவசாயக் கடனைக் கட்டியது. ஏழை விவசாயிகள் மலர்ந்தார்கள். இந்த நபார்டு வங்கி அதைப் பெற்றுக்கொண்டு விவசாயிகளிடம் அந்தக் கடனைப் பெறவில்லையே? ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) நபார்டு வங்கி வாங்கவில்லை என்று சொன்னது தவறான தகவல்.

அதேபோன்று மத்திய அரசு 20 சதவீத வட்டியை இரத்து செய்தது. ஆனால், இந்த அரசு 100 சதவீத வட்டியை சிறு, குறு விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு இரத்து செய்ததை மனமார, நெஞ்சார இந்த நல்ல வேளையிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோன்று ஏழை, சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை இரத்து செய்துவிட்டு மானியமாக 100 கோடி ரூபாய் வழங்குவதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நல்ல வேளையிலே கேட்டுக்கொள்கிறேன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தனிக்கவனம் செலுத்த



வேண்டும். தமிழகத்திலே 16 இலட்சம் பம்ப் செட் விவசாயிகள் அதிலே பயனடைந்து வருகிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விலையும் இல்லை. விவசாயிகள் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகள் ஆண்டு ஒன்றுக்கு 200 கோடி ரூபாய்தான் இந்த மின்சாரக் கட்டணம் கட்ட வேண்டும் என்றுகூட அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால், தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு வெறும் 200 கோடி ரூபாய்தான் சிறுவிவசாயிகளுக்கு மின் கட்டணமாக செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. நான் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அரசு விவசாயிகளுக்கு எத்தனையோ நலத்திட்டங்களை இலவசமாக வழங்கி வருகிறது. ஏழை விவசாயிகளுடைய நலனைக் கருதி 1,000 கோடி ரூபாய்க்கு காற்றாலை மின் திட்டம் அமைத்தால், 500 wind mill அமைக்கலாம். ஆண்டு ஒன்றுக்கு 500 கோடி ரூபாய் அதிலிருந்து வருமானமாக வரும். மாண்புமிகு நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1,000 கோடி ரூபாயை இந்த விவசாயிகளுக்காக நீங்கள் செலவிட்டால், 500 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டுதோறும் காற்றாலைகள் மூலம் மின்சாரத்தைப் பெற்று தமிழகத்திலுள்ள அனைத்து ஏழை விவசாயிகளுக்கும் இலவசமாகத் தொடர்ந்து மின்சாரத்தை வழங்கலாம். என்னுடைய ஆலோசனையை ஏற்று, இந்த அரசு நிச்சயமாக இதைப் பரிசீலித்து, ஏழை விவசாயிகள் பெற்று வருகிற அந்த மின்சாரத்திற்கு கட்டணத்தை இரத்து செய்ய வேண்டும்.

குறிப்பாக, என்னுடைய பகுதியை எடுத்துக் கொண்டால், ஒரு சிறு விவசாயியை எடுத்துக் கொண்டாலும்கூட, 150 அடியிலிருந்து அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு 4 மின் மோட்டார்கள் பொருத்தி கிட்டத்தட்ட 20 எச்.பி. மின் மோட்டாரைப் பயன்படுத்தினால்தான் தண்ணீரை வெளியேக் கொண்டுவரமுடியும். அதுவும் ஒரு மணி நேரம்தான் மின் மோட்டார் ஓடுகிறது. இந்த நிலையில் தமிழகத்தில் இருக்கிற 16 இலட்சம் பம்ப் செட் விவசாயிகளுக்கும் தொடர்ந்து இந்த இலவச மின்சாரத்தைத் தொடரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த தினத்தை மாணவர் தினமாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த தின விழா நடைபெற்றபோது நம்முடைய சின்ன ஐயா சிவந்தி ஆதித்தனார் அவர்களும் இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து பெருந்தலைவர் காமராஜருடைய 100-வது பிறந்த தின நிறைவு விழாவிலே இதை அறிவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, நம்முடைய தமிழகத்திலே இருக்கிற குழந்தைகள் காப்பகம். அதே போன்று, இந்த அனாதைக் குழந்தைகள் இல்லங்களுக்கு அரசு ரேஷன் கடையின் மூலம் அரிசி வழங்குகிறார்கள். அதற்கு கடந்த அக்டோபர் மாதம் முதல் ஒரு கிலோ அரிசி 6 ரூபாய் வீதம் வசூலிக்கிறார்கள். அக்டோபர் மாதத்திற்கு முன்னால் வரை ஒரு கிலோ அரிசி 3 ரூபாய்க்கு வழங்கினார்கள். ஆனால், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல், ஏழை அனாதைக் குழைந்தைகள் உண்ணுகின்ற உணவுக்கு, அந்த ரேஷன் அரிசி விலை ஒரு கிலோ 6 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை நேரிலே சென்று சந்தித்தேன். அவர்கள் அவ்வாறு இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, அதை இந்தச் சட்டமன்றத்திலே அவர்கள் பதிலாக சொன்னால் எனக்கு நன்றாக இருக்கும் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே உள்ள (மணியடிக்கப்பெற்றது) மிக வறண்ட பகுதி—இதோ முடித்து விடுகிறேன். இன்றைக்காவது கொஞ்சம் பேசவிடுங்கள். என்னுடைய ராதாபுரம் தொகுதிக்கும், நாங்குனேரி சட்டமன்றத் தொகுதிக்கும் இடையே நம்பியாறு செல்கின்றது. மழையே பெய்யவில்லை, 15 ஆண்டுகளாக மழை இல்லை அந்த ஆற்றிலே 100, 500, 1000 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள மணல் இருக்கிறது. அது இருக்கின்ற காரணத்தினால் சற்று குடிநீர் குடித்துக் கொண்டு இருக்கிறோம். அந்தக் குடிநீருக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அந்த மணலை அள்ளுவதற்கு எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இப்போது அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதனால் ஏகப்பட்ட குடிநீர்ப் பிரச்சினை மிக விரைவிலே வரவிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், உடனடியாகத் தலையிட்டு - நான்கூட ஒரு போராட்டம் பண்ணி அரசினுடைய கவனத்தை ஈர்த்தேன்.



**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் கொடுமுடியாறு, நம்பியாறு ஆகிய பகுதிகளிலிருந்து, கூடங்குளம் அனல்மின் நிலையம், அடவிநயினார் நீர்த்தேக்கத் திட்டப் பணி மற்றும் பாளையங்கோட்டை புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளுக்கு தமிழ்நாடு சிறுதொழில்கள் கனிமச் சலுகை சட்டம் 1959 விதி எண் 7-ன்படி நாங்குனேரி வட்டம், ராஜாக்கமங்கலம் மற்றும் இறைப்புவாரி கிராமத்தில் அமைந்துள்ள நம்பியாறு புறம்போக்கிலிருந்தும், அம்பாசமுத்திரம் வட்டம், அயன்திருவாலீஸ்வரம் கிராமத்தில் அமைந்துள்ள நதிப் புறம்போக்கிலிருந்தும் அரசு கட்டுமானப் பணிகளுக்கு seigniorage தொகையை வசூல் செய்து கொண்டு கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டது.

பிற்பகல் 12-25

கொடுமுடியாறு அணைத் திட்டப் பணிக்கு 13,920 யூனிட்டுகளும், நம்பியாறு அணைத் திட்டப் பணிக்கு 2,374 யூனிட்டுகளும், அடவி நயினார் நீர்த் தேக்கத் திட்டப் பணிக்கு 16,400 யூனிட்டுகளும், பாளை புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிக்கு 1,598 யூனிட்டுகளும், கூடங்குளம் அணுமின் நிலைய கட்டுமானப் பணிக்கு 11,600 யூனிட்டுகளும்—தற்சமயம் கூடங்குளம் அணுமின் நிலைய கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது நாங்குனேரி வட்டம், ராஜாக்கமங்கலம், புல எண் 202-லிருந்து அரசு முன் அனுமதி பெற்று மேற்கண்ட பகுதிகளிலிருந்து Hindustan Construction Company, Simplex Company ஆகியோர்களுக்கு மணல் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இதர ஒப்பந்தக்காரர்களுக்கு மணல் எடுக்க வேண்டி விண்ணப்பித்த மனுக்கள் மீது வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட பொறியாளர் அறிக்கை பெற்று, கூடங்குளம் அணுமின் நிலையப் பணிக்கு மணல் எடுத்துச் செல்ல அனுமதி வழங்க நடவடிக்கையில் உள்ளது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Nuclear Power Corporation of India Limited—கூடங்குளம் அணுமின் திட்ட அதிகாரிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் சொல்லியிருக்கிறேன். மாதந்தோறும் நடைபெறுகின்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரே, நம்பியாறு ஒரு Perennial river அல்ல; ஆகவே, அங்கே மணல் எடுக்கக் கூடாது. தாமிரபரணி ஆறு perennial river; ஆகவே, இங்கேதான் மணல் எடுக்க

வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே பொறுப்பேற்று நம்முடைய வரண்ட பகுதியிலே நீங்கள் இருக்கிறீர்கள். 13,500 கோடி ரூபாயில் கூடங்குளம் அணுமின் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன. இந்த நம்பியாற்றில் இருக்கின்ற மணலை பத்தே நாட்களில் அள்ளிச் சென்றுவிடுவார்கள். எங்களை எல்லாம் அந்த இடத்தைவிட்டு நீங்கள் வேறு எங்கேயாவது மாற்றிவிட்டுத்தான் அங்கே மணல் அள்ள நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போதுகூட, அங்கே மணல் அள்ளுவதில் பகல் முழுவதும் கூடங்குளத்திற்கு அனுப்புகின்றார்கள். இரவு நேரங்களில் திருவனந்தபுரத்திற்கு அனுப்பி பல கோடி ரூபாய் பெறுகின்றார்கள். ஒரு அண்ணா தி.மு.க. காரர்கூட அதில் சம்பந்தப்படவில்லை. அத்தனைபேரும் மாற்றுக் கட்சி நண்பர்கள், இலட்சம் இலட்சமாக, கோடி கோடியாக கொள்ளை அடித்துச் செல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் பகல் நேரங்களில் மட்டுமே எடுக்கப்படுகிறது. இரவு நேரத்தில் மணல் அங்கிருந்து அள்ளப்படுவதில்லை. தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, அரசாங்க ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அதுவும் கூடங்குளம் அணுமின் நிலையம் இப்போது முக்கியமான இயக்கத்தில் இருப்பதால், அதற்கு மட்டும்தான் அனுமதி அளிக்கப்படுகிறது. வேறு தவறுதலாக மணல் எங்கும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—கூடங்குளம் அணுமின் திட்டத்திற்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்துதான் lead போட்டு கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வளவு மணல் வேண்டுமானாலும் தாமிரபரணி ஆற்றில் எடுத்துக்கொள்ளலாம். கோவில்பட்டியில் எடுத்துக்கொள்ளலாம், விளாத்திகுளத்தில் எடுத்துக்கொள்ளலாம், ஸ்ரீவைகுண்டத்தில் எடுத்துக்கொள்ளலாம். அது perennial river. ஆண்டுதோறும் மழை வரும். இந்த நம்பியாறு 2000 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நம்பியாற்றில் மணல் எடுப்பதைப்பற்றி இங்கே சொன்னார்கள். குறிப்பிட்ட அளவிற்குள், எந்த நோக்கத்திற்காக, யாருக்காக, கூடங்குளம் அணுமின் நிலையத்தற்கு



எந்த அளவிற்கு மணல் அள்ளுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றதோ, அந்த அளவிற்கு மணல் அள்ளுவதற்கு அங்கே முறைப்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு எந்த விதத்திலும் அவருடைய தொகுதிக்கு குடிநீர்ப் பிரச்சினை வராதவகையில், குடிநீர் பாதிக்காத வகையில் தீவிர கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப்படும் என்பதை நான் இந்தக் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நம்பியாற்றிலே மணல் அள்ளி கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தை நிறைவு செய்ய முடியாது. அது ஒரு 13,500 கோடி ரூபாய் திட்டம். அந்தக் கடலுக்குள் எவ்வளவு கொண்டு போட்டாலும் காணாது. நம்பியாறு மாதிரி 100 நம்பியாற்று மணலை அள்ளிக்கொண்டு போனால்தான் அந்தக் கூடங்குளத்திற்குக் காணும். அவர்களுக்கு அங்கே ஏற்கெனவே டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அங்கே அனுமதி வழங்க வேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்த அரசை எதிர்த்து ஒரு முறை மறியல் என்று ஆரம்பித்து அரசின் கவனத்திற்குத்தான் இதைக் கொண்டுவந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். வறண்ட பகுதி, நாங்கள் எல்லாம் அந்த ஊரிலேயே இருக்க முடியாது. கிணற்றில் அரை மணி நேரம், ஒரு மணி நேரம்தான் மோட்டார் ஓடுகிறது. தயவுசெய்து நம்பியாற்றில் நீங்கள் மணல் அள்ள அனுமதிக்கமாட்டோம் என்ற உத்தரவாதத்தைத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கொடுமுடியாறு அணை கட்டுங்கள், நம்பியாறு அணை கட்டுங்கள். இதற்கெல்லாம் நாங்கள் வருத்தப்படவில்லை. இந்த கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு நாங்கள் மணல் அள்ள அனுமதித்தால் நாங்கள் அங்கே இருப்பதில் (மணியடிக்கப்பெற்றது) அர்த்தமே இல்லை. முடித்து விடுகிறேன். இவ்வளவு நாளும், கடந்த ஆட்சியிலேயே இதே மாதிரி நிறுத்தியிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. என்னுடைய தொகுதி மக்கள், நாங்குனேரி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதேபோன்று, தாமிரபரணி ஆற்றிலேயிருந்து வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக அந்த வறண்ட ராதாபுரம் நகருக்கு, சாத்தான்குளம் பகுதிக்கு தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பழையாற்றிலே வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை lift irrigation மூலமாகக் கொண்டு செல்லவும், அதேபோன்று, தோவாளைக் கால்வாய்க்கு இணையாக வெள்ளப்பெருக்கு கால்வாய் வெட்டவும் வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 7-7-2001 அன்று அவர்களுடைய இல்லத்தில் சந்தித்து மனு கொடுத்தோம். அவர்களும் உடனடியாக மதிப்பீடு தயாரிக்கச் சொன்னார்கள். தற்போது, சாத்தான்குளத்திலே நடைபெற்ற வெற்றிவிழாக் கூட்டத்திலே சேரன்மாதேவியிலிருந்து தாமிரபரணி ஆற்றிலேயிருந்து வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்த ரூபாய் 167 கோடிக்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக இந்த நல்ல வேளையிலே, சட்டமன்றத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே இடத்திலேதான் ரூபாய் 167 கோடி திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பழையாற்றிலே கடலில் வீணாகக் கலக்கின்ற தண்ணீரை ஒரு lift irrigation மூலம் கொண்டு செல்ல 14 கோடி ரூபாயிலும் தோவாளைக் கால்வாய்க்கு இணையாக ஒரு வெள்ளப் பெருக்கு கால்வாய் வெட்ட 78 கோடி ரூபாயிலும்- இரண்டுமே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விட்டது. தயவுசெய்து அவற்றையும் சேர்த்து அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தூண்டில்வளைவு, பெருமணல், இடிந்தகரை, தோமையார்புரம், கூத்தங்குளி, கூட்டப்பனை, உவரி, கூடுதாழை பெரியதாழை ஆகிய பகுதிகளுக்கு ரூ.58 கோடிக்கு மதிப்பீடு தயாரித்து இருக்கிறார்கள். ஆனால் பெரியதாழைக்கு மட்டும்—அது சாத்தான்குளம் தொகுதியில்—இருப்பதால், அதை அறிவித்திருக்கிறார்கள். பாக்கி இருக்கின்ற 8 ஊர்களுக்கும் நீங்கள் அதை அறிவிக்கவில்லை, தயவுசெய்து—



**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூண்டில்வளைவு பாலம், சாத்தான்குளம் தொகுதிக்கு மட்டும் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சாத்தான்குளம் தொகுதிக்கு மட்டும் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், கிழக்கு கடற்கரையில் இருக்கிற அத்தனைப் பகுதிகளுக்கும் தூண்டில்வளைவு பாலம் அமைப்பதற்கு, கடல் அரிப்பிலிருந்து அந்தப் பகுதி மக்களைக் காப்பதற்காக அந்தப் பகுதியினுடைய கிராம மக்களுக்காக அரசின் கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் ஒப்புதல் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடன் படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும், அந்தத்தூண்டில்வளைவு பாலம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். மும்பையிலே, கார்ப்பரேஷன் பள்ளியிலே தமிழ் கற்றுக்கொடுக்கிற தமிழ் பள்ளிகள், 1 முதல் 7 வகுப்பு வரை 48 பள்ளிகள் அங்கே நடைபெற்று வருகின்றன. அந்தப் பள்ளிகளைத் தமிழைப் பற்றி பேசுகின்ற யாருமே கண்டுகொள்ளவில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அங்கே படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்களை வழங்கியிருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை, 1 முதல் 7 வகுப்பு வரை தமிழ் மீடியம். அதோடு நின்று விடுகிறது. 8, 9, 10, 11 மற்றும் 12 வகுப்புகளில் இந்தி அல்லது ஆங்கிலம் போதனா மொழியில் படிக்க வேண்டும். அவ்வாறு, அவர்களால் தமிழ் படித்து ஆங்கிலம், இந்தியிலே படிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஏழை மக்கள் குழந்தைகள் தான் அந்த முனிசிபாலிடி பள்ளிகளிலே கிட்டத்தட்ட 48 பள்ளிக் கூடங்களிலே, 20,000 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்த அரசு 12 வகுப்பு வரை தமிழிலே கொண்டு சென்றால், அந்த மாணவர்கள் இடை நிறுத்தம் இல்லாமல் ஏதாவது ஒன்றைப் படித்து முடிவுக்கு வருவார்கள். ஆகவே, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, மகாராஷ்டிரா முதல்வர் அவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கனிதா சம்பத்.

**திரு. மு. அப்பாவு:** பேச்சை முடித்துக்கொள்கிறேன். அங்கே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு-நம்முடைய அமைச்சர் அவர்கள் அருமையாகப் பேசினார்கள்—உடனே 12 வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வியைத் தொடர்வதற்கு மகாராஷ்டிரா முதல்வர் அவர்களுக்கு ஏற்கெனவே கோரிக்கைகள் வைத்திருக்கிறோம். நீங்களும் நம்முடைய தமிழக அரசு சார்பாக கோரிக்கை வழங்கி, இந்த ஆண்டு முதல், 48 பள்ளிகளில் ஆரம்பிக்க வேண்டாம்; ஒரு 10 பள்ளிகளிலாவது அதை ஆரம்பித்தால், அந்த மாணவர்கள் அங்கே சென்று படித்து பயன் பெறுவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். மகாராஷ்டிரா யுனிவர்சிடியிலே Tamil Chair இல்லை. அறக்கட்டளையில் 20 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். அதற்கு Tamil Chair-லே அனுமதி கிடைக்கவில்லை. கட்டவும் இல்லை. மற்ற எல்லா மொழிகளுக்கும் Chair இருக்கிறது. ஆகவே, Tamil Chair கட்டுவதற்கு 20 இலட்சம் ரூபாய் எங்களுடைய தினத்தந்தி சின்ன ஐயா சிவந்தி ஆதித்தனார் அவர்கள் கட்டத் தயாராக இருக்கிறார்கள். அரசு அந்த Tamil Chair தொடங்குவதற்கு அனுமதி பெற வேண்டும் என்று இந்த நல்ல வேளையிலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திசையன்விளை, பனங்குடி, வடக்கன்குளம், கூடங்குளம், ரங்கனாபுரம், ஆகிய ஆரம்பச் சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் I.T.I., Polytechnic, B.E., போன்ற கல்லூரிகளில் படித்து முடித்துவிட்டு, வெளியே வருகின்றவர்களுக்கு வாகனங்களில் brake repair ஆகி இருந்தால் அதைக்கூட சரி செய்வதற்கு தெரியவில்லை. காரணம், அங்கு சரியான கல்வி இல்லை. ஆகவே, இந்தத் தொழில் கல்வியைப் படித்து வருகின்ற மாணவர்களுக்கு 5 ஆண்டு காலம் வேலை உத்தரவாதம் யார் தருகின்றார்களோ அவர்களுக்குத்தான் கல்லூரி நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும்... (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். அதேபோல், கங்கை...

பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய



தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மும்பையிலே, தமிழைப் பயிற்று மொழியாகப் படித்து வருகிற மாணவ, மாணவிகளுக்கு, இங்கிருந்து தேவையான தமிழ்ப் பாட நூல்களை சென்ற ஆண்டு ஏற்கெனவே வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல், மகாராஷ்டிராவிலே, அந்தப் பல்கலைக்கழகத்திலே Tamil Chair அமைப்பதற்கு அங்கிருந்து கோரிக்கைகள் வருகிற பட்சத்திலே அந்தக் கோரிக்கைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும். ஏற்கெனவே பல மாநிலங்களிலே இது போன்ற Tamil Chair அமைப்பதற்கு, அங்கே நாம் நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக நிதி ஒதுக்கப்பட்டு, நடந்து கொண்டு வருகிறது. மகாராஷ்டிரா மாநிலத்திலேயிருந்து அப்படிப்பட்ட முன்மொழிவுகள் பெறப்படுமேயானால் நிச்சயமாக அதற்கான நிதியொதுக்கம் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு, ஒரே நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

21-5-1991-ல் ராஜீவ் காந்தி அவர்களோடு இன்ஸ்பெக்டர் ராஜகுரு அவர்களும் அந்த விபத்திலே இறந்து விட்டார்கள், அவருடைய மகன் பிரவீன் ராஜேஷ் என்ற பையன் S.I. செலக்‌ஷனுக்காக, D.G.P. ஆபீசிலேயிருந்து பரிந்துரை பண்ணி, இங்கே வந்திருக்கின்றது. தயவு செய்து விரைவிலேயே—1991-லேயிருந்து யாருமே இன்னும் இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள்—அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த பிரவீனுக்கு S.I. பதவி கிடைக்க ஆவன செய்ய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி எஸ். கனிதா சம்பத்.

**திரு. மு. அப்பாவு:** நான் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுவாகப் பேசாமல், இந்த மானியக் கோரிக்கையின்மீது மட்டும் பேசி, உரையை முடியுங்கள். இதிலேயே நேரம் போய்விடுகிறது.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் தலை நிமிர...

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நன்றி என்று சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இந்த ஒன்றையும் சொல்லிவிட்டு, நன்றி சொல்லிவிடுகிறேன். இப்போது Real estate தொழில் ரொம்ப மோசமாக இருக்கிறது. N.O.C. வாங்குவதிலே ரொம்ப பாதிப்பு உள்ளது. தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே தலையிட்டு- ஏனென்றால் நிறைய வருமானம் வரக்கூடியது ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு- அதைப் பார்த்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பஞ்சாயத்துகளிலே ஒன்றிலே கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள், ஒன்றிலே கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். அவர்களுக்குச் சட்டம் என்றாலே என்ன என்று தெரியவில்லை. அந்த வேலை பார்ப்பவர்கள் எல்லாம் 50 ரூபாய், 100 ரூபாய்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி எஸ். கனிதா சம்பத்.

**திரு. மு. அப்பாவு:** பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடிக்கிற மாதிரி தெரியவில்லை.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் தலை நிமிர தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கனிதா சம்பத், உட்காருங்கள். திரு. அப்பாவு பேசி முடிக்கட்டும்.

**திரு. மு. அப்பாவு:** அவற்றையும் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள ரோடுகள் எல்லாம் படுமோசமாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ரோடுகள் பற்றி எழுதித்தருகிறேன். அவற்றைச் சரி



செய்து தரவேண்டும் என்று அன்போடு கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், குறுக்கீடுகள் செய்து பேச அனுமதித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, ரேஷன் கார்டுகளில் தமிழ்நாடு முழுவதும் குளறுபடிகள் இருப்பதால். புதிய ரேஷன் கார்டுகளை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுஅமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி எஸ். கனிதா சம்பத்,

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் தலை நிமிர தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் நலமுடன் வாழ, என்றென்றும் பணியாற்றும் அன்பின் திருவுருவம், ஆற்றலின் பிறப்பிடம், வீரத்தின் விளைநிலம், வெற்றியின் விலாசம், எங்கள் குலதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் பொன்மனத் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களைத் தொழுது, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னைப் பேசப் பணித்த அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஒளி பிறந்தபோது மண்ணில்

உயிர்கள் பிறந்ததம்மா; இங்கு

நீ பிறந்தபோது, தெய்வம்

நேரில் வந்ததம்மா"

என்று ஒரு கவிஞர் பாடியதுபோல், தெய்வ வடிவமாகத் தோன்றி, நம் குறைகளையெல்லாம் தீர்த்துக் கொண்டிருக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர்ந்த இலட்சியங்களோடு, உன்னதமான திட்டங்களைத் தீட்டி, ஒப்பில்லாத மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்த அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பொழுது புலர்ந்தால், புதுப்புதுத் திட்டங்கள் என்று தீட்டி, அகில இந்திய அளவில் முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை மாற்ற அம்மா அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் இனிய முயற்சிகளை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பாலைவன வெயிலில் சிக்கித் தவிப்போருக்கு, கண்ணில் பசும்சோலை ஒன்று தென்பட்டதுபோல், முறையற்ற முந்தைய ஆட்சியில் அலைக்கழிக்கப்பட்டோர்களுக்கு எல்லாம் நலம் தரும் நல்லாட்சியை அம்மா அவர்கள் இன்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடுமையான நிதி நெருக்கடி இருக்கும் இந்நேரத்தில் கனிவான பல உதவிகளை நாட்டு மக்களுக்குத் தருகிறார்கள் என்றால், நெஞ்சில் உரமும், நிர்வாகத் திறனும் மிக்க அம்மா அவர்களால் மட்டுமே இத்தகைய அற்புதச் சாதனைகளைப் படைக்க முடியும். நல்ல நிலத்தில் சாகுபடி செய்ய முற்படும் ஒருவருக்கும், கல்லும், முள்ளும் நிறைந்து காணப்படும் பாறைப் பகுதியில் சாகுபடி செய்யும் ஒருவருக்கும் இடையில் வேறுபாடு உண்டு. நல்ல நிலத்தை உழுது நீர்ப்பாய்ச்சி உழவுத் தொழிலை எளிதாகச் செய்துவிடலாம். ஆனால், பாறைப் பகுதியில் உள்ள கற்களையும், முட்களையும் அகற்றி, மண்ணைப் பண்படுத்திய பிறகுதான் உழவுத் தொழிலை தொடங்க முடியும். அதுபோல இரண்டாவது வகையில் உழவு செய்பவருக்கு ஏற்படும் இடர்பாடுகளைத்தான் நம் இதயதெய்வம் அம்மா அவர்கள் இன்று சந்தித்து வருகிறார்கள்.

*பிற்பகல் 12-40*

நல்ல நிலமாய் இருந்த தமிழகம் முந்தைய ஆட்சிக் காலத்தில் முள்ளும், கல்லும் நிறைந்த பகுதியாய் மாற்றப்பட்டுவிட்டது. எனவே, அதை முதலில் அகற்றிய பிறகுதான் சாதனை சாகுபடிகள் செய்ய முடியும். இருந்தபோதும் ஒரே சமயத்தில் இரண்டு பணிகளையும் சீராக செய்யும் திறமைமிக்கவராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருப்பதனால்தான் வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் இன்று எழுச்சியை ஏற்படுத்தி வருகிறார்கள். நல்ல மனம் உடையோர் இதையெல்லாம் போற்றுகிறார்கள். ஆனால், குறை கூறியே பழக்கப்பட்டவர்கள்தான் ஏதாவது கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

கடந்த *28-3-2003* அன்று எதிர்க்கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் பட்ஜெட் மீதான விவாதத்தில் பேசும்போது யானையை வளர்க்கும் பாகனை யானையே மிதித்துக் கொன்ற நிகழ்ச்சியைப் போல நடந்து வருகிறது. உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நீங்கள் வாய்க்கரிசி போட்டதுபோல் இந்த பட்ஜெட் இருக்கின்றது எனப்



பேசினார். அது உண்மையல்ல, எங்களது முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாக்களித்த மக்களுக்கு அறுசுவை உணவு போட்டுத்தான் பழக்கம். காவிரி டெல்டா பகுதி மக்களுக்குத் தீபாவளி பண்டிகையன்று அரிசி, காய்கறிகள், மிளகாய்த்தூள், இனிப்பு உள்பட அனைத்தையும் வழங்கி தீபாவளி பண்டிகையை கொண்டாட உதவினார்கள். தமிழகத்தில் உள்ள *9 1/2* இலட்சம் மக்களுக்கு மாதம் *30* கிலோ வீதம் அரிசி வழங்கி வரும் எங்கள் அம்மாவுக்கு வாய்க்கரிசி போடும் பழக்கமில்லை. ஆனால், மக்கள் வாழ்வதற்கு அரிசி போட்டுத்தான் பழக்கம். அதனால்தான் மக்கள் அம்மாவை வாழ்த்தி இந்த மாமன்றத்திற்கு, அம்மா தலைமையில் ஆட்சி நடைபெற அனுப்பி வைத்துள்ளார்கள். வாய்க்கரிசி போட்டது உண்மைதான். வாக்களித்த மக்களை ஏமாற்றிய உங்களுக்கு வாய்க்கரிசி போட்டு ஆட்சியிலிருந்து அகற்றியிருக்கிறார்கள் மக்கள். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் பேசினார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

மற்றொன்றையும் இங்கு கூறக் கடமைப்பட்டுள்ளேன். நிதி ஒதுக்கீட்டில் பற்றாக்குறை பற்றாக்குறை என்று பஞ்சப்பாட்டு பாடுகின்றார்களே, இந்தப் பற்றாக்குறை யாரால் வந்தது? எதனால் வந்தது? கடந்தகால ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. பொன்முடி அவர்கள் அந்தத் துறையிலே எவ்வளவு இலாபத்தை வைத்து விட்டுப் போனார் என்று கூற முடியுமா? பல கோடி நஷ்டங்களைத் தானே விட்டுச் சென்றார். அந்தக் காலத்தில் ஒரு பழமொழி கூறுவார்கள் சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்று. எங்கள் அம்மா ஆட்சிக்கு வரும்போது சட்டியை விட்டுச் சென்றால் அதில் இருக்கும் சிறிதளவையாவது எடுத்து ஆட்சியைச் சீராக நடத்தி விடுவார்களோ என்று எண்ணித்தான் சட்டியை உடைத்து விட்டுச் சென்றுவிட்டார்கள். அப்படியிருந்தும் எங்கள் அம்மாவின் சிறந்த நிர்வாகத் திறனால் தற்போது நிதிநிலை பற்றாக்குறை இருந்தாலும் மக்களுக்குப் பல நலத்திட்ட உதவிகளை அறிவித்து செயல்படுத்தி வருவதைக் கண்டு பொறுக்க முடியாத நீங்கள் தினமும் ஒரு பிரச்சினையைக் கிளப்பி ஆர்ப்பாட்டம் செய்வதை மக்கள் பார்த்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

அதேபோல, உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்மீது பேசும்போது அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

என்னவாயிற்று? சமத்துவபுரத் திட்டம் என்னவாயிற்று? உழவர் சந்தை என்னவாயிற்று என்று கேட்டார், அவர் என்னவாயிற்று, என்னவாயிற்று என்று கேட்கிறாரே, அவரை நான் கேட்கிறேன், சென்னை மாநகரில் நீங்கள் கட்டிய மேம்பாலங்கள் என்னவாயிற்று? போட்ட பாதைகள் என்னவாயிற்று? அதில் முறைகேடுகள் என்னவாயிற்று? இப்படி எங்களுக்கும் கேட்கத் தெரியும். என்னதான் வேண்டுமென்றே சிலர் குறை கூறினாலும், அம்மா அவர்கள் ஆட்சி சிறப்பை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழை விவசாயிகளுக்காக சிறப்பு மதிய உணவு திட்டத்தை சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் 26,074 கிராமப்புற சத்துணவு மையங்கள் மூலம் மதிய உணவு உண்டு பசி போக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இந்தத் திட்டத்திற்கு அகில இந்தியா பூராவும் பாராட்டு தெரிவித்துள்ளன.

மேலும், சிறப்பு மதிய உணவுத் திட்டத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்ட பயனாளிகள் குடும்பத்திற்குச் சிறப்பு மதிய உணவிற்குப் பதிலாக 30 கிலோ அரிசி ஒவ்வொரு மாதமும் இலவசமாக வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அவரின் தாய் உள்ளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளின் துயர் துடைப்பதற்காக சிறப்பு நிவாரணத் திட்டமும் அறிவித்துள்ளார்கள். இந்தச் சிறப்புத் திட்டத்தில் ரொக்கத் தொகையும், அரிசியும் சேர்த்து ஊதியமாக வழங்கப்படும் என்றும், ரொக்கத் தொகை ரூ.85.48 கோடியும், ரூ.256.44 கோடி மதிப்புள்ள அரிசியும் வழங்க ஆணை பிறப்பித்த மாண்புமிகு அம்மா அவர்களின் தொண்டுள்ளத்தைப் பாராட்டாதவர்கள் எவர் உள்ளார்.

2000-2001 நிதிநிலை அறிக்கையில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகங்கள் கட்டித்தர மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர்களுக்கும் இன்று அலுவலகம் கட்டிக் கொடுத்து பலர் அதில் பயனடைகிறார்கள். இதனால் மக்கள் அனைவரும் அம்மாவை வாழ்த்துகிறார்கள்.



*பிற்பகல் 12-45*

அம்மா, என்னுடைய திருப்போரூர் தொகுதி தனித் தொகுதி ஆகும். அங்கேயுள்ள மக்கள் தாலுகா அலுவலகம் வர வேண்டும் என்றால் குறைந்தது 40 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டும். எங்கள் தொகுதி செங்கல்பட்டு வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. முந்தைய ஆட்சிக் காலத்தில் எங்களுக்கு வரவேண்டிய வட்ட அலுவலகத்தை திருக்கழுக்குன்றத்திற்கு மாற்றம் செய்துவிட்டதால் தற்போது அது அங்கு செயல்பட்டு வருகிறது. செங்கல்பட்டு, சட்டமன்ற தொகுதியில் இரண்டு தாலுகா அலுவலகங்கள் உள்ளன. ஆனால் தாழ்த்தப்பட்ட மற்றும் பின்தங்கிய மக்கள் வாழும் எங்கள் தொகுதியில் ஒன்றுகூட இல்லை. ஆகவே, தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் தனி தாலுகாவாக திருப்போரூரை அறிவிக்க ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக கிராம நத்தம் நீர்ப்பிடிப்பு இல்லாத பகுதிகளில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இதை சர்வே செய்து, ஏழை எளிய மக்களுக்குப் பட்டா வழங்க அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியில் கடற்கரை சாலையோரம் உள்ள 20 ஊராட்சிகளில் மக்கள் 20 கிலோ மீட்டர் தூரம் சுற்றி திருப்போரூக்கு வர வேண்டும். இங்கு ஒரு பாலம் அமைத்தால் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இங்கு வந்து அடையலாம். நீண்ட நாள் கோரிக்கையான இதை அம்மா அவர்கள் நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள வடகால் கிராமத்தில் மழைக் காலங்களில் மக்கள் வெளியே வர முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த நேரத்தில் பாய்மர கப்பல்கள், படகுகள் மூலமாகத்தான் 2 மாத காலம் வருகிறார்கள். அங்கு ஒரு பாலம் அமைக்க அம்மா அவர்கள் ஆணை பிறப்பிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு-திருப்போரூர் இடையே உள்ள நெடுஞ்சாலை ஒரு வழிப்பாதையாக உள்ளதால் விபத்துகள் ஏற்படுகின்றன. இதை இருவழிப்பாதையாக மாற்றித் தரும்படி அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தொழிற்சாலைகள் நிறைய உள்ளதால் விபத்து ஏற்பட்டால் மருத்துவமனை செல்ல முடியாத நிலை உள்ளது. இங்கு 30 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தரும்படி அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. எனவே, திருப்போரூரில் ஒரு துணை தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரும்படி அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த என்னை ஆளாக்கிய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை அம்மா அவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு, எழுதுபொருள் மற்றும் அச்சு, வருவாய் மற்றும் இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்து, அவற்றை நிறைவேற்றிட எனக்கு வாய்ப்பினை வழங்கிய, அல்லல்படும் ஏழை மக்கள் துன்பம் தீர்க்க அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களில் எனது நன்றி மலர்களை முதற்கண் காணிக்கையாக்குகிறேன்.

ஓடுகின்ற நதி, உருளுகின்ற சக்கரம், பாடுகின்ற பறவை, பழகுகின்ற நட்பு, மலர்கின்ற பூக்கள், மாறுகின்ற பருவம் இவையெல்லாம் உலகத்து இயல்புகள். அதேபோல, மேகங்கள் திரண்டால் மழை பொழியும், மலர்கள் மலர்ந்தால் மணம் வீசும், கோடை தணிந்தால் வசந்தம் வரும், மனதில் நிம்மதி இருந்தால் முகத்தில் மகிழ்ச்சி பொங்கும் என்பதெல்லாம் உலக நடைமுறைகள்.

இன்னும் சில இயல்புகளும் உண்டு. வெற்றி வந்தால் மகிழ்வதும், தோல்வி என்றால் நோவதும், வெந்ததைத் தின்று வாழ்வதும், விதி வந்தால் சாவதும், சராசரி மக்களின் இயல்புகள். ஆனால், இந்த இயல்புகள் எல்லாவற்றையும் மீறி, மனிதர்க்கும் மேலான மாமனித



இயல்புகள் சில உண்டு. ஆயிரம் துன்பங்கள் அணிவகுத்து வந்தாலும், அவற்றை தனது இடது கையால் புறந்தள்ளி, வெற்றிப் பாதையில் விரைந்து செல்கின்ற திண்மை, எதிரிகள் பல்லாயிரம் இணைந்து வந்தாலும், அவர்களை எதிர்த்து நின்று வாகைசூடும் வல்லமை, ஏழை மக்கள் படும் துன்பத்தை தான்படும் துன்பமாக எண்ணி, அந்தத் துன்பங்களையும், துயரங்களையும் களைந்திட துணிவுடன் பணி செய்யும் வல்லமை, போற்றிப் புகழ்ந்தால் புளகாங்கிதம் அடையாமல், தூற்றி இகழும்போது துன்பம் அடைந்து ஒடுங்காமல், என் பணி இந்த மக்களுக்கு நன்மை செய்வதே என்று வாழ்கின்ற மேன்மை ஆகிய இந்த மாமனித இயல்புகளை தன்னுடைய இயற்கை இயல்புகளாக, பிறவி இயல்புகளாக கொண்ட மனித குல மாணிக்கம்தான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடைசி தொண்டனான எனக்கு இந்த அவையிலே நின்று பேசக்கூடிய அருகதையை, இந்த மாமன்றத்திலே உரையாற்றுகின்ற பெருமையை வழங்கியிருக்கின்றார்கள். இத்தகைய சிறப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என் பதிலுரையை வழங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப்பதிவுத் துறையைப் பொறுத்தமட்டில், துறையின் செயல்பாடுகள், தமிழ்நாட்டில் பதிவுத் துறை 139 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வரும் ஒரு பழமையான துறை என்பதோடு, அரசுக்கு ஈட்டித்தரும் வருமானத்தைப் பொறுத்தவரை மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது. ஆவணங்களைப் பதிவு செய்வது மட்டுமின்றி, இந்தியத் திருமண பதிவுகள், சங்கம் மற்றும் சீட்டுப் பதிவு செய்தல் ஆகிய பணிகளையும் இத்துறை பொதுமக்களுக்கு ஆற்றி வருகிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 14 இலட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதோடு, சுமார் 14 இலட்சம் வில்லங்கச் சான்றிதழ்களையும் பல்வேறு பணிகளுக்கிடையே வழங்கி வருகிறது. 2001-2002-ல் இத்துறை ஈட்டிய வருவாய் ரூ.1,264.20 கோடி. கடந்த நிதியாண்டில், அதாவது 2002-2003-ல் இத்துறை ஈட்டிய வருவாய் ரூ.1,648.86 கோடி. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற சீர்திருத்த நடவடிக்கைகள்

காரணமாக இத்துறையால் கடந்த நிதியாண்டில் மட்டும் ரூ.380 கோடி வருவாய் அதிகமாக ஈட்டப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இது முந்தைய நிதியாண்டைக் காட்டிலும், 30.43 சதவிகிதம் கூடுதலாகும். பதிவுத் துறை தலைவரின் தலைமையின்கீழ் செயல்படும் இத்துறையில் 9 மண்டலங்களும், 50 பதிவு மாவட்டங்களும், 600 சார்பதிவாளர் அலுவலகங்களும் உள்ளன. மாநிலத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களையும் நூறு சதவிகிதம் துறை தணிக்கை செய்யும்பொருட்டு, 45 தணிக்கைக் குழுக்கள், ஒவ்வொன்றும் ஒரு தணிக்கை மாவட்ட பதிவாளரின் தலைமையில் இயங்கி வருகின்றன. பல்வேறு நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்படும் சங்கங்கள், தமிழ்நாடு சங்க பதிவு சட்டத்தின்கீழ் பதிவுத் துறையில் பதிவு செய்யப்படுகின்றன. 31-1-2003 வரை 1,15,803 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர, இந்திய பங்காண்மைச் சட்டத்தின்கீழ் சுமார் 3,86,057 நிறுவனங்கள் பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள்:—**

பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி வெளிப்படையான, விரைவான சேவையை பொதுமக்களுக்கு வழங்கிட, மாநிலத்தில் மொத்தமுள்ள 600 சார்பதிவாளர் அலுவலகங்களையும், 50 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களையும், படிப்படியாக கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 350 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு, மக்களுக்குச் சிறப்பாக சேவை புரிந்து வருகின்றன. எஞ்சிய 300 அலுவலகங்கள், 2003-2004-ஆம் ஆண்டில் கணினிமயமாக்கப்பட உள்ளன. பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை, தகவல் தொழில்நுட்ப வசதியுடன் விரைவாக பரிசீலித்திட பதிவுத் துறையில் 'ஸ்டார்' திட்டம் அறிமுகப்படுத்தபட உள்ளது. இத்திட்டத்தால் பொதுமக்கள் பயன் பெற இதர வசதிகள் பற்றியும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

(1) ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு குறுவட்டுக்களில் பாதுகாத்தல்.

(2) வில்லங்கச் சான்றுகள் வழங்குதல்.



(3) ஸ்கேன் செய்து பாதுகாக்கப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்கல்.

(4) சொத்து மதிப்பீடு அறிக்கை தயார் செய்தல்

(5) திருமணப் பதிவு/சங்கப் பதிவு, நிறுவனங்கள் பதிவு/சீட்டுப் பதிவு கண்காணிப்பு.

(6) இணையதளத்தில் கால முறையில் திருத்தி அமைக்கப்படும் வழிகாட்டி மதிப்புகள்.

முன்பெல்லாம் வில்லங்கச் சான்று பெற குறைந்தது 8 நாட்கள் ஆகும். ஆனால் தற்போது மனு செய்த சில நிமிடங்களிலே பொதுமக்கள் பெறலாம். முன்பு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூன்று நாட்களுக்குப் பிறகு கிடைப்பது என்ற நிலை மாறி, மதிப்புக் குறைவு அல்லாத ஆவணங்களைப் பொறுத்து பதிவு செய்த நாளன்றே ஆவணம் திரும்பக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-55

மேலும், முத்திரைத்தாள் பெறுதல், வழிகாட்டி மதிப்பு அறிதல் மற்றும் நகல் வில்லங்க மனுச் செய்தல் ஆகிய அனைத்துச் சேவைகளுக்கும் சார் பதிவாளர் அலுவலகக் கணினி கவுண்டர் மூலம் ஒரே இடத்தில் மனு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

சார் பதிவாளர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள கணினி தொலைத் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டு, தகவல் பரிமாற்றத்திற்கு வகை செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஒரு ஆவணம் பதிவானவுடன் நில உரிமை மாற்றம் குறித்த நடவடிக்கை வட்டாட்சியர் அலுவலகத்தில் உடனடியாகத் தொடங்கிவிடும்.

**'ரெஜிநெட் சேவை'**

'ரெஜிநெட்' என்பது, தகவல் தொடர்பு தொழில்நுட்ப முன்னேற்றத்தினைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட ஒரு வலைப்பின்னல் (Net Work) ஆகும். இச்சேவை இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 13-9-2002 அன்று தொடங்கப்பட்டது. இதன்படி சென்னை மாநகராட்சிக்குள் வரும் 33 சார்பதிவகங்களும் மற்றும் இதற்கென சென்னை மண்டல துணைப் பதிவுத் துறை

தலைவர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்ட சேவை மையமும் இணைக்கப்பட்டுள்ளன. வலைப்பின்னல் இணைப்பின் பலனால் இந்த அலுவலகங்களின் தகவல்கள் பரிமாற்றம் மற்றும் அலுவலகத்தின் எந்தவொரு வில்லங்கச் சான்று பற்றிய தகவல்களையும் வேறு இடங்களிலுள்ள அலுவலகத்தில் பார்க்க வழிவகுக்கும். இது ஆவணதாரர்கள் அருகிலுள்ள சார் பதிவகங்களுக்குச் சென்று பதிவு சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகுக்கும். தனிப்பட்ட 'ரெஜிநெட்' சேவை மையம் கீழ்க்கண்ட சேவைகளை வழங்கும்:—

(1) சென்னை மாநகர எல்லைக்குள் வரும் சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்கச் சான்று பெறலாம்.

(2) சென்னையில் உள்ள சொத்தின் மதிப்பு அறிக்கை.

(3) மாநிலத்தில் உள்ள எந்தவொரு சொத்தின் வழிகாட்டி மதிப்பு அறிதல்.

(4) ஒளிவருடல் (Scan) செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள்.

(5) பொதுமக்கள் தாமாகவே ஆவணங்களைத் தயாரித்திட ஏதுவாகும் மாதிரி ஆவணங்கள்.

(6) ஆவணப் பதிவு, சங்கம், நிறுவனம், சீட்டுப் பதிவு சம்பந்தப்பட்ட மாதிரிப் படிவங்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களால் 12-2-2003 அன்று முதல் ஈரோட்டில் மற்றுமொரு மையம் தொடங்கப்பட்டது. பின்னர், தூத்துக்குடி, மாவட்டத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களால் 14-3-2003 அன்று இச்சேவை தொடங்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இணையதளம் வழியாக-on line-வில்லங்கச் சான்று பெற மனு செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களால் அளிக்கப்பெறும் தகவல்கள் சேவை மையத்தில் பரிசீலிக்கப்பட்டு வில்லங்கச் சான்று தயார் நிலையில் வைக்கப்படுகிறது. மனுதாரர்கள் தேவையான கட்டணத்தை மையத்தில் நேரடியாக செலுத்தி சான்றிதழை உடனடியாகப் பெறலாம் அல்லது மனுதாரரின் வீட்டிற்குக் கூரியர் மூலம் அனுப்பப்படும். இதற்கான கட்டணம் மற்றும் கூரியர் செலவுகள் அவரிடம் வசூலிக்கப்படும்.



இத்துறையின் செயல்பாடுகள் பற்றி பொதுமக்கள் நன்கு அறியும் நோக்கத்தில், மாநிலத்தின் அனைத்து பகுதிகளின் வழிகாட்டி மதிப்புகளைப் பொதுமக்கள் தடையின்றித் தெரிந்துகொள்ள இவ்விவரங்கள் இத்துறையின் இணையதளத்தில், வெப் சைட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், பொது பயன்பாட்டுப் படிவங்கள் மற்றும் மாதிரி ஆவணப் படிவங்கள் ஆகியவையும் இத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெற அளிக்கப்பட்டுள்ளன. மீதம் இருக்கும் 300 அலுவலகங்களையும் கணினிமயமாக்கல் மற்றும் சொத்து உரிமைப் பெயர் மாற்றம், வருவாய்ப் பதிவேடுகளில் உடனுக்குடன் செய்வது சம்பந்தமாக மாநிலம் முழுவதும் இணைப்பு வசதி ஏற்படுத்தல் ஆகியவை நடைபெற்று வருகின்றன. இந்த இணைய தளத்தின் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் இணைய தள தொழில்நுட்ப வசதியால் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சமாதான் திட்டம் 2002**

பத்திரம் பதிவோர் வழிகாட்டி மதிப்புக்கு ஏற்ப முத்திரைத் தீர்வையை செலுத்த மறுக்கும்போது, சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயிக்க, தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) ஆவணங்கள் அனுப்பப்படுகின்றன.

இவ்வாறு அனுப்பப்படும் ஆவணங்கள் ஆண்டுக்கணக்காக அதிகரிப்பதால் அரசுக்கு வரவேண்டிய, முத்திரைத் தீர்வை வருவாயில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களும் ஆவணங்களை உடனடியாகத் திரும்பப் பெற முடிவதில்லை. இந்நிலையைத் தவிர்க்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'சமாதான் திட்டம்' என்ற மாபெரும் திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். இத்திட்டம் 1-10-2002 முதல் 29-11-2002 வரை 60 நாட்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி சார்பதிவாளர் வழிகாட்டி மதிப்பின்படி நிர்ணயிக்கும் சொத்தின் மதிப்பிற்கும். ஆவணதாரர்கள் குறிப்பிடும் சொத்தின் மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டில் 60 விழுக்காட்டிற்கான முத்திரைக் கட்டணத்தைச் செலுத்த வகை செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், 18-04-2002 அன்றுள்ளபடி நிலுவையிலிருந்த 91,101 ஆவணங்களில், 50,694 ஆவணங்கள் ரூபாய் 95.55 கோடி முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு திருப்பியளிக்கப்பட்டன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



V 21'3' P03 P03.42.1
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 184538

*பிற்பகல் 1-00*

**வருவாய் ஈட்டல்**

பதிவுத் துறை அலுவலர்களின் சீரிய கண்காணிப்பினாலும், விழிப்புணர்வினாலும் அரசின் வருவாய் 1968-69 ஆம் ஆண்டில் ரூபாய் 40 கோடியிலிருந்து 2001-2002 ஆம் ஆண்டில் 13,90,394 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூபாய் 1,264.20 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாய் இதற்கு முந்தைய 2001-2002 ஆம் ஆண்டு வருவாயைவிட 15.54 சதவிகிதம் அதிகம் ஆகும். 2002-2003 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருவாய் ரூபாய் 1,648.86 கோடி ஆகும். இது முந்தைய ஆண்டைவிட 30.43 சதவிகிதம் வருவாய் வளர்ச்சி அடைந்துள்ளது.

ஆவணப் பதிவும் 13.76 சதவிகிதம் உயர்வடைந்துள்ளது. 1991 முதல் 1996 வரையான வருவாய் வளர்ச்சி 18.5 சதவிகிதமாக இருந்தது. இது 1996 முதல் 2001 வரையான காலத்தில் 8.5 சதவிகிதமாக இருந்தது. தமிழ்நாட்டின் பதிவுத் துறையின் வரலாற்றிலேயே இதுவரை வருவாய் வளர்ச்சி பெறப்பட்ட சதவிகிதத்தைக் காட்டிலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீர்திருத்த நடவடிக்கையின் காரணமாக 2002-2003 ஆம் ஆண்டில் மிகப் பெரிய அளவில் அதாவது 30.43 சதவிகிதம் உயர்வு அடைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் செயல்பாடுகளைப் பொறுத்தமட்டில் 1831 ஆம் ஆண்டு 10 பணியாளர்களைக் கொண்டு அரசு அச்சகம் துவங்கப்பட்டது. இத்துறையின் கீழ் 7 அச்சகங்கள் இயங்கி வருகின்றன. தற்போது 3,091 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 527 பெண்கள் மற்றும் 159 உடல் ஊனமுற்றவர்கள் அடங்குவர். அரசு அச்சகங்களில் கடந்த ஆண்டு 54.40 கோடி அச்சு அழுத்தங்கள் ஆர்.ஏ.2 அளவில் அச்சிடப்பட்டுள்ளது. இது சாதனையில் 101.4 சதவிகிதம் ஆகும். அரசு அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையம், அரசுத் தேர்வுகள் துறை, சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் பொதுத் தேர்தல்கள் துறை ஆகிய முக்கிய துறைகளின் தேவைகளுக்கு உரிய படிவங்கள் பதிவேடுகள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள், வழக்குப் பட்டியல்கள் அச்சிட்டு வழங்கப்படுவதுடன், மாநில, மாவட்ட அரசிதழ்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.



கடந்த ஆண்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்க 1.44 கோடி கூப்பன் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டன. இவ்வாண்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்குவதற்கு 1.27 கோடி கூப்பன் புத்தகங்களை அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீருடை, தேநீர்படி, இரவு நேரப்படி, ஈயப் புகையில் பணிபுரிபவர்களுக்கு பால்படி ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், ஒரு புற நோயாளிப் பிரிவு இயங்கி வருகிறது. அதில் ஒரு மருத்துவர் மற்றும் இரண்டு செவிலியர் அயற்பணியில் பணியாற்றி வருகின்றனர். சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தண்டையார்பேட்டையில் தனியாக 300 அரசு குடியிருப்புகள் உள்ளன. அரசு அச்சகங்களில் தொழிலாளர்களுக்கு குடிநீர் வசதியும் உள்ளது. அரசு மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகமும் இயங்கி வருகின்றது.

இத்துறையில் அரசால் வெளியிடப்படும் வெளியீடுகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதன் மூலமும், தனியார் விளம்பரங்களை வெளியீடு செய்வதன் மூலமும் 2002-2003 நிதியாண்டில் ரூபாய் 67.40 இலட்சம் அரசிற்கு வருவாயாக கிடைத்துள்ளது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை அண்ணா சாலையில் ஒரு விற்பனை நிலையமும், உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒரு விற்பனை நிலையமும் இயங்கி வருகின்றன. இது தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட 30 முகவர்கள் மூலம் அரசு வெளியீடுகள், விதிப் புத்தகங்கள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

*பிற்பகல் 1-05*

நவீன அச்சு இயந்திரங்களின் அறிமுகத்தாலும் மற்றும் சமீப காலத்தில் அச்சுத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினாலும் அச்சின் தரம் உயர்ந்து அச்சுத் துறையின் செயல்முறை ஒரு உன்னத நிலையை அடைந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான 80 கோடி அச்சு அழுத்தங்கள் (ஆர்.ஏ.2 அளவில்) அச்சடிக்க வேண்டிய நிலையில்

மனித வளம் மற்றும் அச்சு இயந்திரங்களின் முழு ஆற்றலைப் பயன்படுத்தியும் சுமார் 54 கோடி அச்சு அழுத்தங்களே அச்சிட இயலுகின்றது. எஞ்சியுள்ள 26 கோடி அச்சு அழுத்தங்கள் தேவையின் அடிப்படையில் தடையின்மைச் சான்றிதழ் பெற்று, அந்தந்தத் துறையினரால் தனியார் அல்லது கூட்டுறவு அச்சகங்களில் அச்சிட்டுக் கொள்ளப்படுகின்றன.

அரசு அச்சகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அச்சுப் பணியின் வகைப்பாடுகளை கூர்ந்து ஆய்ந்து அதில் எந்தெந்த அச்சுப் பணிகளை அரசு அச்சகங்களில் மேற்கொள்ளலாம் என்பதையும், எஞ்சிய எந்தெந்தப் பணிகளை தனியார் அச்சகங்களில் அச்சிடலாம் என்பதையும் ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வல்லுநர் குழுவொன்று ஏற்படுத்தப்படும். அக்குழுவின் அறிக்கையின்பேரில் நிதி நிலையைக் கருத்திற்கொண்டு தகுந்த நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில் மாநில அரசின் பல்வேறு துறைகளில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட துறை வருவாய்த் துறை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளைக் கண்காணிக்கவும், வழிகாட்டவும், உருவாக்கப்பட்டதுதான் அன்றைய வருவாய் வாரியமாகும். வருவாய்த் துறை வரி வசூலிப்பதோடு, சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதிலும், மாவட்ட நிருவாகத்தை நடத்திச் செல்வதிலும் முக்கிய பங்கை வகித்துள்ளது. இன்றைக்கும்கூட, வருவாய்த் துறை ஒரு முக்கியத் துறையாகவும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட துறையாகவும் செயல்பட்டு வருகின்றன.

சட்டம்-ஒழுங்கு, பொது நிருவாகம், நிலம் தொடர்பான அனைத்துப் பணிகள், வளர்ச்சிப் பணிகள், பொது விநியோகம் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட பணிகளுடன் பொதுத் தேர்தலை நடத்துதல், ஊராட்சித் தேர்தல்களை நடத்துதல், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வறட்சி மற்றும் புயல் வெள்ளத்தால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்தல் போன்ற முக்கியப் பணிகளை செயல்படுத்தி வருவது வருவாய்த் துறையே ஆகும். அன்றைய வருவாய் வாரியத்தின் பணிகள் தற்போது வருவாய் நிருவாகத் துறை ஆணையர்,



நில நிருவாகத் துறை ஆணையர், நிலச் சீர்திருத்தத் துறை ஆணையர், நில அளவை மற்றும் நிலப் பதிவேடு துறை ஆணையர் மற்றும் வேளாண்மை வருமான வரித் துறை ஆணையர் ஆகியோரைத் துறைத் தலைவர்களாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**வருவாய் நிருவாகத் துறை**:—வருவாய் நிருவாகத் துறையின்கீழ் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிருவாகம், நில வரி விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல். சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

**நில நிருவாகத் துறை**:—நில நிருவாகத் துறையின்கீழ் நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டு மனை ஒப்படை, நிலம் கையகப்படுத்துதல், நிலக் குத்தகை, நிலப் பட்டாக்கள் வழங்குதல், நில ஆர்ஜிதம் உள்ளிட்ட அனைத்து நிலம் சம்பந்தப்பட்ட பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

**நில சீர்திருத்தத் துறை**:—நிலச் சீர்திருத்தத் துறையின்கீழ் நிலச் சீர்திருத்தம், குடிவாரச் சட்டம், வேளாண்மை பயன்பாட்டிற்காக உபரி நிலங்களை ஒப்படை செய்தல், நகர்ப்புற நில வரி வசூலித்தல் ஆகிய பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி குறித்த பணிகள் நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி இயக்குநரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

மலைத்தோட்டப் பயிர்களுக்கு விதிக்கப்படும் வேளாண் வருமான வரி குறித்த பணிகள் வேளாண் வருமான வரி ஆணையரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

நிலச் சீர்திருத்தத் துறை ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் நிலச் சீர்திருத்த இயக்குநர் மற்றும் நகர்ப்புற நில வரி இயக்குநர் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

***நில அளவைப் பதிவேடுகள் துறை***:—நில அளவைப் பதிவேடுகள் துறை நில அளவை, வருவாய்ப் பதிவேடுகள் பராமரித்தல், நில ஆவணங்களைக் கணினிமயமாக்குதல், தொடுதிரை தகவல் மேடை, பூகோள ரீதியான அளவைப் பணி போன்ற பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் நில அளவை இயக்குநர் அவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிலப் பதிவுருக்களைக் கணினிமயமாக்குவதற்கு 'தமிழ் நிலம்' என்ற பெயரில் ஒரு திட்டத்தினை நிறைவேற்றி வருவதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் 'அ' பதிவேடு மற்றும் 10(1) சிட்டாப் பதிவுகள் ஏற்கெனவே கணினியில் பதியப்பட்டுள்ளன. பொதுமக்கள் கட்டணம் செலுத்தி, தாங்களே கணினியை இயக்கி இப்பதிவேடுகளின் நகலைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வதே இந்த அரசின் நோக்கம். தமிழ்நாட்டில் உள்ள 206 வட்டங்களிலும் உள்ள 17,246 வருவாய் கிராமங்களில் இப்பதிவேடுகளைக் கணினியில் பதிவு செய்யும் பணி முடிக்கப்பட்டு விட்டது. கணினியில் செய்யப்பட்ட பதிவுகளைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. முதலில் மாவட்டத்திற்கு ஒரு வட்டம் வீதம் 29 மாதிரி வட்டங்களை முழுமையாக கணினிமயமாக்கி அன்றாடம் நடைபெறும் பட்டா மாறுதல்களையும், உடனுக்குடன் கணினியில் பதியும் Online system தற்போது செயல்படுகிறது. படிப்படியாக ஜூன் மாத இறுதிக்குள் தமிழ்நாட்டில் உள்ள எல்லா வட்டங்களும் இத்தகைய Online முறையின்கீழ் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டத்தில் 'முதல் 'தொடுதிரை தகவல் மேடை' தொடங்கி வைக்கப்பட்டது. உங்கள் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். இதைத் தொடர்ந்து 29 மாதிரி வட்டங்களிலும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை 51,898 பேர் இந்த வசதியைப் பயன்படுத்தி உள்ளார்கள். இதைத் தொடர்ந்து, பிற வட்டங்களிலும் இவ்வாண்டு இறுதிக்குள் இத்தகைய தொடுதிரை தகவல் மேடைகள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கி உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இவ்வாண்டு பயிர் குறித்த புள்ளிவிவரங்கள் அடங்கிய அடங்கல் பதிவேடும் கணினிமயமாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'அ' பதிவேடு, சிட்டா மற்றும் அடங்கல் மட்டுமின்றி FMB Sketch என்றழைக்கப்படும் நில அளவை வரைபடங்களையும் கணினிமயமாக்கும் திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்தும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குத் தேவையான pilot project ஏற்கெனவே செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு, கோபிசெட்டிபாளையம் வட்டங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. என்பதையும் அங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கணினி மென்பொருள் பிற மாவட்டங்களிலும் பயன்படுத்தப்படும்.

அதுமட்டுமின்றி, புதிய அளவை முறை உத்திகளான G.P.S. என்றழைக்கப்படும் செயற்கை கோள்களின் துணையுடன் நவீன கருவிகள் மூலம் மிகத் துல்லியமாக கணினி மூலம் நில அளவை செய்யும் முறையும் பரீட்சார்த்த முறையில் செங்கல்பட்டு வட்டத்தில் ஒரு கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்தொழில்நுட்பத்தினை படிப்படியாக மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கையை எடுக்குமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாவட்ட நிர்வாகம்***:— நமது மாநிலம் தற்போது 29 மாவட்டங்களாக உள்ளது. அவை 73 கோட்டங்களையும், 206 வட்டங்களையும் உட்கொண்டதாகவும் உள்ளது. மாநில அளவில் சென்னை மாவட்டம் நீங்கலாக, 28 மாவட்ட வருவாய் அலுவலர்கள், 249 துணை ஆட்சியர்கள், 705 வட்டாட்சியர்கள் உள்ளிட்ட மொத்தம் 55,513 அலுவலர்கள்/பணியாளர்கள் வருவாய்த் துறையில் பணியாற்றி வருகிறார்கள். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிலம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளுடன், பொது நிர்வாகம், வளர்ச்சிப் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களின்கீழ் கோட்டாட்சியர்களும், வட்டாட்சியர்களும், கிராம அளவில், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் மாவட்ட நிர்வாகத்தின் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மனுநீதித் திட்டம்**:—மாவட்ட நிர்வாகம் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து, அவர்களின் குறைகளை நேரடியாக கேட்டுப் பெற்று, முடிந்தவரை, அந்த இடத்திலேயே தீர்ப்பதுதான் மனுநீதித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், 2002 ஆம் ஆண்டு 1,95,194 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,58,084 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்**:—ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நிர்வாகத்தால் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு, 2,77,362 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 2,57,814 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. அதேபோன்று மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்ற 43,914 மனுக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பெறப்பட்டு, அவற்றுள் 39,556 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

**சான்றிதழ்கள்**:—பொதுமக்களுக்குத் தேவையான 12 வகையான சான்றிதழ்கள் வருவாய்த் துறையின்மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இச்சான்றிதழ்களைப் பெறுவதில் ஏற்படும் இடர்பாடு, காலவிரயம் ஆகியவற்றைத் தடுப்பதற்காக பள்ளி மாணவர்களுக்குத் தேவையான சாதிச் சான்று, வருமானச் சான்று மற்றும் இருப்பிடச் சான்று ஆகியவை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு பழங்குடியினர் அல்லாத சில சமூகத்தினர் பழங்குடியினருக்கான சில சான்றிதழ்களைப் பெற்று பல்வேறு சலுகைகளைப் பெற்றனர். எனவே, இதில் கவனத்துடன் செயல்படவேண்டுமென்று அரசு கருதி, இச்சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரத்தை கோட்டாட்சியர்களுக்கு வழங்கியுள்ளது. இதனால் இத்தவறு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அலுவலகக் கட்டடங்கள்**:—வருவாய்த் துறை திறம்பட செயல்பட மாவட்டங்களில் வருவாய் அலுவலகங்களுக்கு கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், மாவட்ட ஆட்சியர் முதல் கிராம நிர்வாக



அலுவலர் வரை அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்திலுள்ள 29 மாவட்டங்களில் பெரம்பலூர் மாவட்டத்தைத் தவிர, 28 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

19 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் உள்ளன. 5 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் ஆத்தூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் தவிர, ஏனைய அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆத்தூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

182 வட்டாட்சியர் அலுவலகங்கள் தற்போது அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 6 வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 18 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**இயற்கைச் சீற்றங்கள்**:—இயற்கைச் சீற்றங்களாக புயல், மழை, வெள்ளம், வறட்சி மற்றும் தீ விபத்துகள் ஏற்படும்போது, துரித நிவாரணப் பணிகளை வருவாய்த் துறை மேற்கொள்கிறது. வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் எதிர்பாராத நிகழ்வுகளை சமாளிக்க 'பேரழிவு தடுப்புத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கைச் சீற்றங்களால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு நிவாரணமாக ரூபாய் 15,000/- வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.2,000/- வீதமும், குடும்பத்திற்கு வேட்டி, சேலை, ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவையும் இலவசமாக வழங்கப்படுகிறது. இறந்த கால்நடைகளுக்கும், பாதிக்கப்பட்ட பல்வகை பயிர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

**வறட்சி**:—தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துப் போனதால், கடும் வறட்சி ஏற்பட்டது. மாண்புமிகு

அம்மா அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்திட வேண்டுமென்ற தாயுள்ளத்தோடு பலவித நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் காரணமாக அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் சூழ்நிலையில் மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் குடிநீர்த் தட்டுப்பாடு மக்களுக்கு இருக்கக்கூடாது என்று தாயுள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் 2002 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து கருத்துரு பெற்று, அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ரூ.163.41 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 21,055 குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதில் 15,782 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002-ஆம் ஆண்டு குறுவைப் பயிருக்காக கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்துவிடாத காரணத்தினால், குறுவை பயிரிடப்படாத சூழ்நிலை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டது. உடனே மாண்புமிகு அம்மா அவர்கள் தஞ்சாவூருக்கு நேரடியாக வருகை தந்து, இலட்சக்கணக்கான விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் துயர் துடைப்பதற்கு சிறப்பு நிவாரணத் திட்டம் ஒன்றை அங்கே அறிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாக வருகை தந்து, அங்கே ரூ.164 கோடி என்ற அளவில் சிறப்பு நிவாரணத் திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்மூலம் வாய்க்கால்களில் தூர் எடுத்தல், குளங்களை ஏற்படுத்துதல், விவசாயக் களங்களை அமைத்தல், ஊரக இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படும் திட்டமும் சிறப்பான முறையில் நடத்தி முடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலைமைகள் குறித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு 23-10-2002 அன்று அனுப்பிய கடிதத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிவாரணத்திற்காக ரூ.1434 கோடி உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அத்துடன் வேலைக்கு உணவுத் திட்டத்திற்கான



5.5 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்கள். இதன் அடிப்படையில் ரூபாய் 228.30 கோடியை தேசியப் பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக மத்திய அரசு விடுவித்தது. குறுவை பயிரிடப்பட முடியாத சூழ்நிலையைத் தொடர்ந்து சம்பா சாகுபடியும் பாதிக்கப்பட்ட நிலையில் காவிரி நீர் பெறுகின்ற பாசன மாவட்டங்களில் வாழும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு குறு விவசாயக் குடும்பங்களில் உள்ளவர்கள் பசியால் வாடிவிடக் கூடாது என்பதற்காக மதிய உணவு வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் பொங்கல் திருநாள் அன்று நடைமுறைப்படுத்தினார்கள். இத்திட்டத்தின்மூலம் 13.82 இலட்சம் பயனாளிகள் பயனடைந்தார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

மதிய உணவுத் திட்டத்திற்குப் பதிலாக குடும்பத்திற்கு 30 கிலோ அரிசி ஒவ்வொரு மாதமும் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 9,64,937 குடும்பங்கள் பயன்பெற்று வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையைக் கருதி, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் சென்ற ஆண்டு தீபாவளிப் பண்டிகையை மகிழ்ச்சியாக அவர்கள் கொண்டாடும் வகையில் 28-10-2002 அன்று அறிவித்தபடி நிலமற்ற விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இனிப்பு, காய்கறிகள், பருப்பு மற்றும் ரூ.50 ரொக்கம் ஆக மொத்தம் ரூ.210 மதிப்புள்ள பரிசுப் பையினை 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தாய் உள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள்.

மழை பொய்த்துப் போனதாலும், நிலத்தடி நீர் மிகவும் கீழே சென்று விட்டபடியாலும், குறுவை மற்றும் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், நிவாரணப் பணிகளை சம்பூர்ண கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்வதற்காக, சென்னை மாவட்டம் நீங்கலாக 28 மாவட்டங்களும், வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. குறுவை சாகுபடி செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மானாவாரி நிலத்தில் பயிர் செய்யப்பட்டு

பாதிக்கப்பட்டிருப்பின் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரமும், பாசன வசதியுள்ள ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறும், நிரந்தரப் பயிராக இருப்பின் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் நான்காயிரம் வீதமும் நிவாரணம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி நிவாரணத் தொகையாக ரூபாய் 22.39 கோடி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சியின் காரணமாக முழுமையாக காய்ந்துபோன தென்னை மரம் ஒன்றுக்கு ரூபாய் 150 வீதமும், பகுதியாக காய்ந்த தென்னை மரம் ஒன்றுக்கு ரூபாய் 50 வீதமும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 30.50 கோடி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்குத் தீவனம், குடிநீர் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்க ரூபாய் 20 கோடியை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய காவிரி பாசன மாவட்டங்களில் விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் பொருட்டு, ரூபாய் 217.90 கோடிக்கான சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். போர்க்கால அடிப்படையில் இத்திட்டம் இந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஊரக வளர்ச்சிப் பணிகள், வாய்க்கால்களைத் தூர் எடுத்தல், குளங்கள் அமைத்தல், சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ச்சியாக நிலவும் வறட்சியை நேரில் ஆய்வு செய்வதற்காக, மத்தியக் குழு மீண்டும் தமிழகத்திற்கு 28-1-2003 அன்று வருகை தந்தது. தமிழகத்தின் கடும் வறட்சி நிலைமையை எதிர்கொள்ள தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 20.94 கோடியும் வேலைக்கு உணவுத்



திட்டத்தின்கீழ் 9 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களையும் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு இக்குழுவினரிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு இதர திட்டங்கள் மூலம் இதுவரை ரூபாய் 402.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூபாய் 283.43 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 63,530 வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 48,890 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களிலும், ரூபாய் 341.92 கோடி செலவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் பெருந்திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

வேலைக்கு உணவு வழங்கும் இந்தச் சிறப்புத் திட்டத்தில் ரொக்கத் தொகையும், அரிசியும் சேர்த்து ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.85.48 கோடி ரொக்கத் தொகையாக வழங்குவதற்கும், ரூ.256.44 கோடி மதிப்பிற்கு அரிசியாகப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன்களை வசூலிப்பதை தள்ளி வைக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், ஜூலை 2002-லிருந்து ஜூன் 2003 வரை நில வரியினை முழுமையாக இரத்து செய்தும், உள்ளூர் தல வரி மற்றும் உள்ளூர் தல மேல் வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், குறுவை மற்றும் சம்பா பருவங்களில் சாகுபடி செய்து, 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு,

பாசன வசதி படைத்த பயிர்களாக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.2,500 உதவித் தொகையாக வழங்குவதற்கும், நிரந்தரப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.4,000 உதவித் தொகையாக வழங்குவதற்கும், மானாவாரிப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.1,000 உதவித் தொகையாக வழங்குவதற்கும், வழக்கமாகப் பயிரிடப்பட்டு இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக குறுவைப் பருவத்திலோ, அல்லது சம்பா பருவத்திலோ பயிரிட முடியாத விவசாயிகளுக்கு தற்போது குறிப்பிட்ட அளவில் 50 விழுக்காடு மானியமாக வழங்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், நாம் சாதாரணமாக நபார்டு வங்கி வகுத்துள்ள வழிமுறைகளைப் பின்பற்றி வருகின்றோம். ஏனெனில், கூட்டுறவு வங்கிகளின் கட்டுப்பாடு மற்றும் நிதி வழங்கும் முறைகள் நபார்டு வங்கியிடம் உள்ளன. நபார்டு வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு விவசாயிகளுக்கு அன்னவாரிச் சான்றிதழ் வழங்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுவார்கள். அவ்வாறு அன்னவாரிச் சான்றிதழ் பெற்றுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு நிவாரணத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதன்படி, சிறு மற்றும் குறு விவசாயிகள் நடப்பு ஆண்டில் பெற்றுள்ள குறுகிய காலக் கடன்கள்மீது விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்வது என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதனால் ஏற்படக்கூடிய செலவு ரூ.50 கோடி. இதனைச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு அரசே முழுமையாக வழங்கும் என்பதனை மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மாமன்றத்தில் அறிவிப்புச் செய்துள்ளார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறுகிய காலப் பயிர்க் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு நபார்டு நிறுவனத்தினை அணுகி அவர்கள் வகுத்துள்ள முறைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதையொட்டி மாநில அரசின் பங்காக வழங்கப்பட வேண்டிய தொகை வழங்கப்படும்



என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இயற்கையின் காரணமாக பருவ மழை பெய்யாததால், நாட்டில் வறட்சி ஏற்பட்டுவிட்ட நிலையில் வறட்சியின் தாக்கம் மக்களுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பினை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் கடும் நிதிநெருக்கடியிலும், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான சிறப்பு நல உதவித் திட்டங்களை வழங்கி மக்களைக் காத்து வருகின்றார்கள் என்பதனை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஒப்புதல் பெற்று துறையின் சார்பாக சில அறிவிப்புகளை இங்கே அறிவிப்பு செய்கின்றேன்.

**அறிவிப்புகள்**

*(1)* மாண்புமிகு அம்மா அவர்களால் *13-9-2002* அன்று சென்னையில் ரெஜிநெட் சேவை தொடங்கப்பட்டது. இச்சேவை பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதன் பின்னர் இச்சேவை ஈரோடு மற்றும் தூத்துக்குடி பதிவு மாவட்டங்களில் முறையே *12-2-2003* மற்றும் *11-3-2003* முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசதியினை மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *(2)* வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்வதைச் சீரமைக்க குழு அமைத்தல்—தற்போது சம்பந்தப்பட்ட பகுதியில் விற்பனை புள்ளிவிவரங்கள் மற்றும் உள்ளூர் விசாரணை மேற்கொண்டு வளர்ச்சி விகிதம் கணக்கிடப்பட்டு, அதனடிப்படையில் வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறான மதிப்பு நிர்ணயம் சந்தை மதிப்பைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. இருப்பினும், சில சமயங்களில் மதிப்பு நிர்ணயம் செய்வதில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இம்முரண்பாடுகளைத் தற்போது நடைமுறையிலுள்ள

வரன்முறைகளின்படி களைவதற்குத் துறை அலுவலர்களடங்கிய குழு ஒன்று உள்ளது. வழிகாட்டி மதிப்பினை விஞ்ஞானபூர்வமாகவும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் நிர்ணயிப்பதற்கு ஏதுவாகத் தற்போதுள்ள நடைமுறையினைப் பரிசீலனை செய்து சீரமைக்கலாமெனக் கருதப்படுகிறது. பதிவுத் துறைத் தலைவரைத் தலைவராகவும், வருவாய்த் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவினை அமைத்து வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யும் முறைகளை மறு பரிசீலனை செய்யவும், சீரமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். இதன்மூலம் முத்திரைச் சட்டப் பிரிவு 47(ஏ)—ன்கீழ் அனுப்பப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை, மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களின் எண்ணிக்கை குறையும் வாய்ப்புள்ளது.

(3) கட்டட மதிப்பீட்டிற்கான முறையினைச் சீரமைத்தல்— தற்போது, கட்டட மதிப்பீடு, பதிவு அலுவலர்களால், பொதுப் பணித் துறையின் சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளரால், வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட கட்டடப் பரப்பளவு விலை விகிதப்படி மேற்கொள்ளப்படுகிறது. இம்முறையில், மதிப்பீடு செய்வது மிகவும் சிக்கலாகவும், வெளிப்படையற்றதாகவும் உள்ளது. கட்டுமானச் செலவு ஓரிடத்திற்கும் மற்றொரு இடத்திற்குமிடையே அதிக அளவில் வித்தியாசமில்லாதிருப்பினும், கட்டட மதிப்பு நிர்ணயம் செய்ய பயன்படுத்தப்படும் விலை விகிதங்களில் அதிக வித்தியாசமுள்ளது. மேலும், இவ்வாறான விலை விகிதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் கட்டடங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், மதிப்பு நிர்ணயம் செய்வது மிகக் கடினமாக உள்ளது. எனவே, பொதுப் பணித் துறையால், கட்டட மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தும் முறையின் அடிப்படையில் பதிவுத் துறையில் கட்டட மதிப்பீடு செய்வதற்கான முறையினைச் சீரமைக்கவும், பழைய கட்டடங்களுக்கான மதிப்பிற்கு உரிய கழிவினை வழங்கவும், நகர்ப்புறம் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள கட்டடங்களுக்கு உரிய மதிப்பு நிர்ணயம் செய்யவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

(4) இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு வாகன வசதி செய்து கொடுப்பதற்காக ரூ.8.78 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



(5) சென்னையிலுள்ள பதிவுத் துறை பயிற்சி மையத்திற்கு எல்சிடி புரொஜெக்டர், லாப்டாப் கணினி, ஒரு அச்சுப் பொறியுடன்கூடிய கணினி மற்றும் ஜெராக்ஸ் கருவியை வாங்குவதற்காக ரூ.6.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(6). சார்பதிவாளர் அலுவலகங்களில், ஆவணங்களையும் சான்றிட்ட நகல்களையும் உடனடியாக வழங்கும்பொருட்டு, ரூ.46.60 இலட்சம் செலவில் 40 ஒளி நகல் எடுக்கும் கருவிகள் வாங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(7) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் பயன்பெறும் விதத்தில் ரூ.75 ஆயிரம் செலவில் குடிநீர் குளிரூட்டும் வசதி செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(8) சார்பதிவாளர் அலுவலகங்களில் பத்திரத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தைப் பத்திரமாகக் காக்கும்பொருட்டு, 200 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.20.00 இலட்சம் செலவில் பணப்பெட்டி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(9) மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்துல் லத்திப் அவர்கள் இச்சட்டப்பேரவையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த உறுதிமொழியினைச் செயல்படுத்தும் வகையில், வேலூர் பதிவு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.22.55 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(10) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு ரூ.1 இலட்சம் செலவில் தபால் முத்திரையிடும் கருவி வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

## அறிவிப்புகள்

**வருவாய்த் துறை**: (1) திருவண்ணாமலை மாவட்டம், மாவட்ட ஆட்சியரின் இல்லத்துடன்கூடிய அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) இந்த ஆண்டு 4,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) திருவள்ளூர், விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், தேனி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 2003-2004 நிதியாண்டில், 74 வருவாய்த் துறை கட்டடங்கள் ரூ.969.27 இலட்சம் செலவிலும், பிற துறைகளுக்கு பத்து கட்டடங்கள் ரூ.527.14 இலட்சம் செலவிலும், ஆக மொத்தம் 84 கட்டடங்கள், ரூ.14.96 கோடி செலவில் கட்ட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வருவாய்க் கிராமங்களின் கிராம வரைபடங்களை-Village Maps-கணினி மூலம் நகல் எடுத்து சேமித்து வைக்கும் புதிய திட்டத்திற்காக ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) வீடற்ற ஏழைகள் 50,000 பேருக்கு இவ்வாண்டு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில், புயல், வெள்ளம், வறட்சி, நில நடுக்கம் போன்ற இயற்கை இடர்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கை எடுக்க ஒரு நிரந்தரக் கட்டுப்பாட்டு அறை ரூ.4.9 இலட்சம் செலவில் நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



(7) வருவாய் நிர்வாகத் துறை-Department of Revenue Administration-பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இனிமேற்கொண்டு, 'வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை' என்று அழைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(8) எழிலகத்தில் வருவாய் நிர்வாகக் கட்டடத்திலுள்ள மாநாட்டுக் கூடத்தில் கணினி மற்றும் படங்களைத் திரையில் காட்டும் கருவி போன்ற வசதிகள் செய்து தருவதற்கு ரூ.3.5 இலட்சமும், தலைமைச் செயலகத்திலுள்ள வருவாய்த் துறையில் கணினிகள் நிறுவ ரூ.3 இலட்சமும், வேளாண்மை வருமான வரி ஆணையர் அலுவலகமும் மற்றும் மூன்று சார்நிலை அலுவலகங்களும் கணினிமயமாக்க ரூ.2.86 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.9.36 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(9) சிவகங்கை மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில், நவீன தொலைபேசி இணைப்பு நிறுவுவதற்கு ரூ.7 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(10) வேலூர் மாவட்ட ஆட்சியரின் மாநாட்டுக் கூடத்தில் புதிய ஒலிபெருக்கிகள் நிறுவுவதற்கு ரூ.2.5 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள், இங்கே பேசுகின்றபோது, அரசுத் துறையிலேயிருந்து இன்னொரு அரசுத் துறைக்கு நிலங்கள் மாற்றப்படுவது மிகவும் காலதாமதமாகிறது என்று இங்கே கருத்தினைச் சொன்னார்கள். அரசு நிலங்கள், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களாக இருந்ததால், அதற்கு முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்கெனவே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இறுதி ஆணைதான், அரசு அளவில் வழங்கப்படும். ஆகவே, ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களை வழங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறந்தாங்கிக்கு சார்பதிவகம் வேண்டுமென்று கேட்டார்கள். சுப்பிரமணியபுரம் சார்பதிவ்கம், வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது; அதற்கும் புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டார்கள். வருங்காலத்தில், நிதிநிலைக்கேற்ப அப்பணிகள் செய்துகொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உரையின் நிறைவாக, ஓர் இயக்கத்தை வழி நடத்துகின்ற தலைவரின் இயல்பு, 'துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன' என்று சொல்வார்கள். அதாவது, நம்பி வழி நடப்போரைப் பாதுகாப்பதும், எதிர்த்து வழிமறிப்போரைத் தொலைத்து வெற்றி கொள்வதும், ஒரு தலைவருக்கு உரிய குணங்களாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓர் ஆட்சியை வழி நடத்துகின்ற தலைவரின் இயல்பு. தன் நாட்டு மக்கள் அனைவரும் சமம்-'எல்லோரும் ஓர் நிரை' என்ற வகையில் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துவதாகும். இந்த இருவகையிலும், கட்சியை வழி நடத்துகின்ற இயக்கத் தலைவராகவும், ஆட்சியை வழி நடத்துகின்ற முதலமைச்சராகவும், தனது கடமையில் இம்மியும் வழுவாது, தான் மேற்கொள்ளும் பணிக்கு நீதி செய்து, மக்கள் தொண்டாற்றி வருகிறார் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாளை என்னவானால் நமக்கென்ன; இன்றைய சமுதாய ஓட்டத்துடன் இழைந்து இதமாகப் பேசி, பதமாகச் செயலாற்றி, வாழ்க்கையின் வசதிகளை, பதவி சுகத்தை, கடைசி சொட்டுவரை அனுபவித்துவிடுவோம் என்று ஆட்சி நடத்திவிட்டுச் சென்றவர்கள் பலர். ஆனால், இந்த நாடு எனது நாடு; இந்த மக்கள், என்னுடைய மக்கள்; இந்த மக்களின் நலனுக்காக, இந்த மக்களுடைய செல்வங்களின் நலனுக்காக, நாளைய சமுதாயத்தின் நலனுக்காக, எவர் எதிர்த்தாலும் அஞ்சிவிடாமல், ஏற்றமிகு திட்டங்களைச் செயல்படுத்தியே தீருவேன் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை;
தமிழுக்குத் தொண்டு செய்வோர் வீழ்வதில்லை'.



என்பதுதான் நாடு போற்றும் நன்மொழி. ஆகவே, எங்கள் அம்மா அவர்களுக்கு என்றும் வீழ்ச்சி இல்லை, வீழ்ச்சி இல்லை, வீழ்ச்சி இல்லை என்று கூறி அமர்கின்றேன்.

பிற்பகல் *1-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளச் சொல்லிக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் கொடுத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்கள் தந்த மாமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு உங்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**(7) சாலை மறியல் செய்த உறுப்பினர்கள் கைதும், விடுதலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் தகவல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை இப்போது தெரிவிப்பார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 43 சட்டமன்ற உறுப்பினர்கள், சில எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்தும், இராணி மேரி கல்லூரி விவகாரத்திற்காகவும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர்கள் விவகாரத்தை முன்னிட்டும் இன்று இராஜாஜி சாலையில் தலைமைச் செயலகத்தில் Out-gate-க்கு முன்னால் நடு சாலையில் அமர்ந்து போக்குவரத்தை மறித்து இடையூறு செய்தார்கள். ஆகவே, இன்று காலை *10-50* மணிக்கு இந்த 43 சட்டமன்ற உறுப்பினர்களும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, B-1 North Beach காவல் நிலையத்திற்கு அழைத்துச்

செல்லப்பட்டார்கள். அவர்களுக்கு எதிராக B34 P.S. Crime No.38/2003 under Section 143, 341 I.P.C.4, (1) C.P. Act read with 180, I.P.C.-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் 43 பேர் கீழ்க்கண்ட கட்சிகளைச் சார்ந்தவர்கள்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, திரு. க. பாரமலை, திரு. சி. ஞானசேகரன், திரு. எச்.எம். ராஜு, திரு. கு. ஜெயக்குமார், திரு. கா. கந்தசாமி, திரு. கே.ஆர். இராமசாமி, திரு. கோவை தங்கம், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. இரா. இராம் பிரபு, திரு. எம். ராம்குமார், திரு. என்.ஆர். ரங்கராஜன், திருமதி எஸ். மகேஸ்வரி, திரு. ஆ. ராஜகோபால், திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன், திரு. டி.என். சிவசுப்பிரமணியன், திரு. கே. கோபிநாத், திரு. எஸ். தாமோதரன்;

அவர்களோடு பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ஜி.கே. மணி, திரு. ஐ. கணேசன், திரு. தி. வேல் முருகன், திரு. கே. ஆறுமுகம், திரு. கி. பாரிமோகன், திரு. எஸ். நடராஜன், திரு. சி. சண்முகம், திரு. க. முருகவேல்ராஜன், திரு. அ.இரா. மலையப்பசாமி, திரு. ஆர். கிருஷ்ணன், திரு. மே.ப. காமராஜ், திருமதி காசாம்பு பூமாலை, திரு. பி.எஸ். உலகரட்சகன்;

கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் C.P.M. கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. கே.சி. கருணாகரன், திரு. என். நன்மாறன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், செல்வி க. பாலபாரதி, திரு. கே. மகேந்திரன்;

C.P.I கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. சோ. இராசேந்திரன், திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஏ.எஸ். கண்ணன்; ஆகிய 43 சட்டமன்ற உறுப்பினர்களை கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு நான் உத்தரவிட்டேன். அதன்பேரில் இன்று பிற்பகல் 1-00 மணிக்கு இந்த 43 சட்டமன்ற உறுப்பினர்களும் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-45*

இதற்கிடையில் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் 4, 5 வாகனங்கள் அவரைப் பின்தொடர்ந்து வர வெளியே புறப்பட்டார் என்ற தகவல் வந்தது. அவர், கைது செய்யப்பட்ட இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க காவல் நிலையத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. என்ன செய்வது என்று என்னிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. அவர் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துவிட்டுச் சென்றுவிட்டால் ஒன்றும் செய்ய வேண்டாம். ஆனால், சாலையில் அவரும் அமர்ந்து சாலை மறியல் செய்தால், அவரை அப்படியே பத்திரமாகத் தூக்கிக் கொண்டுபோய் அவரது இல்லத்தில் விட்டுவிட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அத்தகைய சாகசங்களில் ஈடுபடவில்லை. அவர் இந்த North Beach Police Station-க்குச் சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த 43 சட்டமன்ற உறுப்பினர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டு, pose கொடுத்துவிட்டு, அண்ணா அறிவாலயத்திற்குச் சென்றுவிட்டார். இந்த 43 சட்டமன்ற உறுப்பினர்களும் பிற்பகல் ஒரு மணிக்கே விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 11-வணிகவரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு.

(ஆ) கோரிக்கை எண் 29-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு.

(இ) கோரிக்கை எண் 39-வருவாய்த் துறை

(ஈ) கோரிக்கை எண் 49-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 11-வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11, வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு. வெட்டுத்

தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வணிக வரித் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்கணக்கில் ரூ.81,20,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 29-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.59,74,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (இ) கோரிக்கை எண் 39-வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39, வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வருவாய்த் துறை பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.883,62,79,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.57,30,57,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ச) கோரிக்கை எண் 49-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.491,81,00,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

147. மானியக் கோரிக்கை எண்11-வணிக வரித் துறை-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண்29-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

149. மானியக் கோரிக்கை எண்39-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண்49-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

150. காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2003) (தமிழ்)

151. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2001-2003)

152. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2001-2003)

# இணைப்பு - I

*(51 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 11-வணிக வரித் துறை

## முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு கொள்கை விளக்கக் குறிப்பு (2003-2004)

பதிவுத் துறை அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவதில் வணிக வரி மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைகளுக்கு அடுத்து மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இத்துறை பொதுமக்களுக்குக் கடந்த 139 ஆண்டுகளாக சேவை செய்து வருகிறது. வெளிப்படையான மற்றும் விரைவான சேவையினை அளிக்கும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதிய முயற்சிகளின் மூலம் இத்துறையின் செயல்பாட்டினை நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**1. அ. பதிவுத் துறை செயற்படுத்தும் சட்டங்கள்:**

1. *1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)*
2. *1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)*
3. *1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)*
4. *1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)*
5. *1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)*

**ஆ. கீழ்க்கண்ட சட்டங்களின்படி வரையறுக்கப்பட்ட சில பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன:-**

1. *1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)*
2. *1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)*

[2003 ஏப்ரல் 10

3. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம். (மத்திய சட்டம் III/1936)

4. 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

5. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)

6. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

7. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)

8. 1861 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

## 2. நிர்வாக அமைப்பு

### அ. தலைமையிடம்

பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராக உள்ளார். அவர் கீழ்க்கண்ட வகைகளிலும் பணியாற்றுகின்றார்.

அ. 1899 ஆம் வருடத்திய இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அலுவலர்.

ஆ. 1982 ஆம் வருடத்திய சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் சீட்டுப் பதிவாளர்.

இ. 1975 ஆம் வருடத்திய தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கப் பதிவாளர்.

ஈ. 1972 ஆம் வருடத்திய வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளர்

பதிவுத் துறைத் தலைவர் தமது பணிகளை ஆற்றுவதற்கு உதவியாக தலைமையகத்தில் பின்வரும் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்:

1) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)



2003 ஏப்ரல் 10]

2) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)

3) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)

4) கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

5) பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

6) பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு) (மாவட்டப் பதிவாளர் நிலை)

7) மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

8) மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)

9) கணக்கு அலுவலர்.

### ஆ. கள அலுவலகங்கள்

#### (1) மண்டல அலுவலகங்கள்

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 9 பதிவு மண்டலங்கள் ஒவ்வொன்றும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. மண்டலம் முழுவதையும் நிர்வதித்தல், வருவாய் ஈட்டுதல், திடீர் ஆய்வு செய்தல், மண்டலத்திற்குள் உள்ள அனைத்து பதிவுத் துறை அலுவலகங்களின் பணிகளை ஆய்வு செய்தல், பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்படி விசாரணை நடத்துதல் ஆகிய பணிகளை மண்டலத் துணைப் பதிவுத் துறைத் தலைவர் மேற்கொள்கிறார். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் இவர் பணியாற்றுகிறார். முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் உதவி பதிவுத் துறைத் தலைவர் அல்லது மாவட்டப் பதிவாளர் பிறப்பிக்கும் ஆணையின் மீது மேல்முறையீட்டு அலுவலராகவும் உள்ளார்.

#### (2) வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 5

[2003 ஏப்ரல் 10

வட்டார உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். சார்பதிவகங்களை ஆய்வு செய்தல், புகார் மனுவின் மீது விசாரணை செய்தல், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் மேற்கொள்ளப்படும் தணிக்கைப் பணியின் மீது சோதனை ஆய்வு செய்தல் ஆகியவை இவர்களது முக்கியப் பணிகளாகும். மேலும், இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிறுவனங்களை ஆய்வு செய்கின்றனர்.

*(3) மாவட்ட அலுவலகங்கள்*

நிர்வாக நலன் கருதி, மாநிலம் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளரால் (நிர்வாகம்) நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பணிப்பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு 12 பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிர்வகிக்கப்படுகின்றன. மாவட்ட பதிவாளர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதி சட்டத்தின்கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கின்றனர். அவர்கள் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும் உள்ளனர்.

*(4) தணிக்கைக் குழுக்கள்*

பதிவகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நூறு விழுக்காடு தணிக்கை செய்யும் வகையில் பலகாலமாகச் செயல்பட்டு வரும் உள்தணிக்கைக் குழுவைப் பெற்றிருப்பது இத்துறையின் சிறப்பான அம்சமாகும். 45 தணிக்கைக் குழுக்கள் உள்ளன. ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) ஒருவரின் தலைமையில் இயங்குகிறது.

*(5) சார்பதிவகங்கள்*

மாநிலத்தில் 600 சார்பதிவகங்கள் உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் திருமணப் பதிவாளராகவும், 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமண அலுவலராகவும் சார்பதிவாளர் செயல்படுகிறார். மேலும் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளராகவும் செயல்படுகின்றார்.



2003 ஏப்ரல் 10]

*6) பதிவுத் துறை பயிற்சி நிலையம், சென்னை*

இத்துறை செயல்படுத்தி வரும் இந்திய முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பிற சட்டங்களிலுள்ள அம்சங்களைப் பற்றி இத்துறையிலுள்ள பதிவு அலுவலர்களும் மற்றும் இதரப் பணியாளர்களும் செயலறிவைப் பெறும் வகையில் 1996 ஆம் ஆண்டு இப்பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலும் மற்றும் மாவட்டப் பதிவாளர் நிலையிலும் இரண்டு விரிவுரையாளர்கள் உள்ளனர். இதுவரை 2,275 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பதிவுத் துறை அலுவலர்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி அளிப்பது குறித்தும் பரிசீலனையில் உள்ளது.

**3. துறையின் சிறப்புப் பணிகள்**

**(1) முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரி**

வருவாய் வாரியம் கலைக்கப்பட்டதன் விளைவாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் பதிவுத் துறைத் தலைவர் முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் உள்ளார். 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் ஆட்சியரின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது மற்றும் சீராய்வு செய்யும் அதிகாரம் முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு உள்ளது. மேலும், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)—ன்கீழ் தனித் துணை ஆட்சியரால் (முத்திரை) சந்தை மதிப்பு நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்படும் ஆணையின் மீது மேல்முறையீட்டு அலுவலராகவும் உள்ளார். இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) பிறப்பிக்கும் ஆணைகளைத் தன்னிச்சைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் இவருக்கு உள்ளது.

**(2) வழிகாட்டி குழு**

ஆவணத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ள ஏதுவாக பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு உத்தேச சந்தை மதிப்பை பிரதிபலிக்கும் மதிப்புகள் அடங்கிய வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 10

வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் தயாரித்தல், வழிகாட்டி மதிப்புகளைக் குறித்த காலமுறையில் திருத்தியமைத்தல் மற்றும் முரண்பாடுகளைக் களைவதற்கும், "வழிகாட்டி மதிப்புக் குழு", கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் (வழிகாட்டி) கீழ் இயங்கி வருகிறது. பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலுள்ள மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி), இக்குழுவின் செயலாளராகவும், சம்பந்தப்பட்ட மண்டலத் துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர், இக்குழுவின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். வழிகாட்டி மதிப்பினைச் சரியாக நிர்ணயம் செய்வதை உறுதி செய்திட சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்களும் இக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள், பேரூராட்சிகள் மற்றும் 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டப் பிரிவு 10(1)ன் கீழ் உள்ளாட்சி திட்டப் பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் திருத்தி அமைக்கப்படுகிறது. ஏனைய கிராமப்புறங்களில் உள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வழிகாட்டி மதிப்புகள் 1-4-03 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கும்வண்ணம் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டின் நகல்கள், வர்த்தகக் கழகங்கள், விவசாய மற்றும் வணிகர் சங்கங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்பு http:/igregn.tn.nic.in என்னும் முகவரியிலுள்ள இணையதளத்தில் கிடைக்கும். இதன்மூலம் மாநிலத்தின் எந்தப் பகுதியிலுமுள்ள எந்தவொரு சொத்தின் வழிகாட்டி மதிப்பினையும் உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் பதிவுத் துறையை நாடாமல் அறிந்து கொள்ளலாம்.

மாவட்டப் பதிவாளர், உதவிப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஆகியோரால் நிர்ணயம் செய்யப்படும் வழிகாட்டி மதிப்பினை எதிர்த்து பதிவுத் துறைத் தலைவருக்கு இரண்டு மாதங்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

**(3) புலனாய்வுக் குழு**

ஆவணங்களில் கட்டடச் சொத்துக்களின் உண்மை மதிப்பை மறைத்து, முத்திரைத் தீர்வை ஏய்ப்பின் மூலம் அரசுக்கு ஏற்படும்



2003 ஏப்ரல் 10]

வருவாய் இழப்பினைத் தடுக்கும்பொருட்டு, புலனாய்வுக் குழு பிரிவு ஒன்று, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) தலைமையில் 8 மாவட்டப் பதிவாளர்களையும், 4 சார்பதிவாளர்களையும், இரண்டு உதவி செயற் பொறியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. தேங்கியுள்ள ஏராளமான ஆவணங்களை விரைந்து முடித்து பொதுமக்களுக்குத் திரும்ப அளித்திட அனைத்துப் பதிவாளர்களும், ஆவணங்களில் கட்டடங்களின் மதிப்புக் குறைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய களப்பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**4. பதிவுத் துறையால் ஈட்டப்பட்ட வருவாய் விவரங்கள்**

**(i) வருவாய் ஈட்டல்:**

பதிவுத் துறை அலுவலர்களின் சீரிய கண்காணிப்பினாலும், விழிப்புணர்வினாலும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மூலமாக 1968-69 ஆம் ஆண்டில் ரூ.10 கோடியாக இருந்த அரசின் வருவாய் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1264.20 கோடியாக உயர்ந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் வருவாய் வசூலிப்பு விவரம்:

| ஆண்டு | ஆவணங்கள் பதிவு | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1991-92 | 11,38,541 | 400.45 |
| 1992-93 | 10,98,115 | 140.85 |
| 1993-94 | 11,51,150 | 460.62 |
| 1994-95 | 12,65,287 | 586.34 |
| 1995-96 | 13,61,036 | 748.50 |
| 1996-97 | 12,89,947 | 748.58 |
| 1997-98 | 13,32,377 | 806.26 |
| 1998-99 | 13,69,688 | 854.30 |
| 1999-2000 | 15,03,181 | 1019.71 |

[2003 ஏப்ரல் 10

| ஆண்டு பதிவு | ஆவணங்கள் (கோடியில்) | தொகை (ரூ. |
|---|---|---|
| 2000-2001 | 13,83,593 | 1094.14 |
| 2001-2002 | 13,90,394 | 1264.20 |
| 2002-2003 (பிப்ரவரி 2003 வரை) | 14,11,721 | 1444.31 |
| 2001-2002 (பிப்ரவரி 2002 வரை) | 12,42,023 | 1107.17 |

சென்ற ஆண்டு வருவாயுடன் ஒப்பிடுகையில் 2002-2003 ஆம் ஆண்டில் அரசின் வருவாய் 30.45% அதிகரித்துள்ளது துறையின் சீரிய செயல்பாட்டினை விளக்குவதாக உள்ளது.

**(ii) இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 (ஏ)(1)ன் கீழ் தனித் துணை ஆட்சியரின் (முத்திரை) நடவடிக்கைக்கு அனுப்பப்படும் ஆவணங்கள்**

முத்திரைச் சட்டத்தின்படி, சொத்து விற்பவர்கள் பத்திரத்தில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிடவேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்ளப் பதிவு அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகளின் மூலம் சரிபார்க்கின்றனர். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து, பத்திரம் பதிய வருபவர், கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தாலோ அல்லது பதிவாளர், முதல் நோக்கிலேயே குறைவான மதிப்பீடு உள்ளது என அறியும்பட்சத்திலோ, இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 (ஏ) (1)ன்கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பினை நிர்ணயிப்பதற்காக தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்பி வைப்பார். தனித் துணை ஆட்சியர் (முத்திரை) சொத்தினை ஆய்வு செய்தும் உள்ளூர் விசாரணை நடத்தியும் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்து அதன்மீது செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வையை நிர்ணயம் செய்கிறார். சென்னை மற்றும்



2003 ஏப்ரல் 10]

கோவை அலகுகளில் தனித் துணை ஆட்சியர்(முத்திரை)களுக்கு பதிலாக இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருச்சி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் இப்பணியினை மேற்கொள்ள 9 தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை) நியமிக்கப்பட்டுள்ளனர்.

தனித் துணை ஆட்சியர்களால் (முத்திரை) மேற்கொள்ளப்பட்ட பணிகளை ஆய்வு செய்தபோது சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு அனுப்பப்பட்ட ஆவணங்கள், மிக அதிக அளவில் பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்தது கண்டறியப்பட்டது. மேலும், சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்பப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதும் அறியப்பட்டது. இதனால் பொதுமக்கள் தங்களது ஆவணங்களைத் திரும்பப் பெற பல ஆண்டுகள் காத்திருக்கும் இன்னலுக்குள்ளாக நேரிட்டது. மேலும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மூலம் அரசுக்கு வரவேண்டிய வருவாய், பல கோடி அளவில் வசூலிக்கப்படாமல் பல ஆண்டு காலமாக முடங்கிக் கிடக்க நேரிட்டது. இந்நிலையில் முன்னேற்றத்தை உருவாக்க சமாதான் திட்டம், 2002 அரசால் அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட நிலை மேலும் தொடராவண்ணம் இருக்க கோட்டாட்சியர்/ சார் ஆட்சியர்/ உதவி ஆட்சியர் ஆகியோரையும் முத்திரைச் சட்டப் பிரிவு 2(9)(பி)ன்படி சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய ஆட்சியாளர்களாக நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

**(iii) முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி:**

விற்பனை, பரிமாற்றம், நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடைமானம், அதன் மாற்றம், நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் மாற்றுக் கட்டணம் (transfer duty) 5 சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை, இவ்வாறு மிகுவரியாக வசூலிக்கப்படும் தொகையில் 5 சதவிகிதத் தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை வைத்துக்கொண்டு, எஞ்சியுள்ள 95 சதவிகிதத் தொகையை மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் வழங்குகின்றது. அதேபோன்று பேரூராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு மிகுவரி வசூலில் 3 சதவிகிதம், இத்துறை

வசூல் கட்டணமாக எடுத்துக்கொண்டு மீதமுள்ள 97 சதவிகிதம் அவற்றிற்கு வழங்கப்படுகிறது.

### 5. முத்திரைத் தாள்கள்

தமிழ்நாடு முழுவதற்கும் நீதித் துறை மற்றும் நீதித் துறை சாரா முத்திரைத் தாள்களின் தேவையை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து அதனை நாசிக் மற்றும் ஹைதராபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையில் உள்ள கருவூல கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராகச் செயல்படுகின்றார். முத்திரைத்தாள் தேவை மற்றும் வழங்கலில் ஒரு முறையான ஒருங்கிணைப்பு பாதுகாக்கப்படுகிறது. பொதுமக்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்கள் தங்குதடையின்றி கிடைக்கவும், தீயவர்களால் ஏற்படுத்தப்படும் செயற்கை தட்டுப்பாட்டினைத் தடுக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்**

பதிவுக்கு வரும் பொதுமக்களின் நலனுக்காக, முத்திரைத் தாள் தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில், முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக பிராங்கிங் கருவிகள் மூலம் முத்திரையிடுதல் அனுமதிக்கப்படுகிறது. இதற்காக 15 சார்பதிவாளர் அலுவலகங்களில் பிராங்கிங் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

### 6. முத்திரைத் தாள் விற்பனை

(i) பொதுமக்களுக்கு முத்திரைத் தாள் விற்பனை செய்திட முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் துறையால் நியமனம் செய்யப்படுகின்றனர். முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அதிகாரிகளும், மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

**(ii) முத்திரைத் தாள் விற்பனையாளர்களாகச் சார் பதிவாளர்கள்**

சார் பதிவாளர்கள் அலுவல் முறையில் முத்திரைத் தாள்கள் விற்கும் முத்திரைத் தாள் விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர்.



சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அலுவலராகவும், முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன்கீழ் முத்திரைத் தீர்வையினைச் சில ஆவணங்களைப் பொறுத்து எவ்வித பண உச்ச வரம்பின்றி ரொக்கமாகப் பெற, சார் பதிவாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதி சாரா முத்திரைத் தாள்களின் கையிருப்பு அளவு அரசாணை நிலை எண் 22, வணிக வரி, நாள் 10-3-2003-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | அலுவலகத்தின் தன்மை | தற்போதைய அளவு | உயர்த்தப் பட்ட அளவு |
|---|---|---|---|
| 1 | சார்பதிவாளர் அலுவலகம் | ரூ.30,000 | ரூ.60,000 |
| 2 | மாவட்டப் பதிவாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகம் | ரூ.50,000 | ரூ.1,00,000 |
| 3 | மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் உள்ள அசல் பத்திரப் பிரிவு | ரூ.75,000 | ரூ.1,50,000 |

**(iii) ஒளி நகல் எடுக்கும் இயந்திரங்கள்**

பொதுமக்களுக்குப் பதிவுற்ற ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் விரைவாக வழங்கிட, சார் பதிவகங்களுக்கு 40 ஒளி நகல் எடுக்கும் இயந்திரங்கள் (Photo-copier machines) 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.46.60 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன.

### 7. ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் உரிமங்கள்

**(i) நகல் எழுத்தர் உரிமம்**

இந்திய பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகள் 1967-ன்படி பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்துடன் அந்த ஆவணத்தின் நகலும் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த ஆவணம் கையினால் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ இருக்க வேண்டும். 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகல் எழுத்தர்கள் உரிம விதிகள் 2-4-1971-ல் நடைமுறைக்குக்

[2003 ஏப்ரல் 10

கொண்டுவரப்பட்டன. அதன்படி ஆவணங்களுக்கு நகல் எழுதவும், தட்டச்சு நகல் எடுக்கவும் வரையறுக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆவண/நகல் எழுத்தர் உரிமங்களும் மற்றும் வரையறுக்கப்பட்ட தட்டச்சுத் தேர்வு தகுதி பெற்றவர்களுக்குத் தட்டச்சர்களுக்கான உரிமங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

**(ii) ஆவண எழுத்தர் உரிமம்**

1982-ம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளின்படி முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்த அரசு நடத்தும் அறிவுத் திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே ஆவண எழுத்தர் உரிமம் பெறத் தகுதியுடையவர் ஆவர். மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவக அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

## 8. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975

தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் 1975-ன்படி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் இச்சட்டத்தின்கீழ் சங்கங்களின் பதிவாளர் ஆவர். மாவட்டப் பதிவாளர்களின் ஆணையினை எதிர்த்து செய்யப்படும் மேல்முறையீடுகளில் இறுதி ஆணையிடும் அதிகாரமும் பதிவுத் துறைத் தலைவருக்கு உள்ளது. 31-1-2003 அன்றுள்ளபடி தமிழ்நாட்டில் மொத்தம் 1,15,803 பதிவு பெற்ற சங்கங்கள் உள்ளன.

## 9. சீட்டு நிதிகள் சட்டம் 1982

(அ) தமிழ்நாட்டில் சீட்டு நிதி செயல்பாடுகள் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம் மற்றும் அதன்கீழ் வரையறுக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின்படி கட்டுப்படுத்தப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராக உள்ளார்.

கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டு) சீட்டு நிதிப் பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர். துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் முறையே இணை சீட்டுப் பதிவாளர்கள் மற்றும் துணை சீட்டுப் பதிவாளர்களாக 1982 ஆம்



2003 ஏப்ரல் 10]

ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் அவரவர் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் சீட்டுப் பணியைக் கவனிக்க 47 சார்பதிவாளர்கள், சீட்டு ஆய்வாளர்களாக மாவட்டங்களில் செயல்படுகின்றனர். சீட்டு வழக்குகளைத் தீர்க்க வட சென்னை, தென் சென்னை மற்றும் மத்திய சென்னை மற்றும் கோவை ஆகிய இடங்களில் சீட்டு நடுவர்கள் மூவர் செயல்படுகின்றனர்.

31-1-2003 அன்றுள்ளபடி தமிழ்நாட்டில் 2,506 சீட்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவை 28,412 சீட்டுகளை நடத்துகின்றன. இந்தச் சீட்டுகளின் மூலம் ரூ.329.81 கோடி 2002-2003ஆம் ஆண்டில் 31-1-2003 முடிய காப்பீடாக பெறப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் 5,586 வழக்குகள் சீட்டு நடுவர்களிடம் தொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4,810 வழக்குகள் சீட்டு நடுவர்களால் முடிக்கப்பட்டுள்ளன. 31-1-2003 தேதியில் சீட்டு நடுவர்களிடம் 4,113 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்படும் சீட்டு நிறுவனங்களிடமிருந்து ஏதுமறியாத பொதுமக்களைக் காப்பதற்காக காலமுறை ஆய்வுகள் இத்துறையால் நடத்தப்படுகின்றன. அனுமதியின்றி சீட்டு நடத்துவோரை இத்துறை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

**(ஆ) சீட்டு விழிப்புக் குழு**

அனுமதி பெறாமல் சீட்டு நடத்தும் நிறுவனங்களையும் அவர்கள் செய்யும் முறைகேடுகளையும் கண்டுபிடிக்க சீட்டு விழிப்புக் குழு ஒன்று (Chit Vigilance Cell) கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (சீட்டு) மற்றும் சென்னை வடக்கு, தெற்கு மற்றும் மத்திய சென்னை சீட்டு ஆய்வாளர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். 31-1-2003-ல் 215 குற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.37,499/- அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 10. இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் 1932

இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டத்தின்கீழ், மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் நிறுவனங்களின் பதிவாளர்களாகச் செயல்படுகின்றனர். இச்சட்டத்தின்கீழ் படிவம்-1ல் அறிக்கை தாக்கல் செய்து, கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்படவேண்டும். நிறுவன

[2003 ஏப்ரல் 10

அமைபபுகளின் மாற்றம் குறித்தும் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வேண்டும். நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகளை, நிறுவனப் பதிவேட்டில் தேவையான குறிப்புகள் செய்தபின் பதிவாளர் கோர்வை செய்வார். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டுவருவது குறித்து, ஒவ்வொரு ஆண்டும் நிறுவனம் செயல்பட்ட விவரம் குறித்த உறுதிமொழியை கட்டாயம் கோர்வை செய்திட, 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 31-1-2003-ல் உள்ளபடி 3,85,057 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 11. திருமணப் பதிவுகள்:

#### (i) 1955 ஆம் வருடத்திய இந்து திருமணச் சட்டம்

இந்துக்களிடையில் ஏற்கெனவே நடைபெற்ற திருமணங்கள் இந்து திருமணச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் தொடர்பான வடிப்புகள் சார்பதிவாளர்களால் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் அனைத்து சார்பதிவாளர்களும் திருமணப் பதிவாளர்கள் ஆவார்கள்.

#### (ii) 1954 ஆம் வருடத்திய சிறப்பு திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்கீழ் எத்தகைய வடிவிலான திருமணங்களும் பதிவு செய்யப்படுகின்றன. அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்கள் இச்சட்டத்தின்கீழ் திருமண அலுவலர்களாக, அவர்கள் எல்லையைப் பொறுத்து நியமிக்கப்பட்டுள்ளனர். திருமண அலுவலரிடம் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணத்திற்கான அறிவிப்பு அளிக்கப்பட வேண்டும். 30 நாட்கள் கழித்து திருமணத்திற்கு எவ்வித எதிர்ப்பும் வாராதநிலையில், திருமணம், திருமண அலுவலரால் முறைப்படுத்தப்படும்.

#### (iii) 1872 ஆம் வருடத்திய இந்திய கிறிஸ்துவ திருமணங்கள் சட்டம்

கிறிஸ்துவ பாதிரியார்களாலும், இந்தச் சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவர்களாலும் இந்திய கிறிஸ்துவ திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் திருமண வடிப்புகள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.



2003 ஏப்ரல் 10]

### 12. பதிவுத் துறையில் தகவல் தொழில் நுட்ப செயல்பாடுகள்:

பதிவுத் துறையில் தகவல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு வெளிப்படையான மற்றும் விரைவான சேவை அளித்திடவும் தமிழ்நாட்டில் உள்ள 600 சார்பதிவாளர் அலுவலகங்களையும் 50 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களையும் படிப்படியாக கணினிமயமாக்கத் திட்டமிட்டு தற்போது 350 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. 2003-04 ஆம் ஆண்டில் மீதமுள்ள 300 சார்பதிவகங்களைக் கணினிமயமாக்குவதற்கு அரசு ரூ.4.19 இலட்சம் ஒதுக்கியுள்ளது. பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை, தகவல் தொழில்நுட்ப வசதியுடன் விரைவாகப் பரிசீலித்திட பதிவுத் துறை 'ஸ்டார்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

**கணினி செயல்பாடுகளின் சிறப்பம்சங்கள்:**

* ஆவணங்கள் பாதுகாப்பு :- ஒளிவருடல் (ஸ்கேன்) செய்யப்பட்டு குறுவட்டுக்களில் சேமித்தல்
* வில்லங்கச் சான்றுகள் வழங்கல்.
* ஒளிவருடல் (ஸ்கேன்) மூலம் பாதுகாக்கப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்கல்.
* சொத்து மதிப்பீடு அறிக்கை தயார் செய்தல்.
* திருமணப் பதிவு/சங்கப் பதிவு/ நிறுவனங்கள் பதிவு/சீட்டுப் பதிவு கண்காணிப்பு.
* இணையதளத்தில் (http://igregn.tn.nic.in) காலமுறையில் திருத்தி அமைக்கப்படும் வழிகாட்டி மதிப்புகள்.

தகவல் தொடர்பு வழியான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, பதிவுத் துறையின் சேவை, தரம் வாய்ந்ததாகவும் விரைவாகவும் உள்ளது.

**'ரெஜிநெட்' சேவை:**

'ரெஜிநெட்' என்பது தகவல் தொடர்பு தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி பதிவுத் துறை அலுவலகங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட ஒரு

வலைப்பின்னல் (network) ஆகும். முதற்கட்டமாக சென்னை மாநகராட்சிக்குள் வரும் அனைத்து சார்பதிவகங்களும் மற்றும் இதற்கென சென்னை மண்டல துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்ட சேவை மையமும் இணைக்கப்பட்டுள்ளன. ஈரோடு மற்றும் தூத்துக்குடி பதிவு மாவட்டங்களிலும் இச்சேவை மையம் துவக்கப்பட்டுள்ளது. வலைப்பின்னல் இணைப்பின் பலனால் 'ஈ-டிரான்ஸ்பர்' (ஒரு தொடர்பு சாதனம்) வழியாக இந்த அலுவலகங்களின் தகவல்கள் பரிமாற்றம் மற்றும் எந்த ஒரு அலுவலகத்தின் வில்லங்கச் சான்று பற்றிய தகவல்களையும் வேறு இடங்களிலுள்ள அலுவலகங்களில் கிடைக்க வழி வகுக்கிறது. இது ஆவணதாரர்கள் அருகில் உள்ள சார்பதிவகங்களுக்குச் சென்று பதிவு சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

சென்னைக்கென உள்ள 'ரெஜிநெட்' சேவை மையம் கீழ்க்கண்ட சேவைகளை வழங்குகிறது:

(i) சென்னை நகரின் எல்லைக்குள் உள்ள சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்கச் சான்று பெறலாம்.

(ii) சென்னையில் உள்ள எந்தவொரு சொத்தின் மதிப்பு அறிக்கையினை வழங்குதல்.

(iii) மாநிலத்தில் உள்ள எந்தவொரு சொத்தின் வழிகாட்டி மதிப்பினை வழங்குதல்.

(iv) ஒளிவருடல் (Scan) செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள்.

(v) பொதுமக்கள் தாமாகவே ஆவணங்களைத் தயாரித்திட ஏதுவாகும் மாதிரி ஆவணங்கள்.

(vi) ஆவணப் பதிவு, சங்கம், நிறுவனம், சீட்டுப் பதிவு சம்பந்தப்பட்ட மாதிரிப் படிவங்கள்.

இணையதளம் வழி வில்லங்கச் சான்று பெற மனுச் செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களால் அளிக்கப்படும் தகவல்கள் சேவை மையத்தில் பரிசிலிக்கப்பட்டு வில்லங்கச் சான்று தயார் நிலையில் வைக்கப்படுகிறது. மனுதாரர்கள் தேவையான கட்டணத்தை



மையத்தில் நேரடியாக செலுத்தி சான்று பெறலாம். அல்லது வில்லங்கச் சான்று மனுதாரரின் வீட்டிலேயே கோரிக்கைப்படி கூரியர் சேவை வழி, உரிய கட்டணம் மற்றும் அனுப்புகை செலவுகள் வசூலிக்கப்பட்டு வழங்கப்படும்.

பதிவுத் துறையின் செயல்பாடுகளை வெளிப்படையாக்குவதற்கென தனியே இணையதளமொன்று துவக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்புகள் இவ்விணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பொதுவான தகவல்கள் மட்டுமின்றி பதிவு நடைமுறை, விவரங்கள் பொது பயன்பாட்டு படிவங்கள் மற்றும் மாதிரி ஆவணப் படிவங்கள் ஆகியவை இத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெற அளிக்கப்பட்டுள்ளன.

இந்த இணையதளத்தின் தரம் மற்றும் மதிப்பினை மேம்படுத்தும் விதத்தில் இணையதள தொழில்நுட்ப வசதியால் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 13. 2002-2003 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள்.

### (அ) சமாதான் திட்டம்

பத்திரம் பதிவோர் வழிகாட்டி மதிப்பிற்கேற்ப முத்திரைத் தீர்வையை செலுத்த மறுக்கும்போது சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயிக்க தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) ஆவணம் அனுப்பப்படுகிறது. இவ்வாறு அனுப்பப்படும் ஆவணங்கள் ஆண்டுக்காண்டு அதிகரிப்பதால் அரசுக்கு வரவேண்டிய முத்திரைத் தீர்வை வருவாயில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் ஆவணங்களைத் திரும்பப் பெறுவதில் பெரும் இன்னல் ஏற்படுவதைத் தவிர்க்க சமாதான் திட்டம் 1-10-2002 முதல் 29-11-2002 வரை 60 நாட்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் படி சார்பதிவாளர் உத்தேசிக்கும் சொத்தின் மதிப்பிற்கும் ஆவணதாரர் குறிப்பிடும் சொத்தின் மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டில் 60 விழுக்காட்டிற்கான முத்திரைக் கட்டணத்தை

[2003 ஏப்ரல் 10

செலுத்தலாம். இத்திட்டத்தின் மூலம் 18-04-2002 அன்றுள்ளபடி நிலுவையிலிருந்த 91,101 ஆவணங்களில் 50,694 ஆவணங்கள் ரூ. 95.55 கோடி முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு திருப்பி அளிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு இதே போன்ற சமாதான் திட்டம் ஏழு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டபோது 36,816 ஆவணங்கள் முடிவு செய்யப்பட்டு அதன்மூலம் அரசுக்கு ரூ. 34.56 கோடி வருவாய் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக ஈட்டப்பட்டது. ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் முடிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை ஆகிய இரண்டிலுமே சமாதான் திட்டம் 2002 மிகப்பெரிய வெற்றியாகும்.

**(ஆ) போலி முத்திரைத் தாள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

போலி முத்திரைத் தாள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து சார்பதிவகங்களுக்கும் போலி முத்திரைத் தாள்களைக் கண்டறிய புற ஊதாக் கதிர் விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன. முத்திரைத் தீர்வையைப் பணமாகப் பெற ஏதுவாக அனைத்து பதிவு அலுவலர்களும், சில ஆவணங்களைப் பெற்றுத்து எவ்வித பண உச்சவரம்பின்றி பெற்று ஆவணத்தில் சான்று சேர்க்க வரையறுக்கப்பட்டுள்ளது.

**(இ) சார்பதிவாளர் அலுவலகங்களை மறு சீரமைத்தல்**

சார்பதிவகங்களிலுள்ள பணிப்பளுவைக் கருத்தில்கொண்டு கூடுதலாகத் தேவைப்படும் பணியாளர்களைப் பணிப்பளு குறைவாக உள்ள இடங்களிலிருந்து பணி மாற்றம் செய்து கூடுதலாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**(ஈ) வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் வேலூர் பதிவு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய அரசு கட்டடம் 2003-2004 ஆம் ஆண்டில் கட்டப்படும். இதற்காக 2003—04 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் ரூ.22.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 10]

**14. புதிய திட்டங்கள்**

2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன:

| வரிசை எண். | திட்டப் பணிகளின் விவரம். | இறுதி நிலை செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | (அ) இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு (முத்திரை) வாகன வசதி செய்தல் | 8.78 |
| | (ஆ) ஓராண்டுக்கு எரிபொருள் வழங்குதல் | 0.10 |
| 2. | சென்னையிலுள்ள பதிவுத் துறை பயிற்சி மையத்திற்கு எல்சிடி புரொஜெக்டர், லாப்டாப் கணினி, ஒரு அச்சுப் பொறியுடன்கூடிய கணினி மற்றும் ஜெராக்ஸ் கருவி வழங்குதல் | 6.00 |
| 3. | சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 40 ஒளி நகல் எடுக்கும் கருவிகள் வழங்குதல் | 16.60 |
| 4. | பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் குடிநீர் குளிரூட்டும் வசதி செய்தல் | 0.75 |
| 5. | 200 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பணப்பெட்டி வழங்குதல் | 20.00 |
| 6. | வேலூர் பதிவு மாவட்டத்தில் வாணியம்பாடி சார் பதிவகத்திற்கு அரசு கட்டடம் கட்டுதல் | 22.55 |
| 7. | பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு தபால் முத்திரையிடும் கருவி வழங்குதல் | 1.00 |
| | மொத்தம் | 106.08 |

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு-II

*(51ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 29

## எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

தமிழகத்தின் தலைமையிடமான சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையில் 1831 ஆம் ஆண்டு அரசின் அச்சுப் பணிகளை நிறைவேற்ற பத்து பணியாளர்களைக் கொண்டு அரசு அச்சகம் தொடங்கப்பட்டது.

தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், வரவு-செலவு ஆவணங்கள், தமிழ்நாட்டு அரசுத் தேர்வுத் துறைப் பணிகள், மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் ஆண்டறிக்கைகள், பொதுக் கணக்குக் குழு அறிக்கைகள், கமுக்கத்தன்மை வாய்ந்த சிறப்பு அறிக்கைகள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் போன்ற பல்வகை அச்சுப் பணிகள் அரசு அச்சகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது எழுதுபொருள் அச்சுத்துறையில் 3,091 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் 527 நபர்கள் பெண்களும், 159 நபர்கள் கண்பார்வையற்றவர் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் அடங்குவர்.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை:**

சென்னையில் அமைந்துள்ள இவ்வியக்ககத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், விற்பனை நிலையங்களும் மற்றும் எழுதுபொருள் கிடங்கும் இயங்குகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர் ஒருவரின்கீழ் இவ்வியக்ககம் 1953 ஜூலை திங்கள் முதல் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இணை இயக்குநர், பொது மேலாளர், 2 பணி மேலாளர்கள், 9 துணைப் பணி மேலாளர்கள், 27 உதவிப் பணி மேலாளர்கள், 8 உதவி இயக்குநர்கள், முதன்மை கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (எழுதுபொருள்) மற்றும் கணக்கு அலுவலர் ஆகியோர் இயக்குநரின்கீழ் பணியாற்றி வருகிறார்கள்.



2003 ஏப்ரல் 10]

அனைத்து நிலையிலும் உள்ள அச்சுத் துறை பணியாளர்களின் பதவி நியமனம், பதவி உயர்வு, ஊதிய உயர்வு, விடுப்பு, பணிமாற்றம் போன்ற பணிகள் இயக்ககத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழில் தகராறு சட்ட வழக்குகளை எதிர்கொள்ளும் பணிகளையும் அச்சகத் தொழிலாளர்களின் நலன் கருதி இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இயக்ககம் தொழில்நுட்ப பிரிவு, நிர்வாகப் பிரிவு, எழுதுபொருள் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளை கொண்டுள்ளது. இவை முறையே இணை இயக்குநர், பொது மேலாளர், துணை இயக்குநர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு இப்பிரிவுகளின்கீழ் இயங்கும் 210 நபர்களின் பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் அனைவரும் நேரிடையாக துறைத் தலைவரான இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்குகிறார்கள்.

சென்னையிலுள்ள அரசு மைய அச்சகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள அரசு கிளை அச்சகம் தவிர மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, சேலம் மற்றும் விருத்தாசலம் ஆகிய ஐந்து ஊர்களிலும் அரசு கிளை அச்சகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் எழுதுபொருள் பிரிவு, அரசு வெளியீடுகள் பிரிவு ஆகியவைகளும் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

**அரசு மைய அச்சகம், சென்னை:**

புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வந்த அச்சகம் 1888 ஆம் ஆண்டு தங்கசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது இரண்டு பணி மேலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் 1,828 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இங்குள்ள பணியாளர்கள் மூன்று பணிமாற்று முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வச்சகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அச்சிடும் இயந்திரங்கள், கட்டுமானப் பிரிவு இயந்திரங்கள், அச்சியல் கணினி இயந்திரங்கள் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. மேலும் இரப்பர் முத்திரைப் பிரிவு, அச்சுக் கட்டைகள் தயாரிக்கும் பிரிவுகள் செயல்படுகின்றன.

மாநில வரவு-செலவுத் திட்டப் பணிகள், தமிழ்நாடு அரசிதழ்கள், சட்டப் பேரவையின் அவசரப் பணிகள், அதிரகசியப் பணிகள் மற்றும் அரசுத் தேர்வாணைய வெளியீடுகள் அச்சிடும் பணிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர அரசு நாட்காட்டிகளும், நாட்குறிப்பேடுகளும் ஆண்டுதோறும் அச்சிடப்படுகின்றன.

[2003 ஏப்ரல் 10

**அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை:**

இக்கிளை அச்சகம் 1923 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற வழக்குகள் பட்டியல் குறித்த முக்கியப் பணிகளை மேற்கொள்வதற்காக உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் நிறுவப்பட்டது. இதில் ஒரு துணைப் பணிமேலாளரின்கீழ் 201 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இங்குள்ள பணியாளர்கள் மூன்று பணிமாற்று முறையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

தினசரி வழக்குகள் குறித்த பட்டியல்கள் உயர்நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டு அன்றைய இரவே அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. காலவரையறைக்குள் அனைத்து தரப்பினருக்கும், வழக்குரைஞர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கட்குத் தேவையான அளவில் அனைவரும் பயன்படும் வகையில் அரசு வெளியீடுகளின் கிளை விற்பனை நிலையமும் இவ்வச்சகத்தில் இயங்கி வருகிறது. மாதமிருமுறை வெளியிடப்படும் இந்திய சட்ட அறிக்கைகளும் மற்றும் அரசுத் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் இங்கு அச்சடிக்கப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை:**

ஸ்ரீபிரகதாம்பாள் மாநில அச்சகம் இத்துறையுடன் 1919 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டு, தற்போது 124 பணியாளர்களைக் கொண்டு ஒரு கிளை மேலாளரின் கீழ் இரண்டு முறை பணி மாற்றங்களில் இயங்கி வருகிறது. இவ்வச்சகத்தில் ஓய்வூதிய படிவங்களுடன், அரசுத் துறைகளான ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, ஓய்வூதியம், வனத் துறை, ஆகியவற்றிற்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை அச்சிட்டு வழங்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள், இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன:-

1. இராமநாதபுரம்
2. கன்னியாகுமரி
3. சென்னை
4. காஞ்சிபுரம்
5. திருவள்ளூர்
6. திருவண்ணாமலை
7. தஞ்சாவூர்
8. புதுக்கோட்டை
9. தூத்துக்குடி
10. திருவாரூர்
11. நாகப்பட்டினம்
12. சிவகங்கை



2003 ஏப்ரல் 10]

**அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி:**

1965 ஆம் ஆண்டில் அரியமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் துவங்கப்பட்ட இந்த முதல் மாநில மண்டல அச்சகம் தற்போது சொந்த கட்டடத்தில் துவாக்குடியில் ஒரு கிளை மேலாளரின்கீழ் 119 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை பணி மாற்றங்களில் இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகத்தில் அனைத்துத் துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட பொதுப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை அச்சிட்டு வழங்கப்படுகின்றன. இதில் தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் அளவைப் பதிவேடுகளும் அடங்கும்.

கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன:-

1. திருச்சிராப்பள்ளி
2. பெரம்பலூர்
3. கரூர்

**அரசு கிளை அச்சகம், சேலம்:**

இக்கிளை அச்சகம் 1996 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தற்போது 113 பணியாளர்களைக் கொண்டு ஒரு துணைப் பணிமேலாளரின்கீழ் இரண்டு முறை பணிமாற்றங்களில் இயங்கி வருகின்றது. தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுப் பணிகளுக்கான படிவங்கள் ஆகியவை இவ்வச்சகத்தில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

நிலைப்படுத்தப்படாத 'அ' பதிவேடுகள், மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள், இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன:-

1. சேலம்
2. கோயம்புத்தூர்
3. ஈரோடு
4. நாமக்கல்
5. நீலகிரி
6. தருமபுரி

**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்:**

இக்கிளை அச்சகம் 1966 ஆம் ஆண்டு வாடகை கட்டடத்தில் துவங்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு முதல் சொந்த கட்டடத்தில் தற்போது 111 பணியாளர்களைக் கொண்டு கிளை மேலாளரின்கீழ் இரண்டு முறை பணிமாற்றங்களில் இயங்கி வருகிறது. இவ்வச்சகத்தில்

அரசுத் துறைகளான வேளாண்மை, பொதுப்பணி, காவல், தீயணைப்பு, தேசிய மாணவர் படை, வனம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, கால்நடை பராமரிப்பு, மருத்துவம், கூட்டுறவு, புள்ளியியல், தொழில் மற்றும் வணிகம் ஆகிய துறைகளுக்கான படிவங்களும் பதிவேடுகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் இந்த அச்சகத்தில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

1. விழுப்புரம்
2. வேலூர்
3. கடலூர்

**அரசு கிளை அச்சகம், மதுரை:**

இக்கிளை அச்சகம் 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தற்போது 194 பணியாளர்களைக் கொண்டு துணைப் பணிமேலாளரின் தலைமையில் இரண்டு முறை பணி மாற்றங்களில் இயங்கி வருகிறது.

இங்கு வருவாய்த் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, காவல் துறை, பதிவுத் துறை, மருத்துவத் துறை மற்றும் வணிகத் துறை ஆகிய துறைகளின் படிவங்களும் பதிவேடுகளும், வேளாண்மைத் துறையின் விதைச் சான்று அட்டைகள், அரசுத் துறை அட்டவணைகள், பொதுப்பணித் துறை விலைப் பட்டியல்கள் போன்றவை அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

இக்கிளை அச்சகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் 1-1-2002 முதல் அச்சிட்டு வழங்கப்படுகிறது.

1. மதுரை
2. தேனி
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. திண்டுக்கல்

**அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை:**

1953 ஆம் ஆண்டு முதல் தனித்தனியே இயங்கி வந்த எழுதுபொருள் கிடங்கு மற்றும் அச்சகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக இயங்கி வருகிறது. எழுதுபொருள் கிடங்கு தற்போது 188 பணியாளர்களைக் கொண்டு ஒரு உதவி இயக்குநரின்



கீழ் இயங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகப் பொருட்கள் ஆகியவை கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன. திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் காகிதம் மற்றும் அட்டைகள் போன்ற எழுதுபொருட்கள் ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.26.05 கோடி மதிப்பிற்கு எழுதுபொருட்கள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை:**

அரசு வெளியீடுகளை விற்பனை செய்வதற்கென சென்னை அண்ணா சாலையில் இயக்கக வளாகத்தில் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் ஒன்றும், சென்னை உயர்நீதிமன்றக் கிளை அச்சகத்தில் ஒரு கிளை விற்பனை நிலையமும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இவ்விற்பனை நிலையங்கள் மூலம் அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனுமதி பெற்ற 25 முகவர்கள் மூலமாகவும் அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. 2002-2003 நிதியாண்டில் பிரசுரக் கட்டணமாகவும், அரசிதழ்கள் மற்றும் அரசு வெளியீடுகள் விற்பனை மூலமாகவும் ரூ.67.40 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது ஒரு மிகப் பெரிய சாதனை ஆகும்.

**தொழிலாளர் நலன்:**

அரசு அச்சகப் பணியாளர்களுக்கு சென்னை, தண்டையார்பேட்டையில் 300 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கவனிப்பதற்காகத் தொழிலாளர் நல அலுவலர், உதவித் தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர்

இத்துறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அரசு மைய அச்சகத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள இயக்ககம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அனைத்துத் தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி அளித்து வருகிறார்.

இத்துறையில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் தேநீர் மற்றும் ரொட்டிப்படி பிரதிமாதம் ரூ.100/- வீதம் வழங்கப்படுகிறது. இது தவிர ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும், பால்படியாக நாளொன்றுக்கு ரூ.2/- வீதம் வழங்கப்படுகின்றன.

இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் குளிர் குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

பெண் தொழிலாளர்களின் குழந்தைகள் நலன் கருதி மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று 1968 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இதற்கென நியமிக்கப்பட்ட குழந்தைகள் காப்பகப் பணியாளர் குழந்தைகளைக் கவனித்து வருகிறார். இக்குழந்தைகளுக்கு அரசுச் செலவில் பால், பிஸ்கட் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு அதற்கு தையற்கூலியாக ஆண்களுக்கு ஜோடிக்கு ரூ.100 வீதம் மூன்று ஜோடிக்கு ரூ.300 வழங்கப்படுகிறது. பெண் தொழிலாளர்களுக்கு மூன்று பாலியஸ்டர் புடவைகளும் இரவிக்கைத் துணிகளும் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. இரவிக்கை தைப்பதற்கு தையற்கூலியாக ஒரு இரவிக்கைக்கு ரூ.20/- வீதம் மூன்று இரவிக்கைக்கு ரூ.60/- வழங்கப்படுகிறது. சென்னை அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்கெனச் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம், சங்க உறுப்பினர்களுக்கு ரூ.1,50,000/- வரையில் கடன் தொகை வழங்கி வருகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும்



அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டி மற்றும் ஒரு நாட்குறிப்பேடு இலவசமாக வழங்கப்படுகின்றன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு, பணியாளர்கள் விவரம், ஆகியவை அட்டவணைப் படுத்தப்பட்டு, பிற்சேர்க்கைகளில் (அ முதல் இ) தரப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளில் சில அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டதன் பயனாக, பணியாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 50 விழுக்காடாக குறைந்துவிட்ட நிலையிலும் இத்துறையின் உற்பத்தி தற்போது இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சின் தரம் மேம்பாடு அடைந்துள்ளது.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் அடிப்படையில் தொழிற் பழகுநர் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. தற்பொழுது சேலம் மற்றும் புதுகை அரசு அச்சகங்களில் நிலவும் கட்டுமானப் பிரிவுகளின் பணிச் சுமையை கருத்திற்கொண்டு கூடுதலாக தொழிற் பழகுநர் பணியிடங்களை நிரப்ப சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்துறையில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர் நலன் கருதி தொழிலாளர் கல்வி பயிற்சி வகுப்பு நடத்தவும், யோகாசனம் செய்யவும் இடவசதி மைய அச்சகத்தில் செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திர நாள் மற்றும் ஆயுத பூஜை கொண்டாடவும், மற்றும் விளையாட்டு சாதனங்கள் வாங்கவும், அரசின் தொழிலாளர் நலநிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்:**

தமிழகத்தின் மிகப் பழமை வாய்ந்த 172 ஆண்டுகளைக் கடந்த, 1831 ஆம் ஆண்டு பத்து பணியாளர்களைக் கொண்டு தொடங்கப பெற்ற அரசு அச்சகம் தனது பணியினை மிகச் சிறப்பாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தற்போதுள்ள பழைய லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்களை மேலும் பயன்படுத்த இயலாத நிலையில், மாறிவரும் புதிய உத்திகளைக் கருத்திற்கொண்டு தொலைநோக்கு கண்ணோட்டத்தினோடு அரசு அச்சகங்களை படிப்படியாக நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு அச்சகங்கள் நவீனமயமாக்கப்படுவதால் சில பிரிவுகளில் தேவைக்கு மிகையாக பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களை அச்சகங்களில், அவசியப்படும் பிற பிரிவுகளில் மீள பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

[2003 ஏப்ரல் 10


தமிழ்நாடு அரசு அலுவலகங்களுக்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்படாத மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்களின் அளவு சுமார் 80 கோடி அச்சு அழுத்தங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய நிலையில் இப்பணிகளைச் செயலாக்கப் போதிய இயந்திரங்கள் இன்மையாலும், பழைய லெட்டர் பிரஸ் இயந்திரங்களே திருச்சி மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகங்களில் பயன்பாட்டில் உள்ளதாலும், பிற அச்சகங்களில் பழுது நீக்க இயலாத நிலையில் ஒரு சில லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்கள் மிகக் குறைந்த செய்மானமே அளிப்பதனாலும், அரசின் தேவையான 80 கோடி அச்சு அழுத்தங்களில் 54 கோடி அச்சு அழுத்தங்களே அரசு அச்சகங்களில் செயலாக்கப்பட்டு வருகிறது.

நவீன அச்சு இயந்திரங்களின் அறிமுகத்தாலும் மற்றும் சமீபகாலத்தில் அச்சுத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினாலும் அச்சின் தரம் உயர்ந்து அச்சுத் துறையின் செயல்முறை ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான 80 கோடி அச்சு அழுத்தங்கள் (ஆர்.ஏ.2 அளவில்) அச்சடிக்க வேண்டிய நிலையில் மனித வளம் மற்றும் அச்சு இயந்திரங்களின் முழு ஆற்றலைப் பயன்படுத்தியும் சுமார் 54 கோடி அச்சு அழுத்தங்களே அச்சிட இயலுகின்றது. எஞ்சிய 26 கோடி அச்சழுத்தங்கள் போதிய இயந்திரங்கள் இன்மையால் அரசு அச்சகங்களில் செயலாக்க இயலவில்லை. எனவே, இந்தப் பற்றாக்குறையினை நிறைவு செய்ய அரசு அச்சகங்களை நவீனமயமாக்க வேண்டும் அல்லது அச்சுப் பணிகளை வெளி அச்சகங்களில் அச்சடிக்க வேண்டும். தற்போது உள்ள நிதி நெருக்கடியில் மொத்தத் தேவையில் 26 கோடி அச்சு அழுத்தங்களை வெளி அச்சகங்களில் அச்சடிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் அரசின் அச்சுப் பணிகளை அச்சடிப்பதில் உள்ள பிரச்சினையை விரிவாக ஆராய்ந்து அதற்குச் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது தக்க தருணமாகும்.

அரசு அச்சகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அச்சுப் பணியின் வகைப்பாடுகளை கூர்ந்து ஆய்ந்து அதில் எந்தெந்த அச்சுப் பணிகளை அரசு அச்சகங்களில் மேற்கொள்ளலாம் என்பதையும், எஞ்சிய எந்தெந்த பணிகளை தனியார் அச்சகங்களில் அச்சிடலாம் என்பதையும் ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வல்லுநர் குழுவொன்று ஏற்படுத்தப்படும். அக் குழுவின் அறிக்கையின்பேரில் நிதி நிலையை கருத்திற்கொண்டு தகுந்த நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும்.





அட்டவணை-ஆ

## 31-03-2003 முடிய பணியாளர்களின் எண்ணிக்கை

| வரிசை எண் | அலகு | அலுவலர்கள் | | அமைச்சுப் பணியாளர் | மேற்பார்வை யாளர்கள் | தொழில் நுட்பப் பணியாளர் | மொத்தப் பணியாளர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஏ பிரிவு | பி பிரிவு | | | | |
| (1) | (2) | (3)a | (3)b | (4) | (5) | (6) | (7) |
| 1. | இயக்ககம், சென்னை-600 002. | 7 | 20 | 139 | 3 | 41 | 210 |
| 2. | அரசு எழுது பொருள் அலுவலகம், சென்னை-1. | .. | 8 | 64 | .. | 116 | 188 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை-79. | 4 | 28 | 177 | 92 | 1,527 | 1,828 |
| 4. | அரசு கிளை அச்சகம், (உயர்நீதிமன்ற வளாகம்) சென்னை-600 104. | 1 | 2 | 13 | 12 | 176 | 204 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை. | 1 | 2 | 11 | 7 | 173 | 194 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம். | 1 | 2 | 10 | 4 | 96 | 113 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | .. | 1 | 8 | 6 | 104 | 119 |
| 8. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | .. | 1 | 11 | 7 | 105 | 124 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | - | 1 | 6 | 13 | 91 | 111 |
| | மொத்தம் | 14 | 65 | 439 | 144 | 2,429 | 3,091 |



அட்டவணை-இ

## 2002 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களின் செயலாக்க விவரம்

*(ஏப்ரல் 2002 முதல் மார்ச் 2003 வரை)*

| வரிசை எண் (1) | அச்சகத்தின் பெயர் (2) | அச்சு அழுத்தங்கள் ஆர். ஏ.2 (ஆயிரத்தில்) (3) | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79. .. .. | 23 20 00 | 20 35 82 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை-600 104. .. | 6 96 00 | 7 92 35 |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை .. .. | 8 70 00 | 9 60 83 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம் .. .. | 5 80 00 | 6 37 19 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி .. .. | 2 46 50 | 2 65 23 |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை .. .. | 4 64 00 | 5 41 36 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் .. .. | 1 88 50 | 2 07 79 |
| | மொத்தம் .. .. | 53 65 00 | 54 40 57 |

அரசு அச்சகங்களின் ஆண்டு எட்டிய செயல்திறன் 101.4 %

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு—III

*(51ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**கோரிக்கை எண்-39 வருவாய்த் துறை**

**கோரிக்கை எண்-49—இயற்கைச் சீற்றங்கள் குறித்து துயர்த் தணிப்பு**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004**

**அத்தியாயம்-1**

**முன்னுரை**

அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் பல துறைகளில் மக்களின் நேரடி தொடர்புக்குட்பட்ட இன்றியமையாத் துறையாக வருவாய்த் துறை உள்ளது. இத்துறை இந்தியாவில் காலனி ஆதிக்கம் இருந்த காலந்தொட்டே இருந்து வருகிற ஒரு தொன்மையான துறையாகும். தற்போதைய இந்திய ஆட்சிக்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்களால் பயன்பாடுமிக்க, திறமையான நிர்வாகத்தினை நடத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் இயங்கும் வகையில் மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

நிர்வாகம் குறித்த பொருள்கள் பற்றி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்குவதற்கென்று வருவாய் வாரியம் 1786ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம் 1-12-1980-ல் கலைக்கப்பட்டது. முன்பு செயல்பட்டு வந்த வருவாய் வாரியத்தின் பணிகள் தற்போது வருவாய் நிர்வாகத் துறை, நில நிர்வாகத் துறை, நிலச் சீர்திருத்தத் துறை, போக்குவரத்துத் துறை, வணிக வரித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்றன.

வருவாய் நிர்வாகத் துறையின்கீழ் மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நில வரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல், சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கவனிக்கப்படுகிறது.



2003 ஏப்ரல் 10]

நில நிர்வாகத் துறையின்கீழ், நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டு மனை ஒப்படை, நிலம் கையகப்படுத்துதல், நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல் மற்றும் நிலப்பட்டாக்கள் வழங்கல் குறித்த பொருள்கள் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரால் கவனிக்கப்படுகிறது.

நிலச் சீர்திருத்தத் துறையின் கீழ், நிலச் சீர்திருத்தம், குடிவாரச் சட்டம், வேளாண்மை பயன்பாட்டிற்காக உபரி நிலங்களை ஒப்படை செய்தல், வேளாண்மை வருமான வரி மற்றும் நகர்ப்புற நில வரி வசூலித்தல் ஆகிய பணிகள் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரால் கவனிக்கப்படுகிறது.

மாவட்ட அளவில் இப்பணிகள் மாவட்டாட்சியர்கள் மற்றும், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நில அளவைப் பதிவேடுகள் துறை சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. நில அளவை, வருவாய்ப் பதிவேடுகள் பராமரித்தல், நில ஆவணங்களைக் கணினி மயமாக்குதல், தொடுதிரை தகவல் மேடை, பூகோள ரீதியான அளவைப்பணி போன்றவை இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**அத்தியாயம் - 2**

**வருவாய் நிர்வாகம்**

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் முதன்மை அதிகாரியாக இருந்து சட்டம் ஒழுங்கு மற்றும் நில சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகள் மட்டுமல்லாது அனைத்து வளர்ச்சிப் பணிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்திற்கும் பொறுப்பாவார்கள். வருவாய்த் துறையும் மற்ற அலுவலர்களைப் பொறுத்தமட்டில் சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு தவிர பிற முக்கியப் பணிகளான சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் நடத்துதல் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பணிகள், அதனைச் சார்ந்த பணிகள், பொது நிலவரி வசூலித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள், பொது மக்களுக்குத் தேவைப்படும் 24 வகையான பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டங்கள்

[2003 ஏப்ரல் 10

செயல்படுத்துதல், பொது விநியோகத்திட்டத்தைக் கண்காணித்தல், குழந்தைகளுக்கும் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மதிய உணவு வழங்கும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு பொறுப்பாவார்கள். பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வருவாய்த் துறை அலுவலர்கள் மக்களுடன் நேரடி தொடர்புடையவர்கள். பொதுமக்களின் குறைகளுக்குத் தீர்வு காணுவது இவர்களது பிரதானப் பணிகளில் ஒன்றாகும். வெள்ளம், வறட்சி, தீ போன்ற இயற்கை இடர்பாடுகளை விரைவாகவும், திறம்படவும் சமாளிப்பது வருவாய்த் துறையின் தலையாய பணிகளில் ஒன்றாகும்.

மாவட்ட நிர்வாகத்தில் எந்தவொரு பணியாவது நேரடியாக ஒரு குறிப்பிட்ட துறைக்கு ஒதுக்கப்படாவிட்டாலும் அப்பணி பொது மக்களுக்கு நேரடி தொடர்பு உள்ளவையாக இருப்பின் அப்பணிகள் இறுதியாக வருவாய்த் துறையின் பொறுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 2.2 மனுநீதித் திட்டம்

மக்கள் குறைகளை மாவட்ட நிர்வாகம் நேரடியாக கேட்டுப் பெற்று அவற்றை விரைந்து தீர்ப்பதற்காக மனுநீதித் திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் கிராமங்களுக்கு நேரடியாக சென்று மக்களை சந்தித்து முடிந்தவரை அந்த இடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டம் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுலர்கள் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்களால் நடத்தப்படுகிறது. இதர அரசுத் துறை மற்றும் வங்கி அலுவலர்கள் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு மாதமும் எந்தெந்த கிராமங்களில் எந்தெந்த தேதியில் இத்திட்டத்தை நடத்த வேண்டும் என்பதான நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே மாவட்ட ஆட்சியர் தயாரிக்கிறார்.

மனுநீதித் திட்டம் மாதமொரு முறை மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. இரண்டாவது புதன்கிழமை அரசு விடுமுறை தினமாக இருப்பின், அதற்கடுத்த பணி நாளில் இத்திட்டம் நடத்தப்படுகின்றது. மூன்றாண்டு காலத்திற்குள் எல்லா கிராமங்களிலும் இத்திட்டம் நடைபெற வேண்டும் என்றும் இத்திட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் ஒத்திவைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 10]

மனுநீதித் திட்டம் நடத்தப்பட்டது தொடர்பாக ஒவ்வொரு மாதமும் 25ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும்போது, மனுநீதித் திட்டம் தொடர்பான பதிவேட்டினை ஆய்வு செய்கின்றனர்.

மனுநீதித் திட்டத்தின் வாயிலாக பெறப்படும் மனுக்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு மக்களின் குறைகள் களையப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 1,95,194 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 1,58,081 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

## 2.3 பொது மக்கள் குறை தீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அனைத்து மாவட்டங்களிலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படுகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்க் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடங்களிலேயிருந்து, பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, பிற துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து அறிக்கை பெற்று, குறிப்பிட்ட நாளில் மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்கிறார்கள். பொது மக்களின் குறைகள் தீர்க்கப்படுவதற்கு அரசு அலுவலகங்களில் கடைபிடிக்கப்படும் பல்வகை நடைமுறைகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கை நிறைவேற்றுவதற்கான கால அளவுகள் குறித்த தகவல்களை, அறிவிப்புப் பலகை மற்றும் தகவல் மையங்கள் மூலம் அறிவித்து பொதுமக்கள் விழிப்புணர்வு அடைய வழிவகை செய்யப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு தொடங்கப்பட்டு அது ஒரு தனித் துணை ஆட்சியர் (மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) கட்டுப்பாட்டிலும், மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. தனித் துணை ஆட்சியருக்கு தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தும், நிக்நெட் கணிப்பொறி மூலம் கிடைக்கும் விவரங்களைக் கொண்டும், மக்கள் குறை தீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின்மீது மாவட்டத்தின் அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்கிறார்.

[2003 ஏப்ரல் 10

மாநிலத்தில் ஒரு மாசுமருவற்ற, தூய்மையான, வெளிப்படையான, திறமைமிக்க நிருவாகத்தை செயல்படுத்த உறுதிப் பூண்டு, அதன்படி பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுத்து அம்மனுக்களின் மீதான இறுதி முடிவினை மனுதாரர்களுக்கு தெரிவிக்க அரசு தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளது. அதாவது 5 நாட்களுக்குள் மனுக்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், அம்மனுக்களின் மீது தக்க நடவடிக்கை எடுத்து அம்மனுக்களின் மீதான முடிவினை 90 நாட்களுக்குள் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கவும், இது குறித்து அப்போதைக்கப்போது உள்ள நிலவரத்தை கணினியில் பதிவு செய்து இப்பணியினை ஆய்வு செய்யவும் அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 2002ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 2,77,362 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 2,57,814 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.

**2.4 மாண்புமிகு அமைச்சர்கள்/நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்களால் பெறப்படும் மனுக்கள்**

மாண்புமிகு அமைச்சர்கள்/நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்குச் செல்லும்போது பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்புகிறார்கள். அவ்வாறு பெறப்படும் மனுக்கள், பாராளுமன்ற தொகுதி/சட்டமன்றத் தொகுதி வாரியாக பராமரிக்கப்படும் பதிவேட்டில் பதியப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர்களால் அறிக்கை அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

2002 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 43,914 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 39,556 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன.



2003 ஏப்ரல் 10]

**2.5 சான்றுகள் வழங்குதல்**

பொதுமக்களின் தேவையை முன்னிட்டு பின்வரும் சான்றுகள் வருவாய்த் துறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:-

1. சாதிச் சான்று
2. பிறப்பிட/இருப்பிடச் சான்று
3. வருமானச் சான்று
4. நாட்டினச் சான்று
5. வாரிசுச் சான்று
6. சொத்து மதிப்புச் சான்று
7. பிறப்பு/இறப்புச் சான்று
8. ஆதரவற்ற குழந்தைச் சான்று
9. ஆதரவற்ற விதவைச் சான்று
10. கலப்பு திருமணச் சான்று
11. பள்ளிச் சான்றுகள் தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று
12. கணவனால் கைவிடப்பட்டவர் சான்று

**சாதிச் சான்று**

(i) பொது மக்களின் தேவையற்ற அலைச்சலைக் குறைக்கவும், வருவாய்த் துறையின் வேலைப்பளுவை குறைக்கவும், 1988 ஆம் ஆண்டு முதல் அச்சடிக்கப்பட்ட நிரந்தரச் சாதிச் சான்று அட்டைகள் வழங்கும் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து கல்வி நிறுவனங்களிலும்/தொழிற் கல்வி நிறுவனங்களிலும் சேரவும், வேலை வாய்ப்பு பெறவும் இச்சான்றுகள் பெரிதும் உதவியாக உள்ளன.

(ii) இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் அரசு ஆணையின்படி சாதிச் சான்று அட்டைகள் சென்னை மைய அரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

(iii) அரசு ஆணை எண். 348, வருவாய்த் துறை, நாள் 7-8-2002-ன்படி 16,50,000 சாதிச் சான்று அட்டைகள் 2002-2003 ஆம்

[2003 ஏப்ரல் 10

ஆண்டிற்கு அச்சிடப்பட்டு மாவட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு வழங்க அனுப்பப்பட்டுள்ளது.

(iv) பள்ளிப்படிப்பை முடித்த பின், மேற்படிப்புக்காவும், வேலை வாய்ப்பு பெறவும், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

(v) வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பள்ளிகள் மூலமாக சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறையை, அரசு ஆணை எண். 165, வருவாய்த் துறை, நாள் 1-4-1999-ன் மூலம், அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முறையின்படி 10 அல்லது 12ஆம் வகுப்பில் படிக்கும் பொழுதே இந்தச் சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படும். வருவாய்த் துறை அலுவலர்களின் விசாரணைக்குப்பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றன. பள்ளிப்படிப்பு முடிந்தவுடன், அந்த சான்றிதழ்கள் பள்ளி மாறுதல் சான்றிதழுடன் (Transfer Certificate) மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

(vi) 2002-2003ஆம் ஆண்டில் டிசம்பர் 2002 வரை பள்ளிகளின் மூலம் (சாதி, இருப்பிடம், வருமானச் சான்றிதழ்) 10-ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு 8,01,087 சான்றிதழ்களும், 12-ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு 3,18,924 சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஆக மொத்தம் 11,20,011 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**பிறப்பிட / இருப்பிடச் சான்று**

பிறப்பிடம் என்பது ஒருவர் பிறந்த இடத்தினையும், இருப்பிடம் என்பது ஒருவர் நிரந்தரமாக வசிக்கும் இடத்தினையும் குறிப்பிடுவதாகும். இச்சான்றுகள் கோருபவர் ஒரு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்று, பள்ளிகளில் சேரவும், வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறவும் உதவுகின்றன. பிறப்பிடச் சான்று பெறவேண்டுமாயின் மனுதாரர் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அவர் கோரும் இடத்தில்



2003 ஏப்ரல் 10]

வசித்திருக்க வேண்டும். இருப்பிடச் சான்று பெற வேண்டுமாயின் ஒருவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடத்தில் வசித்திருக்க வேண்டும்.

**வருமானச் சான்று**

கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், பள்ளி/கல்லூரிகளில் மாணவர் விடுதிகளில் சேரவும், பெற்றோர்களின் வருமானத்தைக் கணக்கில் கொண்டு இச்சான்று வழங்கப்படுகிறது.

**நாட்டினச் சான்று**

இச்சான்றிதழ் கடவுச்சீட்டு, நுழைவிசைவு ஆகியவை பெறுவதற்காக, வருவாய் ஆய்வாளரின் முறையான விசாரணைக்குப் பிறகு ஒருவர் இந்த நாட்டைச் சார்ந்தவர் என்று வழங்கப்படும் சான்றாகும்.

**வாரிசுச் சான்று**

பொதுவாக, ஒரு குடும்பத்தின் தலைவரோ, அல்லது அந்தக் குடும்பத்தில் உள்ள நபர் எவரேனும் காலமாகிவிட்டால், அவரது பெயரில் உள்ள அசையும்/அசையா சொத்துக்களைப் பெயர் மாற்றம் செய்யவும், குடும்ப ஓய்வூதியம் பெறவும், இறந்தவரின் நேரடி வாரிசுதாரர்களான, மனைவி அல்லது கணவர், மகன், மகள், தாய்/தந்தை ஆகியோர் வாரிசு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். இறப்புச் சான்றின் அசல் பிரதியுடன், ஒரு ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பம், அனைத்து வாரிசுதாரர்களையும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும், கிராம நிர்வாக அலுவலரையும் விசாரிப்பதற்காக வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பப்படுகிறது. விசாரணை அறிக்கையின் அடிப்படையில், வாரிசுதாரர்களின் பெயர்களைக் குறிப்பிட்ட இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**சொத்து மதிப்புச் சான்று**

ஒப்பந்தக்காரராகவும், ஏலங்களில் பங்கு பெறவும் இச்சான்று தேவைப்படுகிறது. இச்சான்று கோருபவர், ரூ. 10/-க்கான கட்டண வில்லையுடன் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். சொத்து மதிப்பு ரூ. 50,000/- வரை ரூ. 100/-ம், அதற்கு மேல் ஒவ்வொரு ரூ. 50,000/-க்கும் ரூ. 200/-வீதம் கட்டணமாக கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

**பிறப்பு/இறப்புச் சான்று**

இச்சான்று கோருபவர் ரூ. 1/-க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்க வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் அல்லது கிராம நிர்வாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் இச்சான்று தலைமையிடத்துத் துணை வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. நகராட்சிகளில், நகராட்சி ஆணையரின் மூலமும், பேரூராட்சிப் பகுதிகளில் பேரூராட்சி செயல் அலுவலர் மூலமும் இச்சான்று வழங்கப்படுகிறது.

**ஆதரவற்ற குழந்தைச் சான்று**

அனாதை இல்லங்களில் சேருவதற்கு இச்சான்று பயன்படுகிறது. விண்ணப்பத்தின்பேரில், குழந்தையின் தாய் தந்தையரைப் பற்றிய விவரமும், உண்மையில் அந்தக் குழந்தை அனாதைதானா என்ற விவரமும், குழந்தை உண்மையில் பாதுகாவலரின் பாதுகாப்பில் உள்ளதா போன்ற விவரங்களும் குறித்து தீர விசாரித்த பின்னர் இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**ஆதரவற்ற விதவைச் சான்று**

வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்காக விதவைகளுக்கு இச்சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரரின் கணவரின் இறப்பு விவரம் மற்றும் விண்ணப்பதாரர் மறுமணம் புரிந்துள்ளாரா என்று விசாரித்த பின்னர் இச்சான்று வழங்கப்படுகிறது. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் வருவாய்க் கோட்ட அலுவலரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**கலப்புத் திருமணச் சான்று**

இரண்டு மாறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் (ஒருவர் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் இனமாகவும், மற்றொருவர் வேறு இனத்தைச் சார்ந்தவராகவும் இருந்து) புரிந்து கொள்ளும் திருமணம் கலப்புத் திருமணம் ஆகும். வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும், இவர்களின் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கவும், அரசின் சலுகைகளைப் பெறவும் இச்சான்று விசாரணைக்குப்பின் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.



**பள்ளிச் சான்று தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று**

பள்ளி/கல்லூரிகளில் வழங்கப்படும் அசல் சான்று தொலைந்து விட்டால், அச்சான்றின் நகலினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைக்கு விண்ணப்பிக்க, தனியாருக்கு வட்டாட்சியரால், மேற்படி சான்று தொலைந்தது உண்மை என்று சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர் இச்சான்று தொலைந்தது தொடர்பாக, காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் முதல் தகவல் அறிக்கையின் பிரதியுடன் இச்சான்று கிடைக்கப்பெறவில்லையென்ற காவல் நிலையத்தின் அறிக்கையுடனும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் மற்றும் அருகில் உள்ளவர்களை விசாரித்து வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**கணவரால் கைவிடப்பட்டவர் சான்று**

கணவரால் புறக்கணிக்கப்பட்ட திருமணமான பெண் அவரது கணவரை விட்டுப் பிரிந்து அவரிடமிருந்து எவ்விதத் தொடர்பும் இன்றி தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தனித்து வாழ்ந்து வந்தால், அவர் கணவரால் கைவிடப்பட்டவராகக் கருதப்படுவார். இச்சான்று வழங்குவதற்குமுன், விண்ணப்பதாரர் நிலையாக தனித்து வாழ்கிறாரா அல்லது தற்காலிகமாக பிரிந்து வாழ்கிறாரா என விசாரித்து வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது. அரசின் சலுகைகளைப் பெற இச்சான்று உதவுகிறது.

## 2.6 ஆட்சி எல்லைகளைச் சீரமைத்தல்

அரசாணை எண் 657 வருவாய்த் துறை, நாள் 29-12-2000-இன்படி பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து அரியலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 1-1-2001 முதல் செயல்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மாவட்டத்தையும் சேர்த்து மாநிலத்தில் மாவட்டங்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்தது. பின்பு, செலவினத்தைக் குறைப்பதற்காகவும், நிர்வாக மேம்பாட்டிற்காகவும், அரசாணை எண் 167 வருவாய்த் துறை நாள் 19-4-2002-இன்படி அரியலூர் மாவட்டம் பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்துடன் அரியலூர் மாவட்டம் இணைக்கப்பட்ட பிறகு மாநிலத்தில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 30-லிருந்து 29 ஆகக் குறைந்தது. கோட்டம் மற்றும் வட்டங்களின் எண்ணிக்கைகளில் மாற்றம் ஏதுமில்லை. அரியலூர்

மாவட்டத்தில் இயங்கி வந்த அனைத்து அலுவலகங்களும் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தவிர) அதே இடத்தில் தொடர்ந்து இயங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட வாரியாக கோட்டங்கள், வட்டங்கள், உள் வட்டங்கள் மற்றும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-1-இல் தரப்பட்டுள்ளன,

2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 6,21,10,839. இதில் 3,12,68,654 (51%) ஆண்களும், 3,08,42,185 (49%) பெண்களும் அடங்குவர். மாவட்ட வாரியாக மக்கள் தொகை விவரங்கள் இணைப்பு-2-ல் தரப்பட்டுள்ளது.

**2.7 உள்கட்டமைப்பு வசதிகள்**

வருவாய்த் துறை திறம்பட செயல்படுவதற்காக மாவட்டங்களில் அரசு அலுவலகங்களில் நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox) நிகரி (Fax), மரத்தளவாடங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும் மாவட்ட ஆட்சியர் முதல் கிராம நிர்வாக அலுவலர் வரை அரசு அலுவலகக் கட்டடங்கள், அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்புகள் கட்டுவதற்கும் அரசு முக்கியத்துவம் அளித்து ஒவ்வொரு ஆண்டும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

**பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உள்கட்டமைப்பு வசதிப் பணிகள்.**

1-4-1993-க்குப் பிறகு புதிதாக உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்க 11-வது நிதிக்குழு ரூ.44 கோடி மானியமாக அளித்துள்ளது. இதற்கு இணையான தொகை மாநில அரசின் பங்காக அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் காலம் 2000-2004 முடிய ஐந்து ஆண்டுகள் ஆகும். அரசாணை நிலை எண் 78, வருவாய் (வநி-2)த் துறை, நாள் 13-2-2002-இல் 2001-2002 முதல் 2003-2004 ஆண்டுகளில் செலவிட மேற்படி ரூ.88 கோடியில், மேற்சொன்ன 7 மாவட்டங்களில் அரசு கட்டடங்கள் கட்ட மாநில அரசு ஏற்கெனவே செலவழித்த தொகை அதன் பங்காக ஈடு செய்யப்பட்ட தொகை போக மீதி 73.97 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



மேற்கண்ட தொகையில் வருவாய்த் துறைக்கு 70 சதவிகிதமும், பிற துறைகளுக்கு 30 சதவிகிதமும் வழங்கப்பட வேண்டும். எனவே, மேற்கண்ட 7 மாவட்டங்களுக்கு வருவாய்த் துறையின்கீழ் உள்ள அலுவலகங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க, அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட ரூ.4757.60 இலட்சமும் பிற துறை அலுவலகங்கள் கட்ட ரூ.2039.28 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அலுவலகக் கட்டடங்கள்**

**மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

மாநிலத்திலுள்ள 29 மாவட்டங்களில், 28 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தற்போது அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பெரம்பலூர் மாவட்ட பெருந்திட்ட வளாகம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 73 வருவாய் கோட்ட அலுவலகங்களில் ஆத்தூர் வருவாய் கோட்ட ஆட்சியர் அலுவலகம் மட்டுமே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 24 வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டும் அரசு கட்டடங்களில் இயங்கவில்லை.

11-வது நிதிக்குழு மானியத்தின்கீழ் தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூர், கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி மற்றும் பள்ளிப்பட்டு ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்களின் கட்டுமானப் பணி தற்பொழுது நடைபெற்றுவருகிறது. மேலும் 11-வது நிதிக்குழு மானியத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில், வானூர், திண்டிவனம் மற்றும் திருக்கோயிலூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் விரிவாக்கக் கட்டடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

[2003 ஏப்ரல் 10

மீதமுள்ள 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**குடியிருப்புக் கட்டடங்கள்**

**மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்.**

மொத்தமுள்ள 29 மாவட்ட ஆட்சியர்களில் 20 மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியர் தகுதியான இடத்தைத் தெரிவு செய்து முன்மொழிவுகள் அனுப்பவேண்டும். நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு நாகப்பட்டினம் துறைமுகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் உள்ளது. பெரம்பலூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டட கட்டுமானப் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. அதற்கான நிதி 11-வது நிதிக்குழு மானியத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் கரூர், நாமக்கல், திருவள்ளூர், திருவாரூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி 2003-04 ஆம் ஆண்டில் மாநிலத்தின் நிதி ஆதாரத்தோடு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட வருவாய் அலுவலருக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 29 மாவட்ட வருவாய் அலுவலர்களில் 19 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. 11-வது நிதிக்குழுவின் மானியத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலுவலருக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.



2003 ஏப்ரல் 10]

மேலும் பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ், கரூர், தேனி, நாமக்கல், திருவாரூர், மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் நீலகிரி ஆகிய 3 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக கட்டப்படும்.

**வருவாய்க் கோட்ட அலுவலர் குடியிருப்புகள்**

மொத்தம் உள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் 58 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. பதினோராம் நிதிக்குழு மானியத்தின்கீழ் பெரம்பலூர், உடையார்பாளையம், குளித்தலை, திருச்செங்கோடு, திருத்தணி, பொன்னேரி, திருவாரூர் மற்றும் தேனி ஆகிய வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**வட்டாட்சியர் குடியிருப்புகள்**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 206 வட்டாட்சியர்களில் 169 வட்டாட்சியர்களுக்கு அரசு குடியிருப்புகள் உள்ளன. பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் பெரம்பலூர், கரூர், திருவள்ளூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் உள்ள செந்துறை, கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி, குன்னம், வேப்பந்தட்டை, பூந்தமல்லி, அம்பத்தூர், தேனி, போடிநாயக்கனூர் மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய 10 வட்டங்களில் வட்டாட்சியர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 27 வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

மொத்தம் உள்ள 1,120 வருவாய் ஆய்வாளர்களில் 1,080 வருவாய் ஆய்வாளர்களுக்கு அரசு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் 3 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பும், திருவாரூர் மாவட்டத்தில் ஒரு வருவாய் ஆய்வாளருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பும் கட்டும் பணி நடவடிக்கையில் உள்ளது. சென்னையில் உள்ள 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் தேவையில்லை. மீதமுள்ள 16 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணி வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்

**கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள்**

இம்மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு வசதிகள் படிப்படியாக செய்து தர அரசு முன்னர் எடுத்த முடிவைத் தொடர்ந்து மலைப்பகுதியில் உள்ள கிராமங்கள், கடற்கரையோர கிராமங்கள் மற்றும் கூர்உணர்வுடைய கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு முன்னுரிமை அளித்து முதலில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு வசதிகள் செய்து தர அரசு முடிவு செய்து, முதல் கட்டமாக தர்மபுரி, சேலம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மலைப்பகுதியிலுள்ள 60 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

புதிதாக உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், திருவள்ளூர், திருவாரூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பதினோராவது நிதிக்குழு மானியத்தின்கீழ் 2001-2004 ஆண்டுகளுக்கு மொத்தமாக 166 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கு 103 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 63 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்படும்.

அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் கட்டப்பட வேண்டிய அலுவலகம் கூடிய குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும் நிதிச்சுமையின் காரணமாகவும் அனைத்தும் கட்டி முடிக்க நீண்டகாலமாகும். 2001-2002 ஆம் ஆண்டில் அரசின் திருத்திய கொள்கையின்படி பொதுமக்களின் நன்மையைக் கருதி அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அலுவலகக் கட்டடங்கள் மட்டும் கட்டித் தர முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஒவ்வொரு ஊராட்சி மன்றக் கட்டடத்துடன் இணைத்து 180 சதுர அடியில் மூன்று நிதியாண்டுகளில் 2001-2004 வரை ஆண்டுதோறும் 4,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆணை பிறப்பித்துள்ளது.





2001-2002 ஆம் ஆண்டிற்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 1,650 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்களும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2,350 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்களும் கட்ட உத்தேசிக்கப்பட்டு 3,851 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மாவட்ட ஆட்சியர்களால் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 3,826 கட்டடங்களில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளன.

2002-2003 ஆம் நிதியாண்டில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 1,650 அலுவலகக் கட்டடங்களும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2,090 அலுவலகக் கட்டடங்களும், ஆக மொத்தம் 3,740 அலுவலகக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படும்.

**2.8 கிராம நிர்வாகம்**

மாவட்ட வருவாய் நிர்வாகத்திற்கு கிராம நிர்வாக அமைப்பு முதன்மை ஆதாரமாகவும், முதுகெலும்பாகவும் உள்ளது. 1980 வரை கிராம நிர்வாகம் பகுதி நேர கிராம அலுவலர்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. அரசின் கொள்கைப்படி கிராம நிர்வாக அமைப்பை மாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டது. எனவே, பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/80, மேதகு ஆளுநர் அவர்களால் 13-11-1980 அன்று பிரகடனம் செய்யப்பட்டு உடனடியாக அமலுக்கு வந்தது. இதன் அடிப்படையில் 14-11-1980 முதல் பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் ஒழிக்கப்பட்டன.

தமிழ்நாடு பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்புச் சட்டம் எண் 3/81 இயற்றப்பட்டு 14-11-1980 முதல் செயல்படுத்தப்பட்டது. பகுதி நேர கிராம அலுவலர்களுக்குப் பதிலாக முழு நேர கிராம நிர்வாக அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

அரசு ஆணை (நிலை) எண் 2747 வருவாய்த் துறை, நாள் 12-12-1980 இல் கிராம நிர்வாக அலுவலர் பதவிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரையறைக்கு உட்பட்டது என்றும், மேற்படி பதவிகளுக்கான நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு மூலம் நேரடியாக செய்யப்பட வேண்டும் என்றும், விதி திருத்தங்கள் செய்யப்பட்டு அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு மூலம் கிராம நிர்வாக அலுவலர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் கிராம நிர்வாக அலுவலர்களது பணி நியமனம் தொடர்பாக எழுந்த வழக்குகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் பிறப்பித்த வழிகாட்டலின்படி அரசு ஆணை (நிலை) எண்1195, வருவாய்த் துறை, நாள் 6-7-1982 வெளியிடப்பட்டது. அதன்படி 14-11-1980 அன்று பதவியில் இருந்து குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றிருந்த முன்னாள் கிராம அலுவலர்களை (வகைபாடு எண்1) தகுதிகாண் குழு மூலம் கிராம நிர்வாக அலுலர்களாக நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அரசு ஆணை (நிலை) எண்1287 வருவாய்த் துறை நாள் 6-7-1988-இல், 14-11-1980 அன்று பதவியில் இருந்து 20-2-1982-க்கு பின்னர் பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற முன்னாள் கிராம அலுவலர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு (வகைப்பாடு எண்2) கிராம நிர்வாக அலுவலர்களாக சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டது. பின்னர் அரசு ஆணை (நிலை) எண் 954, வருவாய்த் துறை நாள் 16-10-1997 இல் 14-11-1980 அன்று பதவியில் இல்லாமலிருந்தாலும், அதற்கு முன்னர் குறுகிய காலம் பணிபுரிந்து குறைந்தபட்ச கல்வித் தகுதி மற்றும் இதா தகுதிகள் பெற்ற முன்னாள் கிராம அலுவலர்களை அவர்களது பணிக்காலத்தின் அடிப்படையில் முதுநிலைப்பட்டியல் தயார் செய்து அதன் அடிப்படையில் அப்போது இருந்த காலியிடங்களிலோ அல்லது பிற்காலத்தில் எழக்கூடிய காலியிடங்களிலோ (வகைப்பாடு எண்3) கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டது.



தற்போது கிராம நிர்வாக அலுவலர்களாக பணியில் இருப்பவர்களில் மேலே தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்கள் மட்டுமின்றி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்களும் உள்ளடங்குவர்.

**கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு**

அரசாணை (நிலை) எண்781 வருவாய், நாள் 25-5-1985 இல் (i) ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர்கள் பணி மாறுதலில், இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்திட தகுதியுள்ளவர்கள் என்றும் (ii) ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் இளநிலை உதவியாளர் காலியிடங்களில் 20 விழுக்காடு இடங்களில் கிராம நிர்வாக அலுவலர்களை இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்திட பரிசீலிக்கலாம் என்றும் (iii) மாவட்ட அளவிலான முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக மாறுதல் செய்யலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

பின்னர், மேற்கூறிய அரசாணையை இரத்து செய்து அரசாணை (நிலை) எண் 386, வருவாய்த் துறை, நாள் 1-10-2001 இல் 10 வருடம் தகுதிப்பணி முடித்திருக்கும் தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களை உதவியாளர்களாக சில நிபந்தனைகளுக்குட்பட்டு பதவி உயர்வு செய்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுபோன்ற உதவியாளர்கள் எண்ணிக்கை மாவட்டங்களில் வருவாய்த் துறையில் ஏற்படும் உதவியாளர் பணி காலியிடங்களில் 10 விழுக்காடு பணியிடங்கள் மட்டுமே தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி உயர்வு அளிக்க வரையறுக்கப்பட்டது.

மேலும் அரசாணை (நிலை) எண் 781, வருவாய், நாள் 25-5-1985-இன்படி கிராம நிர்வாக அலுவலர்கள் பணி மாற்றம் மூலம் இளநிலை உதவியாளர்களாக பணிமாற்றம் பெற்று பின்னர் அதிலிருந்து உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருபவர்களுக்கு, அரசு ஆணை (நிலை) எண்386 வருவாய்த் துறை நாள் 1-10-2001-ன்படி பதவி உயர்வு மூலம் உதவியாளர் பதவி பெறும், தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களால் எந்த பாதிப்பும் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் கிராம நிர்வாக அலுவலர்கள், இளநிலை உதவியாளர்களாக பணிமாற்றம் பெற்று பணிபுரிந்து

வருபவர்களின் பணி மூப்பினைத் தற்போது உதவியாளர் பணி உயர்வுக்கு முழுத்தகுதி பெற்றிருக்கும் தேர்வு நிலை கிராம நிர்வாக அலுவலர்களின் பணி மூப்புடன் சேர்த்து ஒருங்கிணைந்த பணி மூப்பு பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

**முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

பகுதி நேர கிராம அலுவலர் பணியிடங்கள் 14-11-1980 முதல் ஒழிக்கப்பட்டதனால் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் 5-12-1986 முதல் வழங்க அரசாணை (நிலை) எண் 828 வருவாய்த் துறை, நாள் 23-8-1996இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி,

(1) முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.175 மற்றும் அதற்குரிய படிகளுடன் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை அரசாணை (நிலை) எண் 629 வருவாய்த் துறை, நாள் 22-7-1998 இல் ரூ. 250 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. (இன்றைய தேதியில் மாதம் ஒன்றுக்கு ரூ.823 சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.)

(2) 14-11-1980 அன்று பணியிலிருந்து பின்னர் உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதம் ரூ. 100 குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததை அரசாணை (நிலை) எண் 629, வருவாய்த் துறை, நாள் 22-7-1998 இல் ரூ. 150 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(3) 14-11-1980 அன்று தற்காலிக பணிநீக்கம்/விடுப்பில் இருந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கும் அரசாணை (நிலை) எண் 753, வருவாய்த் துறை, நாள் 9-9-1998இன் மூலம் இச்சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை அரசு நீட்டித்துள்ளது.

(4) 14-11-1980 அன்று பணியிழந்து பின்னர் குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்று கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்களில் 10 ஆண்டு குறைந்தபட்ச தகுதி பணி முடிக்காமல் ஓய்வு பெற்றவர்களுக்கும், முன்னாள் கிராம அலுவலர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை நீட்டித்து வழங்க அரசாணை (நிலை) எண் 121, வருவாய்த் துறை, நாள் 13-3-2001 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

(5) அரசாணை (நிலை) எண் 2261, வருவாய்த் துறை, நாள் 9-10-1978 இன் மூலம் 60 வயது நிறைவு செய்து ஓய்வு பெற்ற கிராம



அலுவலர்களுக்கும் முன்னாள் கிராம அலுவலர்களுக்குரிய சிறப்பு ஓய்வூதியத்தை வழங்க அரசாணை (நிலை) எண் 294 வருவாய்த் துறை, நாள் 3-8-2001 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

**கிராம உதவியாளர்கள் பணியமைப்பு**

1-6-1995-க்கு முன்பாக பகுதி நேர கிராமப் பணியாளர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்தனர். அரசாணை (நிலை) எண் 625, வருவாய்த் துறை, நாள் 6-7-1995 இல் பகுதி நேர கிராமப் பணியாளர்கள் 1-6-1995 முதல் முழுநேர அரசுப் பணியாளராக அமர்த்தப்பட்டு புதிய ஊதிய ஏற்றமுறை ரூ. 600-10-750 இல் ஊதியம் வழங்கப்பட்டது. ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி கிராம உதவியாளர்களின் ஊதியம் ரூ.1800-20-2240 என திருத்தியமைக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண் 521, வருவாய்த் துறை, நாள் 17-6-1998 இல் முழுநேர கிராம உதவியாளர்கள் பதவிக்குரிய பணி விதிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அரசாணை (நிலை) எண் 362, வருவாய், நாள் 7-7-1999 இல், பணி வரன்முறை செய்யப்பட்ட கிராம உதவியாளர்கள் பணியிலிருக்கும்போது மரணமடைய நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படி கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க ஆணையிடப்பட்டது.

**கிராமப் பணியாளர்கள்/கிராம உதவியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

(1) அரசாணை (நிலை) எண் 1495, வருவாய்த் துறை, நாள் 1-9-1984இன்படி 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெறும் பகுதி நேர கிராமப் பணியாளர்களுக்கு அவர்கள் பணி செய்த மொத்த காலத்தினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வருடத்திற்கும் அரை மாத ஊதியம் என்று கணக்கிட்டு ஒரு தொகை வழங்கப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

(2) அரசு கடிதம் (நிலை) எண் 112, வருவாய்த் துறை, நாள் 4-3-2002 இல் 1-6-1995 முதல் 31-5-2000 வரையிலான காலத்தில் ஓய்வுபெற்ற கிராம உதவியாளர்களுக்கு அவர்கள் பணிபுரிந்த மொத்த பணிக்காலத்தைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஆண்டுக்கும் அரை மாத ஊதியத்தினை பணிக்கொடையாக வழங்கவும் 31-5-2000-க்கு பின் ஓய்வு பெற்றவர்களுக்கு இறப்பு மற்றும் ஓய்வுக் கால

[2003 ஏப்ரல் 10

பணிக்கொடை தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### 2.9 நிலவரி

ஒரு நிலத்தின் மண்வளம், நீர்வளம் மற்றும் தரம் ஆகியவற்றைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். நிலவரியை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்படும் கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி, தல வரி, தலமேல் வரி போன்ற பிற வரிகளும் நிலவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்படுகின்றன. 1-7-1967 முதல் புஞ்சை நிலங்களுக்கு விதிகப்படும் நிலவரி இரத்து செய்யப்பட்டுள்ளது. அதே போல 1-7-1971 முதல் 5 ஏக்கர் மற்றும் அதற்கும் குறைவாக தனிநபருக்கு சொந்தமாக உள்ள நஞ்சை நிலங்களுக்கு புஞ்சை நிலத்தீர்வை அளவுக்கு நிலவரி இரத்து செய்யப்பட்டுள்ளது. நிலவரி நிலப்பட்டாதாரர்களிடமிருந்து இணக்கமான முறையில் வசூல் செய்யப்படுகிறது. தற்போது நடைமுறையில் உள்ள அரசு அறிவுரைகளின்படி நிலவரி பாக்கிக்காக அரசின் அனுமதியின்றி ஜப்தி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படுவதில்லை.

பசலி ஆண்டு 1411-1412-க்கான நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை 1-1-2002 முதல் 31-12-2002 வரையிலான விவரம் இணைப்பு-3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ள 28 மாவட்டங்களிலும், 1412 ஆம் பசலி ஆண்டிற்கான நிலவரி, உள்ளூர் தலவரி மற்றும் உள்ளூர் தல மேல்வரி ஆகியன தள்ளுபடி செயயப்பட்டுள்ளன.

### 2.10 இயற்கைச் சீற்றங்கள்
#### மழை/வெள்ளம்

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை காலத்தில் காற்றழுத்தத் தாழ்வுநிலை (Trough) காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் (Low Pressure/Depression) புயல் (Cyclone) போன்றவற்றின் தாக்கத்தினால் ஏற்படும் மழை/வெள்ளத்தால் கடலோர மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை காலத்தில், மழை, வெள்ளம், புயல் ஆகியவைகளால் ஏற்படும் எதிர்பாரா நிகழ்வுகளைச் சமாளிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் பேரழிவு தடுப்புத் திட்டம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை காலத்திற்கு முன்பாகவே அதனால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைச் செவ்வனே சமாளிக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டாட்சியர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் (District Co-ordination Meeting) நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இயற்கைச் சீற்றத்தினைச் சமாளிக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அனுபவங்களைக் கொண்டும், ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகளின்படியும், மாவட்ட அளவில் அவசரகால திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி பேரழிவு தடுப்புத் திட்டம் மாவட்டாட்சியர்களால் செயற்படுத்தப்படுகிறது. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையில் அனைத்து துறைத் தலைவர்கள் அடங்கிய கூட்டம் வடகிழக்குப் பருவமழை காலத்திற்கு முன்பாக கூட்டப்பட்டு மாவட்டாட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு தக்க அறிவுரைகள்/ஆணைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், இவ்வாண்டிலிருந்து சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் வடகிழக்குப் பருவமழையினால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்களைச் சமாளிக்கும் பொருட்டு, எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள நிவாரணக் குழு ஒன்றினை சென்னை மாநகராட்சி ஆணையரின் தலைமையில் அரசு தனது ஆணை (நிலை) எண் 472, வருவாய்த் துறை, நாள் 6-11-2002இல் அமைத்து ஆணையிட்டுள்ளது.

வெள்ளம், புயல், தீ விபத்து போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

(அ) உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நிவாரணமாக ரூ.15,000/- மாவட்டாட்சியர்களால் உடனடியாக வழங்கப்படுகிறது.

(ஆ) முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.2,000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ. 1,000/- வீதமும் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

(இ) இறந்த கால்நடைகளுக்கு அதாவது, பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ. 5,000 வீதமும், பசு/எருமைக்கன்று ஒன்றுக்கு ரூ. 3,000/- வீதமும், செம்மறி ஆடு/வெள்ளாடு ஒன்றுக்கு ரூ. 1,000/- வீதமும்- ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கால்நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கப்படுகிறது.

(ஈ) பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நிவாரணத் தொகையினை உடனடியாக வழங்கும்பொருட்டு கருவூல விதி 27இன் கீழ் மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) வெள்ளம்/புயல்/வறட்சியால் பாதிக்கப்பட்ட பல்வகை பயிர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

மத்திய அரசு நிவாரணத் தொகையை திருத்தி நிர்ணயம் செய்துள்ளதைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 107, வருவாய்த் துறை, நாள் 4-3-2003 இல் வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களால் சேதமுற்ற பல்வேறு பயிர்களுக்கு பின்வருமாறு நிவாரணத் தொகையை நிர்ணயம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது:—

| | |
|---|---|
| சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவி, வேளாண்மை இடுபொருள் மானியம் 50% மற்றும் அதற்குமேல் பயிர் இழப்பிற்கு. | மழையை நம்பி பயிர் செய்யப்படும் பகுதிகள் ஒரு எக்டேருக்கு ரூ. 1,000/- |
| வேளாண் பயிர்கள், தோட்டக் கலைப் பயிர்கள் மற்றும் வருடாந்திர பண்ணைத் தோட்டப் பயிர்கள். | இடையறாத பாசன வசதியுள்ள பகுதிகள் ஒரு எக்டேருக்கு ரூ. 2,500/- |
| ஆண்டு முழுவதும் உள்ள பயிர்கள் | ஒரு எக்டேருக்கு ரூ. 4,000/- |

**வடகிழக்குப் பருவமழை 2002**

வடகிழக்குப் பருவமழை இயல்பாக தென்மேற்குப் பருவமழை முடிவடைந்ததும், அக்டோபர் மாதம் மூன்றாவது வார காலத்தில் தொடங்கும். 2002 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை 23-10-2002



அன்று தொடங்கியது. வடகிழக்குப் பருவமழை காலத்தில் செய்ய வேண்டிய சராசரி மழையளவான 468.06 மி.மீட்டருக்கு பதிலாக 406.92 மி.மீ. மழை மட்டுமே பதிவானது. இது இயல்பான மழையளவில் 87 விழுக்காடு ஆகும். 11 மாவட்டங்கள் இப்பருவமழை காலத்தில் குறைவான மழையளவை பெற்றன. இப்பருவமழை காலத்தில் சில நாட்களில் பெய்த அதிக மழையினால் சென்னை மாநகராட்சி மற்றும் கன்னியாகுமரி, கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களில் சில பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இப்பருவ மழை காலத்தில் தமிழ் நாட்டில் 65 மனித உயிரிழப்பும், 147 கால்நடை உயிரிழப்பும் ஏற்பட்டன. 347 குடிசைகள் முழுமையாகவும், 811 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மாவட்டாட்சியர்களால் நிவாரணம் வழங்கப்பட்டது.

**சென்னை மாநகராட்சி**

வடகிழக்குப் பருவமழை குறிப்பாக, சென்னை மாவட்டத்தில், தொடக்கத்திலிருந்தே வெகு தீவிரமாக இருந்தது. வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தினால் 29-10-2002 முதல் 3-11-2002 வரை பெய்த கன மழையினால் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வெகுவாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய சாலைகள், உட்புற சாலைகள், பாதாள சாக்கடைகள், கழிவுநீர் கால்வாய்கள் போன்றவை வெள்ளத்தால் கடுமையாக சேதமடைந்ததால், மக்களின் இயல்பான வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது. பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பல்வேறு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு சென்னை மாநகராட்சிக்கு ரூ.12.12 கோடி பேரிடர் சீற்ற நிவாரண நிதியிலிருந்து வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

**கன்னியாகுமரி மாவட்டம்**

வடகிழக்குப் பருவமழை காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 20-11-2002 மற்றும் 24-11-2002 ஆம் தேதிகளில் பெய்த கனமழையினால் மாவட்டத்திலுள்ள பெருஞ்சாணி, சித்தாறு 1 மற்றும் சித்தாறு 2 ஆகிய அணைகள் முழுக் கொள்ளளவினை எய்தின. மேலும், மாவட்டத்திலுள்ள பல அணைகள், குட்டைகள், கால்வாய்களில்

அரிப்பு ஏற்பட்டு தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தது. குறிப்பாக அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கால்வாய்களில் அரிப்பு ஏற்பட்டு சேதம் ஏற்பட்டது. மேலும், 460 ஹெக்டேர் ஆயக்கட்டு பரப்பு மற்றும் 119.84 கன அடி நீர் கொள்ளளவு கொண்ட தேரூர் ஏரியில் 20-11-2002 அன்று உடைப்பு ஏற்பட்டு நெற்பயிர் மற்றும் தொலை தொடர்புகளுக்கு சேதம் விளைந்தது. மேலும், இம்மழையினால் தேசிய நெடுஞ்சாலை எண். 47இல் உள்ள கோட்டார் சிறு பாலம் சேதமடைந்தது. மேற்கண்ட சேதங்களை உடனடியாக சீர் செய்ய ரூ. 50.23 இலட்சம் இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து வழங்கி அரசு ஆணையிட்டது.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

வடகிழக்குப் பருவமழை காலத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நவம்பர் 2002 முதல் வாரத்தில் தோளம்பாளையம், கோலம்பாளையம், குமாரபாளையம் மற்றும் வெள்ளியங்காடு ஊராட்சிகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் கால்நடைகள், பாசனக் கிணறுகள், தோட்டக்கலைப் பயிர்கள், நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான சாலைகள், ஊராட்சி சாலைகள், மின்சார வாரியத்திற்குச் சொந்தமான டிரான்ஸ்பார்மர்கள், தண்ணீர்க் குழாய்கள் ஆகியவை பெரிதும் சேதமடைந்தன. மேலும், தோளம்பாளையம், வெள்ளியன்காடு, தேக்கம்பட்டி, சோலம்பாளையம், தம்படசனூர், உப்பிலிபாளையம், பேரூர், இடையார்பாளையம், மதுக்கரை மற்றும் தொண்டாமுத்தூர் ஆகிய கிராமங்களில் 25.79 ஹெக்டேர் பரப்பிலுள்ள தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்தன. 112.515 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள், பொள்ளாச்சி துணைக் கோட்டத்தில் உள்ள 41 சாலைகள், இரண்டு பொதுப் பணித் துறை கால்வாய்கள் ஆகியவையும் சேதமடைந்தன. மேற்கண்ட சேதங்களை உடனடியாக சீர் செய்ய ரூ. 46.60 இலட்சம் இடர்ப்பாடு நிவாரண நிதியிலிருந்து வழங்கி அரசு ஆணையிட்டது.

**ஈரோடு மாவட்டம்**

ஈரோடு மாவட்டத்திலும், 27-10-2002 மற்றும் 28-10-2002 ஆகிய நாட்களில் பெய்த கனமழையினால் ஈரோடு, நம்பியூர், கோபிசெட்டிபாளையம், பவானி, கொடுமுடி, தாளவாடி, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள பல ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கோபிசெட்டிபாளையம் நகராட்சியும் பெரிதும்





பாதிக்கப்பட்டன. அவ்விரு நாட்களில் ஈரோடு மாவட்டத்தில் 63.5 மி.மீ. சராசரி மழை பதிவாகியுள்ளது. இக்கன மழை ஈரோடு மாவட்டத்தில் பல சாலைகள், குட்டைகள், சிறு பாலங்கள் ஆகியவைகளுக்குச் சேதம் விளைவித்தது. இக்கன மழையினால் காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் ஏலாத்தூர் செட்டிபாளையம் வாய்க்கால் ஆகியவைகளில் அரிப்பு ஏற்பட்டது. மேற்கண்ட சேதங்களை உடனடியாக சீர் செய்ய ரூ. 78.93 இலட்சம் இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து வழங்கி அரசு ஆணையிட்டது.

**திருநெல்வேலி மாவட்டம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் ஏப்ரல் 2002 ஆம் மாதத்தில் வீசிய பலத்த காற்றினால் பாளையங்கோட்டை வட்டத்தில் உள்ள சிவந்திபட்டி, முத்தூர் கிராமங்கள், சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள பெரிய கோவிலங்குளம் கிராமம், திருநெல்வேலி வட்டத்திலுள்ள கங்கைகொண்டான் கிராமம், தென்காசி வட்டத்திலுள்ள புலியூர் மற்றும் பட்டான்குறிச்சி கிராமங்கள் மற்றும் நாங்குனேரி வட்டத்திலுள்ள புலம் 1 மற்றும் 2 கிராமங்களில் உள்ள 9.43.4 ஹெக்டேரில் 17,142 வாழை மரங்கள் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உடனடி நிவாரணமாக ரூ.38,000/-ஐப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**கடலோர மாவட்டங்களில் வி.எச்.எப்/எச்.எப் தொலை தொடர்பு சாதனங்கள் நிறுவுதல்**

இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடிகளின்போது உடனுக்குடனும் எளிதிலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக வருவாய்த் துறை அலுவலகங்களில் இரு வழித் தகவல் தொடர்பு சாதனத்தை அமைக்க அரசு கருதியுள்ளது. முதற்கட்டமாக இந்த இருவழித் தகவல் தொடர்பு சாதனத்தை 12 கடலோர மாவட்டங்களில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வருவாய்க் கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மற்றும் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் இல்லங்கள் மற்றும் மாவட்ட வருவாய்த் துறையைச் சார்ந்த ஈப்புகளிலும் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இருவழித் தகவல் தொடர்பு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் தலைமைச் செயலகத்துடன் இணைக்கப்பட உள்ளன. இதற்கென அரசு ஆணை எண் 484 (வருவாய்), நாள்: 13-11-2002-ல் ரூ.94.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தொலைதொடர்பு சாதனத்தை

நிறுவும் பணி எல்காட் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வி.எச்.எப்/எச்.எப் கோபுரங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 30-6-2003-க்குள் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.11 வறட்சி**

தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அதாவது 2000, 2001 மற்றும் 2002இல் ஆண்டு சராசரி மழையளவான 977 மி.மீ. மழையளவிற்குக் குறைவான மழையளவே பெறப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் 848 மி.மீ. 2001ஆம் ஆண்டில் 772.9 மி.மீ. மற்றும் 2002 ஆம் ஆண்டில் 745.7 மி.மீ. மழையளவு பெறப்பட்டுள்ளது. இது முறையே 13%, 21% மற்றும் 24% சராசரி மழையைவிட, குறைவானதாகும்.

2002ஆம் ஆண்டில் 7 மாவட்டங்களும், 2001 ஆம் ஆண்டில் 16 மாவட்டங்களும் 2002 ஆம் ஆண்டில் 19 மாவட்டங்களும் ஆண்டு சராசரி மழைக்கும் குறைவான மழையளவைப் பெற்றுள்ளன. குறிப்பாக கரூர், பெரம்பலூர், நீலகிரி, விருதுநகர், விழுப்புரம், கன்னியாகுமரி மற்றும் கடலூர் ஆகிய 7 மாவட்டங்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகவும், சேலம், வேலூர், திருச்சி, மதுரை, நாமக்கல் மற்றும் திண்டுக்கல் ஆகிய 6 மாவட்டங்கள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகவும் ஆண்டு சராசரி மழைக்கும் குறைவான மழை பெற்ற மாவட்டங்களாகும்.

**குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்**

தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சராசரி மழைக்கும் குறைவான மழை பெய்ததால், 2002ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே வறட்சி போன்ற சூழ்நிலையும், குடிநீர்ப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளதாக பெரும்பாலான மாவட்ட ஆட்சியர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். 2002 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 15 மாவட்ட ஆட்சியர்கள் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யும்படி அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பினார்கள். சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்/மாநில நிவாரண ஆணையரின் பரிந்துரையின் பேரில் அரசு ரூ.31.27 கோடி நிதி ஒதுக்கீடு





செய்து மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் ஆணை பிறப்பித்தது. மேற்கண்ட நிதியினைக் கொண்டு 6,215 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ஏழு மாவட்டங்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ரூ. 11.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டின்கீழ் 2,632 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் நான்கு மாவட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடாக ரூ.4.97 கோடி வழங்கப்பட்டது. ஆக மொத்தம், முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையினைப் போக்கிட பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 47.89 கோடி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. அதன்மூலம் 8,847 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில், தென்மேற்குப் பருவமழை காலத்திலும் போதிய மழை பெறப்படாததனால் ஏற்பட்ட சூழ்நிலை, அதாவது குடிநீர்ப் பற்றாக்குறை, குறுவை சாகுபடி, பயிரிடப்பட்ட பயிர்களின் நிலை, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வேலைவாய்ப்பு உருவாக்குதல் போன்றவைகளைப்பற்றி மாவட்ட ஆட்சியர்களின் கருத்தினை நேரிடையாக அறிவதற்கு 30-7-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் கருத்துகளை அறிந்த பின்பு ஆய்வுக் கூட்டத்தின் முடிவில் மூன்றாம் கட்டமாக மேலும் ரூ. 20 கோடி நிதியினை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களுக்கும் குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆக மொத்தம், தமிழ்நாட்டில் குடிநீர்ப் பிரச்சினையினை போக்குவதற்காக மூன்று கட்டமாக ரூ.67.90 கோடி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், ஊராட்சிகளுக்கு ரூ. 49.75 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ. 10.94 கோடியும், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு ரூ.7.21 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன்மூலம் 14,252 குடிநீர் வழங்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு**

இது தவிர, குடிநீர்ப் பிரச்சினையின் தீவிரத் தன்மையினை உத்தேசித்து, அரசாணை (நிலை) எண் 92, ஊரக வளர்ச்சி (மதி-1), நாள்: 7-8-2002 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி ஒவ்வொரு சட்டமன்ற

[2003 ஏப்ரல் 10

உறுப்பினரும் 2002-2003ஆம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து ஊரக/நகரப் பகுதிகளில் குடிநீர்ப் பணிகளுக்கு ரூ. 15 இலட்சம் முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அரசு அறிவுரை வழங்கியது.

**குறுவை நெல் சாகுபடி**

2002ஆம் ஆண்டு, காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடிக்கு மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும் வழக்கமாக தண்ணீர் திறந்து விடப்படும் நாளான 12-6-2002 அன்று மேட்டூர் அணையிலிருந்து குறுவை நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை. தென்மேற்குப் பருவ மழை காலத்தில் போதிய மழை இல்லாததாலும், காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் பெருமளவில் குறுவை நெல் சாகுபடி செய்ய இயலவில்லை. இதனால் குறிப்பாக தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யப்படாததால் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டங்களை அறிவிக்கும் வகையில் 24-6-2002 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சையில் ரூ. 164.16 கோடிக்கான சிறப்பு நிவாரணத் திட்டங்களை அறிவித்தார்கள். அத்திட்டத்தின்படி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு நபருக்கேனும் வறட்சி நிலையினைக் கருத்திற்கொண்டு வேலை வாய்ப்பு வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கும் ஆணையிட்ப்பட்டது.

மேலும் காவிரி டெல்டா பகுதியிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் குறுவை நெல் சாகுபடி, இதர வேளாண்மை/தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி போதிய மழையின்மையால் பாதிக்கப்பட்டன. இக்கடும் வறட்சியால் 20 மாவட்டங்களிலும் பலன் தரக்கூடிய தென்னை மரங்கள் பகுதியாகவும் மற்றும் முழுமையாகவும் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, சேலம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் பலன் தரும் தென்னை மரங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இது போன்று நஞ்சை/புஞ்சைப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் நீரின்றி கடுமையாக பாதிக்கப்பட்டன.

**மத்திய அரசுக்கு வறட்சி நிவாரணம் ஒதுக்கக் கோரும் கோரிக்கை மனு (Memorandum)**

தமிழ்நாட்டில் நிலவிய கடுமையான வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு, மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து



2003 ஏப்ரல் 10]

(National Calamity Contingency Fund) நிதி ஒதுக்கீடு கோர முடிவு செய்தது. அதன்படி மத்திய அரசுக்கு விரிவான கோரிக்கை மனு மூலம் ரூ. 720 கோடி நிவாரண நிதியும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டப் பணிகளை எடுப்பதற்காக 2 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களும் ஒதுக்கும்படி கோரிக்கை மனு 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு கோரிக்கை மனுவினைப் பரிசீலனை செய்து, தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலைமை மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறை போன்றவற்றின் உண்மை நிலையை அறிய பல்வேறு அமைச்சகத்தினைச் சார்ந்த அலுவலர்கள் கொண்ட மத்தியக் குழு ஒன்றினை அனுப்பி வைத்தது.

**மத்தியக் குழு வருகை**

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலையினை நேரில் ஆய்வு செய்ய மத்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை, இணைச் செயலாளர், திரு. ஜோகிந்தர் சிங் தலைமையில் பல்வேறு துறையினைச் சார்ந்த உயர் அலுவலர்கள் அடங்கிய குழு 22—9—2002 அன்று வருகை தந்தது. மத்தியக் குழு உறுப்பினர்கள் 23-9-2002 அன்று காலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலையினைப்பற்றி விவாதித்தனர். மத்தியக் குழு உறுப்பினர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை 24-9-2002 மற்றும் 25-9-2002 ஆகிய நாட்களில் நேரில் பார்வையிட்டனர். இக்குழுக்கள் தமிழ்நாட்டில் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய 15 மாவட்டங்களைப் பார்வையிட்டனர். 26-9-2002 அன்று சென்னையில் இக்குழு மாநில அரசின் பல்வேறு துறை அலுவலர்களுடன் மீண்டும் இது குறித்து விவாதித்து பல்வேறு விவரங்களைப் பெற்றனர்.

**மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் கோரிக்கை**

மத்திய ஆய்வுக்குழு தனது ஆய்வினை முடித்த பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு 23-10-2002 அன்று அனுப்பிய கடிதத்தில் தமிழகத்தில் போதிய மழையின்மையால் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் குறுவை சாகுபடிக் காலத்தின் முடிவில் சுமார் 12.32 இலட்சம் ஹெக்டேர் குறுவைப் பயிர் சாகுபடிப்

[2003 ஏப்ரல் 10

பரப்பு குறைந்துள்ளதாகவும், இதனால் ரூ. 3,200 கோடி வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்றும், சுமார் 21.84 கோடி மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், நீர்த்தேக்கங்களில் குறைவான நீர் இருந்ததால் சுமார் ரூ.750 கோடி மதிப்புள்ள புனல் மின் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். எனவே, தமிழகத்தில் நிலவும் கடுமையான வறட்சி நிலையினைச் சமாளிக்க உடனடி நிவாரணமாக, பயிரிடப்பட்டு வறட்சியினால் உற்பத்தி குறைந்த நிலங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.187 கோடியும் வேளாண்மை செய்யவியலாத காரணத்தினால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்ட இனங்களுக்கு நிவாரணமாக ரூ. 98.13 கோடியும் காய்ந்த தென்னை மரங்களுக்கு இழப்பீடாக ரூ.60.99 கோடியும், விவசாயிகளுக்கு விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்க ரூ. 7.39 கோடியும், கால்நடைத் தீவனங்கள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்க ரூ. 30 கோடியும், விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் வழங்கப்பட்ட கடன் மீதான வட்டியினைத் தள்ளுபடி செய்ய ரூ.381.06 கோடியும், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு ரூ.281.19 கோடியும், குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ. 75 கோடியும், தரிசு நில மேம்பாட்டிற்காக கூடுதல் உதவித்தொகையாக ரூ.100 கோடியும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட மின் உற்பத்தி இழப்பினை ஈடு செய்ய ரூ.325 கோடியும், ஆக மொத்தம் ரூ.1545.76 கோடி தேசிய பேரிடர் நிவாரணத் தொகையில் கையிருப்பிலுள்ள பேரிடர் நிவாரண நிதியான ரூ.112.18 கோடி போக மீதித் தொகை ரூ.1433.58 கோடி அல்லது ரூ.1434 கோடி நிவாரணத் தொகையாக உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்காக 5.5 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்யுமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

**மத்திய அரசின் நிவாரண நிதி ஒதுக்கீடு**

அதனைத் தொடர்ந்து மத்தியக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்திய அரசின் மேலாண்மை அமைச்சக சிறப்புச் செயலர் அவர்களின் கடித எண். 30-18/2002/வேளாண்மை/கூட்டுறவு, நாள்:17-12-2002-ன்படி தமிழ்நாட்டிற்கு வறட்சி நிவாரணமாக ரூ. 228.30 கோடி நிதியினை தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து (NCCF) வழங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-



2003 ஏப்ரல் 10]

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 1. வேளாண்மை இழப்பீடு | 20.77 |
| 2. தென்னை மரங்களுக்கு இழப்பீடு | 36.00 |
| 3. சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கு இழப்பீடு | 91.53 |
| 4. கால்நடை தீவனம் | 20.00 |
| 5. ஊரக குடிநீர் வசதிகளுக்கு | 35.00 |
| 6. நகர குடிநீர் வசதிகளுக்கு | 25.00 |
| மொத்தம் | 228.30 |

பேரிடர் நிவாரண நிதியத்தில் மீதமிருந்த தொகையினைக் கழித்த பிறகு, இந்திய அரசு ரூ.133.09 கோடி வழங்கியுள்ளது. இந்தத் தொகையினை வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**காவிரி டெல்டா விவசாயிகளுக்கு பரிசுப் பை வழங்குதல்**

கர்நாடக அரசு மேட்டூர் அணைக்கு குறுவைப் பயிருக்குத் தேவையான தண்ணீர் திறந்து விடாததினால், குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இம்மாவட்டங்களில் நெல் சாகுபடிக்குப் போதுமான தண்ணீர் இல்லாததினால் ஒவ்வொரு ஆண்டும் குறுவை, சம்பா பயிரிடப்படும் சராசரி பரப்பளவிற்கும் குறைவாக பயிரிடப்பட்டதால் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். இம்மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையைக் கருதி, 2002ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையில் தமிழக சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 28-10-2002 அன்று அறிவித்தபடி காவிரி டெல்டா மாவட்டங்களில் வாழும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, தேங்காய் ஒன்று, 250 கிராம் இனிப்பு, 7 ரூபாய் மதிப்புள்ள காய்கறிகள், 100 கிராம் நெய், 200 கிராம் பாசிப்பருப்பு, 50 கிராம் மஞ்சள், 50 கிராம் கடுகு, 50 கிராம் உலர்ந்த மிளகாய் மற்றும் ரொக்கமாக ரூ. 50/- ஆக மொத்தம் ரூ. 210 மதிப்புள்ள ஒரு பரிசுப் பையினை பத்து இலட்சம்

[2003 ஏப்ரல் 10

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பயனடைய ஆணை பிறப்பித்தார்கள். இவ்வாணையின்படி, காவிரி டெல்டா மாவட்டங்களில் வாழும் அனைத்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் பரிசுப் பை வழங்கப்பட்டது.

**முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அரசு வழங்கிய ஏழை விவசாயக் குடும்பங்களுக்கான சிறப்பு மதிய உணவுத் திட்டம்**

தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்ட காரணத்தினால், வறட்சியால் பாதிக்கப் பட்டு வறிய நிலையில் உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயக் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அரசு முடிவு செய்து அவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தினை சென்னை மாவட்டம் நீங்கலாக தமிழ்நாட்டின் 28 மாவட்டங்களிலும் 15-01-2003 பொங்கல் திருநாள் முதல் நடைமுறைப் படுத்த ஆணையிட்டது. பருவமழை பொய்த்ததால் வேலையின்றி, விளைச்சலின்றி, அதனால் வருமானமிழந்து உண்ண உணவின்றி வருந்தும் விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு குறு விவசாயக் குடும்பத்தினர் அனைவரும் அருகிலுள்ள சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் 26,074 கிராமப்புற சத்துணவு மையங்கள் மூலம் மதிய உணவு உண்டு பசி போக்கிட உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகளை அடையாளங்காணும் பொறுப்பு ஊராட்சி/ஊரக பேரூராட்சித் தலைவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்குக் கூட்டாக வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாரமும் அச்சடிக்கப்பட்ட கூப்பன்கள் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் வழங்கப்பட்டன. இத்திட்டம் தொடங்கப்பட்ட பொங்கல் திருநாளான 15-01-2003 அன்று அனைத்துப் பயனாளிகளுக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. 4-2-2003 தேதிய நிலவரப்படி இத்திட்டத்தில் 14.03 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் பதிவு செய்து பயனடைந்தனர்.

**பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம்**

சிறப்பு மதிய உணவுத் திட்டத்தில் உணவு உட்கொள்ளும் பயனாளிகள் தாங்கள் வேலை செய்யும் இடத்திற்கும், மதிய உணவு



2003 ஏப்ரல் 10]

உட்கொள்ளும் மையத்திற்கும் அதிக தொலைவு உள்ளதால் தினமும் சத்துணவு மையத்திற்குச் சென்று உணவு உட்கொள்ளுதல் மிகுந்த சிரமத்தினை அளிப்பதாலும் சில சமயங்களில் தங்கள் வேலைகளைப் பாதியில் விட்டு விட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விடுத்த கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்து சிறப்பு மதிய உணவுத் திட்டத்தில் பட்டியலில் சேர்க்கப்பட்ட பயனாளிகள் குடும்பத்திற்கு சிறப்பு மதிய உணவுக்குப் பதிலாக 30 கிலோ அரிசி ஒவ்வொரு மாதமும் இலவசமாக வழங்கப்படும் என்றும், 30 கிலோ அரிசியை இரண்டு தவணைகளில் 15 கிலோ வீதம் இருவாரத்திற்கொருமுறை (Fortnightly) வழங்கப்படும் என்றும் என்றும், இத்திட்டம் 5-2-2003 முதல் அமலுக்கு வரும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31-1-2003 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி இத்திட்டம் 5-2-2003 முதல் சென்னை நீங்கலாக உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழக மாநிலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலமாக அறிவித்தல்**

2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் குறைவான மழையளவே பெறப்பட்டுள்ளது. அதனால் தமிழ்நாட்டிலுள்ள 16 பெரும் நீராதாரங்களில் 10 நீராதாரங்களில் கடந்த ஆண்டில் இருந்த நீர் கொள்ளளவைவிடக் குறைவாக, அதாவது, அந்நீராதாரங்களின் மொத்த நீர் கொள்ளளவில் 16 சதவீதம் மட்டுமே நீர் இருந்தது. மேலும், தமிழ்நாட்டிலுள்ள மொத்த சிறு/நடுத்தர நீராதாரங்களில் 90 சதவீதம் நீரின்றி வறண்டுள்ளன. இச்சூழ்நிலையில் குறுவை சராசரி சாகுபடிப் பரப்பளவான 24.89 இலட்ச ஹெக்டேர் அளவில் 13.979 இலட்சம் ஹெக்டேர் மட்டும் பயிரிடப்பட்டது. குறிப்பாக, மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக போதிய அளவு பாசன நீர் கிடைக்காததால் 2.074 இலட்ச ஹெக்டேர் நெல் சாகுபடி பரப்பளவில் 0.512 இலட்ச ஹெக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டது. மீதமுள்ள 1.562 இலட்ச ஹெக்டேர் நிலங்கள் தரிசு நிலங்களாக விடப்பட்டன. இதே போன்று சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடிக்காக போதிய பாசன நீர் கிடைக்காததால் சராசரி சாகுபடி பரப்பளவிற்கும் மிகக் குறைந்த அளவே பயிரிட முடிந்தது. இதனால் விவசாய உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும் நிலத்தடி நீரின் அளவு அனைத்து மாவட்டங்களிலும் குறைந்துள்ளதால் பெரும்பாலான மாவட்டங்களில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை வருங்காலத்தில் ஏற்படும் என

மாவட்ட ஆட்சியர்கள் அறிக்கை அளித்திருந்தனர். வறட்சி நிலையினைச் சமாளிக்க ரூ.142.00 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டும், வரும் மாதங்களில் கடுமையான குடிநீர் பிரச்சினையினை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனக் கருதப்பட்டது. போதிய பருவமழை இல்லாததினால் தமிழ்நாட்டில் உள்ள 2 கோடி கால்நடைகளுக்குத் தீவனப் பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிகிறது. சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களில் போதிய நிவாரணப் பணிகளை கிராமப்புற வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்வதற்காக தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக 24-1-2003-ல் அறிவிக்கப்பட்டுள்ளன.

**மீண்டும் மத்தியக் குழு வருகை**

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிலவும் வறட்சி நிலையினை நேரில் ஆய்வு செய்யவும் மற்றும் ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா எனப் பார்வையிடவும், மத்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை, இணைச் செயலாளர், திரு. ஆஷிஷ் பஹுகுணா தலைமையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் அடங்கிய குழு 28-1-2003 அன்று வருகை தந்தது. மத்தியக் குழு உறுப்பினர்கள் தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சில மாவட்டங்களான தர்மபுரி, சேலம், தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை 28-1-2003 முதல் 31-1-2003 வரை நேரில் பார்வையிட்டனர். ஆய்விற்குப் பிறகு மத்தியக் குழு 31-1-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிலவி வரும் வறட்சியின் தன்மையினைப் பற்றி விவாதித்தது. ஆய்வுக்குப் பின்னர் மத்தியக் குழுவிடம் தமிழக அரசு வறட்சி 2003 தொடர்பான கோரிக்கை மனுவினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்தார்கள். சென்னையில் இக்குழு மாநில அரசின் பல்வேறு துறை அலுவலர்களுடன் 1-2-2003 அன்று மீண்டும் இது குறித்து விவாதித்து பல்வேறு விவரங்களைப் பெற்றனர்.

**மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் கோரிக்கை**

மத்திய குழுவினரிடம் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுக்களில் தமிழகத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் கடுமையான வறட்சி நிலையினைச் சமாளிக்க நிவாரணமாக, பயிரிடப்பட்டு வறட்சியினால்



உற்பத்தி குறைந்த நிலங்களுக்கு, நிவாரணத் தொகையாக ரூ.419.55
கோடியும், வேளாண்மை செய்யவியலாத காரணத்தினால் வேளாண்
உற்பத்தி பாதிக்கப்பட்ட இனங்களுக்கு நிவாரணமாக ரூ.144.53 கோடியும்,
நடப்பு ஆண்டிற்கு குறுகிய மற்றும் நடுத்தர காலக்கடன் மேலான
அசல் நிலுவை கேட்பினைக் கைவிட ரூ.240.54 கோடியும், கூட்டுறவு
கடன்களின் மேலான வட்டி தொகையினைக் கைவிட
ரூ.408.09 கோடியும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும்
நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை
உருவாக்கும் பொருட்டு ரூ. 162.00 கோடியும், குடிநீர்த் திட்டங்களைச்
செயல்படுத்துவதற்காக, ரூ. 239.56 கோடியும் (சென்னைக் குடிநீரின்
தேவையையும் சேர்த்து), தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட
மின் உற்பத்தி இழப்பினை ஈடுசெய்ய ரூ.345 கோடியும், ஏழை விவசாயக்
குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்குச் செலவு
செய்யப்படவுள்ள தொகையினை ஈடு செய்வதற்காக ரூ. 101.70 கோடியும்,
கால்நடை பராமரிப்புத் துறை தொடர்பான நிவாரணப் பணிகளுக்கு
ரூ. 18.48 கோடியும் மற்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ. 14.47
கோடியும் ஆக மொத்தம் ரூ. 2094 கோடியினை நிவாரண தொகையாக
தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து (NCCF) உடனடியாக
வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். அத்துடன்
வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்காக 9 இலட்சம் மெட்ரிக் டன்
கூடுதல் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்யுமாறும் வலியுறுத்திக்
கேட்டுக் கொண்டார்.

**வேலைக்கு உணவுத் திட்டம்**

காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர் பாதிக்கப்பட்டதால்
விவசாயிகளின் துயர் துடைப்பதற்காக சிறப்பு நிவாரணத் திட்டம்
ஒன்று அரசாணை எண். 75, வருவாய்த் துறை நாள் 31-1-2003-ல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.217.09 கோடி செலவில்
தொடங்க ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தினைச் சீரிய முறையில்
செயல்படுத்த மாநில அளவில் உயர்மட்டக் குழு ஒன்று மாண்புமிகு
அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்)
தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களிலும், ரூ.341.92
கோடி செலவில் வேலைவாய்ப்பு உருவாக்கும் பெருந்திட்டம் ஒன்றை
அரசு இவ்வாண்டு செயற்படுத்தும். வேலைக்கு உணவு வழங்கும்

[2003 ஏப்ரல் 10

இந்தச் சிறப்புத் திட்டத்தில் ரொக்கத் தொகையும், அரிசியும் சேர்த்து ஊதியமாக வழங்கப்படும். ரொக்கத் தொகை வழங்குவதற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 85.48 கோடி ஆகும். மேலும் ரூ. 256.44 கோடி மதிப்புள்ள அரிசியும் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

28-03-2003 அன்று சட்டசபையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1412 பசலி ஆண்டிற்கான நில வரியும், உள்ளூர் தல வரி மற்றும் உள்ளூர் தல மேல்வரி ஆகியவை வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று அறிவித்தார்கள். மேலும், குறுவை மற்றும் சம்பா பருவங்களில் சாகுபடி செய்து, 50 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, பாசன வசதி படைத்த பயிர்களாக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு 2,500/- ரூபாயும், நிரந்தரப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு 4,000/- ரூபாயும், மானாவாரிப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு 1,000/- ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படும் என்றும், வழக்கமாக பயிரிடப்பட்டு இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக குறுவை பருவத்திலோ அல்லது சம்பா பருவத்திலோ பயிரிட முடியாத விவசாயிகளுக்கு மேற்கண்ட அளவில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இதற்காக மொத்தம் ரூ.250 கோடி ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சிறு மற்றும் குறு விவசாயிகள் நடப்பு ஆண்டில் பெற்றுள்ள குறுகிய காலக் கடன்கள் மீது செலுத்த வேண்டிய வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவித்தார்கள்.

**தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இதுவரை வழங்கப்பட்ட நிவாரணம்.**

தமிழ்நாட்டில் நிலவி வரும் வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு நடப்பு நிதியாண்டில் (2002-2003) ரூ.272.85 கோடியினை பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் எதிர்பாராச் செலவினத்திலிருந்து பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு பல்வேறு அரசாணைகளில் வழங்க ஆணை பிறப்பித்தது.

**பேரழிவு மேலாண்மை**

தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஒரு குழுவும், சம்பந்தப்பட்ட அரசுச் செயலாளர்களை அமைப்பாளர்களாகக் கொண்ட கீழ்க்கண்டவாறு ஐந்து துணைக் குழுக்களும் மாநில மற்றும் மாவட்ட அளவில் மனிதர்களால்



2003 ஏப்ரல் 10]

ஏற்படுத்தக்கூடிய பேரழிவுகள் உட்பட எல்லாவிதமான பேரழிவுகளையும் கையாளும் பொருட்டு பேரழிவு மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிக்க அமைக்கப்பட்டுள்ளன. (1) நீர் மற்றும் தட்பவெப்பம் தொடர்பான பேரழிவுகள், (2) புவியியல் தொடர்பான பேரழிவுகள், (3) இரசாயனம்/தொழிற்சாலை/ அணுக்கதிர் தொடர்பான பேரழிவுகள், (4) விபத்துகள் தொடர்பான பேரழிவுகள் மற்றும் (5) உயிரியல் தொடர்பான பேரழிவுகள்.

விபத்துகள் தொடர்பான பேரழிவு மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. இதர பேரழிவு மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

**2.12. நலத்திட்டங்கள்**
**நலிந்தோர் குடும்ப நலத்திட்டம்**

பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால், அவரை இழந்து நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயரினைத் துடைக்கும் பொருட்டு, அக்குடும்பத்திற்கு ரூ.10,000/- நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த முழுத் தொகையையும் மத்திய அரசே தனது தேசிய சமூக உதவித் திட்டத்தின் பகுதித் திட்டமான தேசியக் குடும்ப நலத்திட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்குக் குடும்ப ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ.7,200/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 1996-97 முதல் 2001-2002 வரை வழங்கப்பட்ட நிதியுதவி இணைப்பு-4-ல் கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, 2002-2003ஆம் நிதி ஆண்டிலிருந்து மாநில அரசுகளே இத்திட்டத்தினை தேவைக்கேற்பச் செயல்படுத்தலாம் என்று கொள்கை முடிவை எடுத்துள்ளது. அதற்கேற்ப கூடுதல் நிதியை மத்திய அரசு வழங்கும்.

**விபத்து நிவாரணத் திட்டம்**

44 வகை ஏழைத் தொழிலாளர்கள் தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் இறக்க நேரிட்டால் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.15,000/- நிவாரணமாக வழங்கப்படுகிறது. மேற்படி தொகையில், ரூ.10,000/- தொகையை மத்திய அரசு அதன் தேசிய சமூக உதவித் திட்டத்தின் பகுதித் திட்டமான தேசிய குடும்ப நலத்திட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்கிறது. எஞ்சிய ரூ.5,000/- தொகையை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

[2003 ஏப்ரல் 10

விபத்தில் உடல் ஊனமடைவோருக்கு அவர்களுடைய ஊனத்தின் அளவிற்கேற்றவாறு நிவாரணமாக ரூ.7,500/-முதல் ரூ.15,000/- வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 1996-97 முதல் 2001-2002 வரை வழங்கப்பட்ட நிதியுதவி இணைப்பு-5-ல் கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு 2002-2003ஆம் நிதி ஆண்டிலிருந்து மாநில அரசுகளே இத்திட்டத்தினை தேவைக்கேற்பச் செயல்படுத்தலாம் என்று கொள்கை முடிவை எடுத்துள்ளது. அதற்கேற்ப கூடுதல் நிதியை மத்திய அரசு வழங்கும்.

## அத்தியாயம் - 3

## நில நிர்வாகம்

அனைத்து நிலங்களுக்கும் வருவாய்த் துறையே காப்பாளராக உள்ளது. அதேபோல் அனைத்து நில முடிவுகளுக்கும் வருவாய்த் துறையே சம்பந்தப்பட்டுள்ளது. நிலங்கள், அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் வகைப்பாடு செய்யப்படுகின்றன. நத்தம் புறம்போக்கு, தீர்வை விதிக்கப்பட்ட புன்செய் தரிசு, தீர்வை விதிக்கப்பட்ட நன்செய் தரிசு, தீர்வை ஏற்படாத புன்செய் தரிசு, குட்டை, குளம், ஓடை, ஆறு என்று சொல்லப்படும் நீர்நிலைப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, மந்தைவெளிப் புறம்போக்கு தோப்பு, பாதை, வண்டிப் பாதை, கல்லாங்குத்து கோயில் புறம்போக்கு மற்றும் மயானப் புறம்போக்கு ஆகியவை முக்கியமான வகைப்பாடுகளாகும். அரசு நிலங்கள், ஒப்படை, நிலமாற்றம், உரிமை மாற்றம் மற்றும் குத்தகை மூலமாக பல்வேறு உபயோகங்களுக்காக அளிக்கப்படுகின்றன. நிலங்கள் குறைவாக உள்ளதால் அரசு நிலங்களை இவ்வாறு அளிப்பது மிகக் கவனத்துடன் மேற்கொள்ளப்படுகிறது.

### 3.2 நில ஒப்படை

வீட்டுமனை மற்றும் விவசாயத்திற்காக அரசு நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன.

### வீட்டுமனை ஒப்படை

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரை முன்னேற்றுவதற்காகவும் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், மாநிலத்தில் கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள தகுதி வாய்ந்த நபர்களுக்கு வருவாய் நிலை ஆணை எண். 21-இன்கீழ் அரசு வீட்டுமனை ஒப்படை செய்து வருகிறது. கிராமப்புறங்களில் ஆண்டு வருமானம் ரூ. 16,000/-க்கு கீழ் உள்ளவர்களுக்கும், நகர் புறங்களில் ஆண்டு வருமானம்



2003 ஏப்ரல் 10]

ரூ. 24,000/- க்குகீழ் உள்ளவர்களுக்கும் இலவசமாக வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. மகளிர் நலத்தினைக் காக்கும் வகையில் மனைவி, அல்லது பெண்கள் பெயரிலேயே வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. தற்போதுள்ள விதிகளின்படி கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அரசால் ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறும் பொருட்டு அரசால் ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை அடமானம் செய்வதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டுமனை ஒப்படை செய்வதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளிக்கப்படுகிறது:—

(அ) எல்லைப்புறப் பாதுகாப்புப்படை மற்றும் பிரதேச இராணுவப்படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது உடல் ஊனமுற்றோர் குடும்பங்கள்.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்.

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்.

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்.

(ஊ) நிலமற்ற ஏழைகள்.

வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பின்வருமாறு நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது:—

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ. 10,000 |
| 2. கோட்டாட்சியர் | ரூ. 20,000 |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000 |
| 4. மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. அரசு | ரூ.2,50,000-க்கு மேல். |

[2003 ஏப்ரல் 10

*2002-2003-ல்* மாநிலம் முழுவதும் *30,000* வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பினும் *31-3-2003* வரை இலக்கிற்கு மேலாக, அதாவது *63,339* வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விவரங்கள் இணைப்பு-6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விவசாய நில ஒப்படை**

விவசாயத்திற்குத் தகுதிவாய்ந்த நிலம் உற்பத்திக்கு ஒரு இன்றியமையாத காரணமாக இருப்பதோடு, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகிறது. கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையே நம்பி இருப்பதால் ஏழை மக்களுக்கு விவசாயத்தையும் அதனைச் சார்ந்த தொழில்களையும் மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வது ஆகிய இரு குறிக்கோள்களை அடைவதற்கு அரசு உதவி வருகிறது. விவசாய நில ஒப்படை வருவாய் நிலை ஆணை எண். 15-ன்கீழ் செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்தில் எவ்வளவு உறுப்பினர்கள் இருந்தபோதிலும், கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 16,000/- க்கு குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு குறைவாக உள்ளவர்களுக்கும் இலவசமாக விவசாய நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்குப் பின்பற்றப்படும் அதே முன்னுரிமை வரிசை, விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அரசிடம் இருக்கும் நிலங்களை விவசாயத்திற்காக ஒப்படை கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நிலங்களை இயன்ற அளவில் ஏழை மக்கள் பலருக்கு சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. எனவே, ஒரு நபருக்கு ஒப்படை செய்யப்படுவதற்கான அதிகபட்ச வரம்பினை அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதன்படி கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவுப் பரப்பு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப் பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து மூன்று ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு இருக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு நிலங்களின் பரப்பு மிகவும்



2003 ஏப்ரல் 10]

குறைவாக இருப்பதாலும் அந்நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும் இந்த உயரளவு அம்மாவட்டத்தில் ஒரு ஏக்கர் புன்செய் அல்லது அரை ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் தற்போது இவ்வொப்படைகள் மனைவி அல்லது பெண் உறுப்பினர்கள் பெயரில்தான் செய்யப்படுகின்றன. இது தொடர்பான விவரங்கள் இணைப்பு-7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அரசு, ஏழை மக்களின் மறுவாழ்வுக்காக நிலங்களை இலவசமாக வழங்குகிறது. ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில், அவை வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் விவசாயம் செய்யப்பட வேண்டும். ஆனால், சில ஒப்படைதாரர்கள் எந்தக் காரியத்திற்காக நிலம் அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதோ அக்காரியங்களுக்காக அவற்றினைப் பயன்படுத்துவதில்லை. ஒரு சிலர் அவற்றை வீட்டுமனைகளாக மாற்றி விற்பனை செய்துவிடுகின்றனர். இதனைத் தடுப்பதற்கு ஒப்படை செய்யப்பட்ட நிலத்தை, பத்து ஆண்டு காலத்திற்குள் விற்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ கூடாது என்றும், பத்து ஆண்டுகளுக்குப் பின்னரும் நிலங்களை விற்பனை செய்ய விரும்பினால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்படை செய்யப்படுகின்றன. இருப்பினும் ஒப்படை பெற்ற நிலத்தில் பயிரிடுவதற்கு கடன் வாங்கும்பொருட்டு ஒப்படை பெற்ற நிலங்களை, அரசு உடைமையாக்கப்பட்ட தேசிய வங்கிகளில் அடமானம் வைக்கலாம். அந்நிலத்தை ஒப்படைதாரர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் நேரடியாகவோ அல்லது கூலியாட்களைக் கொண்டோதான் பயிரிட வேண்டும். மேலும் ஒப்படைதாரர் குறைந்தது பத்து மரங்களை ஒப்படை நிலத்தில் நட வேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால், எவ்வித இழப்பீடும் வழங்காமல் நிலத்தை அரசு மீள எடுத்துக்கொள்ளும்.

சமூகப் பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும். எனவே, குளம், குட்டை, வாய்க்கால், அருவி போன்ற நீர்வழி/நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் மந்தைவெளி, மேய்க்கால் புறம்போக்கு, மயானம் புறம்போக்கு ஆகியவற்றை ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. மண் அரிமானத்தைத் தடுப்பதற்கும். இயற்கைச் சமன்பாட்டினை பாதுகாக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் நில ஒப்படை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை, மற்றும் பெருநகர் பகுதிகளில் பிற்கால வளர்ச்சிப் பணிக்கு அரசு

[2003 ஏப்ரல் 10

நிலத்தேவையைக் கருத்தில் கொண்டு சென்னை மற்றும் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட புறநகர் பகுதி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது போலவே அரசாணை நிலை எண் 60, நாள் 6-2-1999-ல் விவசாய நில ஒப்படை செய்வதற்கும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு பின்வருமாறு நிதி அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது:—

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ. 10,000 |
| 2. கோட்டாட்சியர் | ரூ. 20,000 |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000 |
| 4. மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. அரசு | ரூ.2,50,000/-க்கு மேல் |

### 3.3. நிலக் குத்தகை

அரசு நிலங்கள், தனி நபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, வருவாய் நிலை ஆணை 24-ஏ-ன்கீழ் வணிக/வணிகமற்ற நோக்கங்களுக்கு, குறிப்பிட்ட கால அளவிற்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. நிலமதிப்பின் அடிப்படையில் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள குத்தகை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நோக்கம் | குத்தகைத் தொகை. | தலவரி | தலமேல் வரி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |
| வணிகமற்ற நோக்கம் | 1% | 1% | 5% | 7% |

பொதுவான குத்தகைக் காலம் ஒரு தடவையில் மூன்றாண்டுகள் ஆகும். எனினும், அதிகபட்சமாக முப்பது ஆண்டுகளுக்கு அரசு நிலம் குத்தகைக்கு வழங்கப்படுகிறது. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை திருத்தியமைக்கப்படும். அரசு நிலங்களைக்



2003 ஏப்ரல் 10]

குத்தகைக்கு வழங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பு பின்வருமாறு உள்ளது:—

| அதிகாரிகள் | நிதி அதிகார வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர்கள் | - |
| 2. கோட்டாட்சியர் | ரூ.20,000/- |
| 3. மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000/- |
| 4. நிலநிர்வாக ஆணையர் | ரூ.2,00,000/- |
| 5. அரசு | ரூ. 2,00,000/-க்கு மேல், |

குத்தகைப் பத்திரத்தில் தற்போது புதிதாக ஒரு நிபந்தனை சேர்க்கப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் குத்தகையைப் புதுப்பித்து குத்தகைத் தொகை திருத்தியமைக்கப்படும் வரை, குத்தகை தாரரிடமிருந்து நிலத்தின் அப்போதைய சந்தை மதிப்புத் தொகையுடன் ஆண்டு ஒன்றிற்கு ஊக்க உயர்வு சேர்த்து உத்தேசத் தொகை கணக்கிட்டு முன்கூட்டியே வசூலிக்கப்பட வேண்டும். குத்தகை புதுப்பிக்கப்படும் வரை அரசுக்குச் சேரவேண்டிய வட்டியுடன் கூடிய குத்தகைத் தொகை முடங்கிவிடாமல் அலுவலர்களால் வசூல் செய்யப்படுவதற்கு இப்புதிய நிபந்தனை வழிவகை செய்கிறது.

### 3.4. நிலமாற்றம்

அரசுப் புறம்போக்கு நிலங்கள் மத்திய அரசுத் துறைகளுக்கு சந்தை மதிப்புப் படியான நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டு வருவாய் நிலை ஆணை எண் 23-ன்கீழ் நிலமாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இருப்பினும், சென்னை துரித இரயில் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மாநில அரசு துறைகளைப் பொறுத்தமட்டில், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றிற்காகத் தேவைப்படும் நிலங்கள், வருவாய் நிலை ஆணை எண் 23 அ-வின் கீழ் நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. வணிக நோக்குடனான பணிகளுக்கு நிலக்கிரயம் வசூலிக்கப்படுகிறது. போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறை போன்ற துறைகளுக்குத் தேவைப்படும் நிலங்களைப் பொறுத்தவரை

[2003 ஏப்ரல் 10

ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் குறைந்தபட்ச பரப்பினை வழங்க மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நில ஒதுக்கீடு பெற்ற துறைகள் எந்தத் தேவைகளுக்காக நிலமாற்றம் பெற்றதோ அந்தத் தேவைகளுக்காக முழுமையாக பயன்படுத்தாதபோது, அந்நிலங்கள் மீளப் பெறப்பட்டு தேவையான துறைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.5. நில உரிமை மாற்றம்

அரசு புறம்போக்கு நிலங்கள், பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களுக்கு வருவாய் நிலையாணை 24ன்கீழ் சில நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு, குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றியும், இதர காரியங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக்கிரயமாக ரூ.5,000/- வசூலித்துக் கொண்டும் அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதே போன்று தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதர கேட்பு நிறுவனங்களுக்குச் சந்தை மதிப்பு அல்லது அதற்கு மேல் வசூலிக்கப்பட்டு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50 சதவீதம் நிலக்கிரயமாக வசூலித்துக் கொண்டு உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஒரு மடங்கு நிலக்கிரயம் வசூலித்து உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படின் எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் வழங்காமல், நிலங்கள் அரசால் மீளப் பெறப்படுகின்றன.

### 3.6. நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

அரசு நிலம் அரிதாகி வரும் நிலையில் அரசின் கைவசமுள்ள நிலங்களை தகுதியுள்ள ஏழை மக்களுக்கு ஒப்படை செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு நன்மை செய்யும் வளர்ச்சித் திட்டங்களுக்கு உபயோகப்படுத்துதல் போன்ற ஆக்க வழிகளில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். குறிப்பிட்ட பொதுக்காரியங்களுக்கென ஒதுக்கப்படாத அரசு நிலங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகள் பொதுவாக ஆட்சேபணையற்றவையாகக் கருதப்பட்டு, அவ்வாக்கிரமிப்புகளின்



2003 ஏப்ரல் 10]

தன்மையைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் வரன்முறைப் படுத்தப்படுகின்றன. நீர்நிலை, நீர்வழி, மேய்க்கால், களம், கோவில், நிலங்கள் போன்ற புறம்போக்கு நிலங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகள் கடும் ஆட்சேபணைக்குரியவையாகக் கருதப்பட்டு உடனடியாக அகற்றப்பட வேண்டும். 1905 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின்படி, அறிவிப்புக் கொடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை இனங்கண்டு அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்றுவதற்காக, அந்தந்த மாவட்டாட்சியர்கள் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1 | மாவட்டாட்சியர் | தலைவர் |
| 2 | மாவட்ட அளவிலான காவல்துறை அதிகாரி | உறுப்பினர் |
| 3 | பொதுப் பணித் துறையின் மாவட்ட அளவிலான நீர்வள ஆதார செயற் பொறியாளர் | உறுப்பினர் |
| 4 | நெடுஞ்சாலைத் துறையின் கோட்டப் பொறியாளர் | உறுப்பினர் |
| 5 | வனத் துறையின் மாவட்ட வன அலுவலர் | உறுப்பினர் |
| 6 | மாவட்ட வருவாய் அலுவலர் | உறுப்பினர் செயலாளர் |
| 7 | ஊரக வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| 8 | பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| 9 | நகராட்சி நிர்வாகத் துறையின் மண்டல இயக்குநர் | உறுப்பினர் |
| 10 | மாநகராட்சியின் ஆணையர் | உறுப்பினர் |
| 11 | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது அவரது சார்பாளர் | உறுப்பினர் |

மேற்கண்ட குழுவானது மாதம் ஒரு முறை கூடி, ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்த செயல்திட்டத்தை வகுக்கும். மாவட்ட அளவிலான மேற்படிக் குழுக்களின் செயல்பாட்டினை மாநில அளவில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தணிக்கை செய்கிறார்.

ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை விரைந்து அகற்ற ஏதுவாக நடைமுறைகளை எளிமையாக்க புதிய ஆக்கிரமிப்பு அகற்றல் சட்டம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படும்.

### 3.7. மரப்பட்டாத் திட்டம்

மரப்பட்டா வழங்கும் திட்டமானது நீண்டகாலமாகவே மாநிலத்தில் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்படி, அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமை, அம்மரங்களைப் பராமரிக்கக்கூடிய வகையில், அருகிலுள்ள நிலச் சொந்தக்காரருக்கு வழங்கப்படுகின்றது. எனினும், மேற்படிப் புறம்போக்கு நிலத்தின் மீதும் அதிலுள்ள நிற்கும் மரங்களின் மீதும் உள்ள உரிமை அரசிடமே உள்ளது. மரப்பட்டாத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை தரப்படுகின்றது.

### 3.8. நில எடுப்பு

பட்டா நிலங்கள், பல்வேறு பொது நோக்கங்களுக்காகவும் மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்காகவும் 1894ஆம் ஆண்டின் நில எடுப்புச் சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 1/1894) கையகப்படுத்தப்படுகின்றன. நில எடுப்புப் பணி வருவாய்த் துறை அலுவலர்களின் மிக முக்கியமான பணியாகும். இப்பணி நில நிர்வாகத் துறையின் வழிகாட்டுதலில் மாவட்ட வருவாய் அளவிலான பணியாளர்களின் முழு ஒத்துழைப்போடு செயல்படுத்தப்படுகிறது. 1894 ஆம் ஆண்டின் நில எடுப்புச் சட்டத்தின் சாதாரணப் பிரிவின்கீழ், நிலத்தை கையகப்படுத்தும்போது, இச்செயல்முறைகளை மூன்றாண்டுகளில் முழுமையாக முடிக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நில எடுப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்க திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்தி முறைப்படிவம் (Pert Chart) அறிமுகப்படுத்தப்பட்டு, சாதாரணப்பிரிவின் கீழ் நிலம் எடுக்கப்படும் போது ஆட்சேபணையுள்ள இனங்களில் 563 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும், ஆட்சேபணை அல்லாத இனங்களில் 508 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும், கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நில எடுப்புச் சட்ட அவசரப்பிரிவு 17(1) மற்றும் 17(2)-ன் கீழும் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு





மேற்கொள்ளப்படும் நிலஎடுப்புப் பணியினை முழுமையாக முடிப்பதற்கு 180 நாட்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் 364, வருவாய்த் துறை, நாள் 21-9-2001-ன்படி நில மதிப்பீட்டுத் தொகை வழங்கும் வரையறை பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

| அலுவலரின் பெயர் | 23-1-1995ஆம் நாளிட்ட வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் எண் 65-ல் அளிக்கப் பட்டுள்ள நிதி வரம்பு | 21-9-2001ஆம் நாளிட்ட வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் 364-ல் அளிக்கப் பட்டுள்ள நிதி வரம்பு. |
|---|---|---|
| வட்டாட்சியர் | ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) | ஆட்சேபணை மற்றும் ஆட்சேபேணையற்ற இனங்களில் ரூ.2,50,000 (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வரை |
| கோட்டாட்சியர்/துணை ஆட்சியர் | ரூ.50,000/- (ரூபாய் ஐம்பாதாயிரம்)-க்கு மேல் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) வரை | ஆட்சேபணையுள்ள மற்றும் ஆட்சேபணையற்ற இனங்களில் ரூ.2,50,000 (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்)-க்கு மேல் ரூ.7,50,000 (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வரை |

அரசாணை எண் 1027, வருவாய்த் துறை, நாள் 25-9-1992-ன்படி, மாவட்ட ஆட்சியர் அளவில் ரூபாய் இருபது இலட்சத்திற்குட்படும் நில மதிப்பீடு மற்றும் வரைவுத் தீர்ப்பாணை இனங்களில் ஒப்புதல் அளிக்கலாம். ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட நிலமதிப்பீடு மற்றும் வரைவுத் தீர்ப்பாணை இனங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையரால் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தனியார் பேச்சுவார்த்தை மூலம் இருபது இலட்ச ரூபாய் வரை மதிப்புள்ள நிலங்களை நில உடைமைதாரர்களிடமிருந்து வாங்குவதற்கு மாவட்ட அளவிலான குழுவிற்கு அதிகாரம் உண்டு. இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. வழிகாட்டி பதிவேடுகளில் உள்ள மதிப்பு, நிலத்தின் சந்தை மதிப்பு இவற்றில் எது குறைவோ, அதில் 150 சதவிகிதம்

[2003 ஏப்ரல் 10

அளவிற்கு விலையை ஏற்பதற்கு மாவட்ட மற்றும் மாநில குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தனியார் பேச்சு வார்த்தையின் மூலம் நிலங்கள் வாங்கும் முறைப்படி விரைவில் நிலம் கையகப்படுத்த முடிகிறது.

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாக கையகப்படுத்தும் பொருட்டு, "தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)" என்ற சட்டம் ஒன்று அரசால் தனியாக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டமும் இச்சட்டத்திற்கான விதிகளும் 21-9-2001 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-4

### நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் பராமரித்தல்

### 4.1 இடைத்தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றுதலும்

சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து கீழ்க்கண்ட சட்டங்கள் இயற்றப்பட்டன:

அ. தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம், 26/1948)

ஆ. தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம், 26/1963)

இ. தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும் சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம், 27/1963)

ஈ. தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம், 30/1963)

உ. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம், 24/1969)

ஊ. தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம், 31/1973)



2003 ஏப்ரல் 10]

வேளாண்மை சீர்திருத்தத்தினைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட அனைத்துச் சட்டங்களின் (தமிழ்நாடு சட்டம், 24/69 தவிர) தொடர்பான பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர், அவர்கள் கைப்பற்றி உள்ள நிலங்களுக்கு, 1969ஆம் ஆண்டைய கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம், 24/69) பொருந்தாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். சமீபத்தில் மஞ்சுஸ்ரீ பிளாண்டேசன் மற்றும் சிலர் அளித்த மேல்முறையீடுகளில் மனுதாரர்கள் தங்களது சிவில் மற்றும் ரிட் மேல்முறையீடுகளில் அரசு தக்க ஆணை பிறப்பிக்க வேண்டி தங்களது மேல்முறையீடுகளைத் திரும்பப் பெறுவதாகக் கேட்டதற்கிணங்க, கோரிக்கைகளை ஏற்று, மனுக்களில் அரசு பிரிவு 9 அல்லது 17-ன்கீழ் தக்க ஆணை பிறப்பிக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஐ.ஆர். கோயல்ஹோ மற்றும் இருவரால் தொடரப்பட்ட சிவில் முறையீடு எண் 1344-45/76 மீது அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி, கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 24/69 செல்லத்தக்கதா என்ற கேள்வி எழுப்பியதையடுத்து, இவ்வழக்கை விசாரிக்க ஒன்பது நீதிபதிகள் உள்ளடக்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தடையாணை நீக்கம் செய்யப்பட்ட இனங்களில் தகுந்த ஆணை பிறப்பிக்க அரசாணை எண் 3763, பொதுத் துறை, நாள் 5-9-2001ல் நிலவரித்திட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிக்கை அரசால் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது அளவைப் பணி நடைபெறுகிறது. சட்டபூர்வ விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நில உடைமைதாரர்களுக்கு நட்ட ஈட்டுத் தொகையும், தர்ம சத்திரங்கள், கல்வி மற்றும் ஆலய நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடையும் வழங்க உடைமைகள் ஒழிப்புச் சட்டங்கள் அனைத்திலும் விதிகள் செய்யப்பட்டுள்ளன. நட்ட ஈட்டுத் தொகை நடுவர் நீதிமன்றத்தில் வைப்பு செய்து ஒரே தவணையில் நில உடைமைதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தஸ்திக் கொடை

[2003 ஏப்ரல் 10

சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (இணைப்பு-8)

**4.2 நில உரிமைப் பதிவேடு திட்டம்**

தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு சட்டம், 1983 (சட்டம் 4/86) விவசாய நில உடைமைதாரர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்க வழிவகை செய்கிறது. நில உடைமை உரிமைக்கு சான்றாக விளங்கும் இப்புத்தகம் வாயிலாக, வில்லங்கச் சான்று ஏதுமின்றி, நிதி நிறுவனம், கூட்டுறவு வங்கிகள் இதா வர்த்தக வங்கிகள் ஆகியவை கடன் வழங்க ஏதுவாகிறது.

ஒவ்வொரு நில உடைமைதாரருக்கும் ஒரு வட்டத்தில் அவருக்குச் சொந்தமாக உள்ள நிலம் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய நில உரிமைப் பதிவேடு வழங்கப்படுகிறது. ஒரு நில உடைமைதாரருக்கு ஒரு வட்டத்தில் வெவ்வேறு கிராமங்களில் உள்ள நில விவரங்கள் அனைத்தும் நில உரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன. பிணை அல்லது பிணையேதும் இல்லாமல் தகுதிக்கேற்ப நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் திரும்ப செலுத்தப்படும் விவரம் ஆகியவை நில உரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன. சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரயம் செய்யப்படும் போது கிரயம் தொடர்பான பதிவுகளை நில உரிமைப் பதிவேட்டில் வட்டாட்சியரின் பரிந்துரையின் பேரில் சார்பதிவாளர் மேற்கொள்ள ஏதுவாக நில உரிமைப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிலம் சம்பந்தமான வழக்குகளில் நில உரிமைப் பதிவேட்டின் நகலினையோ அல்லது நில உரிமைப் பதிவேட்டினையோ ஆதாரமாக இணைக்க மனுதாரருக்கு வகை செய்யப்படுகிறது.

இத்திட்டம் முதற்கட்டமாக வேலூர், தஞ்சாவூர், கரூர் (2 வட்டங்கள்), பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தேனி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில் 1-4-1993 முதல் செயல்படுத்தப்பட்டது. நில உரிமைப் பதிவேடு சட்டத்தின் பிரிவு 5, 9 மற்றும் பிரிவு 15 ஆகியவை மேற்குறிப்பிட்ட 9 மாவட்டங்களில் 15-6-2000 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, இரண்டாவது கட்டமாக மற்றுமுள்ள 20 மாவட்டங்களிலும் இத்திட்டம் 1-7-2000 முதல் அமல்படுத்திட ஆணையிடப்பட்டது. இப்பணிக்காக, பிரத்தியேகமாக பணியிடங்கள்



2003 ஏப்ரல் 10]

ஏற்படுத்தப்படாமல், தற்போது உள்ள வருவாய்த் துறை மற்றும் நில அளவைப் பணியாளர்களைக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது. நில உரிமைப் பதிவேடு சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சட்டபூர்வமான படிவங்கள் அனைத்தும் அச்சிடப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. கணினி மூலம் பதிவுகள் மேற்கொண்டு நில உரிமைப் பதிவேடு வழங்க அரசு முடிவு செய்து, இதற்காக ரூ.18.93 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகையில் ரூ.10.00 இலட்சம் எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நில உரிமைப் பதிவேடு அச்சடிக்கும் பணியும், கணினி மூலம் பதிவுகள் மேற்கொள்ளும் பணியும் எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. புலப்பணி மற்றும் விசாரணைப் பணிகள் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.3. நில அளவைப் பதிவேடுகள்**

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களிலும் நகரப்பகுதிகளிலும் நில அளவை, மறுநில அளவை மற்றும் துணை நில அளவை ஆகியவற்றை மேற்கொள்வது நில அளவை பதிவேடுகள் துறையின் பொறுப்பாகும்.

மாவட்டம், வட்டம், கிராமம் மற்றும் நகர வரைபடங்கள் இத்துறையில் தயாரிக்கப்படுகின்றன. இவைதவிர, நகர பிளாக் மற்றும் வார்டு வரைபடங்கள், கிராமப் பஞ்சாயத்துகளுக்கான கூட்டு வரைபடம், மற்றும் தெரு வரைபடங்களும் தயாரிக்கப்படுகின்றன. நிலங்களின் விற்பனை மற்றும் பாகப்பிரிவினை மூலம் ஏற்படும் மாற்றங்களைக் கணக்குகளில் அவ்வப்பொழுது மேற்கொண்டு, நில அளவை ஆவணங்களைப் பேணிப் பாதுகாப்பது இத்துறையின் முக்கிய கடமையாகும்.

அரசின் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு உதவி புரிவதுடன் பொதுமக்களுக்குத் தேவையான புல எல்லை அளத்தல், வருவாய் கணக்குகளில் தேவையான மாற்றம் செய்தல் மற்றும் வரைபடங்கள் வழங்குதல் ஆகியப் பணிகளும் இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

**நத்தம் நில அளவை**

ஆறு, ஏரி, மேய்க்கால் போன்ற இதர புறம்போக்குகளிலிருந்து வேறுபட்டு பொதுமக்களின் குடியிருப்பு உபயோகத்திற்காக உள்ளது

நத்தம் புறம்போக்காகும். நீண்ட நாட்களாக நில அளவை செய்யப்படாமலும், நில உடைமை பட்டா வழங்கப்படாமலும் நத்தம் புறம்போக்கு இருந்து வந்தது. எனவே, நத்தம் பகுதிகளில் விவசாயமல்லாத பிற உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் நிலங்களை அளவை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. தெரு, சாலை மற்றும் சந்துகள், நத்தம் பகுதிகளில் நில அளவை மேற்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | விவரம் | வட்டம் |
|---|---|---|
| 1 | மொத்த வட்டங்கள் | 206 |
| 2 | நில அளவைப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது | 198 |
| 3 | முடிவுற்றவை | 192 |
| 4 | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 6 |
| 5 | நில அளவைக்கு எடுக்க வேண்டியவை | 8 |

இதுவரை மொத்தம் 4,467 ச.கி.மீ. பரப்பு நத்தம் புறம்போக்கு நில அளவை செய்யப்பட்டுள்ளது.

**நகர அளவை**

தமிழ்நாட்டில் 102 நகராட்சிகளும், 6 மாநகராட்சிகளும் உள்ளன. விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றப்பட்டதன் விளைவாக நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் பரப்புகள் விரிவடைந்து இவற்றின் எல்லைகளில் மாற்றம் ஏற்பட்டன. நகர அளவைப் பணி 1896-ல் ஆரம்பிக்கப்பட்டு 1966 முடிய நடைபெற்றது. இருப்பினும், இவற்றின் மூலம் பல நகராட்சிகளில் முதல் கட்ட நில அளவைப் பணி கூட முடிவடையாமல் இருந்தது. நீண்ட நாட்களுக்கு முன்பு கட்டப்பட்டிருந்த பகுதிகளில் மட்டும் நகர அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது எல்லா நகரங்களும் விரிவடைந்துள்ளன. எனவே, நகரங்களில் விரிவான நகர அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண். | விவரம் | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1 | மொத்தம் | 102 | 6 |
| 2 | நில அளவைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை | 83 | 6 |
| 3 | முடிவுற்றவை | 80 | 3 |
| 4 | பணி முன்னேற்றம் | 3 | 3 |
| 5 | நில அளவைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியவை | 19 | - |



இது வரை 1,738 ச.கி.மீ. பரப்பளவிற்கு நகர அளவைப் பணி முடிவுற்றுள்ளது.

**மலைக் கிராம அளவை**

வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, சேலம், நாமக்கல், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் அமைந்துள்ள 66 மலைக் கிராமங்களில் நில அளவை 1899-1910 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. நீண்ட நாட்களுக்கு முன் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணங்கள் மிகவும் பழுதடைந்து பயனின்றி உள்ளன. மேலும், அரசின் தரிசு நிலங்கள் அளவை செய்யப்படாமல் இருந்தன. இதனால், மலைவாழ் மக்களிடம் இருந்த நிலங்கள் நில உடைமை பதிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த நிலங்களில் குறிப்பாக மலைவாசிகளின் உடைமைகளைச் சரியாக பதிவு செய்யும் பொருட்டு பின்வரும் 6 மாவட்டங்களில் மலைக் கிராம அளவை மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | வேலூர் | ஏலகிரி மலை, ஜவ்வாது மலை |
| 2 | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை |
| 3 | திருச்சி | பச்சைமலை |
| 4 | சேலம் | பச்சமலை, அருநூத்து மலை |
| 5 | நாமக்கல் | கொல்லிமலை |
| 6 | கோயம்புத்தூர் | ஆனை மலை |

மலைக்கிராம அளவையின்கீழ் 858 ச.கி.மீ. பரப்பு நிலம் அளக்கப்பட்டுள்ளது.

**4.4. வருவாய்ப் பதிவேடுகள் பராமரித்தல்**

நில அளவைப் பணியாளர்கள் நில உடைமையில் அன்றாடம் ஏற்படும் மாறுதல்களை உடனுக்குடன் பதிவு செய்யும்

[2003 ஏப்ரல் 10

பொறுப்பிலுள்ளவர்கள் ஆவார்கள். நிலமாற்றம், விற்பனை, நன்கொடை, பரிமாற்றம், நில ஒப்படை மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற காரணங்களினால் நிலங்களில் தேவைப்படும் புதிய உட்பிரிவுகளைச் செய்வதும், நிலச் சொந்தக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை அவர்கள் செலுத்திய பின்பு ஆவணங்களின் அடிப்படையில் நில எல்லைகளைச் சுட்டிக்காட்டுவதும் நில அளவைப் பணியாளர்களது கடமையாகும். இது தவிர, கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்கள், சுற்றுலா வரைப்படங்கள் மற்றும் பெருவழிப்பாதை காட்டும் வரைப்படங்கள் ஆகியவை குறைந்த கட்டணத்தில் சென்னையில் உள்ள மத்திய நில அளவை அலுவலகத்தில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

### 4.5. அச்சக வசதிகள்

சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள அச்சகத்தில் கருப்பு, வெள்ளை மற்றும் ஆறு வண்ண வரைபடங்கள் அச்சடிக்கப்படுகின்றன. நிழற்பட அச்சு மூலமோ அல்லது ஆப்செட் மூலமோ நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வரைபடங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. வரைபட நகல்கள் எடுப்பதற்கு நிழற்பட நகலெடுக்கும் கருவி, பிளான் பிரிண்டர், என்.சி. ஸ்கிரைபர், லேமினேட்டிங் கருவி மற்றும் கணினி போன்ற நவீன கருவிகள் இத்துறையில் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.6 கணினி வரைபட மையம்

சென்னையில் கணினி வரைபட மையம் கணினி மற்றும் உபகரணங்களுடன் நிறுவப்பட்டுள்ளது. மாநில பொது எல்லை வரைபடம், கிராம வரைபடத்தின் பிரதி (ஸ்கேன்) எடுத்து சேமித்தல், தமிழ்நாட்டில் நீர் ஆதாரங்களை வரைபடங்களில் பதிவு செய்தல் போன்ற இதரப் பணிகள் இம்மையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.7. நில ஆவணங்களைக் கணினிமயமாக்குதல்

நிலப் பதிவுருக்களைக் கணினிமயமாக்கும் "தமிழ் நிலம்" திட்டம் 1991-ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டு, வருவாய்த் துறையில் மத்திய அரசின் முழுமையான (100% சதவீதம்) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 10]

இந்தத் திட்டத்தின்கீழ் "அ" பதிவேடு மற்றும் 10(1) சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நில அளவை ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டன. நில அளவை ஆவணங்கள் அன்றாட உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் வகையிலும் நிலத் தகராறுகளை குறைக்கவும் பொதுமக்கள் எளிதாக நில ஆவண நகல்களைப் பெறுவதற்கும் ஏதுவாக அமைகின்றன.

வட்ட அலுவலகங்களைக் கணினிமயமாக்குவதற்கும் இணைப்பு வசதிகள் செய்வதற்கும் மத்திய அரசால் ரூ.513/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று 206 வட்டங்களில் கணினி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக கணினிமயமாக்கம் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.714/- இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதி உதவியினைக் கொண்டு 206 வட்டங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

பதிவுகளைக் கணினிமயமாக்கி நடைமுறைக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 17,246 கிராமங்களுக்கான பதிவேடுகளைக் கணினியில் பதிவு செய்யும் பணி முடிவுற்றுள்ளது. கணினியில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. முதலில் மாவட்டத்திற்கு ஒரு வட்டம் வீதம் 29 மாதிரி வட்டங்களை முழுமையாக கணினிமயமாக்கி பின்பு படிப்படியாக இதர வட்டங்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டு 31-1-2003 வரை 50 வட்டங்கள் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளன. 1-7-2003-க்குள் அனைத்து வட்டங்களும் முழுமையாக கணினிமயமாக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.8. தொடு திரை தகவல் மேடை

அரசு நிர்வாகத்தைப் பொது மக்களுக்கு அருகில் எடுத்துச் செல்லவும், நிர்வாக செயல்பாட்டின் மேம்பாட்டிற்கு கணினி வகிக்கும் முக்கியப் பங்கை உணர்ந்தும், மாவட்டத்திற்கு ஒரு மாதிரி வட்டம் (Model Taluk) தேர்வு செய்யப்பட்டு, 29 வட்டங்களில் தொடு திரை தகவல் கணினி மேடை (Touch Screen Computer Kiosk) நிறுவிட அரசால் உத்திரவிடப்பட்டு, 15-4-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டத்தில் தொடு திரை தகவல் மேடை துவங்கி வைக்கப்பட்டது. இதே போன்று ஏனைய 28 வட்டங்களிலும் 15-4-2002 முதல் தொடு திரை தகவல் கணினி மேடைகள் செயல்பட்டு வருகின்றன. 17-3-2003 நிலவரப்படி 48,232

நபர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தி உள்ளார்கள். இதன் மூலம் ரூ.15,81,214/- வசூலாகியுள்ளது. நில சம்பந்தப்பட்ட தகவல்கள், "அ" பதிவேடு மற்றும் சிட்டா குறித்த தகவல்கள், அரசின் பல்வேறு நலத் திட்டங்களான முதியோர் ஓய்வூதியத் திட்டம், நிலமதிப்பீடு, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் பற்றிய விவரங்களை இந்தக் கணினி மேடை மூலம் அறிய இயலும். இந்த தொடு திரை தகவல் மேடை தொடர்பாக செய்தியாளர் கூட்டம், சினிமா விளம்பரம், கேபிள் டி.வி. துண்டுப் பிரசுரம் விநியோகித்தல் மூலம் விளக்கி கூற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள 177 வட்டங்களில் தொடு திரை தகவல் மேடை ரூ.415.95 இலட்சம் செலவில் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

### 4.9. பயிற்சி

நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் பணியாளர்களுக்குக் கணினியில் பயிற்சி வழங்க முடிவெடுக்கப்பட்டு, 8,500 பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்க ரூ.68.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு வட்டத்திற்கு குறைந்தது 40 பணியாளர்கள் வீதம் கணினி மற்றும் மென்பொருள் கையாளுதல் குறித்து, 8,356 பணியாளர்களுக்கு கணினி பயிற்சியும் 782 பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சியும் பயிற்சி நிலையம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு பணியாளர்களுக்குச் செம்மையான பயிற்சி வழங்க வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. இதற்காக வட்ட அலுவலகங்களில் உள்ள மீதமுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் தொடர்ந்து பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக்காக மத்திய அரசு ரூ.103.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.10. நிலப் படங்களைக் கணினிமயமாக்குதல்

இரண்டுவகை நில அளவை ஆவணங்களான "அ" பதிவேடு மற்றும் சிட்டா மற்றும் நில அளவை வரைபடம் ஆகியவற்றைக் கணினிமயமாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நில ஆவணங்களில் ஏற்படும் மாற்றங்கள் அவ்வப்போது புலச்சுவடியிலும் செய்யப்படுகின்றன. எனவே, எந்த நிலையிலும் வரைபடம் நிலத்தின் உண்மையான நிலையைக் காட்டும் இந்த நிலையில் நில வரைபடத்தை விட்டு விட்டு ஏனைய நில அளவை ஆவணங்களை மட்டும் கணினி மயமாக்குவது இத்திட்டத்தின் குறிக்கோளை முறியடிக்கும். எனவே,



தற்போது கிராம ஆவணங்களில் உள்ள "அ" பதிவேடு மற்றும் சிட்டா ஆவணங்கள் மட்டுமே கணினிமயமாக்கப்பட்டு வருகின்ற நிலையில் பூகோளத் தகவலைக் கணினிமயமாக்குவது அவசியமாகிறது. இதற்கான முன்னோடி திட்டங்கள் செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம் ஆகிய 4 வட்டங்களில் மத்திய அரசின் உதவியுடன் ரூ.124.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ரூ.122.00 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டு 1.22 இலட்சம் நிலப் படங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

இந்த முன்னோடி வட்டங்களில் செயல்படுத்தப்பட்ட மென்பொருள்களைப் பிற மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டதினை மாநிலத்தின் பிற வட்டங்களில் படிப்படியாக செயல்படுத்த தேவைப்படும் ரூ.26 முதல் ரூ.28 கோடி வரை முழுமையான (100%) நிதி ஒதுக்கீடு கேட்டு மைய அரசுக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

### பூகோள ரீதியான அளவை முறை (Global Positioning System)

பூகோள ரீதியான கணினி அளவை முறையில் மிக துல்லியமாக நில அளவைப்பணிகள் மேற்கொள்ளவியலும் நில அளவை மையப்புள்ளிகள் பூகோள ரீதியாக கணிக்கப்பட்டு, கணினிக்கு மாற்றப்பட்டு அதன்மூலம் வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன்மூலம் துல்லியமான நில அளவை பதிவுகளைப் பெற ஏதுவாகிறது. பூகோள ரீதியாக விண்கோள்முறை அளவைப் பணிக்கான முன்னோடி திட்டத்திற்காக அரசு ரூ.120 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50% மத்திய அரசு நிதி உதவியும் அடங்கும். இத்திட்டம் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் ஏற்கெனவே நிலப் படங்கள் கணினிமயமாக்குதலும், நிலப் பதிவுருக்கள் கணினி மயமாக்குதலும் முடிக்கப்பட்டுள்ளதால், அங்கேயே பூகோள ரீதியான நில அளவைக்கான முன்னோடி திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டம், இத்துறைக்குப் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதாகும். இந்த நவீன அளவை முறையில் 30 பேர் அடங்கிய 5 குழுக்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### வருவாய் நிர்வாகம் வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்கள் மேம்படுத்தும் திட்டம்

வருவாய் நிர்வாகம் வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்கள் மேம்படுத்துதல் திட்டத்திற்காக, 1989 முதல் 2002 முடிய மத்திய

[2003 ஏப்ரல் 10

அரசிடமிருந்து ரூ.1,092 இலட்சம் நிதி உதவியாக மாநில அரசு பெற்றுள்ளது. இதில் 50 சதவிகிதம் மாநில அரசால் திட்டச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை நவீன உபகரணங்கள் வாங்கவும் பயிற்சி கட்டமைப்புகளை வலுப்படுத்தவும் கட்டடங்கள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.841.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 4.11. பயிற்சி (C.STAR)

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் நில அளவைப் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில் வருவாய்த் துறை அலுவலர்கள், பயிற்சி துணை ஆட்சியர்கள், பயிற்சி உதவி ஆட்சியர்கள் (இந்திய ஆட்சிப் பணி) மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்கு நில அளவைப் பயிற்சி மற்றும் பதிவு மாற்றம் குறித்த பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஏரியல் போட்டோகிராபி மற்றும் கார்ட்டோகிராபி போன்ற சிறப்பான பயிற்சிகள் தகுதிவாய்ந்த நபர்களுக்கு வழங்கப்படுகிறது. நவீன தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு நில அளவை செய்வதற்கு நில அளவைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ரூ.127.03 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தின் குறிக்கோள் பின்வருமாறு:—

(1) நில அளவைப் பயிற்சி வழங்குதல், நில அளவை சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

(2) நில அளவைத் துறை பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்

(3) நில அளவைத் துறையை நவீனமயமாக்க வழிகாட்டுதல்.

இந்த உயர் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் "சி.ஸ்டார்" (C.STAR) என்ற பெயரில், செயற்குழுவின் வழிகாட்டலில் செயல்பட உள்ளது. இச்செயற்குழுவிற்கு அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைவராகவும், ஏழு குழு அலுவலர்கள் (4 அலுவலர்கள் அரசு தரப்பிலிருந்தும் 3 அலுவலர்கள் அண்ணா பல்கலைக்கழக தரப்பிலிருந்து) உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர். அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு பேராசிரியரை "சி.ஸ்டார்" இயக்குநராக நியமிக்க நிர்வாகக் குழு தேர்வு செய்து பரிந்துரைத்துள்ளது. அப்பரிந்துரை அரசின் ஆய்வில் உள்ளது. மேலும், பயிற்சி திட்டத்திற்கு



2003 ஏப்ரல் 10]

மத்திய மாநில அரசு நிதி திட்டத்தின்கீழ் 50:50 விகிதத்தில் ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு கேட்டு மத்திய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

### 4.12. மாநிலங்களுக்கிடையேயான எல்லை

1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டதை கூராய்வு செய்ய ஒரு கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டாய்வு நடந்து முடிந்ததும் அதனை சம்பந்தப்பட்ட அண்டை மாநிலங்கள் அங்கீகாரம் செய்கின்றன. மாநில பொது எல்லையை பராமரிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இக்கூட்டுத் தணிக்கை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணி அளவும் முடிக்கப்பட்ட விபரமும் பின்வருமாறு:—

தமிழ்நாடு கேரள எல்லை 830.1 கி.மீ. நீளத்தில் 24 பகுதிகளாக அமைந்துள்ளது. இதில் 217.4 கி.மீ. தொலைவிற்கு எல்லை அளவைப்பணி முடிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்ட புதிய ஆவணங்களுக்கு இரு அரசாலும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. 12.0 கி.மீ. தொலைவுள்ள ஆவணங்களுக்கு கேரள அரசின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. 294.7 கி.மீ. நீளமுள்ள ஆவணங்களுக்கு கூராய்வுப்பணி நடைபெற்று வருகிறது. 56.4 கி.மீ. தொலைவுள்ள எல்லைக்கான கூட்டாய்வுப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள 249.6 கி.மீ. தொலைவுள்ள எல்லை கூட்டாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு | - | ஆந்திரா | - | 578.8 கி.மீ. |
| தமிழ்நாடு | - | கர்நாடகா | - | 481.0 கி.மீ. |

மேற்கண்ட இரு மாநிலங்களின் எல்லை தொடர்பான கூட்டாய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பான ஆந்திரா மற்றும் கர்நாடகா அரசுகளின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு-பாண்டிசேரி மாநில எல்லை 353.8 கி.மீ. நீளமுள்ளது. 279.2 கி.மீ. தொலைவிற்கான கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டுவிட்டது. 84.6 கி.மீ. தொலைவிற்கு கூட்டாய்வு மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

[2003 ஏப்ரல் 10

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் மாநில அளவில் சம்பந்தப்பட்ட துறை ஆணையர்கள் கூட்டமும், ஆறு மாதத்திற்கொரு முறை இயக்குநர்கள் கூட்டமும் நடைபெறுகிறது.

## அத்தியாயம்-5

## நிலச் சீர்திருத்தம்

### 5.1. நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நிலங்கள் ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்து அதன் மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் பொருட்டும் உபரியாக உள்ள அந்நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும் பொருட்டும், 1961ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட சட்டம் 6-4-1960 முதல் அமலுக்கு வந்தது. அதில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு குடும்பத்தில் 5 உறுப்பினர்களுக்கு மேல் இருந்தால் 30 தர ஏக்கர் உச்சவரம்பு தவிர ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்பட்டது . இருப்பினும் ஒட்டு மொத்த உச்ச வரம்பு 60 தர ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் பெண் உறுப்பினர்களுக்கென்று சீதனச் சொத்தாக 10 தர ஏக்கர் வரை வைத்திருக்க அவருக்கு உரிமை உண்டு. 1-3-1972-ல் இருந்த நம்பகங்களுக்கு 5 தர ஏக்கர் உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1-3-1972-க்கு பிறகு எந்த நம்பகமும் (Trusts) விவசாய நிலங்களை வாங்குவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக மிகை நிலம் பெறும் நோக்கத்துடன், உச்ச வரம்பின் அளவு அரசால் படிப்படியாக குறைக்கப்பட்டது. இன்றைய நிலையில் இம்மாநிலத்தில் எந்தவொரு குடும்பமும் அதிகபட்சமாக 30 தர ஏக்கர் விவசாய நிலம் வைத்துக்கொள்ளலாம். உச்சவரம்பிற்கு மிகையான நிலங்கள், கையகப்படுத்தப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நிலமற்ற தகுதியுடைய ஏழைகளுக்கு அதிகபட்சம் 3 ஏக்கர் புன்செய் அல்லது 1.5 ஏக்கர் நன்செய் என்ற அளவில் ஒப்படை செய்யப்படுகிறது. மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விபரம், அதில் ஒப்படையானது மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை, ஆதி திராவிடர்/ பழங்குடி வகுப்பினைச் சார்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை



2003 ஏப்ரல் 10]

விவரங்கள் மற்றும் நிலச்சீர்திருத்தச் சட்டம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 28-2-2003 வரையில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு விவரங்கள் மற்றும் ஒப்படை வழங்கப்படவுள்ள மீதமுள்ள நிலப்பரப்பு விவரங்கள் இணைப்புகள்-9, 10 மற்றும் 11-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 5.2. குடிவாரச் சட்டங்கள்

#### *1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/55)*

இச்சட்டத்தின்படி, ஒரு பயிரிடும் குத்தகைதாரர், குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தைச் சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தைத் தவிர்த்து மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும் வகையில் செயல்புரிந்தாலோ மட்டுமேயன்றி, அவர்களைப் பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்ற இயலாது. படை வீரர்களைத் தவிர, வேறு எந்த நில உடைமையாளரும், மேலே குறிப்பிட்ட காரணங்களன்றி மற்ற எந்த காரணத்திற்காகவும், குத்தகை தாரரிடமிருந்து தனது நிலத்தை மீளப்பெற முடியாது. குத்தகைதாரர்களுக்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கும் இடையே ஏற்படும் பூசல்களை, துணை ஆட்சியர்கள் தலைமையின்கீழ் இயங்கும் வருவாய் நீதிமன்றங்கள் தீர்த்து வைக்கின்றன. கடுமையான வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நேரிடும்போது, பயிரிடும் குத்தகைதாரர்களின் குத்தகை பாக்கித் தொகையைச் செலுத்துவதைத் தள்ளிவைக்க சிறப்புச் சட்டம் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

#### 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம், குத்தகைதாரர்களின் மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினை குத்தகைத் தொகையாக நிர்ணயித்து அதனைக் குத்தகைதாரர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது பொது பொறுப்புக் கழகங்களுக்கு (Trusts) வழங்க வழிவகை செய்கின்றது. அதனைப் பணமாகவோ விளைபொருளாகவோ செலுத்தலாம். ஆனால், நிலவரி தவிர பயிடுவதற்கான செலவு முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். குத்தகைதாரர்கள்/நில

[2003 ஏப்ரல் 10

உடைமையாளர்களுக்கு இடையே ஏற்படும் பூசல்களை, துணை ஆட்சியர்கள் தலைமையின்கீழ் இயங்கும் வருவாய் நீதிமன்றங்கள் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

**1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (Trusts) (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61)**

இச்சட்டம், பொது பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி எந்த ஒரு பொது பொறுப்புக் கழகமும், சொந்தப் பண்ணை சாகுபடிக்காக 20 தர ஏக்கருக்கு மேல் நிலத்தினை வைத்துக்கொள்ளக் கூடாது. இதற்கு மேலுள்ள நிலத்தினை, பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டும். குடிவாரச் சட்டங்களின்கீழ் 28-2-2003 வரை நிலுவையில் உள்ள வழக்குகளின் விபரங்கள் இணைப்பு-12-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69)**

இச்சட்டம் மூலம், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதிய விகிதங்கள் பின்வருமாறு:-

| விவசாயத் தொழிலாளர் வகை | குறைந்த பட்ச ஊதியம் |
|---|---|
| 1. தங்கள் சொந்த ஏர்மாட்டோடு உழுவோர் | நாள் ஒன்றிக்கு ரூ.100/- |
| 2. தங்கள் சொந்த ஏர்மாடு இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.54/- |
| 3. நெல் அறுவடை, கதிர் அறுப்பு, களத்திற்கு எடுத்துச் சென்று கதிர் அடித்தல், அவைகளை அளந்து மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணியில் ஈடுபடும் தொழிலாளர் | நாள் ஒன்றுக்கு ஆறு மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ.54/- நாள் ஒன்றிற்கு ஐந்து மணி நேரம் வேலை செய்யும் பெண் |



2003 ஏப்ரல் 10]

| | |
|---|---|
| | தொழிலாளிக்கு ரூ.45/- அல்லது மொத்த விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி அவற்றில் எது அதிகமோ அது. |
| 4. நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்/ இதர விவசாயப் பணிகளில் ஈடுபடுவோர் | நாள் ஒன்றிற்கு 6 மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொர்ழிலாளிக்கு ரூ.54/- நாள் ஒன்றிற்கு 5 மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/- |

**1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டம் தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டம் மூலம், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது உரிமைகளைப் பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலராக உள்ள வருவாய் வட்டாட்சியருக்கு உதவி புரிய, அவ்வட்டத்தைச் சார்ந்த நிலமற்ற ஏழை விவசாய ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினரைச் சார்ந்த ஒரு குத்தகைதாரர் மற்றும் மூன்று சமுதாயப் பணியாளர்களைக் கொண்ட அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் 28-2-2003 வரை குத்தகைதாரர்களாக பதிவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் இணைப்பு-13-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71)**

இச்சட்டம் மூலம் 19-6-1971-ல் சொந்த வீட்டு மனை இல்லாது பிறர் நிலத்தில் குடியிருப்பு நிறுவி அனுபவித்து வருபவர்களுக்கு அக்குடியிருப்புகள் மீது உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதேபோல் 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல் சட்டத்தின்கீழ் 1-7-1975 அன்று பிறர் நிலத்தில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாதவர்களுக்கு அந்தக் குடியிருப்பின்மீது உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களில் உள்ள காலக்கெடு தமிழ்நாடு சட்டம் 39/90 மூலம் 1-4-1990 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. 28-02-2003

[2003 ஏப்ரல் 10

வரையில் உடைமை உரிமை வழங்கப்பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு-14-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 5.3. நிலத் தீர்ப்பாயங்கள்

நிலச் சீர்திருத்த வழக்குகளை முடிவு செய்வதற்காக மாவட்ட வருவாய் அலுவலரைக் கொண்ட நிலத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகிறது.

1-11-1990 முதல் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்த நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான நீதிப் பேராணைகள் மற்றும் உரிமையியல் சீராய்வு மனுக்கள் அதிகார வரம்பு நீக்கப்பட்டு அவ்வழக்குகள் இத்தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டன. 28-02-2003 வரையில் தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தால் முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் இணைப்பு-15-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், இத்தீர்ப்பாயத்தைக் கலைக்கும் அரசின் சட்டமுன்வடிவு ஆய்வில் உள்ளது.

### 5.4. வருவாய் நீதிமன்றங்கள்

கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் 6 வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள், 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டத்தின் கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராக தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளிப்பார்கள். அவர்கள் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955, தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் வழங்குதல்) சட்டம் 1956, தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961, தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவு) சட்டம், 1969, தமிழ்நாடு (குடியிருப்புதாரர்கள் வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல்) சட்டம், 1961, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை



2003 ஏப்ரல் 10]

உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1976 ஆகிய சட்டங்களின்கீழ் தொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்து வருகின்றனர்.

### 5.5. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அரசாணை (நிலை) எண் 600, வருவாய்த் துறை, நாள் 27-11-2000-ல் அமைக்கப்பட்டது. இவ்வாரியம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், 7 அலுவலர்களை அரசு சார்பு உறுப்பினர்களாகவும், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சார்பில் 9 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டதாகும். இத்திட்டம் தமிழ்நாடு அரசிதழ் எண் 109, நாள் 9-02-2001-ல் அரசிதழில் வெளியிடப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு விவசாயத் தொழிலாளரும், இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள ஒரே தடவையில் பங்களிப்பு தொகையாக ரூ.100/- செலுத்தவேண்டும். இவ்வாறு பதிவு செய்து கொண்ட விவசாயத் தொழிலாளர்கள், கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து நிவாரணம் போன்ற உதவிகளைப் பெறுவதற்கு தகுதி உள்ளவர்களாகின்றனர். இத்திட்டத்தின்கீழ் 18 வயதடைந்தவரும் 60 வயது நிறைவடையாதவருமான ஒரு நிலமற்ற விவசாயத் தொழிலாளரோ அல்லது ஒரு ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 2.50 ஏக்கர் புன்செய் நிலம் வைத்து நேரடியாகப் பயிர் சாகுபடி செய்பவரோ உறுப்பினராகப் பதிவு செய்யலாம். 28-02-2003 வரை இத்திட்டத்தில் 7,30,815 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உறுப்பினர் பங்களிப்புத் தொகை ரூ. 7,30,81,560 வரப்பெற்று வாரிய நிதிக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

### 5.6. நகர்ப்புற நில உச்சவரம்பு

1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில(உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமானது, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில(உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 20/1999) 16-06-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. நீக்கறவு நாள் முதல் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் வைத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலங்களுக்கும், முதன்மைச் சட்டப்பிரிவு

21(1)-ன்கீழ் விலக்களிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கும் நீக்கறவுச் சட்டம் பொருந்தாது. விலக்களிப்பில் உள்ள நிபந்தனைகள் மீறப்பட்டால் நிலங்களை மீளப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை வெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்தல்**

மிகை வெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்வது குறித்து கொள்கை அளவில் அரசு பின்வரும் முடிவுகள் எடுத்துள்ளது:—

(i) கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லாத நிலங்களை கீழ்க்கண்ட முன்னுரிமையின்படி ஒதுக்கீடு செய்யப்படும்.—

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக சமுதாய நலன் கருதி துவக்கப்படும் திட்டங்கள்.

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்கள், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

(இ) மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை போன்ற மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் போன்ற அரசுத் துறை சார்ந்த மற்றும் அரசு துறைகள்.

(ii) ஒதுக்கீடு செய்யப்படாத மீதமுள்ள மிகைவெற்று நிலங்களை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் மூலமாக விற்பனைக்கு கொண்டு வருதல்.

(iii) கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் எடுத்துக்கொள்ளப்பட்ட மிகை வெற்று நிலங்களில், ஆக்கிரமிப்புகள் இருந்தாலும், வியாபார நோக்கில் பயன்படுத்தப்பட்டாலும் அந்நிலங்களுக்கான இரண்டு மடங்கு வழிகாட்டுப் பதிவேட்டு மதிப்பினை வசூலித்த பின் முறைப்படுத்தப்படும்.

29-07-1998 நாளிட்ட வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் 649-ல் சட்டம் தெரியாமல் 1½ (ஒன்றரை) கிரவுண்டு நிலம் வரை குடியிருப்புக்காக வாங்கியிருப்பின், அந்நிலங்களுக்கென அரசு நிர்ணயம் செய்துள்ள மதிப்பீட்டின்படி வசூல் செய்து, வரன்முறை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



**5.7. நகர்ப்புற நிலவரி**

அரசிற்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும் ஒரு சிலரிடம் மட்டும் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் குவிந்திருக்கும் நிலையைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 01-07-1963-ல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. பின்னர் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 17-07-1971 முதலும் சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 01-07-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 01-07-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

2. பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 01-07-1981 முதல் விரிவுபடுத்தப்பட்டது. பின்வரும் நகராட்சிகளும், 01-07-1991 முதல் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன.

| | |
|---|---|
| மயிலாடுதுறை | கும்பகோணம் |
| காஞ்சிபுரம் | உடுமலைப்பேட்டை |
| கடலூர் | பழனி |
| விழுப்புரம் | காரைக்குடி |
| புதுக்கோட்டை | இராஜபாளையம் |
| ஈரோடு | நாமக்கல் |
| பொள்ளாச்சி | உதகமண்டலம் |
| தஞ்சாவூர் | திண்டுக்கல் |
| திருப்பூர் | கரூர் |
| தூத்துக்குடி | நாகர்கோவில் |
| வேலூர் | கொடைக்கானல் |
| மேட்டூர் | |

இந்த எல்லா பகுதிகளுக்கும் 01-07-1981-ம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 01-07-1991 முதல் வரி விதிக்கப்படுகிறது. வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு உள்ளது:—

| சென்னை புறநகர்ப் பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்திற்கும். | | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | முதல் இரண்டு மனைகள் | வரியில்லை | 1 | முதல் மூன்று மனைகள் | வரியில்லை |
| 2 | இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2 | மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3 | ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4 | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4 | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5 | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

நகர்ப்புற நில வரி செலுத்துபவர்களின் பெயர்கள், நிலுவையாக உள்ள தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ன்கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படும் நிலங்கள் விலக்கு பெறுகின்றன:-

(1) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி நிலங்கள்.

(2) பொது வழிபாட்டுக்கான நிலங்கள்.

(3) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்.

(4) மயான பூமி நிலங்கள்.

(5) சாலைகளாக பயன்படும் நிலங்கள்.

(6) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.



(7) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்.

(8) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்.

விவசாயத்திற்குப் பயன்படும் நிலங்கள், நகர்ப்புற நிலவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படுகின்றன. அறம் மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு அதிகமாக சிரமம் இருப்பின் பிரிவு 27(1)-ன்கீழ் அரசு வரி விலக்கு அளிக்கிறது.

கீழ்க்கண்ட அமைப்புகளுக்கும் அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது:—

(அ) திரைப்படம் தயாரிக்கும் அரங்குகள், களியாட்ட சங்கங்கள், சமுதாய பொழுதுபோக்கு மையங்கள் ஆகியவற்றினைக் கொண்டுள்ள நகர்ப்புற நிலங்களில் கட்டடம் கட்டப்பட்டுள்ள பகுதி மற்றும் காலி நிலத்திற்கு வரிவிதிப்பினின்று 50 சதவீதம் வரிச்சலுகை தரப்படுகிறது.

(ஆ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீதம் சலுகை.

(இ) சங்கீதம், நாட்டியம் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை.

(ஈ) திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை.

(உ) குடிசைப்பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழுச் சலுகைகள்.

(ஊ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால் நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் வரிச் சலுகை தரப்படுகிறது.

நகர்ப்புற நில வரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாக தீர்வு செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட

வருவாய் அதிகாரிகளையே நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சென்னை-5 சேப்பாக்கத்தில் உள்ள நிலச்சீர்திருத்த துறையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (நிலத் தீர்ப்பாயம்) தீர்ப்பாய நீதிபதியாக செயல்படுகிறார்.

### 5.8. வேளாண்மை வருமான வரி

தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டில் வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் மலைத்தோட்டப் பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டும் வரி விதிக்கப்பட்டது. பின்னர், 1958 ஆம் ஆண்டில் சட்ட திருத்தம் செய்யப்பட்டு, மலைத்தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும், வரி விதிப்பு செய்வதற்கு வகை செய்யப்பட்டது.

சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு மலைத்தோட்டம் அல்லாத பயிர்களின் மீது வேளாண்மை வருமான வரி விதிப்பு 01-04-1992 முதல் முழுமையாக அகற்றப்பட்டது. தற்போது தேயிலை, இரப்பர், காப்பி, ஏலக்காய், கிராம்பு, பாக்கு மற்றும் மிளகு ஆகிய ஏழு மலைத்தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரி விதிப்பு செய்யப்படுகிறது. 8 சாதாரண ஏக்கருக்கும் அதிகமாக உடையோர் மட்டுமே 01-04-1992 முதல் வரி விதிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள். 8 சாதாரண ஏக்கர் முதல் 50 சாதாரண ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு இணக்க முறை வரி விதிப்பு பின்பற்றப்படுகிறது.

1992-1993 ஆம் வரி விதிப்பு ஆண்டு முதல் சுயவரிவிதிப்பு மற்றும் முன்னதாகவே வரி செலுத்தும் முறைக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரி நீக்க வருமான உச்சவரம்பு தற்பொழுது ரூ. 28,000 ஆகும். மலைத்தோட்ட பயிரில்லாத இனங்களின் வருமான வரி நிலுவையினை வசூலிக்கும் பணி 01-06-1992 முதல் வட்டாட்சியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டிற்கான (28-02-2003 முடிய) வேளாண்மை வருமான வரி குறித்த கேட்பு, வசூல் மற்றும் நிலுவை பற்றிய விவரங்கள் இணைப்பு-16-ல் கொடுக்கப்பட்டுள்ளன.





## இணைப்பு-1

### தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள்/உள்வட்டங்கள் மற்றும் இராமங்களின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட்டத்தின் பெயர் | மொத்த உள் வட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வருவாய் இராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | | 1. கோட்டை-தண்டையார் பேட்டை<br>2. புரசைவாக்கம்-பெரம்பூர்<br>3. எழும்பூர்-நுங்கம்பாக்கம்<br>4. மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி<br>5. மாம்பலம்-கிண்டி | 20 | 55 |
| 2 | காஞ்சிபுரம் | 1.காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம்<br>2. உத்திரமேரூர்<br>3. ஸ்ரீபெரும்புதூர் | 55 | 1210 |
| | | 2.செங்கல்பட்டு | 4. செங்கல்பட்டு<br>5. திருக்கழுக்குன்றம்<br>6. தாம்பரம் | | |
| | | 3.மதுராந்தகம் | 7. மதுராந்தகம்<br>8. செய்யூர் | | |

[2003 ஏப்ரல் 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | திருவள்ளூர் | 1.பொன்னேரி | 1. அம்பத்தூர் | 46 | 840 |
| | | | 2. பொன்னேரி | | |
| | | | 3. கும்மிடிப்பூண்டி | | |
| | | 2.திருத்தணி | 4. திருத்தணி | | |
| | | | 5. பள்ளிப்பட்டு | | |
| | | 3.திருவள்ளூர் | 6. திருவள்ளூர் | | |
| | | | 7. ஊத்துக்கோட்டை | | |
| | | | 8. பூந்தமல்லி | | |
| 4 | வேலூர் | 1. இராணிப்பேட்டை | 1. ஆற்காடு | | |
| | | | 2. வாலாஜா | | |
| | | | 3. அரக்கோணம் | | |
| | | 2. வேலூர் | 4. வேலூர் | 52 | 843 |
| | | | 5. குடியாத்தம் | | |
| | | 3. திருப்பத்தூர் | 6. காட்பாடி | | |
| | | | 7. திருப்பத்தூர் | | |
| | | | 8. வாணியம்பாடி | | |
| 5 | திருவண்ணாமலை | 1. செய்யார் | 1. செய்யார் | | |
| | | | 2. வந்தவாசி | | |
| | | | 3. ஆரணி | | |
| | | 2. திருவண்ணாமலை | 4. திருவண்ணாமலை | 52 | 1067 |
| | | | 5. போளூர் | | |
| | | | 6. செங்கம் | | |
| 6. | கடலூர் | 1. சிதம்பரம் | 1. சிதம்பரம் | | |
| | | | 2. காட்டுமன்னார் கோயில் | | |
| | | 2. கடலூர் | 3. கடலூர் | | |
| | | | 4. பண்ருட்டி | 32 | 901 |
| | | 3. விருத்தாசலம் | 5. விருத்தாசலம் | | |
| | | | 6. திட்டக்குடி | | |



2003 ஏப்ரல் 10]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | விழுப்புரம் | 1. கள்ளக்குறிச்சி | 1. கள்ளக்குறிச்சி | 54 | 1490 |
| | | | 2. சங்கராபுரம் | | |
| | | 2. திருக்கோயிலூர் | 3. திருக்கோயிலூர் | | |
| | | | 4. உளுந்தூர்பேட்டை | | |
| | | 3. திண்டிவனம் | 5. திண்டிவனம் | | |
| | | | 6. செஞ்சி | | |
| | | 4. விழுப்புரம் | 7. விழுப்புரம் | | |
| | | | 8. வானூர் | | |
| 8. | தஞ்சாவூர் | 1. தஞ்சாவூர் | 1. தஞ்சாவூர் | | |
| | | | 2. திருவையாறு | | |
| | | | 3. ஒரத்தநாடு | | |
| | | 2. கும்பகோணம் | 4. கும்பகோணம் | 50 | 906 |
| | | | 5. திருவிடைமருதூர் | | |
| | | | 6. பாபநாசம் | | |
| | | 3. பட்டுக்கோட்டை | 7. பட்டுக்கோட்டை | | |
| | | | 8. பேராவூரணி | | |
| 9. | நாகப்பட்டினம் | 1. நாகப்பட்டினம் | 1. நாகப்பட்டினம் | | |
| | | | 2. வேதாரண்யம் | | |
| | | | 3. கீழ்வேளூர் | | |
| | | | 4. திருக்குவளை | | |
| | | 2. மயிலாடுதுறை | 5. மயிலாடுதுறை | 30 | 519 |
| | | | 6. தரங்கம்பாடி | | |
| | | | 7. சீர்காழி | | |
| 10 | திருவாரூர் | 1. மன்னார்குடி | 1. மன்னார்குடி | | |
| | | | 2. நீடாமங்கலம் | | |
| | | | 3. திருத்துறைப்பூண்டி | | |
| | | 2. திருவாரூர் | 4. திருவாரூர் | 27 | 574 |
| | | | 5. நன்னிலம் | | |
| | | | 6 குடவாசல் | | |
| | | | 7. வலங்கைமான் | | |
| 11 | திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 41 | 507 |
| | | | 2. ஸ்ரீரங்கம் | | |
| | | | 3. மணப்பாறை | | |
| | | 2. லால்குடி | 4. லால்குடி | | |
| | | | 5. மணச்சநல்லூர் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 3. முசிறி | 6. முசிறி<br>7. தொட்டியம்<br>8. துறையூர் | | |
| 12 | கரூர் | 1. கரூர் | 1. கரூர்<br>2. அரவக்குறிச்சி | 19 | 203 |
| | | 2. குளித்தலை | 3. குளித்தலை<br>4. கிருஷ்ணராயபுரம் | | |
| 13. | பெரம்பலூர் | 1. பெரம்பலூர் | 1. பெரம்பலூர்<br>2. வேப்பந்தட்டை<br>3. குன்னம் | | |
| | | 2. அரியலூர் | 4. அரியலூர் | 25 | 347 |
| | | 3. உடையார்—பாளையம் | 5. உடையார்—பாளையம்<br>6. செந்துறை | | |
| 14. | புதுக்—கோட்டை | 1. புதுக்—கோட்டை | 1. கொளத்தூர்<br>2. இலுப்பூர்<br>3. ஆலங்குடி<br>4. புதுக்கோட்டை<br>5. கந்தர்வக்—கோட்டை<br>6. திருமயம் | 44 | 757 |
| | | 2. அறந்தாங்கி | 7. அறந்தாங்கி<br>8. ஆவுடையார்—கோவில்<br>9. மணமேல்குடி | | |
| 15. | மதுரை | 1. மதுரை | 1. மதுரை(வடக்கு)<br>2. மதுரை (தெற்கு)<br>3. மேலூர்<br>4. வாடிப்பட்டி | 51 | 664 |
| | | 2. உசிலம்பட்டி | 5. உசிலம்பட்டி<br>6. திருமங்கலம்<br>7. பேரையூர் | | |
| 16 | தேனி | 1. பெரியகுளம் | 1. பெரியகுளம்<br>2. தேனி<br>3. ஆண்டிப்பட்டி | 17 | 113 |
| | | 2. உத்தம—பாளையம் | 4. உத்தமபாளையம்<br>5. போடிநாயக்கனூர் | | |
| 17. | திண்டுக்கல் | 1. திண்டுக்கல் | 1. திண்டுக்கல்<br>2. நத்தம்<br>3. நிலக்கோட்டை | | |
| | | 2. பழனி | 4. பழனி<br>5. ஒட்டன்சத்திரம்<br>6. வேடசந்தூர் | 39 | 358 |
| | | 3. கொடைக்—கானல் | 7. கொடைக்கானல் | | |
| 18. | இராம—நாதபுரம் | 1. இராம—நாதபுரம் | 1. இராமநாதபுரம்<br>2. இராமேஸ்வரம்<br>3. திருவாடானை | | |
| | | 2. பரமக்குடி | 4. முதுகுளத்தூர்<br>5. கமுதி<br>6. பரமக்குடி<br>7. கடலாடி | 39 | 400 |
| 19. | சிவகங்கை | 1. தேவக்—கோட்டை | 1. திருப்பத்தூர்<br>2. காரைக்குடி<br>3. தேவக்கோட்டை | 37 | 521 |
| | | 2. சிவகங்கை | 4. சிவகங்கை<br>5. மானாமதுரை<br>6. இளையான்குடி | | |
| 20. | விருதுநகர் | 1. சிவகாசி | 1. ஸ்ரீவில்லிபுத்தூர்<br>2. இராஜபாளையம்<br>3. சாத்தூர்<br>4. சிவகாசி | 36 | 600 |
| | | 2. அருப்புக்—கோட்டை | 5. அருப்புக்கோட்டை<br>6. காரியாப்பட்டி<br>7. விருதுநகர்<br>8. திருச்சுழி | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | திருநெல்-வேலி | 1. திருநெல்-வேலி | 1. பாளையங்கோட்டை | | |
| | | | 2. சங்கரன்கோவில் | | |
| | | | 3. திருநெல்வேலி | | |
| | | 2. சேரன்மா-தேவி | 4. அம்பாசமுத்திரம் | | |
| | | | 5. நாங்குநேரி | 61 | 628 |
| | | | 6. இராதாபுரம் | | |
| | | 3. தென்காசி | 7. தென்காசி | | |
| | | | 8. செங்கோட்டை | | |
| | | | 9. வீரகேரளம்புதூர் | | |
| | | | 10. ஆலங்குளம் | | |
| | | | 11. சிவகிரி | | |
| 22. | தூத்துக்குடி | 1. தூத்துக்குடி | 1. தூத்துக்குடி | | |
| | | | 2. ஸ்ரீவைகுண்டம் | | |
| | | 2. திருச்செந்தூர் | 3. திருச்செந்தூர் | | |
| | | | 4. சாத்தான்குளம் | 40 | 468 |
| | | 3. கோவில்-பட்டி | 5. கோவில்பட்டி | | |
| | | | 6. ஓட்டப்பிடாரம் | | |
| | | | 7. விளாத்திக்குளம் | | |
| | | | 8. எட்டயபுரம் | | |
| 23. | சேலம் | 1. சேலம் | 1. சேலம் | 42 | 621 |
| | | | 2. ஏற்காடு | | |
| | | | 3. வாழப்பாடி | | |
| | | 2. ஆத்தூர் | 4. ஆத்தூர் | | |
| | | | 5. கெங்கவல்லி | | |
| | | 3. மேட்டூர் | 6. மேட்டூர் | | |
| | | | 7. ஓமலூர் | | |
| | | 4. சங்ககிரி | 8. சங்ககிரி | | |
| | | | 9. எடப்பாடி | | |
| 24. | நாமக்கல் | 1. நாமக்கல் | 1. நாமக்கல் | | |
| | | | 2. இராசிபுரம் | | |
| | | 2. திருச்செங்-கோடு | 3. திருச்செங்கோடு | 30 | 391 |
| | | | 4. பரமத்தி-வேலூர் | | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25. | தர்மபுரி | 1. தர்மபுரி | 1. தர்மபுரி | | |
| | | | 2. அரூர் | | |
| | | | 3. பாப்பிரெட்டிப்பட்டி | | |
| | | | 4. பென்னாகரம் | | |
| | | 2. கிருஷ்ணகிரி | 5. பாலக்கோடு | | |
| | | | 6. கிருஷ்ணகிரி | 51 | 1106 |
| | | | 7. ஊத்தங்கரை | | |
| | | | 8. போச்சம்பள்ளி | | |
| | | 3. ஓசூர் | 9. ஓசூர் | | |
| | | | 10. தேன்கனிக்கோட்டை | | |
| 26. | கோயம்-புத்தூர் | 1. கோயம்-புத்தூர் | 1. கோயம்புத்தூர் (தெற்கு) | | |
| | | | 2. கோயம்புத்தூர் (வடக்கு) | | |
| | | | 3. மேட்டுப்பாளையம் | | |
| | | 2. திருப்பூர் | 4. பல்லடம் | 50 | 481 |
| | | | 5. திருப்பூர் | | |
| | | | 6. அவினாசி | | |
| | | 3. பொள்ளாச்சி | 7. பொள்ளாச்சி | | |
| | | | 8. வால்பாறை | | |
| | | | 9. உடுமலைப்பேட்டை | | |
| 27. | ஈரோடு | 1. ஈரோடு | 1. ஈரோடு | 47 | 539 |
| | | | 2. பெருந்துறை | | |
| | | 2. தாராபுரம் | 3. தாராபுரம் | | |
| | | | 4. காங்கேயம் | | |
| | | 3. கோபிசெட்டி-பாளையம் | 5. பவானி | | |
| | | | 6. கோபிசெட்டி பாளையம் | | |
| | | | 7. சத்தியமங்கலம் | | |
| 28. | நீலகிரி | 1. கூடலூர் | 1. கூடலூர் | | |
| | | | 2. பந்தலூர் | | |
| | | 2. குன்னூர் | 3. உதகமண்டலம் | 15 | 54 |
| | | | 4. குந்தா | | |
| | | | 5. குன்னூர் | | |
| | | | 6. கோத்தகிரி | | |

[2003 ஏப்ரல் 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | கன்னியா-குமரி | 1. நாகர்கோவில் | 1. தோவாளை | | |
| | | | 2. அகஸ்தீஸ்வரம் | 18 | 81 |
| | | 2. பத்மநாபபுரம் | 3. கல்குளம் | | |
| | | | 4. விளவங்கோடு | | |

சுருக்கம்

| | | |
|---|---|---|
| மாவட்டங்கள் | : | 29 |
| வருவாய்க் கோட்டங்கள் | : | 73 |
| வட்டங்கள் | : | 206 |
| உள்வட்டங்கள் | : | 1,120 |
| வருவாய் கிராமங்கள் | : | 17,244 |



2003 ஏப்ரல் 10]

## இணைப்பு-2

### 2001-ன் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகை

| வ.எண். 1 | மாவட்டத்தின் பெயர் 2 | மொத்த நபர்கள் 3 | ஆண்கள் 4 | பெண்கள் 5 |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 42,16,268 | 21,61,605 | 20,54,663 |
| 2. | கோயம்புத்தூர் | 42,24,107 | 21,56,280 | 20,67,827 |
| 3. | கடலூர் | 22,80,530 | 11,48,729 | 11,31,801 |
| 4. | தருமபுரி | 28,33,252 | 14,62,136 | 13,71,116 |
| 5. | திண்டுக்கல் | 19,18,960 | 9,66,201 | 9,52,759 |
| 6. | ஈரோடு | 25,74,067 | 13,06,039 | 12,68,028 |
| 7. | காஞ்சிபுரம் | 28,69,920 | 14,55,302 | 14,14,618 |
| 8. | கன்னியாகுமரி | 16,39,763 | 8,29,542 | 8,10,221 |
| 9. | கரூர் | 9,33,791 | 4,64,489 | 4,69,302 |
| 10. | மதுரை | 25,62,279 | 12,95,124 | 12,67,155 |
| 11. | நாகப்பட்டினம் | 14,87,055 | 7,38,287 | 7,48,768 |
| 12. | நாமக்கல் | 14,95,661 | 7,60,409 | 7,35,252 |
| 13. | நீலகிரி | 7,64,826 | 3,79,610 | 3,85,216 |
| 14. | பெரம்பலூர் | 11,81,029 | 5,88,441 | 5,92,588 |
| 15. | புதுக்கோட்டை | 14,55,269 | 7,20,847 | 7,34,422 |
| 16. | இராமநாதபுரம் | 10,83,320 | 5,82,068 | 5,01,252 |
| 17. | சேலம் | 29,92,754 | 15,51,357 | 14,41,397 |
| 18. | சிவகங்கை | 11,50,753 | 5,65,594 | 5,85,159 |
| 19. | தஞ்சாவூர் | 22,05,375 | 10,91,557 | 11,13,818 |
| 20. | தேனி | 10,94,724 | 5,53,118 | 5,41,606 |
| 21. | திருவாரூர் | 11,59,213 | 5,78,870 | 5,80,343 |
| 22. | தூத்துக்குடி | 15,65,743 | 7,64,087 | 8,01,656 |
| 23. | திருச்சிராப்பள்ளி | 23,88,831 | 11,94,133 | 11,94,698 |
| 24. | திருநெல்வேலி | 28,01,194 | 13,72,082 | 14,29,112 |
| 25. | திருவள்ளூர் | 27,38,866 | 13,90,292 | 13,48,574 |
| 26. | திருவண்ணாமலை | 21,81,853 | 10,93,191 | 10,88,662 |
| 27 | வேலூர் | 34,82,970 | 17,43,871 | 17,39,099 |
| 28. | விழுப்புரம் | 29,43,917 | 14,84,573 | 14,59,344 |
| 29. | விருதுநகர் | 17,61,548 | 8,70,820 | 8,90,728 |
| | மொத்தம் | 6,21,10,839 | 3,12,68,654 | 3,08,42,185 |

மத்திய அரசு கணக்கெடுப்பு வழிவகைகள்.

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு-3

பசலி ஆண்டு 1411—1412-க்கான நிலவரி கேட்பு, வசூல் மற்றும் நிலுவை 1-1-2002 முதல் 31-12-2002 வரையிலான விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| 1. கேட்பு .. | 81.42 |
| 2. நீதிமன்றத் தடையில் உள்ளவை .. | 9.77 |
| 3. வசூலிக்கக்கூடியவை .. | 71.65 |
| 4. 1-1-2002 முதல் 31-12-2002 வரை மொத்த வசூல் .. | 49.27 |
| 5. நிலுவை .. | 22.38 |



2003 ஏப்ரல் 10]

## இணைப்பு-4

**1996-97 முதல் 2001-2002 வரை தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி**

| வ.எண் | ஆண்டு | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1996-97 | 3088.63 |
| 2. | 1997-98 | 2618.70 |
| 3. | 1998-99 | 3591.91 |
| 4. | 1999-2000 | 1884.46 |
| 5. | 2000-2001 | 1791.38 |
| 6. | 2001-2002 | 1478.30 |

## இணைப்பு-5

**1996-97 முதல் 2001-2002 வரை விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி**

| வ. எண் | ஆண்டு | மாநில அரசின் பங்கு | மத்திய அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | 1996-97 | 18.88 | 114.54 | 133.42 |
| 2. | 1997-98 | 47.04 | 73.25 | 120.29 |
| 3. | 1998-99 | 69.60 | 167.13 | 236.73 |
| 4. | 1999-2000 | 80.38 | 14.67 | 95.05 |
| 5. | 2000-2001 | 29.90 | 31.62 | 61.52 |
| 6. | 2001-2002 | 39.77 | 73.20 | 112.97 |

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு-6

### 2002-2003-ம் ஆண்டில் விட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய விபரங்கள்

| | | |
|---|---|---|
| குறியீடு | .. | 30,000 |
| சாதனை | .. | 63,339 |

| வகுப்பினர் | | பயனாளிகள் |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. | 19,557 |
| பழங்குடியினர் | .. | 1,907 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | .. | 15,243 |
| பிற்படுத்தப்பட்டோர் | .. | 25,288 |
| ஏனையோர் | .. | 1,344 |
| **மொத்தம்** | .. | **63,339** |

## இணைப்பு-7

### 2002-2003 ஆம் ஆண்டில் மாவட்டவாரியாக நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட விவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| குறியீடு | .. | 3000 | ஏக்கர் |
| சாதனை | .. | 4729.71 | ஏக்கர் |

| வகுப்பினர் | | பயனாளிகள் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| ஆதிதிராவிடர் | .. | 2,084 | 1,140.90 |
| பழங்குடியினர் | .. | 23 | 14.24 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | .. | 2,300 | 1,327.61 |
| பிற்படுத்தப்பட்டோர் | .. | 3,772 | 2,180.12 |
| ஏனையோர் | .. | 120 | 67.74 |
| **மொத்தம்** | .. | **8,299** | **4,729.71** |

ஒப்படை செய்யப்பட்ட மொத்த பரப்பு (ஏக்கரில்) - 4729.71



2003 ஏப்ரல் 10]

## இணைப்பு—8

### இடைத்தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றுதலும்

பல்வேறு சட்டங்களின்கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு:—

### தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/48)

| | உடைமைகள் | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 5092 | 29567.15 |
| 2. செயற்படுத்தப்பட்டவை | 5092 | 29567.15 |
| 3. நிலுவை | -இல்லை- | |
| 4. பயனடைந்தோர் | 23,33,840 | |

### தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/63)

| | உடைமைகள் | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 2125 | 4126.43 |
| 2. செயற்படுத்தப்பட்டவை | 2115 | 4108.75 |
| 3. நிலுவை | 10* | 17.68 |

| | | |
|---|---|---|
| *தஞ்சாவூர் | - 2 | |
| நாகப்பட்டினம் | - 1 | (நீதிமன்ற வழக்குகளால் நிலுவையில் உள்ளது) |
| புதுக்கோட்டை | - 1 | |
| தர்மபுரி | - 6 | |
| மொத்தம் | 10 | |

4. பயனடைந்தோர் 3,62,118

[2003 ஏப்ரல் 10

**தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/63)**

| | கிராமங்கள் | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்கள் | 12 | 84.22 |
| 2. செயற்படுத்தப்பட்டவை | 12 | 84.22 |
| 3. நிலுவை | —இல்லை— | |
| 4. பயனடைந்தோர் | 6003 | |

**தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/63)**

| | உரிமை ஒப்பாவணங்கள் | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| 1. அரசால் எடுத்து கொள்ளப் பட்ட உடைமைகள் | 1,37,038 | 3,742.25 |
| 2. செயற்படுத்தப்பட்டவை | 1,37,032 | 3,719.32 |
| 3. நிலுவை | 6* | 22.93 |
| 4. பயனடைந்தோர் | 5,11,182 | |

*புதுக்கோட்டை மாவட்டம் - 4
நாகப்பட்டினம் மாவட்டம் - 1
இராமநாதபுரம் மாவட்டம் - 1 (நீதிமன்ற வழக்குகளால் நிலுவையிலுள்ளது)

**மொத்தம்** .. 6

**தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/69)**

| | கிராமங்கள் | பரப்பளவு (ச.கி.மீ) |
|---|---|---|
| 1. எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்கள் | 10 | 324.10 |
| 2. நிலவரித் திட்டம் அமல்படுத்தப்பட்டவை | 3 | 146.18 |
| 3. நிலுவை | 7 | 177.92 |
| 4. பயனடைந்தோர் | 6468 | |



2003 ஏப்ரல் 10]

**தமிழ்நாடு வரியற்ற நிலங்களின்மீது ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973)**

| | கிராமங்கள் | பரப்பளவு (ச.கி.மீ) |
|---|---|---|
| 1. எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்கள் | 122 | 100.69 |
| 2. முடிக்கப்பட்டவை | 122 | 100.69 |
| 3. நிலுவை | —இல்லை— | |

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு-9

**மிகை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப்பட்டியல்**

| வருடம் | அறிவிப்பு செய்யப்பட்ட மிகை நிலங்கள் (ஏக்கரில்) | ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1961-1970 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971-1980 | 1,08,132 | 70,730 | 51,244 |
| 1981-1990 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991-1996 | 15,093 | 34,953 | 21,297 |
| 1997-2000 | 6,552 | 8,824 | 7,098 |
| 2000-2001 | 604 | 1,635 | 1,236 |
| 2001-2002 | 677 | 1,612 | 1,336 |
| 1-4-2002 முதல் 28-2-2003 | 1,427 | 1,785 | 1,387 |
| **மொத்தம்** | **2,02,347** | **1,93,260** | **1,45,070** |

* 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13-ன்கீழ் பொது நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களும் அடங்கும்.



2003 ஏப்ரல் 10]

## இணைப்பு-10

**பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் விவரப்பட்டியல்**

| பயனடைந்தோர் இனம் | நபர்களின் எண்ணிக்கை | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | 64,580 | 69,116 |
| பழங்குடியினர் | 205 | 275 |
| மற்றவர்கள் | 80,185 | 1,13,684 |
| **மொத்தம்** | **1,45,070** | **1,83,075** |

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு—11

### ஒப்படை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்புகளை காண்பிக்கும் விவரப்பட்டியல்

(ஏக்கரில்)

1. மிகை நிலமென அறிவிக்கை செய்யப்பட்ட நிலப்பரப்பு : 2,02,347
2. நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் : 1,83,075
3. மீதி : 19,272
4. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயம், நில ஆணையர், நிலத் தீர்ப்பாயம், சார்பு நீதிமன்றங்கள் ஆகிய பல்வேறு நீதிமன்றங்களின் தடையாணையின் கீழ் உள்ள நிலப்பரப்பு (*) : 8,872
5. மீதி : 10,400
6. 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13-ன்கீழ் பொது நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு : 10,185
7. ஒப்படை செய்யப்பட வேண்டிய நிலப்பரப்பு : 215

(*) நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

| வ. எண் | நீதிமன்றத்தின் பெயர் | வழக்குகளின் எண்ணிக்கை | வழக்குகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | உச்ச நீதிமன்றம் | 7 | 695 |
| 2. | உயர் நீதிமன்றம் | 68 | 4160 |
| 3. | தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் | 44 | 2135 |
| 4. | நில ஆணையர் | 22 | 357 |
| 5. | நிலத் தீர்ப்பாயம் | 15 | 272 |
| 6. | பிற உரிமையியல் நீதிமன்றங்கள் | 25 | 1253 |
| | **மொத்தம்** | **181** | **8872** |



2003 ஏப்ரல் 10]

## இணைப்பு—12

### குடிவாரச் சட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரப்பட்டியல்

| வ. எண் | சட்டத்தின் பெயர் | நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55) | 1,337 |
| 2. | தமிழ்நாடு பொது, பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61) | 11,169 |
| 3. | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல் சட்டம், 1956) (தமிழ்நாடு சட்டம் 24/56) | 218 |

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு-13

**தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுச் சட்டம், 1969**

**(தமிழ்நாடு சட்டம் 10/69-ன்கீழ் குத்தகைதாரர்களாக பதிவு செய்துகொண்ட நபர்களின் எண்ணிக்கை குறித்த விவரப்பட்டியல்)**

| இனம் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அ. ஆதிதிராவிடர் | 1,90,339 |
| ஆ. பழங்குடியினர் | 881 |
| இ. மற்றவர்கள் | 3,74,542 |
| **மொத்தம்** | **5,65,762** |

## இணைப்பு-14

**நில உடைமை உரிமை வழங்கப்பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரப்பட்டியல்**

| இனம் | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆதிதிராவிடர் | 99,733 | 46 | 922 | 1,00,701 |
| பழங்குடியினர் | 2,209 | 15 | 342 | 2,566 |
| மற்றவர்கள் | 79,130 | 351 | 243 | 79,724 |
| **மொத்தம்** | **1,81,072** | **412** | **1,507** | **1,82,991** |



2003 ஏப்ரல் 10]

## இணைப்பு-15

**தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தால் முடிக்கப் பெற்ற வழக்குகள் விவரப்பட்டியல்**

| வ. எண் | விவரம் | வழக்குகள் | பல் வகையான மனுக்கள் |
|---|---|---|---|
| 1. | உயர் நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்ட மொத்த வழக்குகள் | 901 | 704 |
| 2. | தமிழ்நாடு நிலச்சீர்திருத்த தனி மேல்முறையீட்டாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 810 | 2,323 |
| | **மொத்தம்** | **1,711** | **3,027** |
| 3. | மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை | 899 | 704 |
| 4. | தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை (28-2-2002 முடிய) | 768 | 2,253 |
| | **மொத்தம்** | **1,667** | **2,957** |
| | 28-2-2003 முடிய நிலுவையில் உள்ளது | 44 | 70 |

[2003 ஏப்ரல் 10

## இணைப்பு–16

### கேட்பு, வசூல் மற்றும் நிலுவை

| | 2001-02 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| வசூலிக்கப்பட வேண்டிய கேட்பு | 896.04 |
| தடையாணை | 43.74 |
| நிகர கேட்பு | 852.30 |
| வசூல் | 435.22 |
| நிலுவை | 417.08 |
| **முன்வரி வசூல்** | |
| 2001-02=(20%) | 13.15 |
| 2002-03=(80%) | 102.06 |
| இதர வசூல் | 0.69 |
| **மொத்த வசூல்** | 551.12 |
| **கழிக்க:** முன்னரே வசூலிக்கப்பட்ட முன்வரி, அதிகப்படியான வசூலில் சரிகட்டப்பட்ட தொகை | 326.92 |
| **நிகர வசூல்** | **224.20** |



2003 ஏப்ரல் 10]

### கேட்பு, வசூல் மற்றும் நிலுவை

| | 2002-03 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| வசூலிக்கப்பட வேண்டிய கேட்பு | 406.23 |
| தடையாணை | 46.80 |
| நிகர கேட்பு | 359.43 |
| வசூல் | 119.32 |
| நிலுவை | 240.11 |
| **முன்வரி வசூல்** | |
| 2002-03=(20%) | 51.83 |
| 2003-04=(80%) | 4.02 |
| இதர வசூல் | 0.74 |
| **மொத்த வசூல்** | 175.91 |
| **கழிக்க:** முன்னரே வசூலிக்கப்பட்ட முன்வரி, அதிகப்படியான வசூலில் சரிகட்டப்பட்ட தொகை | 63.48 |
| **நிகர வசூல்** | **112.43** |

**2001-2002 மற்றும் 2002-2003 ஆண்டு வரையிலான காலத்திற்கான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை**

**மலைத்தோட்டப் பயிர்**

| வருடம் | இணக்கமுறை | வருமான அடிப்படை | மொத்தம் |
|---|---|---|---|
| 2001-2002 | 3608 | 304 | 3912 |
| 2002-2003 | 3607 | 303 | 3910 |

| **பயிர்** | | **பரப்பு (ஏக்கரில்)** |
|---|---|---|
| தேயிலை | - | 84,484.48 |
| காப்பி | - | 46,883.26 |
| ஏலம் | - | 6,826.21 |
| இரப்பர் | - | 14,949.13 |
| மிளகு | - | 160.82 |
| கிராம்பு | - | 592.70 |
| பாக்கு | - | 771.33 |
| மொத்தம் | - | 1,50,667.93 |

184538
சென்னை-600 009
நூலகம்

வரி செலுத்துவோர் அனைவரும் முந்தைய ஆண்டில் அவர்களால் ஈட்டப்பட்ட வேளாண்மை வருமானத்தின் வரிக்கான 80% தொகையினை, நடப்பு ஆண்டிற்கு முன்வரிப்பணமாக பிப்ரவரி மாத முடிவிற்குள் செலுத்த வேண்டும். இந்த முன்வரி பணத்தொகை போக, மீதிவரி நடப்பு ஆண்டின் இறுதியில் அவர்களால் செலுத்தப் படவேண்டும்.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.